பூச்சியம் பூச்சியமல்ல

இலக்கிய அனுபவங்கள்

தெணியான்



பூச்சியம் பூச்சியமல்ல

(இலக்கிய அனுபவங்கள்)

தெணியான்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை– 600 098.
☎: 26359906, 26251968, 26258410

Language : Tamil
Boojiam Boojiammalla
(Elakkiya Anupavangal)
Author: **Theniyaan**
First Edition: September, 2013
Copyright: Publisher
No. of Pages: vi + 210 = 216
Typeset: **NCBH Computers**

Publisher:
New Century Book House Pvt. Ltd.,
41-B,SIDCO Industrial Estate,
Ambattur, Chennai - 600 098.
Tamilnadu State, India.
Email : info@ncbh.in
web :www. ncbhpublisher.com.

ISBN: 978-81-2342-462-0
Code No. A 2826

₹ 160/-

Branches

Ambattur (H.O.) 044-26359906, 26258410, 26251968
Thiruvanmiyur 044-24404873 **Spenzer Plaza** (Chennai) 044-28490027
Trichy 0431-2700885 **Tanjore** 04362-231371 **Tirunelveli** 0462-2323990
Madurai 0452-2344106, 2350271 **Dindigul** 0451-2432172
Coimbatore 0422-2380554 **Salem** 0427-2450817 **Hosur** 04344-245726
Ooty 0423-2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800
Pondicherry 0413-2280101 **Thiruvannamalai** 04175-223449

பூச்சியம் பூச்சியமல்ல
(இலக்கிய அனுபவங்கள்)
ஆசிரியர்: தெணியான்
முதல் பதிப்பு: செப்டம்பர், 2013

அச்சிட்டோர்:
பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,
16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14
☎: 044-28482441, 28482973

முகவுரை

இது எனது வாழ்க்கை வரலாற்றின் ஒரு பகுதி. எனது வாழ்க்கை வரலாற்றைச் சொல்ல வேண்டும் என்பது எனது நோக்கமல்ல. எனது இலக்கிய அனுபவங்களைச் சொல்ல விழையுமிடத்து, வாழ்க்கை வரலாற்றைத் தவிர்த்து அதனை எழுத இயலாது.எனது வாழ்க்கை வரலாறு தனியொரு மனிதனின் சொந்தக் கதையல்ல; ஒரு காலகட்ட சமூகத்தின் வரலாறு, இலக்கியத்தின் வரலாறு என்பனவற்றின் ஒரு பகுதி எனது இந்த வரலாற்றினுள் அடங்கி இருக்கின்றது. ஒரு சமூக, இலக்கிய ஆவணமாக இது அமைய வேண்டும் என்னும் நோக்கத்துடன், இந்த வரலாற்றில் இடம்பெற்ற நிகழ்வுகள் மிகச் சரியான திகதிகளுடன் குறிப்பிடப்பட்டுள்ளன. இங்கு குறிப்பிடப்பெற்ற நிகழ்வுகள், இவற்றுடன் தொடர்புபட்ட சம்பவங்களைப் பற்றிய செம்மையான தகவல்களை எதிர்காலத்தில் அறிந்து கொள்ள விரும்புகின்றவர்களுக்கு இத்தரவுகள் உதவக்கூடும்.

நான் ஆசிரியராகக் கடமையாற்ற ஆரம்பித்த காலம் முதல் 1960 ஆம் ஆண்டு தொடங்கி தினக்குறிப்பு (DIARY) எழுதிவரும் வழக்கம் என்னிடத்தில் இருந்து வருகின்றது. இந்தத் தொடரை எழுத ஆரம்பிப்பதற்கு முன்னர் எனது தினக்குறிப்புகளைக் கால ஒழுங்கு தவறாமல் படித்தேன். குறிப்புகள் ஒவ்வொன்றும் அதனோடு சம்பந்தப்பட்ட நிகழ்வினை எனது உள்ளத்தில் பரக்க விரித்தன. அவை யாவற்றையும் இந்த வரலாற்றுக் குறிப்பில் விரிவுபட எழுதி வைத்துவிட இயலாது. அவற்றுள் வேண்டிய சிலவற்றை மாத்திரம் தேர்ந்தெடுத்து வைத்துக்கொண்டு இதனை எழுதுவதற்குத் தீர்மானித்தேன்.

பெரும்பாலான எழுத்தாளர்களின் வாழ்க்கையில் வந்து கிட்டாத சமூக அனுபவங்களை எனது வாழ்வில் நான் பெற்றிருக்கின்றேன். எனக்கும், என்போன்ற ஒடுக்கப்பட்ட சமூகங்களில் பிறந்த எழுத்தாளர்களுக்கும் இத்தகைய அனுபவங்கள் கிட்டுவது புதுமையானவை அல்ல. சமூக ஒடுக்குமுறைகளுக்கு ஆளான அனுபவங்கள், அந்த ஒடுக்குமுறைகளுக்கு முகம்

கொடுத்து நின்று பெற்ற அனுபவங்கள், அவற்றுக்கு எதிராகப் போராடிப் பெற்ற அனுபவங்கள் என எங்களுக்கு மாத்திரம் தனித்துவமாகப் பல உண்டு. இந்த அனுபவங்கள் எதுவு மில்லாது வெறுமனே பேனா பிடிக்கும் ஓர் எழுத்தாளனல்லன் நான். சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடும் மனப்பாங்கு என்னுள்ளே வளர்ந்து வருவதற்குக் காரணமாக அமைந்த எனது பின்புலத்தினையும் நான் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இங்கு நேர்ந்திருக்கின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக எனது வாழ்வு, எனது இலக்கிய அனுபவங்கள் என்பனவற்றை இன்று எடுத்துச்சொல்லும் நிலைக்கு நான் வளர்ந்து வருவதற்கு அடிப்படை அத்திபாரமாக, அமைந்தது எனது குடும்பம். என்னை முழுமையாக விளங்கிக் கொள்ள வேண்டுமானால் எனது குடும்பப் பின்னணியை ஓரளவேனும் அறிந்துகொள்வது அவசியம். நான் எத்தகைய குடும்பச்சூழலில் பிறந்தேன்? எவ்வாறு வளர்ந்தேன்? என்பவற்றை மூடிமறைத்து போலியான ஒரு தோற்றத்தினை வெளிக்காட்டும் இயல்புள்ள ஒருவனல்ல நான்.

சமூகத்தில் மிக வசதி படைத்தவர்கள், உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர்கள், உயர்பதவி வகித்தவர்கள், அரசியல் தலைவர்கள் போன்றவர்களே தமது சுயசரிதம் - வரலாறு எழுதும் தகுதி ஒரு காலத்தில் இருந்து வந்திருக்கின்றது. அத்தகைய வாழ்க்கை வரலாறுகள் சாதாரண பொதுமக்கள் மத்தியில், அவர்களைப் பெரியமனிதர்களாக, வழிபாட்டுக்குரியவர்களாகக் கொண்டாடு வதற்கே பெரிதும் பயன்பட்டிருக்கின்றன.

அடிநிலைச் சமூகங்களில் இருந்து வந்திருப்பவர்களின் வாழ்க்கைவரலாறு, அவர்கள் தோன்றிய சமூகங்களின் அவல நிலையைப் பற்றி அறிவதற்கு உதவும். அந்தச் சமூகத்தைச் சார்ந்தவர்கள் தன்னம்பிக்கை பெற்று வளர்ந்து நிமிர்ந்து நிற்பதற்கும் ஆதாரமாக அமையும். அந்தவகையில் எனது இந்த வாழ்வனுபவங்கள் பயனுள்ளவையாக அமையுமென நம்புகின்றேன்.

நான் எழுதுவதற்கு ஆரம்பித்து நாற்பத்தைந்து ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. எனது இளமைப் பிராயம் முதல் சமூக விடயங்களில் ஈடுபாடுள்ள ஒருவனாக இருந்து வந்திருக்கின்றேன். அக்காலத்தில் இருந்து மிக நிதானமாக மெல்ல மெல்ல அடி எடுத்து வைத்து நடந்து வந்திருக்கின்றேன் என்பதனை இன்று திரும்பிப் பார்க்கும்போது என்னால் உணர்ந்துகொள்ள

முடிகின்றது. எனது வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வந்தவர்களின் பெயர்களைத் தவறாது இங்கு பதிவு செய்திருக் கின்றேன். அதேசமயம் என்னை வஞ்சித்தவர்கள், அவமதித்தவர்கள், ஏமாற்றியவர்கள் என்போரையும் நான் இங்கு குறிப்பிடத் தவறவில்லை. ஆனால் அவர்கள் பெயர்களை இங்கு பதிவு செய்வதைத் தவிர்த்துவிட்டுள்ளேன். எவரையாவது பழிவாங்குவது அல்லது அவமதிப்பது எனது எழுத்தின் நோக்கமல்ல. ஆனால் சொல்லப்பட வேண்டிய உண்மைகளைச் சொல்லாது மறைத்து விடுவதனால் நான் தடம்பதித்து வந்த வாழ்க்கைப் பாதையை முழுமையாக அறிந்துகொள்ள இயலாது போகும். அதுமாத்திர மல்லாது, சத்தியத்துடன் பேனா பிடிக்க வேண்டும் என்னும் எனது கருத்துக்கு முரணாக என்னால் எழுத முடியாது. எழுத்தாளனின் கருத்தினை இன்று சமூகம் மிக நுணுக்கமாக அவதானிக்கின்றது. அவன் வெளிப்படுத்தும் கருத்துக்கள் மக்களால் மதிக்கப்படுகின்றன. யாரையாவது திருப்திப்படுத்தும் நோக்கத்துடன் பொய்மையான போலிக் கருத்துக்களை என்னால் ஒருபோதும் முன்வைக்க இயலாது.

சாதாரண மனிதனாகிய எனது சரித்திரம் இன்று நூலாக வெளிவருகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் எனது பெற்றோர்கள், ஆசிரியர்கள், எனது வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்கள் அனைவரையும் நான் நினைவுகூர்கின்றேன். இவர்களுள் குறிப்பிட்டுச் சொல்லத்தகுந்த ஒருவர் எனது அன்புக்குரிய **மல்லிகை** ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்கள் 'பூச்சியம் பூச்சியமல்ல' என்னும் தலைப்பில் இரண்டாண்டு காலம் (செப்டம்பர் 2005 - நவம்பர் 2007) மாதா மாதம் **மல்லிகையில்** தொடர்ந்து எழுதிவந்தேன். எனது தொடர்க்கட்டுரையை வெளியிட்டு வந்ததுடன், இன்று நூலாக்கம் செய்து ஆவணப் படுத்துவதிலும் அவர் முன்நின்று செயற்பட்டிருக்கின்றார்.

தமிழ்நாடு, சென்னை **என்.சி.பி.எச்.** நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள், இந்நூலினை மனமுவந்து ஏற்று வெளியிட்டு வைக்கின்றார்கள். இந்த நிறுவனத்தினருக்கும், ஜீவா அவர்களுக்கும் எனது நன்றி உரியதாகும்.

தெணியான்

கலையருவி
கரணவாய் வடக்கு
வல்வெட்டித்துறை, ஸ்ரீலங்கா
06.04.2010



நாற்பது ஆண்டு காலத்துக்கு மேல் ஆசிரியராகப் பணிபுரிந்து களைத்துப் போன நான் 2002 ஆகஸ்ட் 6-ல் அந்தப் பணியில் இருந்து ஓய்வு பெற்றேன்.

அன்றைய தினம் நான் விட்டு விடுதலை ஆகிவிட்ட உணர்வைப் பெற்றேன். எனது அறுபதாவது பிறந்த நாளை எப்படியோ நண்பர் செங்கை ஆழியான் அறிந்து வைத்திருக்கிறார்.

எனது பிறந்ததினத்தை ஆண்டுதோறும் கொண்டாடி வரும் வழக்கம் எனக்கில்லை.

அறுபதாவது வயது, மணிவிழா வயது. அன்று எனது மணி விழா ஆரம்ப தினம் என்பதை அறிந்த நண்பர் செங்கை ஆழியான் இரண்டொரு தினங்களுக்கு முன்னதாக எழுத்தாளர்கள், இலக்கிய நண்பர்கள் சிலருக்கு தானே முன்வந்து அழைப்பிதழ் ஒன்றினை அனுப்பி வைத்திருக்கின்றார். அந்த அழைப்பிதழ் பிரதி ஒன்று எனது கைக்கும் வந்து சேர்ந்தது. 'அகவை அறுபது அடையும் தெணியானை அவர் இல்லத்துக்குச் சென்று அன்றைய தினம் வாழ்த்துவோம், வாருங்கள்! என விடுக்கப்பட்ட அழைப்புத்தான் அது. அந்தத் தகவலை எனது மனைவி, மக்களுக்கு நான் சொல்லி வைத்தேன். அப்பொழுதுதான் அவர்கள் உசாரானார்கள். எங்கள் இல்லத்துக்கு வருகைதர இருக்கும் நண்பர்களை வரவேற்று உபசரிப்பதற்குத் தயாரானார்கள்.

அன்று காலைவேளை. நண்பர் க.லோகநாதன் ஆசிரியர் எனது வீடு தேடி வந்தார். கையோடு கொண்டு வந்திருந்த மலர்மாலையை

எனக்குச் சூட்டி நட்புரிமையுடன் என்னை அணைத்து மகிழ்ந்து கௌரவித்துப் பெருமைப்படுத்தினார்.

பிற்பகல் யாழ் நகரத்தில் இருந்து செங்கை ஆழியான், நந்தி, மயிலங்கூடல் நடராசன் ஆகியோர் செங்கை ஆழியானின் பிக்கப்பில் வந்து சேர்ந்தார்கள். இவர்களுடன் குப்பிழான் ஐ.சண்முகன், ஆ.கந்தையா, த. கலாமணி, மு. அநாதரட்சகன், இ. இராஜேஸ் கண்ணன், கொற்றை பி. கிருஷ்ணானந்தன் ஆகியோரும் இன்னும் பல நண்பர்களும் எனது இல்லத்துக்கு வருகை தந்தார்கள். என்னைத் தம்பதியராக வாழ்த்தி, பாராட்டி, மலர்மாலைகள் சூட்டி, பொன்னாடை போர்த்தி, புகைப்படங்கள் பிடித்து, விருந்துண்டு எல்லோரையும் மகிழ்வித்துப் போனார்கள்.

அன்றுதான் நான் வியப்போடு என்னைத் திரும்பிப் பார்த்தேன்.

இதுவரை காலம் என்னை நான் அறியாது, விளங்கிக் கொள்ளாது, குருட்டு வாழ்க்கை வாழ்ந்து வந்த ஒருவனல்லன். எனது பலம் எது? எனது பலவீனம் எது? என்பதெல்லாம் மிகத் தெளிவாகப் புரிந்துவைத்துக் கொண்டிருக்கும் ஒருவன் நான். ஆனால் இந்த மணி விழா நிகழ்வுகள் இதுவரை நான் கண்டு கொள்ளாத எனது இன்னொரு பக்கத்தை காலம் எனக்கு உணர்த்துவதாகவே எனக்குத் தோன்றியது.

அந்த நிகழ்வின் பின்னர் நான் ஆசிரியராக, உபஅதிபராகக் கடமையாற்றிய தேவரையாளி இந்துக் கல்லூரியில் எனக்கொரு விழா. ஒரு பாடசாலையில் நீண்டகாலம் கடமை ஆற்றி ஓய்வுபெறும் ஆசிரியருக்கு அந்தப் பாடசாலையின் ஆசிரியர்கள் மாணவர்கள் இணைந்து பிரியாவிடை விழா ஒன்றினை அளிப்பது பெரும்பாலான பாடசாலைகளில் இருந்துவரும் ஒரு நடைமுறை வழக்கம். அந்த வழக்கத்தைப் பின்பற்றி எடுக்கப்பட்ட பிரியா விடை விழா, தவிர்க்க இயலாது எழுத்தாளரின் மணிவிழாச் சாயலையும் உள்வாங்கி கல்லூரியில் நடந்தேறியது.

அதன் பிறகு சுமார் ஐம்பது நண்பர்கள் வரை ஒன்றுசேர்ந்து தேவரையாளி இந்துக் கல்லூரித் தொழில்நுட்பப் பிரிவு மண்டபத்தில் மதிய போசன விருந்தொன்றினைச் சிறப்பான ஏற்பாடுகளுடன் ஒரு தினம் தந்து கௌரவித்தார்கள்.

கொழும்பில் இருந்து மல்லிகை ஆசிரியர் அன்புக்குரிய டொமினிக் ஜீவாவின் அழைப்பொன்று எனக்கு வந்து சேர்ந்தது. மல்லிகைப் பந்தல் சார்பில் எனது மணிவிழா ஒன்று கொழும்பில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருப்பதாகவும், கொழும்பு வருமாறும் ஜீவா தெரிவித்திருந்தார்.

ஜீவாவின் அழைப்பினை ஏற்றுக் கொழும்பு புறப்பட்டேன். நண்பர் எஸ்.கே. இராசேந்திரன் என்னுடன் சேர்ந்து உடன் கூட வந்திருந்தார்.

வெள்ளவத்தை தமிழ்ச் சங்கத்தில் குமாரசுவாமி விநோதன் மண்டபத்தில் டாக்டர் எம்.கே.முருகானந்தன் தலைமையில் 22.08.2002 வியாழன் போயா தினத்தன்று மல்லிகைப் பந்தல் ஆதரவில் எனக்கான மணிவிழா நடை பெற்றது. அந்த விழாவில் பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியீடாக மணிவிழா நினைவாக எனது 'கானலின் மான்' நாவல் வெளியிட்டு வைக்கப் பெற்றது.

அன்று நடைபெற்ற அந்த விழாவில் பாராட்டுரை வழங்கிய திக்குவல்லை கமால் எனது இலக்கிய அனுபவங்களை நான் எழுத வேண்டும் எனக் கேட்டு, மீண்டும் எனது பார்வையை என்னை நோக்கித் திருப்பி விட்டார்.

நான் பிறந்து வளர்ந்த எனது கிராமத்தவர்களுக்கு நீண்ட காலமாக என்னைப் பற்றிய ஒரு மனக்குறை உண்டு. நான் எழுதுவதற்கு ஆரம்பித்து இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவடைந்த சமயம், எனக்கொரு வெள்ளி விழா எடுக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் எங்கள் ஊர்ச்சன சமூக நிலையத்தைச் சேர்ந்தவர்கள் என்னை வந்து அணுகினார்கள். நான் எழுதி வெளிவந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு வெளியீட்டு விழாவும் எனக்கு எடுக்கப்பெறும் தனிப்பட்ட விழாவாக நான் கருதுகின்றேன். அதனைவிட புறம்பான இன்னொரு வெள்ளி விழா எனக்கு வேண்டியதில்லை என அப்போது அவர்களைத் தட்டிக் கழித்து விட்டேன்.

இன்று இதனை எடுத்துச் சொல்லும்போது அன்று எனக்கு இருந்த மனநிலையில் இருந்து இன்னும் பெரிதாக ஒரு மனமாற்றம் என்னுள் ஏற்பட்டு விட வில்லை என்பதே உண்மை.

இன்று மணிவிழா ஆண்டு.

எனது உறவுகள் என்னை விட்டு விடுவதாக இல்லை. என்னாலும் இந்தத் தடவை முன்போலத் தட்டிக் கழிக்க முடியவில்லை.

எனக்கொரு மணிவிழா பெரிய அளவில் நடைபெற வேண்டும் என்பதில் அதிதீவிர அக்கறை காட்டியவர் கொற்றை பி.கிருஷ்ணானந்தன். அவரே விழாவின் மூலவர். கவித்துவம் மிகுந்த அவரது இலக்கிய நெஞ்சம் எனது மணிவிழாவில் மிகுந்த ஆர்வம் காட்டியதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இப்படியொரு விழாவினை

எடுக்காமல் விட்டுவைப்பது தமக்கொரு கௌரவப் பிரச்சினை எனவும் சிலர் கருதுவதை நான் அப்பொழுது உணர்ந்தேன். உறவினர்கள், நண்பர்கள், வெளிநாடுகளில் வாழும் எனது மாணவர்கள் என எல்லோரும் இணைந்து மணிவிழாக் குழு ஒன்றினை நிறுவி பெரிய அளவில் ஒரு மணிவிழாவை நடத்தினார்கள்.

விழாவுக்கு முதல் நாள் அரைப் பக்க அளவில் பத்திரிகையில் விளம்பரம் ஒன்று வெளியிட்டார்கள்.

முதல்நாள் நிகழ்வுகள் 18.08.2003-ல் பேராசிரியர் செ. சிவஞான சுந்தரம் (நந்தி) தலைமையில் தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெற்றன. மூத்த எழுத்தாளர் வரதர் விழாவுக்கு வருகை தந்து வாழ்த்தினார். நிகழ்வுகள் நடந்து கொண்டிருந்த வேளை பேராசிரியர் அ. சண்முகதாஸ் திடீரென அங்கு வருகை தந்து பொன்னாடை போர்த்திக் கௌரவித்து வாழ்த்தினார். செங்கை ஆழியான், 'தெணியான் மணிவிழா மலர்' வெளியிட்டு வைத்தார். கவிஞர் சோ. பத்மநாதன் பாமாலை பாடி வாழ்த்து வழங்கினார்.

எனக்குப் பாரம்பரியமான எங்களூர் சித்திவிநாயகர் ஆலயத்தில் இருந்து மங்கள வாத்தியங்களுடன் மறுநாள் ஊர்வலமாக அழைத்து வந்தார்கள். வீதியிலுள்ள இல்லங்களின் முன்னே பூரண கும்பங்கள் வைத்து மலர்மாலைகள் சூட்டி எங்கள் கிராமத்துப் பூமகள் சனசமூகத்துக்கு அழைத்துச் சென்று டாக்டர் க.வேலும்மயிலும் தலைமையில் விழாவினைச் சிறப்பாக நடத்தி முடித்தார்கள்.

மல்லிகை, ஞானம் சஞ்சிகைகள், நமது நாட்டுப் பத்திரிகைகள், டி.வி. என்பன வாழ்த்துக்களையும் எனது பேட்டி, விழாச் செய்திகள், கட்டுரைகள், புகைப்படங்கள் என்பனவற்றையும் வெளியிட்டுப் பெருமைப்படுத்தின.

இவற்றையும், மணிவிழா நிகழ்வுகளையும் இங்கு எடுத்துச் சொல்வதன் நோக்கம் என்னை விளம்பரப்படுத்த வேண்டும். என்பதற்கல்ல. இந்த நாட்டில் வாழும் தமிழ் எழுத்தாளன் ஒருவன் உரிய காலத்தில் எவ்வாறு கௌரவிக்கப்படுகின்றான். என்பதனை வெளியுலகம் அறிந்துகொள்ள வேண்டும் என்னும் எண்ணம் எனது மனதில் இல்லாமல் இல்லை.

அந்த எண்ணத்துக்கு அப்பாலும் நான் நோக்கத் தவறவில்லை.

நடந்து முடிந்த எனது மணிவிழா நிகழ்வுகளில் பலராலும் ஆற்றப்பட்ட பாராட்டுரைகள், மணிவிழா மலரில் என்னைப் பற்றி,

எனது எழுத்துக்களை பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் என்பன என்னை நான் திரும்பிப் பார்ப்பதற்கு மீண்டும் மீண்டும் தூண்டிக் கொண்டிருக்கின்றன.

இவை மாத்திரமல்லாது மணிவிழாவின் போது நேரிற் சமுகந்தர இயலாது போன நண்பர் பேராசிரியர் சபா. ஜெயராசா மகிழ்ச்சி ததும்பும் தமது வாழ்த்துரையைப் பின்வருமாறு தெரிவிக்கின்றார்:

"ஈழத்து நவீன தமிழ் இலக்கிய வரலாறு தெணியான் இன்றிப் பேசப்பட முடியாதது. பிற எழுத்தாளர்களால் இனங் காட்டப்படாத காட்சிகளையும், தரிசனங்களையும், பேசாப் பொருள்களையும், புனையாத சிதைவுகளையும் நிதானமாக நேர்நின்று, சத்திய தரிசனத்துடன் எடுத்துக்காட்டுபவர் அன்புக்கும் நட்புக்குமுரிய தெணியான்.

சமூக நிலையிலும் பண்பாட்டு நிலையிலும் ஆழ்ந்து மௌனமாகி, உறைந்து ஒடுங்கி, ஆனால் பெரும் பெருக்க விசையுடன் உள்ளுறை பொருளாகி நிற்கும் வடமராட்சிப் பண்பாட்டின் நெருடல்களைத் தமது புனைகதை வீச்சுக்குள் அடக்கிய எழுத்தாளர் தெணியானுடைய கையாளுகை அருவி போன்ற தொடர்ச்சியும், அக்கினி போன்ற சுவாலையும் கொண்டது.

இன்றைய நவீன திறனாய்வு வளர்ச்சியில் வியந்து பேசப்படுவது ஒடுக்கப்பட்டோர் அழகியல் பற்றிய கருத்துக்களாகும். ஒடுக்குவோரால் பேசப்பட்டு வந்த உள்ளடக்கங்களையும், கலைப்பார்வையையும் தகர்த்தெறிந்து போலி நிலை அழகியற் கட்டுமானங்களின் மேலோட்டங்களை எடுத்துக்காட்டி வருபவர் தெணியான்.

பிரதானமான சமூக ஊடாட்டங்களைப் புறக்கணித்தலும், போட்டியுணர்வு மிக்க குரூரமான தனிமனித உணர்ச்சிகளுக்குத் தூபமிடுதலும், கொடுமை மிக்க சமூகத் தோற்றப்பாடுகளைக் குறுகிய புலக்காட்சிகளில் அங்கீகரித்தலும், அழகென்றும் நியதியென்றும் பேசப்பட்ட வேளை - ஆழமாகவும், நிதானமாகவும், அயராத கலையாற்றலுடனும் நின்று நிமிர்ந்து நிதானித்துக் கலைப்படைப்புகளை மேற்கொண்டவர் அன்புக்குரிய தெணியான் ஆவர்.

அவரிடத்துப் பொதிந்துள்ள கலையுள்ளமும், நிறைந்து சிறந்த மனிதாபிமானமும், நீடித்து வேர்பதித்த நட்பும், அழியாத நினைவுப் பதிவுகள்."

செறிவு மிக்க, காத்திரமான இந்த வாழ்த்துச் செய்தியும் எனது கடந்த காலத்தை மீண்டும் நினைத்துப் பார்க்கத் தூண்டுகின்றன.

இன்று எனக்குக் கிடைத்துள்ள புதிய தரிசனத்தில் என்னை நான் கண்டு கொண்டதில் - எனக்குள்ளே நான் மெல்ல நகைத்துக் கொண்டிருக்கின்றேன்.

ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் நான் நிதானமாக மெள்ள நடந்து வந்த எனது பாதத் தடங்களை என்னைத் தவிர மற்றவர்கள் தெளிவாக அறிந்து வைத்திருக்க முடியாது. தொடர்ச்சியான அந்த இலக்கியப் பயணத்தின் பிரதான பாதையில் ஒரு மைற்கல்தான் இந்த மணிவிழா. அந்தப் பயணக் கதைகளை வாசகர்கள் நிச்சயமாக அறிந்துகொள்ள வேண்டும். குறிப்பிட்ட அந்தப் பயணம் நான் ஆரம்பிப்பதற்கு முன்னருள்ள ஒரு காலம் எனக்குண்டு. பயணத்துக்கான ஆயத்தங்கள் - தயார்நிலைகள் உருவாக்கம் பெற்ற அந்த ஆரம்ப காலகட்டத்தையும் வாசகர்கள் தவறாது தெரிந்து கொள்ள வேண்டும். இந்த வரலாறுகள் இல்லாமல் இன்று பலராலும் அறியப்படும் இன்றைய தெணியான் இல்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் எழுத்தாளர் ராஜ ஸ்ரீகாந்தனை நான் நினைவுகூர வேண்டியது அவசியமாகின்றது. எனது சுயசரிதையை எழுதுமாறு சில ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே ராஜ ஸ்ரீகாந்தன் சொல்லி வர ஆரம்பித்துவிட்டார். அப்படி அவர் சொல்லுகின்ற சமயங்களில் எல்லாம், 'பார்ப்போம்' என்று மாத்திரம் நான் சொல்லிச் சொல்லிக் காலங் கடத்திக் கொண்டு வந்தேன்.

இன்றும் எனது சுயசரிதையை நான் எழுதப் போவதில்லை. எனது இலக்கிய அனுபவங்களையே வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். எனது இலக்கிய அனுபவங்களை வாசகர்களோடு அவற்றைப் பகிர்ந்துகொள்வதற்கு முற்படுகையில் இந்த இலக்கியவாதி உருவாவதற்கு அத்திபாரமாக அமைந்த ஆரம்ப காலகட்டங்களை நான் சொல்லியே ஆகவேண்டும்.

காந்தி, நேரு, உ.வே. சாமிநாதையர் போன்றோரதும் வேறு சிலரதும் சுயசரிதைகள் ஒரு காலத்தில் நான் வாசித்து, இன்று மறந்து போனவையாகப் போய்விட்டன.

சில ஆண்டுகளுக்கு முன்னர் எஸ்.வீ. தம்பையாவின் 'நினைவின் அலைகள்' நூலாக வெளிவருவதற்கு முன் இரண்டு தடவைகள் நான் படித்திருக்கின்றேன். அந்த நூலின் இறுதிப் பகுதி கற்பனை கலந்த ஒரு கதையாக உருமாற்றப்பட்டிருப்பினும், அதன் பெரும்பகுதி எங்கும் பொய்மை அற்ற சத்தியத்தின் ஒளியினையே என்னால் தரிசிக்க முடிந்தது.

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் அனுபவ முத்திரைகள், எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம் என்பனவும் என்மனதைக் கவரவே செய்தன.

இவற்றை இங்கு நான் குறிப்பிடுவதற்கு அடிப்படையான ஒரு நோக்கம் எனக்கு இருக்கவே செய்கிறது.

எனது வாழ்வின் பொய்மையற்ற சத்திய தரிசனத்தையே இங்கு நான் எழுதுவதற்கு விரும்புகிறேன். எனது குடும்பம், கல்வி, சமூகம், அரசியல், இலக்கியம் என, எனது உருவாக்கத்தின் - வாசகர்கள் இதுவரை அறியாத பின்புலங்களைச் சத்தியத்துடன் சொல்லி வைக்க விரும்புகின்றேன்.

எனது ஆரம்பக் கல்வியை நான் பெற்றுக்கொள்ளத் தொடங்கிய காலகட்டத்தில் நிகழ்ந்த சுவாரசியமான ஒரு சம்பவத்தை முதலில் உங்களுடன் பகிர்ந்துகொள்ளலாம் என எண்ணுகின்றேன்.



தேவரையாளிச் சைவ வித்தியாசாலையில் எனக்கு ஏடு தொடக்கி வைத்தவர் கவிஞர்மு. செல்லையா.

எனக்கு மாத்திரமன்றி எனது தமையனார், எனது தம்பி (க. நவம்) இருவருக்கும் அவரே ஏடு தொடக்கி வைத்தார்.

தேவரையாளிச் சைவவித்தியாசாலையில் (இன்று தேவரையாளி இந்துக் கல்லூரி) தலைமை ஆசிரியர் அமர்ந்திருந்த மரத்தினாலான மேடையின் பின்புறத்தில் சுவரில் ஒரு சரசுவதி படம் தொங்கிக் கொண்டிருந்தது. ஒரு விஜய தசமிப் பூசை தினத்தன்று சுவரில் தொங்கிக்கொண்டிருந்த அந்தச் சரசுவதி படத்துக்குத் தீபம்காட்டி பூசைகள் செய்து வழிபாடுகள் முடிந்த பின்னர், எனக்கும் இன்னும் சில மாணவர்களுக்கும் கவிஞர் செல்லையா வித்தியாரம்பம் செய்து வைத்தார்.

அக்காலத்தில் நான் கல்விகற்ற அந்த வித்தியாலயத்தில் சமய வழிபாட்டுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்தது. அந்த வித்தியாலயத்தைச் சுற்றிவர வாழ்ந்து வந்த எமது சமூக மக்கள் மத்தியில் சைவ சமய அறிவை வளர்க்கவும் சமய வாழ்வு நெறியைப் பயிற்றவுமென்றே அந்தக் கல்வித்தாபனம் தோற்றுவிக்கப்பட்டது என்பதுதான் அதன் வரலாறு.

அந்த வித்தியாலயம் 1917 ஆம் ஆண்டு சைவப்பெரியார் திரு.கா. சூரன் அவர்களால் முன்னின்று நிறுவப்பெற்றது. அது தோற்றுவிக்கப்படுவதற்கு முன்னர், வதிரியில் இயங்கி வந்த மெதடிஸ் மிஷன்

பாடசாலையிலேயே எங்கள் சமூகத்து மாணவர்கள் கல்வி கற்றுவந்தார்கள்.

மெதடிஸ் மிஷனரியைச் சேர்ந்தவர்கள் வதிரியில் உயர்சாதியினர் என்று சொல்லப்படுகின்றவர்கள் வாழும் பகுதியில் அவர்களுக்கென ஒரு பாடசாலை புறம்பாக நிறுவியிருந்தனர் என்பது கிறிஸ்தவத்தில் சாதியம் பற்றிய இன்னொரு சுவாரசியமான விடயம்.

எங்கள் சமூகத்துப் பிள்ளைகள் கல்வி கற்றுவந்த வதிரி வடக்கு மெ. மி. பாடசாலையில் சைவசமய பாடம் கற்பிப்பதில் எழுந்த பிரச்சினையே தேவரையாளி சைவ வித்தியாசாலை தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது.

இந்த வித்தியாசாலையை முன்னின்று சூரன் உருவாக்குவதற்கு வேண்டிய ஆலோசனைகள் வழங்கி அனுசரணையாக இருந்தவர் கரவெட்டியைச் சேர்ந்த மணியகாரன் சித்தமணியம். கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியை அக்காலத்தில் நிறுவியரும் அவர்தான். அதேசமயம் கரவெட்டியில் வாழும் நளவ சமூகத்தவர்கள் மத்தியில் அவர்களுக்கென விநாயக வித்தியாலயம் நிறுவப்படுவதற்குக் காரணமாக இருந்தவரும் அவரே. சாதியத்தைப் பேணும் வகையில் அக்கால கட்டத்தில் பாடசாலைகள் உருவாக்கப்படுவதில் மிகுந்த மதிநுட்பத்துடன் சித்தமணியம் செயற்பட்டிருந்தார் என்பது மூடிமறைக்கப்பட்டு வரும் வரலாற்று உண்மையாக இன்றும் இருந்து வருகின்றது.

தேவரையாளி சைவ வித்தியலாயம் நிறுவப் பெற்று அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், வதிரி வடக்கு மெ.மி. பாடசாலையுடன் நிலவி வந்த வெளிப்படையான பூசல் மறைந்து போயிற்று. ஆனால் அந்தரங்கமான ஒரு போட்டி உணர்வு எக்காலத்திலும் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தது. இந்தப் போட்டி உணர்வுக்கு அடிப்படைக் காரணமாக இருந்து வந்தது சமயமல்ல.

வதிரி வடக்கு மெ.மி. பாடசாலையில் கல்வி கற்ற அக்கால மாணவர்களுக்குச் சைவசமயத்தை ஒரு பாடமாகக் கற்பதில் இடையூறு இருந்துவந்ததேயன்றி, மாணவர்கள் யாரும் கிறிஸ்தவர்களாக மதம் மாறிப் போய்விட வில்லை. முன்னரே கிறிஸ்தவர்களாக மதம் மாறிப்போன இரண்டொரு குடும்பத்தவர்கள் மாத்திரம் வதிரியில் வசித்து வந்தார்கள்.

மிகக் குறுகிய தூர இடைவெளிக்குள் இருக்கும் அந்த இரண்டு பாடசாலைகளுக்குமிடையே உண்மையில் தொழில் அடிப்படையிலான ஒரு போட்டி உணர்வே அந்தரங்கமாக அக்காலத்தில் செயற்பட்டு வந்தது. பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்களின் சராசரித் தொகை

யைக் கணக்கில் கொண்டுதான் ஆசிரிய நியமனங்கள் அப்பொழுது வழங்கப் பெற்று வந்தன. அந்த இரண்டு பாடசாலைகளையும் நிறுவுவதற்கும், பின்னர் நிருவகிப்பதற்கும் முன்னின்றவர்கள் தமது உறவினர்கள், ஊரவர்கள், வேண்டியவர்களை ஆசிரியர்களாகத் தங்கள் பாடசாலையில் நியமனம் செய்து தொழில் வழங்குவதில் அக்கறை யுள்ளவர்களாகச் செயற்பட்டார்கள்.

ஆசிரிய நியமனம் பெற்றுக் கல்வி கற்பித்துக்கொண்டிருந்த, ஆசிரியர்களுக்கு எங்கள் சமூகத்தில் அக்காலத்தில் பெரும் மதிப்பு இருந்துவந்தது. ஆசிரியர்கள் சொல்லை மாணவர்கள் மாத்திரமின்றிப் பெற்றோரும் மீறி நடக்காத ஒரு பண்பு பேணப்பட்டு வந்தது. ஆசிரியர்களே தங்கள் வழிகாட்டிகள் என மாணவர்களின் பெற்றோர்கள் கருதினார்கள். மாணவர்கள் பாடசாலையை விட்டு விலகி வேறு பாட சாலைகளுக்குச் சென்றுவிட்டால், தாம் கல்வி கற்பித்துக்கொண்டிருக்கும் பாடசாலையில் மாணவர்கள் தொகை வீழ்ச்சி அடைந்து, அதனால் தாங்கள் வேலையை இழந்து போக நேரும் என்பதைக் கருத்தில் கொண்டு எந்த ஒரு மாணவனும் இன்னொரு பாட சாலைக்கு விலகிச் சென்று விடாதவண்ணம் ஆசிரியர்கள் மிக எச்சரிக்கையாகத் தடுத்துவந்தனர்.

பாடசாலையில் மாணவர்களின் தொகையைப் பெருக்குவதும், சராசரி வரவை அதிகரிக்கச் செய்வதும் ஆசிரியர்கள் அனைவருக்கும் இருந்துவந்த பிரதான கடமை. ஆசிரியர்கள் எல்லோரும் தாங்கள் வாழும் பகுதி மாணவர்கள் மத்தியில் பாடசாலை வரவுச் சராசரியைப் பெருக்கும் நோக்கத்துடன் செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

தலைமை ஆசிரியர்கள் தலைமீது இந்தப் பொறுப்பு அதிகமாக இருந்து வந்தது.

தலைமை ஆசிரியர்கள் கிராமங்கிராமமாக மாணவர்களைத் தேடி அவர்கள் வீடுகளுக்குச் சென்றார்கள்.

மாணவர்களது கல்வி வளருவதற்கும் இதனால் அக்காலத்தில் வாய்ப்புண்டானது.

கவிஞர் மு. செல்லையா தேவரையாளி சைவ வித்தியாசாலையின் தலைமை ஆசிரியராக இருந்தார். அக்காலத்தில் வதிரி வடக்கு மெமி. பாடசாலை தலைமை ஆசிரியராக இருந்த ஏடீ மாணிக்கம் அடிக்கடி எங்கள் ஊருக்கு வருவார். அவர் போல் எங்கள் கிராமத்துக்கு வாரத்தில் ஒரு தடவையாவது மாணவர்களைத் தேடிக் கொண்டு கவிஞர் செல்லையா வருவதற்குத் தவறுவதில்லை. அப்படி வரும் சந்தர்ப்பங்களில் "மாமா" என எனது தந்தையாரை உரிமையுடன் அழைத்தவாறு காலை வேளையில் சில சமயம் எங்கள் வீடு வந்து, பாடசாலை செல்லும் அவசரத்தில் வந்த வேகத்தில் திருப்பிப் போவார்.

மாணவர்களைத் தேடிக் கிராமங்களுக்குள் வந்து போகும் ஆசிரியர்களைப் "பிள்ளை பிடிகாரர்" என்று அவர்கள் பின்னால் சொல்லும் ஒரு வழக்கமும் அப்பொழுது இருந்துவந்தது. பாடசாலைகளுக்குக் "கள்ளம் ஒளிக்கின்ற"வர்களைத் தேடியே இந்தப் பிள்ளை பிடிகாரர் வருகின்றனர் என்றும் சொல்லிக் கொள்ளுவார்கள்.

நான் தேவரையாளி சைவவித்தியாசாலையில் எனது கல்வியை ஆரம்பித்த காலத்தில் இரண்டு தினங்கள் பாடசாலைக்குச் செல்லாது கள்ளமொளித்தேன்.

நான் முதலாம் வகுப்பில் சேர்ந்து படிக்க ஆரம்பித்த காலத்தில் எனது தமையன் நான்காம் வகுப்பில் படித்துக்கொண்டு இருந்தார். அவர் அப்பொழுது படிப்பில் அவ்வளவு அக்கறை காட்டும் ஒரு மாணவனாக இருக்கவில்லை.

எங்கள் தந்தையாருக்கு பிள்ளைகள் எல்லோரும் நன்றாகப் படித்து, கல்வியில் முன்னேறி வரவேண்டும் என்னும் அக்கறை இருந்துவந்தது.

அதனால் பாடசாலைக்கு மட்டம் போட்டுவிட்டு இஷ்டம்போல விளையாடிக் கொண்டு திரிவதற்கோ, வீட்டில் சோம்பிக்கிடப்பதற்கோ முடியாத சூழ்நிலை.

எனது தமையன் சில சமயங்களில் பாடசாலை செல்வதற்கு மனவிருப்பமின்றி ஏனோதானோ என்று புறப்பட்டுச் செல்வார்.

நான் சிலேற்றைக் கையில் தூக்கிக்கொண்டு அவர் பின்னால் இழுபட்டுக் கொண்டு போவேன்.

எங்களூர் மக்கள் வாழும் குடியிருப்பைத் தாண்டி எங்கள் பாடசாலையை அண்மிய பகுதிக்குள் செல்வதற்கு இடையில், பரந்த ஒரு வெட்டை வெளி இருக்கின்றது. அதனைத் தேவரையாளி வெட்டை என்றும் 'தூந்தகிணத்தடி' வெட்டை என்றும் சொல்லுவார்கள். செறிந்து உயர்ந்து வளர்ந்த காரைப்பற்றைகள், ஆமணக்குகள், நாகதாளிகளினால் அடர்ந்த ஒரு நிலபரப்பு. அந்தப் பகுதியை ஊடறுத்துக் கடந்து செல்வதற்கு அந்தக் காலத்தில் ஒற்றையடிப்பாதைகளே இருந்தன. சிறுபிள்ளை தனித்துப் போய்வருவதற்கு அஞ்சுகின்ற பிரதேசம் அது. அந்தப் பகுதியின் வடகிழக்கு மூலையை அண்டி கண்ணகை அம்மன் கோவில் ஒன்று இருக்கின்றது. பருவமழை பெரிதாகக் கொட்டும் காலங்களில் அந்த ஆலயத்தைச் சுற்றியும் அதன் தெற்குப்புறத்திலும் மழைவெள்ளம் கடல்போல் அலை மோதும்.

கோவிலுக்குச் சற்றுத் தூரத்தில் தென்கிழக்கு மூலையில் பாடசாலைக்கு மாணவர்கள் செல்லும் பாதை ஓரமாக ஒரு இராவாடி

மரம் நின்றது. பாடசாலை முடிந்து வீடு திரும்பும் வேளையில் மாணவர்கள் அந்த மரநிழலில் சற்று நேரம் தரித்து நின்று களைப்பாறிச் செல்வதுண்டு.

கோயிலுக்குப் பின்புறமாக பனைகள் உயர்ந்து வளர்ந்து நிற்கும் நிலப்பரப்பொன்று உண்டு. மாட்டு வண்டிகள் ஊடறுத்துச் செல்லும் வண்டிச் சக்கரத்தின் தடங்கள் பதிந்து ஒரு பாதைபோலக் காட்சி தரும்.

அந்தப் பகுதிக்குள் பொதுவாகவே சன நடமாட்டம் வெகு குறைவாக இருக்கும்.

எனது தமையன் பாடசாலை செல்வதற்கென்று வீட்டில் இருந்து புறப்பட்டு வந்து கண்ணகை அம்மன் கோவிலுக்குப் பின்புறமுள்ள பனங்காணிக்குள் வண்டிச் சக்கரங்கள் வகுத்து வைத்த பாதையில் என்னை இருக்கும்படி சொல்லி, தானும் அமர்ந்துகொள்வார். பாடசாலை முடிந்து மாணவர்கள் வீடுகளுக்குத் திரும்பி வரும் நேரம் வரை நான் கல்லாகச் சமைந்து அவர் அருகில் அங்கு அமர்ந்திருப்பேன்.

அமர்ந்த இடத்தில் இருந்து எழுந்து, அங்குமிங்கும் நடமாடுவதற்கு எனது தமையன் என்னை அனுமதிப்பதில்லை. அப்படி எழுந்து தலைக்கறுப்பை வெளிக்காட்டிவிட்டால் நாங்கள் பாடசாலை செல்லாது ஒளிந்திருப்பதை யாராவது கண்டு வீட்டில்போய் எங்கள் பெற்றோரிடம் சொல்லி விடுவார்கள் என்ற அச்சம் அவருக்கு.

பாடசாலை முடிந்து மாணவர்கள் திரும்பி வரும் வேளை எப்படி அவருக்குத் தெரிந்ததோ, நான் அறியமாட்டேன். "வா, வீட்டை போவம்" என்று சொல்லி பக்கத்தில் வைத்திருந்த புத்தகங்களைக் கையில் எடுத்துக் கொண்டு புறப்பட்டார். வண்டிப் பாதையில் கிடந்த புழுதி மண்ணை அள்ளித் தனது பாதங்களில் நன்றாகப் பூசிக் கொண்டார். அவ்வாறே என்னையும் பூசிக் கொள்ளும்படி பணித்து, போதாக்குறைக்குத் தானும் அள்ளி எனது கால்களில் பூசிவிட்டார்.

காலையில் பாடசாலை வரும்வேளையில் எங்கள் இருவருக்கும் எங்கள் தாயார் வழமையாகக் குளிப்பாட்டி அனுப்பிவைப்பார். நாங்கள் இருவரும் மண்பாதையில் நடந்து சென்று மீண்டும் பிற்பகல் திரும்பி வருகையில் பாதங்களில் புழுதி படிந்து கிடக்கும். அதனை எனது தமையன் நன்றாக அவதானித்து வைத்திருக்க வேண்டும். பாடசாலை செல்லாது இடையில் தங்கி இருந்துவிட்டு வீடு திரும்பி வரும் எங்கள் கால்களில் எப்படிப் புழுதி படிந்து கிடக்கும்? எங்கள் கள்ளத்தனத்தை வீட்டிலுள்ளவர்கள் கண்டுபிடித்துவிடக் கூடும் என்று முன்னெச்சரிக்கையாக எனது தமையன் கால்களில் புழுதி பூசிக் கொண்டார்.

ஒரு நாள் இப்படி புழுதி பூசிக் கழிந்தது.

மறுநாளும் அதேபோன்று பொழுதைப் போக்கிவிட்டு, பாடசாலை முடிந்து திருப்பி வரும் நல்ல பிள்ளைகளாக இருவரும் புழுதி பூசிக்கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தோம்.

"இரண்டுபேரும் பள்ளிக்கூடம் போகாமல் எங்கே ஒளிச்சிருந்து விட்டு வாறியாள்? இண்டைக்கு ஐயா வரட்டும்" எனச் சொல்லி அம்மா அப்பொழுது அபாய அறிவித்தல் கொடுத்தார்.

எங்கள் இருவருக்கும் முழி பிதுங்கத் தொடங்கியது. நான் சின்னப்பிள்ளை, இதுவரை ஒரு நாள்தானும் ஐயாவிடம் அடிவாங்கிக் கொண்ட அனுபவம் எனக்கில்லை. இன்றைக்கு என்ன நடக்கப் போகின்றதோ! என அஞ்சி ஏங்கிக் கொண்டிருந்தேன்.

எங்கள் தகப்பனாரை நாங்கள் ஐயா என்றே அழைத்தோம்.

தகப்பனார் காலை நேரம் தனது தொழிலுக்கு வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றால் நடுப்பகல் தாண்டிய பிறகு வீடு வந்து சேருவார். பின்னர் மதிய உணவை முடித்துக் கொண்டு, சற்று நேரம் படுத்து ஓய்வெடுத்துக் கொண்டு பிற்பகல் மீண்டும் புறப்பட்டுச் சென்று விடுவார். மாலை வீட்டுக்கு வந்து ஒரு தேநீர் பருகிக் கொண்டு புறப்பட்டுப் போனாரானால் திருப்பவும் வீடு வந்து சேர இரவு ஒன்பது மணி தாண்டி விடும்.

மாலையில் தேநீர் பருக தகப்பனார் வீடு வருவார் என்று எதிர்பார்த்து உள்ளூர நாங்கள் அஞ்சிக் கொண்டிருந்தோம்.

எங்கள் அதிர்ஷ்டம், அன்றைய தினம் மாலையில் அவர் வீட்டுக்கு வரவேயில்லை.

இனி என்ன இரவு நேரந்தானே! தகப்பனார் வருகின்ற சமயம் நாங்கள் படுத்து உறங்கிவிட்டால் சரி. அதன் பிறகு அவர் மறந்து போய்விடுவார் என்று நாங்கள் நம்பினோம்.

இந்த இரவு நேரத்தை எப்படியும் அவர் கண்களில் படாமல் கடத்திவிட வேண்டும்.

எங்கள் வீட்டு அமைப்பு அதற்குப் பொருத்தமானதாக இருந்தது.

எங்கள் கிராமத்தில் அப்படியொரு வீடு வேறெங்கும் இருக்க வில்லை.

ஒரு முழ அகலத்துக்குமேல் அகன்ற பாரிய மண் சுவரினைக் கட்டி மேலே எழுப்பி, அதன்மீது வளைவைத்து கை மரங்கள் போட்டு, சலாகை அடித்து அந்தக் கை மரங்களை இணைத்து, பனை ஓலையினால் வேயப்பெற்ற பெரிய வீடு. வீட்டின் உள்ளே பாதுகாப் பாகப் பண்டங்களை வைப்பதற்கென ஒரு கோர்க்காலி. கோயில்

கதவுபோல் பெட்டிபெட்டியாகச் சதுர வடிவத்தில் அடைக்கப்பட்ட அலங்காரமான சிறிய கதவு, அந்த வீட்டின் பின்புறமாக வடக்குத்திசை தவிர்ந்த ஏனைய மூன்று பக்கங்களிலும் மிக உயர்ந்த அகன்ற திண்ணைகள். தென்னை ஓலை கொண்டு இழைத்த பன்னாங்கு தட்டிகள் அந்தத் திண்ணைகளை மறைத்துக் கட்டப்பட்டிருந்தன.

எனது தமையனும் நானும் இரவு உணவை மிகவிரைவாக முடித்துக் கொண்டோம். நாங்கள் படுத்துறங்கும் பாய் தலையணைகளைத் தூக்கிக் கொண்டு அந்த வீட்டின் வடகிழக்கு மூலைத் திண்ணையில் இருவரும் போய்ப் பதுங்கிப் படுத்துக் கொண்டோம்.

தகப்பனார் வீடு வந்து சேருவதற்கு முன்னர் படுத்து உறங்கிவிட வேண்டும் என்பதுதான் எங்கள் திட்டம்.

திட்டம் ஒரு புறம் இருந்தாலும் திட்டமிட்டதுபோல உறக்கம் வந்துசேர வேண்டுமே!

தகப்பனார் வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டார். இனி வீட்டில் வளர்க்கப்படும் பசுமாட்டுக்குப் பனையோலைகளைக் கிழித்துத் தும்பாக்கி உணவாகப் போடுவார். பிறகு வீட்டுக்கு வெளியேயுள்ள எங்கள் கிணற்றுக்குச் சென்று நன்றாகக் குளித்துவிட்டுத் திரும்பி வந்து உணவு உண்பார். அதன் பிறகு சுருட்டொன்றைப் பற்றவைத்து இரண்டு புகை இழுத்துவிட்டு, அன்றைய உடல் அலுப்புத்தீர மெல்லச் சரிந்து படுத்துக்கொள்ளுவார்.

தகப்பனார் வீட்டு முற்றத்தில் பனையோலைகளைப் போட்டுக் கிழித்துக் கொண்டிருக்கும் சத்தம் காதில் வந்து விழுகிறது.

எங்கள் இருவரையும் பற்றி இதுவரை அம்மாவிடம் அவர் விசாரித்ததாகத் தெரியவில்லை.

அம்மா வலிந்துபோய் எங்களைப்பற்றி தகப்பனாரிடம் சொல்லித் தானாகக் காட்டிக்கொடுக்க மாட்டார்.

ஓலை கிழித்து முடிந்து விட்டது. ஓலை மட்டை ஈர்க்கு அடங்கிய மூரியை வேலியில் சார்த்திவைப்பதற்கு அவர் வருகிறார், திண்ணைக்குள் வந்து பதுங்கி ஒளித்துக் கிடக்கும் எங்களை அவர் கண்டுவிட்டார். கையில் தூக்கிச் சென்று வேலியில் சார்த்திவைத்த மூரியில் இருந்து ஒரு ஈர்க்கைப் பிடுங்கி எடுத்து வந்து எங்கள் தலைமாட்டுக்கு நேராக, எதிரில் நின்று "எழும்புங்கோடா!" எனக் குரல் கொடுத்தார்.

இருவரும் துடித்துப் பதைத்துக் கொண்டு எழுந்து திண்ணையை விட்டுக் கீழே இறங்கி அவர் முன் நடுங்கிக்கொண்டு நின்றோம். "படிக்கட்போறதுக்குப் பஞ்சியாகக் கிடக்கோ? பள்ளிக்கூடம் போகாமல் எங்கே? ஒளிச்சிருந்து விட்டு வாறியள்!" எனக் கேட்டு எனது தமையனுக்கு இரண்டு, மூன்று அடிபோட்டார்.

"நீ கெடுகிறது போதாதெண்டு அவன் சின்னப்பிள்ளையையும் கெடுக்கிறாய்" என்று சொல்லித் திரும்பவும் அவருக்கு ஒரு அடிவிழுகிறது.

"நீயும் அண்ணனோடை சேந்து ஒளிக்கத் துடங்கி விட்டாய்" சொல்லிக் கொண்டு எனக்கும் ஒரு அடி மெள்ள விழுகிறது.

தனது கையில் பிடித்திருந்த அந்த ஈர்க்கைத் தூர வீசி எறிந்துவிட்டு தகப்பனார் முற்றத்துக்குத் திரும்பிப் போகின்றார்.

எனது வாழ்வில் எனது தகப்பனார் எனக்கு அடித்த முதல் அடி அதுதான்.

இறுதி அடியும் அந்த ஒரு அடிதான்.

அதன் பிறகு பள்ளிக்கூடம் சென்று கல்வி கற்பதற்கு என்றுமே நான் கள்ளமொளித்தது கிடையாது.

தகப்பனார் அன்று எனக்கடித்த அந்த ஒரு அடி, எனது கல்விக் கண்ணைத் திறப்பதற்கு விழுந்த அடியாகவே இன்று நான் கருதுகின்றேன்.



பாட்டியின் மடிமீது படுத்துக்கிடந்து பாரதம், இராமாயணம், பஞ்சதந்திரம், விக்கிரமாதித்தன் கதைகள் கேட்டு, எனது பாலியவயதில் பாட்டிபோட்ட பசளையில் வேர் ஊன்றி இலக்கியக் கர்த்தாவாக வளர்ந்தவன் நான்.

அல்லது

அம்புலியை அழகுகாட்டி, பாட்டும் கதையும் இனிக்கச் சொல்லி பாலும் சோறும் பரிந்து எனக்கு ஊட்டி வளர்த்து என்னைக் கவிஞனாக்கினாள் - எழுத்தாளனாக்கினாள் என் அன்னை.

எழுத்தாளர்கள் பலர் இப்படி தங்கள் பாலியப்பருவம் பற்றி கதைவிடுவது வழக்கம்.

எனக்குக் கதைவிடத் தெரியாது.

நான் சிறுவனாக இருந்த காலத்தில் எனக்கும் கதை சொல்லப்பட்டு அந்தக் கதைகளைக் கேட்டு நான் வளர்ந்தேன் என்பது உண்மை.

அந்தக் கதைகள் எனக்கு எங்கே சொல்லப்பட்டன என்றால், இது நடந்த இடம் கள்ளுக்கொட்டில் என்பது இன்னொரு பெரிய உண்மை.

இங்கு நான் இன்னொரு விடயத்தையும் நிச்சயம் குறிப்பிட வேண்டும்.

சமூகத்தின் அடிமட்டத்தில் இருந்து மேலே உயர்ந்து வளர்ந்து வந்தவர்கள், தமது ஆரம்ப காலம் பற்றி வெளியே எடுத்துப் பேசாமல்

பெரும்பாலும் மௌனமாக இருந்து விடுவதை நான் அவதானித்து வைத்திருக்கின்றேன்.

ஒடுக்கப்பட்ட சமூகங்களில் இருந்து வந்தவர்களே தங்களை இனங்காட்டிக் கொள்ளாது மறைப்பதில் மிகத் தீவிரமாகக் காணப் படுகின்றார்கள். தங்கள் குடும்பத்தின் ஜீவாதாரமான தொழில் இதுதான் என்பதை வெளியே சொல்லிக்கொள்ளாது மறைத்து போலியான வெளித்தோற்றங்களைக்காட்டிக்கொள்ள முற்படுகின்றார்கள்.

நான் இவ்வாறெல்லாம் பாவனை பண்ணுவதற்கு அறியாதவன். நான் ஒரு பாவனை மனிதன் அல்லன்.

நான் கள்ளுக் கொட்டிலில் கதை கேட்டு வளர்ந்தேன் என்றால், எனது குடும்பத்தில் அனைவரும் முற்றும் கல்வி அறிவற்ற தற்குறிகள் எனத் தீர்மானித்துவிடக்கூடாது.

சிறுவயதில் திட்டமிட்டு எனது கல்வி அறிவு, ஆற்றல் என்பவற்றை வளர்த்தெடுப்பதற்கு வல்லவர்களான அறிவார்ந்த குடும்பச் சூழல் எனக்கு இருக்க வில்லை என்பது உண்மை.

இத்தகைய ஒரு சூழலிலேயே கள்ளுக் கொட்டிலில் நான் கதை கேட்டு வளர்ந்தேன்.

வட பிரதேசத்தில் தோன்றிய ஆறுமுக நாவலர், சேர். பொன். இராமநாதன் போன்றவர்களும் அவர்கள் வழிவந்த தமிழ்த் தலைவர்களில் பலரும் ஒடுக்கப்பட்ட மக்களின் விரோத சக்திகளாகவே செயற்பட்டு வந்திருக்கின்றார்கள். சமூக ஆதிக்க சக்திகளின் வலுவான பிரதிநிதிகளாகவும் தீவிரமாகச் செயற்பட்டார்கள். இந்து மதம் சார்ந்த நிராகரிப்புகள், சர்வசன வாக்குரிமை எதிர்ப்பு, சமாசனசம போசன எதிர்ப்பு என தமிழ்த் தலைவர்கள் என்று சொல்லப்பட்டவர்களின் குணாம்சங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் சாதிவெறியுடன் வெளிப் பட்டிருக்கின்றன.

இந்தத் தலைவர்கள் வரிசையில் வந்தவர்தான் ஜீ.ஜீ.பொன்னம்பலம். இந்தப் பொன்னம்பலமே வடபிரதேசத்துக்கு மரவரி முறை நடைமுறைப்படுத்தப்படுவதற்குக் காரணமாக இருந்தவரெனப் பொய்யான ஒரு கருத்து இருந்து வருகின்றது. சட்டசபை உறுப்பினராக இருந்த எஸ். நடேசன் வடபகுதிக்கு மரவரி முறை வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார். 1936-ல் காங்கேசன் துறைப் பகுதியில் பரீட்சார்த்தமாக அமலுக்கு வந்த மரவரி முறை 1937-ல் வடபிரதேசம் எங்கும் நடைமுறைப்படுத்தப்படலாயிற்று.

மரவரி முறை 1936-ஆம் ஆண்டு வடபிரதேசத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டமைக்குக் காரண கர்த்தாவாக இருந்தவர் அவர்தான்.

வடபிரதேசத்தில் மரவரி முறை நடைமுறைக்கு வருவதற்கு முன்பு, கள்ளிறக்கும் தொழிலில் தனிப்பட்ட முதலாளிகள் ஆதிக்கம் செலுத்தி வந்தார்கள். அந்த முதலாளிகள் பொருள் படைத்த உயர்சாதியினராகவே அக்காலத்தில் இருந்து வந்திருக்கின்றார்கள். வடபிரதேசத்தில் ஆங்காங்கே இயங்கிவந்த கள்ளுத் தவறணைகள் அரசாங்கத்தினால் குத்தகைக்கு விடப்படுகையில், சமூக ஆதிக்கமும் பணபலமும் உடைய உயர்சாதி முதலாளிகள் அவற்றை ஏலத்தில் எடுத்து, தங்கள் செல்வ வளத்தைப் பெருக்கிக் கொண்டார்கள். 'குத்தகைக்காரன்' என்ற கௌரவப் பெயரைப் பணத்துடன் சேர்த்துச் சம்பாதித்துக் கொண்டார்கள். கள்ளிறக்கும் தொழிலாளர்கள் காலை, மாலை இருவேளைகளிலும் பனை, தென்னை மரங்களில் வியர்வை வடிய ஏறி இறங்கி உழைத்த உழைப்பை அந்தக் குத்தகைக்காரன்கள் சுலபமாகச் சுரண்டிக் கொண்டு போனார்கள்.

அந்தக் கொடுமைக்கொரு தீர்வாக வடபிரதேசம் எங்கும் மரவரிமுறை நடை முறைக்கு வந்துது.

கள்ளிறக்கும் தொழிலாளி தான் கள்ளிறக்கும் பனைக்கு அல்லது தென்னைக்கு குறித்த ஒரு வரியை அரசாங்கத்துக்குச் செலுத்திவிட்டு, கள்ளினை இறக்கி அதைத் தானே விற்பனை செய்து கொள்ளும் நடைமுறையே மரவரி முறை.

தவறணை முறை நடைமுறையில் இருந்து வந்த காலத்தில் சிறிய கள்ளுத் தவறணைகள் ஒன்று இரண்டு கள்ளிறக்கும் தொழிலாளர்கள் ஏலத்தில் குத்தகைக்கு எடுத்து கள்ளிறக்குவதுடன் அவற்றை நடத்தியும் வந்தார்கள்.

எனது தகப்பனாரின் தமையன் 'மலடனோடு' சேர்ந்து வல்வெட்டி வன்னிச்சிகோயில் கள்ளுத்தவறணையைக் குத்தகைக்கு எடுத்து நிருவகித்து வந்திருக்கின்றார்.

அந்த அனுபவத்தில் மரவரிமுறை வடபிரதேசத்தில் அமுல் படுத்தப்பட்டதும், எங்கள் வீட்டில் இருந்து அரைமைல் தூரத்துக்கு அப்பால், பருத்தித்துறையில் இருந்து காங்கேசன்துறை நோக்கிச் செல்லும் பிரதான வீதி அருகே விற்பனை நிலையம் ஒன்றை நிறுவினார். தாங்கள் தினமும் காலை, மாலையில் சேகரிக்கும் கள்ளினை எடுத்துச் சென்று அங்கு விற்பனை செய்தார்.

வீட்டில் வைத்து கள்ளு விற்பனை செய்வது எங்கள் குடும்பத்து வழக்கமல்ல.

தந்தையாருக்கு அவரது கள்ளுக்கொட்டிலில் இருந்து கள்ளு விற்பனை செய்வதற்குப் பொறுப்பான ஒரு ஆள் கிடைக்கவில்லை.

எனது தமையன் தனது கல்வியில் அதிக அக்கறை காட்டாது காலத்தை வீணாக்கிக் கொண்டிருந்தார். அவரைத் தமது தமக்கையின் மகன் குத்தகை எடுத்திருந்த மூதூர்க் கள்ளுத் தவறணைக்கு அனுப்பி வைத்து விட்டார்.

நான் பாடசாலையில் இருந்து வீடு வந்த பிறகும், விடுமுறை நாட்களிலும் தகப்பானருக்கு உதவியாக அவரது கள்ளுக்கொட்டிலுக்குப் போவதற்கு ஆரம்பித்தேன்.

கள்ளுக் கொட்டிலுக்கு வந்து குடிக்கின்றவர்களில், எத்தனை அற்புதமான மனிதர்கள் இருந்தார்கள்!

ஒழுக்க சீலர்கள், அறிவாளிகள், கல்விமான்கள், மனிதாபிமானிகள், கலைஞர்கள், நடிகர்கள், மந்திர வாதிகள், சண்டியர்கள், பொய்யர்கள், திருடர்கள் என... எத்தனை மனிதர்களை அந்தச் சின்ன வயதில் நான் சந்தித்திருக்கின்றேன்!

பாகவதர்ப்பாணியில் தலைமயிர் வளர்த்துவிட்டுக் கொண்டிருந்த ஒரு கிழவர் வல்வெட்டித்துறையில் இருந்து மாலை நேரம் தினமும் அங்கு வந்து சேருவார். நரைத்த தலைமயிர் இப்படி பால் போல வெண்மையாக இருக்கும் என்பதை அவருக்குப் பிறகு நான் இதுவரை கண்டதில்லை. அவரைக் கண்டு கொண்டால் பத்து வயதுச் சிறுவனாக இருந்த என் மனதுக்கு ஒரே கொண்டாட்டம்.

நான் ஓய்வாக இருக்கும் சமயங்களில் எல்லாம் அவர் முன்பாகப் போய் அமர்ந்து கொள்வேன். உடனே எங்களுக்கு முன்னுள்ள மணலைக் கூட்டி சிறு பிட்டி ஒன்று கட்டுமாறு அவர் எனக்குச் சொல்லுவார். பிட்டி கட்டி முடிந்ததும் அவர் சொற்படி மூன்று கற்களை எடுத்து அந்த மணற் பிட்டிக்குள் புதைத்து வைப்பேன்.

அவர் தனது கையை நன்றாக விரித்துக் காட்டிய பிறகு, அந்தக் கையினால் அந்த மணற் பிட்டிமேல் பட்டும் படாமலும் இரண்டு மூன்று தடவைகள் மெல்லத் தடவி விடுவார்.

பின்னர் மணலைக் கிளறிப் பார்க்கும்படி அவரிடம் இருந்து ஆணை பிறக்கும்.

நான் அந்தப் பிட்டி மண்ணைக் கிண்டிக் கிண்டித் தேடுவேன்.

என்ன அதிசயம்... நான் புதைத்து வைத்த அந்தக் கற்கள் அங்கு இருக்கவே இருக்காது.

மீண்டும் அந்த மண்ணைக் கூட்டி பழையபடி பிட்டி ஒன்று கட்டுமாறு தெரிவிப்பார்.

தனது கையை விரித்து முன்போலச் செய்து முடித்து விட்டு, திரும்பவும் அந்த மண்ணைக் கிளறிப் பார்க்குமாறு சொல்லுவார்.

மீண்டும் ஓர் அதிசயம்! அந்தக் கற்கள் மூன்றும் மணலுக்குள் இருந்து என்னைப் பார்த்துச் சிரிக்கும்.

அவர் செய்து காட்டிய அந்த அதிசயம் கண் கட்டு வித்தை என்று அப்பொழுது எனக்குச் சொன்னார்கள்.

அது என்ன வித்தையோ! அன்று என் மனதில் உண்டான வியப்பில் இருந்து இன்றும் என்னால் விடுபட முடியவில்லை.

கள்ளுக் குடிப்பதற்கு வந்தவர்கள் எல்லோரும் இரவு நேரம் அங்கிருந்து ஒவ்வொருவராகக் கிளம்பிப் போய் விடுவார்கள். எனது தகப்பனாரும் பெரிய தகப்பனாரும் தங்கள் தொழில் முடித்து வந்து சேருவதற்கு அதிக நேரமெடுக்கும்.

அந்தச் சமயங்களில் எல்லாம் அவர்கள் திரும்பி வரும்வரை எனக்குத் துணையாக ஒருவர் அமர்ந்திருப்பார்.

அவரை 'ஆட்டுக்காரன்' என்றும் 'ஆட்டுக்காரக் கணபதியான்' என்றும் மதிப்புடன் எனது தகப்பனார் குறிப்பிட்டுச் சொல்லுவார்.

'ஆட்டுக்காரன்' என ஒரு பட்டப்பெயர் என்ன காரணத்தினால் அவருக்கு வழங்கி வந்தது என்பது இன்றுவரை எனக்குத் தெரியவராது.

நடுத்தர உயரமும் சுமாரான உடற்கட்டுமுடைய அழகான சிவந்த கிழவர். தலையில் சின்னஞ் சிறிய ஒரு குடுமி போட்டிருப்பார். அரையில் கட்டிய வேட்டியின் மேல் சிறிய ஒரு துண்டை சால்வையாகச் சுருக்கிக் கட்டியிருப்பார். மிக நிதானமாக மெல்ல அடி எடுத்து நடப்பார். வாய் திறந்து ஆறுதலாக மிக மென்மையாகப் பேசுவார்.

எனது தகப்பனார், பெரிய தகப்பனார் அங்கு வந்து சேருவதற்கு முன்னர், எனக்கு நித்திரைத் தூக்கம் வந்து விடக் கூடாது என்னும் அக்கறை அவருக்கு அப்பொழுது இருந்தது.

அதனால் தினமும் எனக்குப் புதுப்புதுக் கதைகள் சொல்லிக் கொண்டிருப்பார். அத்தனை கதைகள் அப்படி அவருக்குச் சொல்ல முடிந்தது என்பது உண்மையில் பெரிய அதிசயந்தான். ஒரு நாள் சொன்ன கதையைத் திருப்பி அவர் எனக்குச் சொன்னதில்லை. அந்தக் கதைகளை யாரிடமோ அவர் கேட்டு அறிந்து வைத்திருந்து பின்னர் எனக்குச் சொன்னாரெனக் கருதவும் இடமில்லை. அவரைப் போல வேறுயாரால் அத்தனை கதைகளைச் சுவையாக எடுத்துச் சொல்ல முடியும்.

எல்லாம் அவர் உள்ளத்தில் ஊறிப் பீறிட்டு வெளிப்பட்ட கற்பனையின் ஊற்றுக்கள்தான். அந்தக் கதைகளை உபகதைகள் என்ற பெயரில் அவர் எனக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். கற்பனைக்

கதைகள் என்பதை உபகதைகள் என அவர் குறிப்பிட்டிருக்க வேண்டுமென இன்று நான் கருதுகின்றேன்.

அவர் ஒரு கதைக் களஞ்சியம்.

அவரிடம் கள்ளுக் கொட்டிலில் இருந்து கதை கேட்டு வளர்ந்தவன் நான்.

பத்துவயதுச் சிறுவனாக இருந்த என் உள்ளத்தில் அவர் விதைத்த விதைகள், வளர்த்த கற்பனைகள் அந்தக் காலத்திலேயே என்னுள் முளை கொள்ள ஆரம்பித்து விட்டன.

எனது தந்தையின் கள்ளுக் கொட்டிலுக்கு அண்மையில் வயது முதிர்ந்த ஒரு கிழவி அக்காலத்தில் வாழ்ந்தாள். அந்தக் கிழவி வல்வெட்டித் துறையில் இருந்து வந்து பொலிகண்டியில் திருமணம் செய்து கொண்டவள். அந்தக் கிழவியின் கணவனை நான் கண்டதில்லை. அவர் பல ஆண்டுகளுக்கு முன்னரே இறந்து போனார் என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

கிழவி தட்டை வடை சுட்டு, பனையோலைப் பெட்டியில் வைத்து தலையில் சுமந்து திரிந்து அவற்றை விற்று வாழ்வை ஓட்டிக் கொண்டிருந்தாள். அந்தக் கிழவி சுட்டு விற்ற வடை போன்று அளவில் பெரியதும் சுவை மிகுந்ததுமான தட்டை வடைகளை நான் இதுவரை வேறெங்கும் உண்டதில்லை. வடமராட்சியின் விசேட தயாரிப்பு இந்தத் தட்டை வடை. வடமராட்சி வடைகளுக்குள்ளும் அந்தக் கிழவி சுடும் தட்டை வடைகள் அதி விசேடம்.

தென்னை மரங்கள் நிறைந்த ஒரு காணிக்குள், ஒரு மூலையில் இருந்த குடிசையில் அவள் வாழ்ந்து வந்தாள். அவள் வாழ்ந்த நிலம் அவளுக்குச் சொந்தமானதல்ல. இரவல் குடிநிலத்தில் அவள் வாழ்ந்து கொண்டிருந்தாள்.

அவளுக்கு ஆண் பிள்ளைகள் இருவர் இருந்தார்கள். அவர்கள் இருவரும் அவளோடு சேர்ந்து வாழாது தொழிலின் பொருட்டு திருகோணமலைப் பகுதியிலோ அல்லது வேறெங்தோதான் வாழ்ந்து வந்தார்கள். பிள்ளைகள் அவளைக் கவனிப்பதில்லை என்றும் மற்றையவர்கள் சொல்ல நான் கேட்டிருக்கின்றேன்.

அந்தக் கிழவி சிலநாட்களில் தனது குடிசையில் இருந்து ஒப்பாரி சொல்லி அழுவதற்கு ஆரம்பிப்பாள். காலையில் அழுவதற்கு ஆரம்பித்தால் பொழுது மங்கி மறையும் வரை தொடர்ந்து அவள் அழுது கொண்டிருப்பாள். அவள் மார்பில் அடித்துக் கொள்ளும் சத்தமும் இடையிடையே கேட்டுக் கொண்டிருக்கும். வியாபாரம் செய்வதற்கும் அன்றைய தினம் அவள் வெளியே போக மாட்டாள்.

அவள் குடிசைக்குத் தேடிப் போய், ஓயாது தொடர்ந்து அழுது கொண்டிருக்கும் அவளிடம் கேட்டு, வடை வாங்கவும் இயலாது.

அவள் தன் குடிசையில் அன்று அடுப்பு மூட்டுவதும் சந்தேகம்தான்.

வாரத்தில் ஒரு தடவையாவது இப்படி அந்தக் கிழவி அழுது கொண்டிருந்தாள்.

அவள் அழுகுரல் கேட்டால் நான் உள்ளுக்குள் துடித்துப் போவேன்.

அவள் பிள்ளைகளை மனதில் வைத்துக் கொண்டிருப்பேன்.

ஓடிச் சென்று அவள் அழுகையை நிறுத்த வேண்டும் போல அப்பொழுது எனக்குத் தோன்றும். அப்படியான இரண்டொரு சமயங்களில் கையில் காசை எடுத்துக் கொண்டு அவள் குடிசையைத் தேடிப்போயிருக்கேன்.

ஒருவன் தன் முன்னால் வந்து நிற்பதைக் கண்டு கொண்டதாகக் காட்டிக் கொள்ளாது அவள் தன் பாட்டில் கண்ணீர் வடித்து அழுது கொண்டிருப்பாள்.

நான் சற்று நேரம் அங்கு தரித்து நின்று விட்டு, பின்பு ஏமாற்றத்துடன் தலைகுனிந்து திரும்பி விடுவேன்.

அது நடந்து மறுநாள் காலையில் தலையில் வடைப் பெட்டி சுமந்து கொண்டு அவள் வெளியே வருவாள்.

நான் ஓடிச் சென்று அவளிடம் காசு கொடுத்து முதல் ஆளாக வடை வாங்கிக் கொள்வேன்.

நான் அவளுக்கு உதவி செய்கின்றேன் என்ற நினைப்பு அப்பொழுது எனக்கு மனதில் இருந்தது.

அவள் கதையை நான் எழுத வேண்டும் என்னும் எண்ணம் ஒரு நாள் திடீரென எனக்கு மனதில் தோன்றியது.

பள்ளிப் பாடம் படிப்பதை விட்டு அவள் கதையை நான் எழுத ஆரம்பித்தேன்.

காலை நேரந்தான் அவள் கதை ஆரம்பமாகிறது.

அவள் கண்ணீர் விட்டு அழுவதற்குத் தொடங்கும் நேரந்தானே, அவள் கதை தொடங்கும்!

காலைப் பொழுது புலரும் அந்த நேரத்தைக் காட்சிப் படுத்தி பல தடவைகள் திரும்பத் திரும்ப எழுதினேன். எனக்கு முடியவில்லை. சலித்துப் போனேன்.

எனது பாடநூல் "பாலபாடம்", அந்த நூலின் முதல் பாடம் "காலைக்காட்சி" என்பது பிறகுதான் எனது ஞாபகத்துக்கு வருகிறது. உடனே பாலபாடத்தை எடுத்து காலைக் காட்சியில் இடம்பெற்றிருந்த சூரிய உதயம் பற்றிய வர்ணனைகளை முதலில் எழுதினேன்.

அதனைத்தொடர்ந்து மிகுதிக் கதையை, அந்தக் கிழவியின் கதையை எழுதி முடித்தேன்.

அழுது கொண்டிருந்த அந்தக் கிழவியின் துயரம் தாங்காது அந்தப் பிஞ்சு வயதில் நான் உள்ளத்தால் அழுது கொண்டு அவள் கதையை எழுதி முடித்தேன்.

இன்றும் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கும் மக்களின் கதைகளை நான் எழுதிக் கொண்டிருக்கும் வேளையில் எல்லாம் உள்ளூர அழுது கொண்டுதான் இருக்கின்றேன்.

அழுது கொண்டிருந்த அந்தக் கிழவியின் சோகக் கதைதான் எனது முதற்கதை.

அது அச்சேறாத கதை.



அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்பதற்கு முன்னர் இலங்கைப் பாடசாலைகள் அனைத்தும் மதநிறுவனங்களால் அல்லது மத அடிப்படைவாதிகளால், உருவாக்கி நிருவகிக்கப்பட்டு வந்தன. கத்தோலிக்கத் திருச்சபை, மெதடிஸ்த மிஷனறி, அமெரிக்கா மிஷனறி போன்ற கிறிஸ்தவ நிறுவனங்கள், இந்துபோட் எனப்படும் இந்துமத நிறுவனம், சில இந்து மத அடிப்படைவாதிகளும் தமிழ்ப்பிர தேசத்தில் பாடசாலைகளை நிறுவி நிருவகித்து வந்தனர். அரசாங்கப் பாடசாலைகள் சிலவும் அக்காலத்தில் செயற்பட்டு வந்தன.

அந்தப் பாடசாலைகளுக்கு மத்தியில் - இந்தப் பாடசாலைகளில் இருந்து வேறுப்பட்ட ஒரு கல்வி நிறுவனமாக தேவரையாளி சைவ வித்தியாசாலை நடைபெற்று வந்தது.

கிறிஸ்துவத்துக்கு எதிராக, அதேவேளை இந்துத்துவத்தால் நிராகரிக்கப்பெற்ற ஒரு சமூக மக்களால் தோற்றுவிக்கப்பட்டது அந்த வித்தியாலயம்.

ஒடுக்கப்பட்ட மக்களுள் ஒரு பகுதியினரான பள்ளர் சமூகத் தவர்கள் தங்கள் சாதிப்பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம், இந்துமத வளர்ச்சி என்பவற்றை அடிப்படை நோக்கமாகக் கொண்டு அந்த வித்தியாலயத்தை உருவாக்கினார்கள். உருவாக்கினது என்பது மாத்திரமல்லாது, அந்த நிறுவனத்தைத் தாங்களே நிருவகித்து வந்தார்கள் என்பதும் வரலாற்றுப் புதுமை..

ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்குள் குறிப்பிட்ட ஒரு சாதிப் பிரிவைச் சார்ந்தவர்கள் தமக்கென்று ஒரு பாடசாலையைக் கட்டி எழுப்பி

தாங்களே அதனை நிருவகித்து வந்தது வடமராட்சியில்தான் முதல் முதலில் நடந்திருக்கின்றது.

இலங்கையில் அல்லது தமிழ்நாட்டில் இதுபோன்ற வேறொரு பாடசாலை இருந்தாக அறிய முடியவில்லை.

அந்தவித்தியாலயம்கொற்றாவத்தை,வதிரி,அல்வாய்கிராமங்களுக்கு மத்தியில் தேவரையாளிக் கிராமத்தில் கட்டி எழுப்பட்டது. பள்ளர் சமூகத்தவர்கள் பரவலாக வாழ்ந்து வரும் குறிப்பிட்ட இந்தக் கிராமங்களுக்கு மத்தியில் தேவரையாளி இருப்பதும், தேவரையாளியில் புராதனமான கண்ணகை அம்மன் ஆலயம் ஒன்று இருந்து வருவதும் அங்கு பாடசாலை நிறுவப் பெற்று தேவரையாளிச் சைவ வித்தியாலயம் எனப் பெயர்சூட்டப் பெறுவதற்குக் காரணமாக அமைந்தது.

அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்பதற்கு முன்னர் (1960) அந்தப் பாடசாலையை நிருவகிப்பதற்கென ஒருசபை இருந்தது. அந்தப் பாடசாலையைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபை அது. அந்தச் சபை "தேவரையாளிச் சைவகலை ஞான சபை" எனப் பெயர்சூட்டி அழைக்கப்பெற்றது.

அந்தச் சபையின் முக்கியமான உறுப்பினர்களாக ஐவர் இருந்து வந்தார்கள்.

தேவரையாளிச் சைவ வித்தியாசாலை, தேவரையாளி இந்துக் கல்லூரியாகத் தரம் உயர்த்தப்பட்ட காலத்தில் அக்கல்லூரியின் அதிபராக இருந்த எம்.எஸ். சீனித்தம்பியின் தந்தையார் மூ.சி. சின்னத்தம்பி முகாமையாளர். கரவெட்டி வ. சிலம்பு வைத்தியர் தலைவர். எனது தந்தையார் நா. கந்தையா உபதலைவர். கவிஞர் மு. செல்லையாவின் தமையனார் மு.வைத்திலிங்கம் செயலாளர். வே.மகேசன் ஆசிரியரின் தந்தையார் க.வேலுப்பிள்ளை பொருளாளர். இவர்கள் ஐவரும் அந்த வித்தியா சாலையின் நிருவாகத்தைக் கொண்டு நடத்தும் குழுவினராகச் செயற்பட்டு வந்தார்கள்.

இவர்கள் நிருவாக உறுப்பினர்களாகச் செயற்பட்ட காலத்தில் - ஐம்பதுகளின் ஆரம்பத்தில் - ஆலயப்பிரவேசம் சம்பந்தமான விசாரணைகளைச் செய்வதற்காக 'கனகரத்தினம் ஆலயப்பிரவேச விசாரணைக் கொமிஷன்' யாழ்ப்பாணத்துக்கு வந்தது.

ஒடுக்கப்பட்ட மக்கள் மீது எவரோ ஒருவர் கொண்ட காருணியத்தினால் திடீரென்று இந்த விசாரணைக் கொமிஷன் வந்து சேர்ந்து விடவில்லை.

இருபதுகளின் நடுக்கூறில் தோன்றிய யாழ்ப்பாணம் மாணவர் காங்கிரஸ் பின்னர் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ், நாற்பதுகளின் ஆரம்பத்தில் வடபுலத்தில் சமசமாஜக் கட்சியின் - குறிப்பாக,

வடமராட்சி சி. தர்மகுலசிங்கம் (ஜெயம்) செயற்பாடுகள்; இலவசக் கல்வியின் அறிமுகம் (1945), வடபகுதியில் கம்யூனிஸ்ட் கட்சியின் உதயம் (1945), சிறுபான்மைத் தமிழ் மகாசபையின் ஆரம்பம் (1943), காந்தியத்தின் தாக்கம், ஈ.வே. இராமசாமிப் பெரியாரின் திராவிடர் கழகத்தின் பாதிப்பு எனப் பல நிறுவனங்களின் எழுச்சி அந்த விசாரணைக் கொமிஷன் வட பிரதேசத்துக்கு வருகை தருவதற்குக் காரணமாக அமைந்தது. சுதந்திர இலங்கையின் (1948), முதலாவது பிரதமர் டீ.எஸ்.சேனநாயக்க காலத்தில் அந்த விசாரணைக் கொமிஷன் யாழ்ப்பாணம் வந்தது.

அந்த விசாரணைக் கொமிஷன் முன்னர் தோன்றி, ஒடுக்கப்பட்ட மக்கள் ஆலயங்களுக்குள் சென்று வழிபடுவதற்கு வேண்டிய உரிமையை வழங்க வேண்டுமென வலியுறுத்திக் கேட்டு சாட்சியம் அளிக்க வேண்டிய சமூகப் பொறுப்பு தேவரையாளிச் சைவ கலை ஞானசபையாருக்கு அப்பொழுது இருந்தது.

தேவரையாளிச் சைவ கலை ஞான சபை அந்த வித்தியாலயத்தை நிருவகிக்கும் சபை மாத்திரமல்ல; அந்த வித்தியாலயம் அதன் நிருவாகசபை என்பன ஒரு சமூக ஸ்தாபனம் என்ற பொறுப்புடன் செயற்பட்டுவந்தன.

தேவரையாளிச் சைவ கலைஞான சபை செயற்குழு உறுப்பினர்கள் கனகரத்தினம் ஆலயப்பிரவேச விசாரணைக் கொமிஷன் முன் தோன்றி, சாட்சியம் அளிப்பதற்குத் தயார் ஆனார்கள்.

எனது தந்தையார் யாழ்ப்பாணம் போக இருக்கின்றார் என்பதை நான் அறிந்துகொண்டேன்.

இதுவரை யாழ்ப்பாண நகரத்துக்கு நான் போனதில்லை. யாழ்ப்பாணம் போய்ப் பார்ப்பதில் எனக்குக் கொள்ளை ஆசை.

வடமராட்சியில் நெல்லியபடி அப்பொழுது பெரிதாக வளர்ச்சி அடையாத பட்டினம். அங்கு செல்வதானால் நான் கால்நடையாகவே போய்வர வேண்டும். அந்த வயதில் அப்படிப் போய்வருவதற்கும் வீட்டில் அனுமதிக்க மாட்டார்கள்.

வடமராட்சியின் தலைநகரமாக அந்தக் காலத்தில் விளங்கியது பருத்தித்துறை. வடமராட்சிப் பகுதியில் இருந்து புறப்பட்டுச் செல்லும் பஸ்வண்டிகள் எல்லாம் இப்பொழுதும் பருத்தித்துறையில் இருந்து ஏனைய இடங்களுக்குக் கிளம்பிச் செல்லுகின்றன. யாழ்ப்பாணம், காங்கேசன்துறை செல்லும் பஸ் வண்டிகள் எங்களூர் பொலிகண்டி தாண்டியே போகவேண்டும். அதனால் பஸ்வண்டியில் பருத்தித்துறைப் பட்டினத்துக்கு எனது தகப்பனாருடன் போய் வந்திருக்கின்றேன். தாயாரும் என்னை அழைத்துக் கொண்டு போய் வந்திருக்கின்றார்.

ஆனால், யாழ்ப்பாண நகரத்துக்கு இன்னும் நான் போகவில்லை.

யாழ்ப்பாணம் புறப்படும் தந்தையாரிடம் எனது விருப்பத்தை மெல்ல வெளியிட்டேன்.

தந்தையார் உடன் சம்மதித்து விடவில்லை. முதலில் மௌனம் சாதித்தார்.

நான் அவருக்குக் கொடுத்த அரியண்டம் பொறுக்க இயலாது. இறுதியில் என்னை அழைத்துச் செல்வதற்குச் சம்மதித்தார்.

குறித்த தினத்தன்று வீட்டில் இருந்து புறப்பட்ட தந்தையார் வெள்ளை வெளேரென்ற வேட்டி, அரைக்கை நஸனல், உதறித்தோளில் போட்ட சால்வை அணிந்து, நெற்றியில் திருநீறுபூசி, சந்தனத் திலகமிட்டிருந்தார்.

வெள்ளிதோறும் அதிகாலையில் பொலிகண்டி கந்தவனக் கோயில்சென்று வழிபாடு செய்து முடித்து விட்டு வந்து தனது தொழிலைத் தொடங்கும் பக்தர் அவர்.

நான் நீலநிற அரைக்காற் சட்டை வெள்ளைச் சேட் அணிந்து தகப்பனாருடன் புறப்பட்டு விட்டேன்.

சாட்சியமளிக்க இருந்த அனைவரும் யாழ். பஸ் நிலையத்தில் சந்தித்து, விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த மண்டபத்துக்கு நடந்து சென்றார்கள்.

அந்த மண்பத்தின் முன்பகுதியில் நீண்ட நேரம் காத்திருந்து, பின்னர் உள்ளே அழைக்கப்பட்டபோது, சென்று சாட்சியம் அளித்து, திரும்ப வெளியே வந்துசேர மதியம் தாண்டிவிட்டது.

எல்லோருக்கும் நல்ல பசி.

எனக்கும் பசி வயிற்றைக் கிள்ள ஆரம்பித்துவிட்டது.

நகரத்தின் மையப் பகுதிக்கு எல்லோரும் வந்து ஒரு சாப்பாட்டுக் கடைக்குள் நுழைந்தார்கள். வை.சி.சி.கு. என்று அந்தச் சாப்பாட்டுக் கடைக்குப் பெயர் இருந்ததாக எனக்கு ஞாபகம். அந்தச் சாப்பாட்டுக் கடையின் பெயர் அதுதானா? என்பதில் இப்பொழுது எனக்குள் ஒரு சந்தேகம்.

அகலம் குறைந்த ஒடுக்கமான, அதே சமயம் பின்புறம் நீண்டு செல்லும் அமைப்புள்ள கடை அது.

கடைக்குள் புகுந்த தந்தையாரும் மற்றையவர்களும் அதன் முன்பகுதியில்போடப்பட்டிருக்கும்மேசை நீளவாங்குகளில் அமராமல், அவற்றைக் கடந்து உள்ளே சென்றார்கள். ஆசனங்களின் பின்னே சுவரோரமாக எதிர் எதிராக இரண்டு வரிசைகளில் சாக்குகள் விரிக்கப் பட்டிருந்தன.

சாதியக் கொடுமைக்கு எதிராகக் சாட்சியம் அளித்து விட்டு திருப்பி வந்த அவர்கள் அந்தச் சாக்குகளில் வரிசையாக அமர்ந்தார்கள்.

நான் எனது தந்தையாருக்கும் கவிஞர் செல்லையாவின் தமையனாருக்கும் மத்தியில் அமர்ந்திருந்தேன்.

அப்பொழுது "ஏன் அப்படி?" என்று எனக்கு விளங்கவில்லை.

ஆனால், இந்தச் சாதியத்தின் மனித நாகரிகமற்ற கொடுமை யினால், நிலத்தில் விரிக்கப்பட்ட சாக்கினில் எனது தந்தையாருக்கு அருகில் அமர்ந்து வாழையிலை போட்டுப் பரிமாறப்பெற்ற சோற்றை அன்று முதற் தடவையாக நான் உண்டேன்.

எனது இறுதி அனுபவமாகவும் இப்படி நான் உணவு உண்ட அந்த அனுபவம் எனக்கு அமைந்தது.

1954ஆம் ஆண்டு எனது மாணவப்பருவ வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்த காலம்.

அந்த ஆண்டு பாடசாலை முகாமையாளரின் மகன் எம்.எஸ். சீனித்தம்பி அதிபராக வந்து சேர்ந்தார்.

கவிஞர் மு. செல்லையா எங்கள் பாடசாலையில் இருந்து விலக வேண்டிய ஒரு சூழ்நிலை உருவானது.

கவிஞர் செல்லையா தலைமை ஆசிரியராக இருந்த இடத்தில் எம்.எஸ். சீனித்தம்பி அதிபராக வந்து அமர்ந்தார்.

தேவரையாளிச் சைவ வித்தியாசாலையாக இருந்து வந்த எங்கள் பாடசாலை காலப்போக்கில் தேவரையாளி இந்துக் கல்லூரியாக மாற்றம் பெற்றது.

பாடநூல்களுக்கு அப்பால் வேறு நல்ல நூல்களை மாணவர்கள் வாசிப்பதற்கு வழிவகுக்கும் வகையில் 'சுற்று வாசிப்பு'த் திட்டம் அதிபரால் அறிமுகப்படுத்தப்பெற்றது.

அதற்கு முன்னரே எனது தந்தையார் 'தினகரன்' பத்திரிகையை வாங்கிவந்து தினமும் அதனை நான் படிப்பதற்குத் தந்து கொண்டிருந்தார்.

அதிபர் அறிமுகப்படுத்திய சுற்று வாசிப்பு, என்னைத் தீவிர வாசகனாக மாற்றியது. கையில் கிடைத்த நூல்களை எல்லாம் ஆர்வத்துடன் படித்தேன்.

வகுப்பறைப் பாடங்களுக்கு அப்பால் அதுவரை காலம் ஆசிரியர்களால் முறையாக இனங்காணப்படாது இருந்து வந்த நான், அதிபரால் கண்டு கொள்ளப்பட்டேன். மேடையில் பேசும் ஆற்றல் எனக்கு இருப்பது கண்டு நிறையச் சந்தர்ப்பங்களை அதிபர் வழங்கினார். மேடையில் எப்படிப் பேசுவது? என்பதை ஆசிரியர் ஆம. செல்லத்துரை எனக்குச் சொல்லித் தந்து பயிற்றினார்.

இந்துமதக் கலாசாரம் பேணிக் காக்கப்பெற்ற எங்கள் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த நான் தி.மு.க. நூல்களை ஆர்வத்துடன் படிக்க ஆரம்பித்தேன்.

சி.என். அண்ணாதுரை, மு.கருணாநிதி, ஆசைத்தம்பி வரிசையைப் படிக்கத் தொடங்கி இங்கர்சால் நூல்களை வேதங்களாகப் போற்றிப் படித்தேன். மு.வரதராசன், சரச்சந்திரர், அகிலன், கல்கி, ஜெயகாந்தன் என எனது வாசிப்புப் பழக்கம் மேலும் விரிவடைய ஆரம்பித்தது. ஓய்வு நேரங்களில் எல்லாம் புத்தகமும் கையுமாகவே அமர்ந்திருந்தேன்.

வழிபாட்டுக்காகக் கோயில்களுக்குச் செல்லும் வழக்கத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக நிறுத்திக் கொண்டேன்.

சி.என். அண்ணாத்துரையின் பெரிய அளவிலான படம் ஒன்றினை வாங்கி, அதற்குக் கண்ணாடிச் சட்டமிட்டு வந்து எங்கள் வீட்டுச் சுவரில் மாட்டி தொங்கவிட்டேன்.

எனது தந்தையாருக்கு என்மீது மிகுந்த பட்சமும் ஏதோவொரு நம்பிக்கையும் இருந்தது.

ஆனால் நான் ஆலயங்களுக்குச் செல்வதை நிறுத்திக்கொண்டு விட்டேன் என்பது அவர் மனதுக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்திருக்கவேண்டும்.

ஒரு தினம் என்னைப் பார்த்துச் சொன்னார்: "கோயிலுக்குப் போய்க் கும்பிட்டிட்டு வா, மேனை." அவர் அப்பொழுது கோயில் எனக் குறிப்பிட்டது பொலிகண்டி கந்தவனக்கோயில்தான்.

"இந்தக் கோயில்களை எப்ப எங்களுக்குத் திறந்து விடுகிறான்களோ, அண்டைக்குத்தான் நான் கோயிலுக்குப் போவேன்" எனச் சற்றுத் துடுக்காகவே நான் பதில் சொன்னேன்.

எனது தந்தையார் சட்டென்று திரும்பி எனது முகத்தைக் குறிப்பாகப் பார்த்தார். பின்னர் மெல்லத் தலையாட்டிக் கொண்டு "வீண்கரைச்சலுகளைத் தேடாதே!" என்று மாத்திரம் சொல்லிவிட்டு அமைதியாக இருந்தார்.

எனது பேச்சாற்றல் கல்லூரியிலும் கல்லூரிக்கு வெளியிலுள்ள சமூகத்து மத்தியிலும் என்னை அறிமுகப்படுத்தி வைத்தது.

வடமராட்சிப் பகுதிப் பாடசாலைகள் இடையே நடைபெற்ற பேச்சு, பாட்டு, நாடகப் போட்டிகளிலும் தவறாது கலந்துகொள்ளும் எங்கள் கல்லூரி, எல்லோரது கவனத்துக்கும் உள்ளாகியது.

வடமராட்சி மட்டத்தைத் தாண்டி யாழ். மாவட்டப் போட்டிகளிலும் எங்களது கல்லூரி கலந்து கொண்டிருக்கின்றது.

அந்தப் போட்டிகளில் எல்லாம் கலந்து கொள்ளும் சந்தர்ப்பங்கள் வரும்போது தவறாது அதிபர் எனக்கு முதல் வாய்ப்பினை வழங்கினார்.

இந்த இடத்தில் இன்னொரு உண்மையையும் நான் சொல்லியாக வேண்டும்.

எங்கள் கல்லூரியில் அதிபர் சீனித்தம்பியின் வருகை யின் பின்னர் வருடாவருடம் ஒழுங்காக நடைபெற்ற பரிசளிப்புவிழாப் பேச்சுப் போட்டிகளில் என்றும் முதலிடமே பெற்று சுழல் வெற்றிக் கிண்ணத்தைத் தவறாது நான் பெற்று வந்தேன்.

ஆனால், எங்கள் பாடசாலைக்கு வெளியே நடைபெற்ற பேச்சுப் போட்டிகளில் நான் கலந்துகொண்ட சந்தர்ப்பங்களில் நான் வெற்றி பெற்றதில்லை. ஆரம்பப் போட்டியில் வெற்றிபெற்றாலும் இறுதிப் போட்டியில் நான் வெற்றி பெறுவதில்லை. பரிசில் வழங்கப்படுவது மில்லை.

கல்வி நிருவாகத்தினர் அக்காலத்தில் நடைபெற்ற பேச்சுப் போட்டிகளுக்கு தமிழ் அறிந்த நடுவர்களாக முதிய பண்டிதர்களையே அழைத்து வந்து இருத்தினார்கள்.

விறுவிறுப்பும் வேகமும் மிகுந்த எனது பேச்சு, அந்தப் பண்டிதர்களைக் கவரத் தவறியதில் ஆச்சரியமில்லை.

இக்கால கட்டம் வடபிரதேசத்தில் அரசியல் சமூக மாற்றங்கள் புதிய உத்வேகத்துடன் பரவ ஆரம்பித்து விட்ட காலம். தேசிய மட்டத்தில் எஸ். டபிள்யூ.ஆர். டி. பண்டார நாயக்க பதவிக்கு வந்தார் (1956). உடுப்பிட்டித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராக கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பொன். கந்தையா தெரிவு செய்யப்பெற்றார். அதே ஆண்டு யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி கோயில் சகல மக்களும் சென்று வழிபடத் தகுந்த வண்ணம் திறந்து விடப்பட்டது.

இந்த நிகழ்வுகள் ஏதோவொரு வகையில் என்னைப் பாதிக்கச் செய்தன.

சி. தர்மகுலசிங்கம் (ஜெயம்) தேர்தலில் போட்டி இட்ட சமயம் வோட்டுக் கேட்டு எங்கள் இல்லம் வந்து தகப்பனாருடன் பேசிக் கொண்டு வளவுக்கு வெளியே தெருவில் இறங்கிப் போய்க் கொண்டிருந்த வேளை, விருத்தெரியாத சிறுவன் நான் "ஜெயத்துக்கு ஜே" என்று கோஷமிட்டிருக்கின்றேன்.

இப்பொழுது பொன். கந்தையா காலத்தில் - அந்த விருத்தெரியாத சிறுவனல்லன் நான்.

நூல்கள், அரசியல், சமூகம் என்பனவற்றின் பாதிப்பு காந்தியம், சைவம், தமிழ் என்று சொல்லி வாழ்ந்துகொண்டிருக்கும் எங்கள் ஆசிரியர்களில் இருந்து சற்று வித்தியாசமான ஒருவனாக என்னை இனங்காட்ட த் தொடங்கியது.

அதனால் எனது ஆசிரியர்கள் சிலருக்கு என்மீது சற்று மன அதிருப்தி உண்டானது.

எனது மொழிஅறிவுக்கு வேண்டிய அடிப்படை அத்திபாரம் இட்டவர்கள் கவிஞர் செல்லையா, சைவப்புலவர் சி. வல்லிபுரம் ஆகிய இருவருந்தான்.

சைவப் புலவர் சி. வல்லிபுரம் ஆசிரியர் எனக்கு சைவசமயம், தமிழ், இலக்கியம், எண்கணிதம் கற்பித்தார். ஆற்றலுள்ள மாணவர்களுக்குக் கல்வியைத் திட்டமிட்டுக் கொடுப்பதில் மிகச் சிறந்த ஆசிரியர்.

வடமாகாண ஆசிரியர் சங்கம் (N.P.T.A) நடத்திய எட்டாம் வகுப்புப் பொதுப் பரீட்சையில் முதற் பிரிவில் சித்தியடைந்த மூவரில் நானும் ஒருவன்.

நான் எட்டாவது வகுப்புப் படித்துக் கொண்டிருந்த காலத்தில் எனது பெயரை முதன்முதலாக அச்சில் பார்த்தேன். தினகரன் "மக்கள் மன்றம்" பகுதியில் நான் எழுதிய கடிதமொன்று வெளிவந்தது.

சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரவகுப்பில் (S.S.C) நான் படித்துக் கொண்டிருந்தேன்.

சமயப் பாடம், இலக்கியப் பாடம் என்பன வகுப்பிற் கற்பித்துக் கொண்டிருக்கும் வேளைகளில் சைவப்புலவருக்கு என்மீதிருக்கும் அதிருப்தி இடையிடையே வெளிப்படும்.

அதற்குக் காரணமாக இருந்தவை நான் படித்த நூல்கள்தான்.

ஒரு நாள் என்னைப் பார்த்து "நீ கம்பரசம் படித்து விட்டியா?" என்று என்னிடம் அவர் வினவினார்.

அவர் எங்களுக்குக் கம்பராமாயணம் படிப்பித்துக் கொண்டிருந்த ஒரு வகுப்பு அது.

அப்பொழுது 'கம்பரசம்' நூலைக் காசுகொடுத்து வாங்கிப் படித்து விட்டு எனது வீட்டில் பக்குவமாக வைத்திருக்கின்றேன் என்பதை எப்படி அவருக்கு நான் சொல்ல முடியும்?

இன்னொரு நாள் சமயப் பாட வகுப்பு நடந்து கொண்டிருந்தது.

திருக்குறள் எல்லா மதங்களுக்கும் பொதுவான ஒரு நூல் என்று வகுப்பறையில் ஆசிரியர்கள் எங்களுக்குச் சொல்லித் தந்தார்கள்.

ஆனால், இந்து சமயப் பாடத்தில் திருக்குறளில் ஒரு சில அதிகாரங்கள் இடம் பெற்றிருந்தன.

அன்று 'நீத்தார் பெருமை' என்ற அதிகாரத்தில், "ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும் புளார்கோமான் இந்திரனே சாலும் சரி" என்னும் திருக்குறளைப் பதம் பிரித்து மிகத் தெளிவாகக் கற்பித்தார்.

இந்தத் திருக்குறளில் இந்திரனைச் சாட்சி ஆக்கி ஓர் உவமை கூறப்பட்டுள்ளது. "இந்திரனே சாலும் சரி" என்பதற்குள் ஒருகதை பொதிந்து கிடக்கிறது.

கௌசிக முனிவனின் மனைவி அகலிகையை இந்திரன் தவறாக அணுகியதும், அதனால் கௌசிகன் இட்ட சாபத்துக்குள்ளாகி இந்திரன் தன் உடலெங்கும் ஆயிரம் கண்கள் தோன்றின என (மாணவர் மத்தியில் விரசமின்றிக் கண்கள் என) கூறி, அதன் பின்னரே இந்திரனுக்கு ஆயிரம் கண்ணுடையவன் என்று சொல்லப்படுகிறான் என முடிந்தார்.

அதன் பிறகு அவர் திரும்பி கரும்பலகையில் எழுதிக்கொண்டு நிற்கையில் நான் மெல்ல எழுந்தேன். நான் எழும்பும்போது உண்டான கதிரை அரக்கும் சத்தம் கேட்டு, எழுதுவதை நிறுத்திக் கொண்டு, தலையைப் பின்புறமாகத் திரும்பி வகுப்பை நோட்டமிட்டார்.

கரும்பலகையில் எழுதுவதை நிறுத்தினார். எனது பக்கம் திரும்பி நின்று "என்ன?" என்று எரிச்சலுடன் கேட்டார்.

"ஸேர், கௌசிகனின் சாபத்தினால் இந்திரனுக்கு ஆயிரம் கண்கள் தோன்றி இருந்தால், அவனுக்கு முன்னர் இருந்த இரண்டு கண்களோடு சேர்ந்து மொத்தம் ஆயிரத்து இரண்டு கண்களல்லவா இருக்க வேண்டும் ? எப்படி அவனை ஆயிரம் கண்கள் உடையவன் என்று சொல்லுவது சரி!" எனப் பிடரியில் சொறிந்து கொண்டு பணிவாக மெல்லக் கேட்டேன்.

"இரடா...கணக்குக் கேட்க வந்து விட்டான்" எனச் சைவப்புலவர் சீறி விழுந்தார்.

நான் அமைதியாக எனக்குள் சிரித்த வண்ணம் மௌனமாக அமர்ந்து கொண்டேன்.

எனது வாசிப்புப் பழக்கம் - கண்மூடித்தனமாக எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ளாது - எதற்கு? ஏன்? என்று கேட்கும் ஒரு மனப் பாங்கினை எனக்குள்ளே வளர்த்து விட்டது.

எனது தேடலுக்கான வினா இன்றும் என்னுள்ளே எழுந்து கொண்டுதான் இருக்கின்றது.



சமூக அதிகார வலுவுடைய மேன்னிலைச் சமூகத்தின் பாரம்பரியந்தான், முழுச் சமூகத்தினது பாரம்பரியம் என இன்று சொல்லப்பட்டு வருகின்றது. சமூக அதிகார வலுவுடைய சமூகத்துக்கு மத்தியில், அதிகார வலுவற்ற சமூகங்கள் பல இருந்து வருகின்றன. அந்தச் சமூகங்களுக்கென குறிப்பிட்டுச் சொல்லத் தகுந்த தனித்துவமான பாரம்பரியங்கள் சில இல்லாமல் போய்விடவில்லை. ஆனால், அவை சமூக அதிகார வலுவற்ற சமூகங்கள் என்பதனால் அச்சமூகங்களின் பாரம்பரியங்கள் பெரிதும் வெளியே எடுத்துப் பேசப்படாது மூடி மறைக்கப்பட்டே வருகின்றன.

யாழ்ப்பாணச் சமூகத்தின் கல்விப் பாரம்பரியம் எனப் பலராலும் பேசப்பட்டு வருவது அதிகார வலுவுடையயாழ்ப்பாணத்துமேன்னிலைச் சமூகத்தின் கல்விப் பாரம்பரியந்தான். இந்தப் பாரம்பரியத்தினுள்ளே பிரத்தியேகமான தனித்துவமான ஒரு கல்விப் பாரம்பரியம் உண்டென்பதனை மிகச் சரியாக இனங்கண்டு "யாழ்ப்பாணத்தின் இன்னொரு கல்விப் பாரம்பரியம்" என அதனைப் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் குறிப்பிட்டுச் சுட்டிக் காட்டியுள்ளார். சைவப் பெரியார் காசூரன் வழிவந்த தேவரையாளிக் கல்வித்தாபனத்துக்கூடாக வளர்ந்து வந்திருக்கும் கல்விப் பாரம்பரியமே பேராசிரியர் கா.சி. குறிப்பிடும் "யாழ்ப்பாணத்தின் இன்னொரு கல்விப் பாரம்பரியம்" என்பதாகும்.

யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலராலும் அவர் வழிவந்தவர்களாலும் நிராகரித்து ஒதுக்கப்பெற்ற, ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த

மக்களுள் ஒரு பகுதியினர் (பள்ளர் சமூகத்தினர்) ஒன்று சேர்ந்து தமது சிறார்களின் கல்வித் தேவையை நிறைவு செய்யும் நோக்கத்துடன் தமக்கென நிறுவிக்கொண்ட சைவப் பள்ளிக்கூடம் (1917) யா/ தேவரையாளி சைவ வித்தியாசாலை. இன்று யா/ தேவரையாளி இந்துக் கல்லூரி.

கிறிஸ்தவத்துக்கு எதிராகவும் - தம்மை ஒடுக்குமுறைக்குள்ளாக்கிய சைவத்தையே ஆயுதமாகக் கொண்டு - அந்த ஒடுக்குமுறையாளர்களுக்கு எதிராகவும், தேவரையாளிக் கல்வித் தாபனத்துக்கூடாகப் புதிய ஒரு சமூக, கல்விப் பாரம்பரியம் உருவாக்கம் பெற்றது.

அந்தக் கல்விப் பாரம்பரியத்தில் வளர்ந்து வந்தவன் நான்.

தேவரையாளிக் கல்விக்கூடம் மாணவர்களுக்கான கல்வி ஒன்றினை மாத்திரம் வழங்கும் தாபனமாக அக்காலத்தில் விளங்கி வரவில்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்காகத் தீவிரமாகச் செயற்படும் சமூக நிறுவனமாகவும் அக்காலத்தில் இருந்து வந்திருக்கின்றது.

இந்தக் கல்விக் கூடத்தின் சமூக முக்கியத்துவத்தை, அக்கர்லத்தில் இங்கு வருகை தந்த பெரியார்களைக் கொண்டும் ஓரளவு உணர்ந்து கொள்ள முடிகின்றது.

தமிழ்த் தென்றல் திரு.வி.கலியாணசுந்தர முதலியார் (1929), 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி (1949), பெரியசாமித் தூரன் (1949), சுவாமி சுத்தானந்த பாரதியார் (1952), குன்றக்குடி அடிகளார் (1955), பிரதமர் டி.எஸ். சேனனாயக்க (1948), பிரதமர் சேர்.ஜோன் கொத்தலா வல (1955), ஆகியோரும் வேறு சிலரும் இந்தக் கல்வித்தாபனத்துக்கு வருகை தந்திருக்கின்றார்கள்.

இந்தக் கல்விக்கூடத்தின் தலைமை ஆசிரியராக விளங்கிய கவிஞர் மு. செல்லையாவின் கவிதைத் தொகுதி 'வளர்பிறை' 1952-ல் இங்கு வெளியிட்டு வைக்கப்பட்டது. அந்த வெளியீட்டு விழாவுக்கு நவநீத கிருஷ்ண பாரதியார் அன்று தலைமை தாங்கினார்.

பிற்காலத்தில் நான் நெருக்கமான உறவு பூண்டு பழகிய இரசிகமணி கனகசெந்திநாதனை அந்த நூல் வெளியீட்டு விழா மேடையில்தான் முதன்முதலாகக் கண்டேன்.

அந்த நூல் வெளியீட்டு விழா நடைபெற்ற சமயம், தேவரையாளி பள்ளிக்கூட மாணவனாக, எனது தந்தையார் அருகே அமர்ந்திருந்து நிகழ்ச்சிகளை நான் பார்த்திருக்கின்றேன்.

நான் மாணவனாக இருந்த காலத்தில் தேவரையாளி கல்வித் தாபனத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்த ஆசிரியர்கள் அனைவரும்,

ஒடுக்கப்பட்ட சமூகத்தின் முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டு மிகுந்த சமூக அக்கறையுடன் செயற்பட்டு வந்தார்கள். மாணவர் களிடத்தில் காணப்பெறும் ஆற்றல்களை இனங்கண்டு அவர்களது ஆளுமையை வளர்த்து விடுவதில் ஆர்வம் காட்டினார்கள்.

இத்தகைய செயற்பாடுகள் அனைத்தும் எம். எஸ். சீனித்தம்பி அவர்கள் அதிபராக வந்த காலம் முதல் மேலும் உத்வேகம் பெறத் தொடங்கின. எம்எஸ். அவர்கள் 1954-ல் தேவரையாளி இந்துக்கல்லூரியின் அதிபராக வந்து சேர்ந்தார். அந்த ஆண்டு முதல் 1957-ல் நான் S.S.C. சித்தி அடைந்து கல்லூரியில் இருந்து வெளியேறும் வரையுள்ள நான்காண்டு காலம் அவரது மாணவனாக இருந்து கல்விகற்று வந்திருக்கிறேன்.

அந்த நான்காண்டு காலம் எனது வாழ்க்கையில் மிக முக்கியமான ஒரு காலம்.

அந்த நான்காண்டு காலம் எனது வளர் இளம் பருவகாலம்.

சமூகத்திலும் அரசியலிலும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காலமாகவும் அக்காலம் இருந்திருக்கிறது. சமூக, அரசியல் மாற்றங் களும் போராட்டங்களும் ஆரம்பிப்பதற்கான அடித்தளங்கள் அக்காலத்தில் இடப்பெற்றன.

கல்லூரியின் பொறுப்பினைப் புதிதாக வந்து ஏற்றுக்கொண்ட அதிபர் மாணவர்கள் மத்தியில் "விவாத மேடை" ஒன்று நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை அப்போது செய்தார். இன்றைய 'பட்டி மன்றம்' அன்று 'விவாத மேடை' எனப் பெயரிட்டு அழைக்கப்பெற்றது. அந்த விவாத அரங்கின் தர்க்கித்தல் தலைப்பாக, "பெண்களுக்குக் கல்வி அவசியமா? அவசியமில்லையா?" என்பதே தரப்பட்டது. அவசியம் என்ற அணியில் மாணவிகள் மூவரும், அவசியமில்லை என்ற அணியில் மாணவர்கள் மூவரும் வாதிட்டோம். ஆண்கள் அணியின் தலைவனாக நான் இருந்தேன். அணியின் தலைவனாக நான் இருந்ததினால் அரங்கில் இருதடவைகள் வாதிடுகின்ற வாய்ப்பு எனக்கு வழங்கப் பெற்றது. அந்த விவாத அரங்கில் மாணவர்கள் அணியே அன்று வெற்றி பெற்றது. அந்த வெற்றிக்குப் பெருமளவு காரணமாக நான் இருந்தேன் என்று சொல்லலாம். எதிர் அணிக்குத் தலைமை தாங்கிய மாணவி, விவாத முடிவில் மேடையில் கண்ணீர்விட்டு அழுதார்.

அந்த விவாத மேடையே அதிபரின் பார்வை என் பக்கம் திரும்புவதற்குக் காரணமாக அமைந்தது. சிறுவயது முதல் என்னிடத்தில் இருந்துவந்த பேச்சாற்றலை இனங்கண்டு எனது ஆளுமையை வளர்த்து விடுவதில் மிகுந்த கரிசனையோடு அவர்

செயற்பட்டு வந்தார். பாடசாலைகளுக்கிடையே மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிகள் நடைபெறுகின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் தவறாது நான் கலந்துகொள்ளும் வாய்ப்பினை முன்னுரிமை தந்து வழங்கி வந்தார். ஒரு மாணவன் மாத்திரம் பங்குபற்றுகின்ற போட்டியாக இருந்தால், நிச்சயம் அந்த ஒரு மாணவனாக எங்கள் கல்லூரி சார்பில் நான் கலந்து கொள்வேன்.

ஆனால், எங்கள் கல்லூரிக்கு வெளியே நான் கலந்துகொண்ட பேச்சுப் போட்டிகளில் - ஒரேயொரு போட்டி தவிர, வேறு எந்தவொரு போட்டியிலும் நான் பரிசில் பெற்றதில்லை. எங்கள் கல்லூரி மாணவர்கள் சிலர் அந்தப் பேச்சுப் போட்டிகளில் பரிசுகளை அக்காலத்தில் பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

அக்காலத்தில் பேச்சுப் போட்டிகளுக்கு நடுவர்களாக முதிய ஆசிரியர்களே பெரும்பாலும் வந்து அமர்ந்திருந்தார்கள். மேடைப் பேச்சுகளுக்குரிய பழைமையான வரைவிலக்கணங்களை அளவுகோல் களாகக் கொண்டு பேச்சுக்கள் கணிக்கப் பெற்ற போது, விறுவிறுப்பான எனது பேச்சுக்கள் பரிசில்களைப் பெற்றுக்கொள்ளத் தவறி இருக்கின்றன.

எங்கள் கல்லூரியில் 1955 ஆண்டு முதல் பரிசளிப்பு விழா ஆரம்பிக்கப் பெற்றது. அந்த ஆண்டு முதல் இன்று வரை அந்த விழா வருடந்தோறும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

கல்லூரிப் பரிசளிப்பு விழாப் போட்டியில் நான் கலந்து கொள்வதற்கான பேச்சினை எனது ஆசிரியர் ஆ.ம. செல்லத்துரை அவர்கள் தெரிவுசெய்து தந்தார். ஸி. என். அண்ணாதுரை அவர்கள் நிகழ்த்திய மேடைப் பேச்சின் ஒரு பகுதியே எனது ஆசிரியர் எனக்குத் தெரிவுசெய்து தந்த பேச்சாக அமைந்திருந்தது. ஆ.ம.செ. அவர்கள் நல்ல ஒரு வாசகன். நல்ல பேச்சாளன். அவரது கையில் எப்பொழுதும் ஏதாவதொரு புத்தகம் இருந்து கொண்டே இருக்கும். ஓய்வு கிடைக்கும் சமயங்களில் எல்லாம் அவர் வாசித்துக் கொண்டு இருப்பார். 'கல்கி' யை அவர் கையில்தான் நான் முதன்முதலாகச் சிறுவயதில் பார்த்திருக்கின்றேன்.

நான் பேசுவதற்குரிய பகுதியினை அவர் தெரிவுசெய்து தந்ததோடமையாமல் பேச்சுப் பயிற்சியும் எனக்களித்தார். கல்லூரியை விட்டு நான் வெளியேறும் காலம் வரை அவரே எனக்குப் பயிற்சியாள ராக இருந்து வந்தார்.

எங்கள் வீட்டில் பெரிய நிலைக்கண்ணாடி ஒன்று இருந்தது. அந்த நிலைக்கண்ணாடி முன் நான் போய் நின்றால், எனது முழு உருவத்தையும் அந்தக் கண்ணாடியில் பார்க்க முடியும்.

கல்லூரி விட்டு வீடு வந்து சேர்ந்த பிறகு அந்த நிலைக் கண்ணாடி முன் போய் நின்று, எனது ஆசிரியர் சொல்லித் தந்த மாதிரி எல்லாம் பேசிப் பழகினேன்.

கல்லூரிப் பரிசளிப்பு விழாப் போட்டியில் நான் முதலிடம் பெற்று வெற்றி பெற்றேன்.

அன்றைய ஒரு பேச்சுப் போட்டி நடுவர்களுள் ஒருவராக அப்பொழுது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறை மாணவனாக இருந்த இரத்தினசிங்கம் அவர்கள் வந்திருந்தார். எனது பேச்சாற்றல் கண்டு வியந்து, தனது அன்பளிப்பாக இரண்டு நூல்களை அதிபர் மூலம் எனக்கு அனுப்பி வைத்தார். அவர் எனக்கு அன்று வழங்கிய நூல்கள், 'பாரதியார் கவிதைகள்', வீதியில் ஒரு விடுதி' என்னும் ரஷ்ய நாவல் ஆகிய இரண்டுமே. அந்த நூல்களில் தனது கைப்பட எழுதி, எனக்குப் பாராட்டும், எதிர்காலத்தில் சிறந்து விளங்கவேண்டுமென வாழ்த்தும் தெரிவித்திருந்தார்.

இன்று இதனை எழுதிக் கொண்டிருக்கும் சமயத்தில் அந்த நல்ல இதயத்தின் நல்லாசியை என்னால் நினைவுகூராமல் இருந்துவிட முடியவில்லை.

தேவரையாளி இந்துக் கல்லூரியில் நான் மாணவனாக இருந்த காலத்தில் மூன்று பரிசளிப்பு விழாக்கள் நடைபெற்றன. அந்த விழாக்கள் நடைபெற்ற மூன்று மேடைகளிலும் பரிசுப்பேச்சுகளை நான் நிகழ்த்தி இருக்கின்றேன். வகுப்பறைப் பாடங்களுக்கான பல பரிசில்களை வருடந்தோறும் பெற்று வந்திருக்கின்றேன். கல்லூரிப் பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்றதற்கான பரிசிலாக 'கந்தசாமி நினைவுச் சுழல்கிண்ணம்' எனக்கு அப்போது வழங்கப்பட்டது. அந்தச் சுழல்கிண்ணத்தை மூன்று தடவைகள் ஒரு மாணவன் பெற்றுக் கொண்டால் அந்தக் கிண்ணம் குறிப்பிட்ட அந்த மாணவனுக்குச் சொந்தமாகும். இரண்டு ஆண்டுகள் இலகுவாக அந்தச் சுழல் கிண்ணத்தை நான் தட்டிக் கொண்டேன். மூன்றாவது ஆண்டும் நான் வெற்றி பெற்று அந்தச் சுழல்கிண்ணத்தை எனக்குச் சொந்தமாக்கிக் கொள்வேன் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது. ஆனால் அப்படி நடக்க வில்லை. மூன்றாவது தடவை என்னுடன் சேர்த்து இன்னொரு மாணவனுக்கு முதல் பரிசினை வழங்கி, கல்லூரி அந்தக் கிண்ணத்தை தக்க வைத்துக் கொண்டது.

நூல்களை வாசிப்பதில் எனக்கிருந்து வந்த விருப்பார்வம் போலவே, மேடைப் பேச்சுக்களைக் கேட்பதிலும் மிகுந்த நாட்டம் உள்ளவனாக இருந்தேன். எங்கு பொதுக்கூட்டம் நடைபெற்றாலும் அங்கெல்லாம் சென்று மேடைப் பேச்சுக்களை அவதானித்துக் கேட்டு வந்தேன்.

எங்கள் கல்லூரியில் 1955 ஆம் ஆண்டு ஒரு விடுமுறை தினத்தில் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் பன்னிரண்டாவது ஆண்டு மகாநாடு நடைபெற்றது. கல்லூரி மாணவனான எனக்கும் அந்த மகாநாட்டுக்கும் எந்தவிதச் சம்பந்தமும் இருக்கவில்லை. அன்று ஒரு விடுமுறை தினமாக இருந்தமையால் நான் அங்கு செல்ல வேண்டிய அவசியமும் இருக்கவில்லை.

ஆனால், அன்று மகாநாட்டுக்கு நான் போனேன். காலை முதல் மாலை வரை நடைபெற்ற முழு நிகழ்ச்சிகளையும் மகாநாட்டு மண்டபத்துள் இருந்து பார்த்தேன். பேச்சுகளை உன்னிப்பாகக் கேட்டேன். நான் ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்திருந்த போதும், எனது குடும்பச் சூழல், கல்வி கற்ற சூழல் காரணமாக சாதியம் பற்றிய அனுபவங்கள் - சாதி ஒடுக்குமுறையின் கொடுமைகள் என்பனவற்றைப் பெரிதாக அறியாமல் இருந்து வந்தேன். அன்று அந்த மகாநாட்டில் நான் கலந்து கொண்ட தன் மூலம் என்னை நான் தெரிந்து கொண்டேன். ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்குக் காலங் காலமாக இழைக்கப்பட்டு வரும் அநியாயங்களை, அவமதிப்புக்களை, கொடுமைகளை எல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டேன்.

அந்த மகாநாடு எனது உள்ளத்தில் ஏற்படுத்திய தாக்கத்துக்கு முன்னர், 1952-ல் இந்தச் சமூகத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவம் எனது மனதைப் பெரிதும் பாதித்திருக்கிறது.

கரவெட்டி கலட்டிப் பகுதியில் வாழ்ந்த எமது சமூகத்தவர்களின் வீடுகள் சாதி வெறியர்களால் தீ மூட்டி அக்காலத்தில் எரிக்கப்பட்டன.

அக்காலம் நான் சயிக்கிள் ஓட்டுவதற்கு எனது தந்தை என்னை அனுமதிக்காத காலம்.

எனது பாடசாலை நண்பன் ஒருவனை உடன் அழைத்துக் கொண்டு கரவெட்டியிலுள்ள கலட்டிக்கு நடந்து போனேன்.

சிறிய ஒரு நிலப்பரப்புக்குள்ளே நெருக்கமாக இருந்த பல வீடுகள் எரிந்து சாம்பல் மேடுகளாக ஆங்காங்கே குவிந்து கிடந்தன.

என்ன கொடுமை இது! ஏன் இப்படி எல்லாம் நடக்கிறது? ஏன் தீ வைத்துக் கொளுத்தினார்கள்? தமது வீடுகளுக்குத் தீ மூட்டி எரிக்கப்படும் போது குடியிருந்த இந்த மக்கள் என்ன செய்தார்கள்?

எனது பிஞ்சு மனதில் எழுந்த வினாக்களுக்கு அப்பொழுது எனக்கு விடை கிடைக்கவில்லை.

ஆனால், சாதி வெறியர்களால் எரியூட்டி எரிக்கப் பெற்ற அந்த வீடுகளின் சாம்பல் மேட்டினை அன்று அரைக்காற்சட்டை போட்ட சின்னஞ்சிறு பள்ளிச் சிறுவனாக இருந்த நான் சென்று

பார்வையிட்டேன். ஆனால் இன்று அதனை நினைத்துப் பார்க்கையில் அங்கு ஏன் போனேன்? என்பது எனக்கே அதிசயமாக இருக்கிறது.

இன்னொரு அதிசயம் 1955-ல் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் பன்னிரண்டாவது மகாநாட்டுக்கு மாணவனாகச் சென்று பார்வையாளனாக இருந்த நான், பின்னர் அந்த மகாசபையில் இணைந்தது மாத்திரமல்லாமல், அதன் உடுப்பிட்டிக் கிளைச் செயலாளராக இருந்திருக்கின்றேன்.

தேவரையாளி இந்துக் கல்லூரியில் மாணவனாகப் படித்துக் கொண்டிருந்த காலத்தில் பிரதான பாத்திரம் ஏற்று நாடகத்தில் நான் நடிப்பதற்கு எனது மேடைப் பேச்சுக் காரணமாக இருந்திருக்கிறது. சேக்ஸ்பியரின் யூலியஸீஸர் நாடகத்தில் நான் மார்க் அந்தனியாக நடித்தேன். அதற்கு முன்னர் கவிஞர் மு. செல்லையா தலைமை ஆசிரியராக இருந்த காலத்தில் அவரது நாடகம் ஒன்றில் பெண் பார்க்கப் போன மாப்பிள்ளையாக கோட்டும் சூட்டும் போட்டு மேடையில் தோன்றி இருக்கின்றேன். ஆனால், அந்த நாடகத்தில் ஒரு சொல் தானும் வாய் திறந்து பேசும் சந்தர்ப்பம் எனக்கு இருக்க வில்லை.

அதிபர் எம்.எஸ். சீனித்தம்பி நெறிப்படுத்திய யூலிஸீஸர் அதற்கு எதிர்மாறாக அமைந்திருந்தது. தமிழ்ச் சினிமா உலகில் ஆதிக்கம் செலுத்த நடிகர்களுக்காகக் குறிப்பிட்ட சில படங்கள் தயாரிக்கப்பட்டது போல, எனது பேச்சாற்றலை மையமாகக் கொண்டு அதிபர் நெறிப்படுத்திய நாடகந்தான் அது என்பது எனது நம்பிக்கை. சேக்ஸ்பியரின் நாடகத்தை அதிபர் தமிழில் மொழிபெயர்த்திருந்தார். மார்க் அந்தனி என்ற பாத்திரம் மேடையில் தோன்றி, மேடை விட்டு இறங்கிப் போகும் வரை பொதுமக்கள் மத்தியில் பிரசங்கித்துக் கொண்டு நிற்பதாகவே அமைந்திருந்தது. கல்லூரிப் பரிசளிப்பு விழா, யாழ் நகரத்தில் ஏறி அந்த நாடகத்தில் நடித்தேன்.

அன்று நாடகத்தில் நான் நடித்த மார்க் அந்தனி பாத்திரம் பற்றி இங்கு குறிப்பிடுவதற்கு விசேடமான [illegible]காரணம் உண்டு. சபையில் உள்ளவர்களின் உள்ளங்களை ஒரு பேச்சாளன் தனது பக்கம் திருப்புவதற்கான தந்திரோபாயங்கள் எவை என்பதை அந்தப் பேச்சின் மூலம் நான் கற்றுக்கொண்டேன். காலப்போக்கில் அந்தப் பேச்சு முறையையே நான் பின்பற்றும் மேடைப் பேச்சுப் பாணியாக ஆக்கிக் கொண்டேன்.

அந்தக் காலகட்டம் இலங்கை அரசியலிலும், வட பிரதேசத்து சமூக, அரசியலிலும் பல மாற்றங்கள் நிகழ்வதற்கான மிக முக்கியமான காலகட்டமாக அமைந்தது. எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க தேர்தலில் வெற்றி பெற்று (1956) இந்த நாட்டின் பிரதமராகப் பதவி ஏற்றார்.

வடபிரதேசத்தில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பொன். கந்தையா பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று (1956) பருத்தித்துறைப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். பருத்தித்துறைத் தொகுதி வேட்பாளராக சி. தர்மகுலசிங்கம் (ஜெயம்) 1947-இல் போட்டி இட்ட சமயம் எனது குடும்பம் அவருக்கே வந்த சமயம், சிறு பையனாக இருந்த நான் "ஜெயத்துக்கு ஜே" எனக் கோஷம் எழுப்பியது இப்பொழுதும் எனது நினைவில் இருக்கிறது. எனது குடும்பம் எக்காலங்களிலும் இடதுசாரி வேட்பாளர்களையே ஆதரித்து வந்தது. பொன். கந்தையாவுக்கும் பூரணமான ஆதரவு வழங்கியது.

ஒடுக்கப்பட்ட சமூகங்கள் பற்றி அறியக் கிடைத்த சந்தர்ப்பங்களின் மூலம் சிறிது சிறிதாக சமூக உணர்வை வளர்த்துக் கொண்ட எனது உள்ளத்தில், எமது பிரச்சனைகளின் தீர்வுக்கான மார்க்கம் எது என்பதைக் கம்யூனிஸ்ட் உறுப்பினர் பொன். கந்தையாவின் வருகையுடன் தெளிவாக உணரத் தொடங்கினேன்.

வடபிரதேசத்து ஒடுக்கப்பட்ட மக்களின் வரலாற்றில் 09.07.1956 குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய ஒரு தினமாக அமைந்தது. நல்லூர் கந்தசாமி கோவில், பெருமாள் கோவில், வண்ணைச் சிவன் கோயில் ஆகியவை ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அன்று திறந்து விடப்பெற்றன. எனது ஆசிரியர்கள் ஆ.ம.செல்லத்துரை, க.முருகேசு, சைவப் புலவர் சி. வல்லிபுரம் ஆகியோர் ஆலயப் பிரவேசத்தில் கலந்து கொண்டு பின்னர் கல்லூரிக்கு வருகை தந்து அது பற்றிக் கூடிப் பேசிக் கொண்டிருந்ததை நான் அப்போது கண்டிருக்கின்றேன்.

நான் S.S.C. பரீட்சை சித்தியடைந்த பின்னர், தமிழ்மொழி மூலம் H.S.C. படிப்பதற்கான அனுமதிப் பரீட்சை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் அனுமதி பெறுவதென்பது அக்காலத்தில் பல்கலைக்கழக அனுமதி பெறுவது போலத்தான். கிறிஸ்தவக் கல்லூரியாக இருந்த போதிலும், ஒடுக்கப்பட்ட சமூகத்து மாணவன், அதுவும் இந்துவாக இருக்கும் மாணவன் ஒருவன் அனுமதியைப் பெறுவது என்பது சுலபமான காரியமல்ல.

கிரிக்கெட் பிரபல்யம் பெறாத அந்தக் காலத்தில், உதைப் பந்தாட்டம் கல்லூரிகளில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. உதைப் பந்தாட்ட அணியில் சேர்ந்து விளையாடத் தகுந்த விளையாட்டு வீரர்களான ஒடுக்கப்பட்ட சமூகத்து மாணவர் சிலருக்கு அந்தக் காலத்தில் அனுமதி வழங்கினார்கள். இன்றும் அந்த நிலைமை முற்றாக மாறிப் போய் விட்டதாகச் சொல்வதிற்கில்லை.

விளையாட்டுத் துறை சார்ந்த ஈடுபாடு இல்லாதவன் நான். ஹாட்லிக் கல்லூரி அனுமதிப் பரீட்சையில் மாணவர்கள் எட்டுப்பேர் தெரிவு செய்யப்பட்டார்கள். அந்த எண்மரில் ஒருவனாக நான்

இருந்தேன். ஆனால் தமிழ்மொழி மூலமாக அந்த ஆண்டு (1958) வகுப்பினை நடத்த முடியவில்லையெனக் கூறி, அடுத்த ஆண்டு அங்கு படிப்பதற்கு வந்தால் அனுமதிப்பதாகத் தெரிவித்தார்கள்.

ஓராண்டு காலம் வீணாகக் கழிந்து போவதை விரும்பாத நான், கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் பல்கலைக்கழகப் புகுமுக மாணவனாகப் போய்ச் சேர்ந்து கொண்டேன்.

இதுவரை காலமாக 'எங்கள் பாடசாலை'யில் கல்வி கற்று வந்த எனக்கு, விக்கினேஸ்வராக் கல்லூரி புதிய அனுபவமாக, சமூகம் பற்றிய அக்கறையை உள்ளத்தில் மேலும் தூண்டி விடுவதாக அமைந்திருந்தது.



சின்ன முதல் தொடக்கம் S.S.C. சித்தி அடையும் வரை நான் கல்வி கற்ற - என்னை வளர்த்து உருவாக்கிய - தேவரையாளி இந்துக் கல்லூரியின் ஆசிரியராக நியமனம் பெற்றுச் சென்ற சமயம், எனக்குக் கல்வி போதித்த ஆசிரியர்களுள் ஒரு சிலர் தவிர, ஏனையோர் அனைவரும் அப்பொழுது அங்கு கடமை ஆற்றிக் கொண்டிருந்தார் கள்.

மாணவனாக இருந்த நான், திடீரென மாணவ நிலையில் இருந்து விடுபட்டு ஆசிரியராக வந்து சேர்ந்தேன்.

மாணவர்களுக்கு ஆசிரியனாகவும், அங்கிருந்த ஆசிரியர்களுக்கு மாணவனாகவும் 'மாணவாசிரியர்' நிலையில் நான் இருக்க வேண்டிய இக்கட்டான ஒரு சூழ்நிலை எனக்கு அப்போது அங்கிருந்தது.

நான் ஆசிரியராகக் கல்லூரிக்குள் நுழைந்த முதல் நாள், அதிபர் என்னை அழைத்துப் பிரம்பொன்றை எனது கையில் தந்து, அந்தப் பிரம்புடன்தான் கல்லூரிக்குள் நடமாடித் திரிய வேண்டுமென அன்பாகப் பணித்தார்.

எனது கையில் பிரம்பைத் தந்தனுப்பிய அதிபரின் மனக்கருத்தைத் தெளிவாக நான் விளங்கிக் கொண்டேன்.

அந்தக் கல்லூரியில் கல்வி கற்றுக்கொண்டிருந்த மாணவர்களுடன் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சமகாலத்தில் கல்வி கற்ற சகமாணவன் நான். என்னுடன் ஒன்றாக ஒரே வகுப்பில் படித்த மாணவர்கள் சிலர் நான் ஆசிரியனாகப் போன சமயத்திலும் அங்கு படித்துக் கொண்டிருந் தார்கள்.

என்னுடன் சேர்ந்து விளையாடி, கூடித் திரிந்தவர்கள், எனது நண்பர்களாக இருந்தவர்கள் அனைவரும் மாணவர்களாக அங்கே அப்பொழுது படித்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் மத்தியில் என்னை நான் ஆசிரியனாக நிறுவுவதற்கு அதிபர் தந்த அந்தப் பிரம்பு எனக்குத் துணையாக இருந்து வந்தது. ஆறு மாதங்களின் பின்னர் அந்தப் பிரம்பின் தேவை எனக்கு இல்லாமற் போயிற்று.

எனது ஆசிரிய வாழ்க்கையில், முன்னர் என்னுடன் ஒரே வகுப்பில் சகமாணவர்களாக இருந்தவர்கள் படித்துக் கொண்டிருந்த வகுப்புக்குச் சென்று அவர்களுக்குப் படிப்பித்திருக்கின்றேன் என்பது எனக்குக் கிடைத்த அரிய ஒரு சந்தர்ப்பம் என்றே சொல்ல வேண்டும்.

எனது தொடர்ந்த வாசிப்பு, தெளிவாக எதையும் எடுத்துச் சொல்லும் பேச்சாற்றல் என்பன தந்த பலம் அவர்கள் மத்தியில் அன்று தன்னம்பிக்கையுடன் என்னை நிமிர்ந்து நிற்கச் செய்தன.

மாணவர்கள் மத்தியில் நான் ஆசிரியனாக என்னை நிறுவிக் கொண்டுவிட்ட போதும், ஆசிரியர்கள் மத்தியில் தொடர்ந்து மாணவனாகவே இருந்து வந்தேன்.

அந்த 'இருப்பு' எனக்கு மகிழ்ச்சியாக, ஆனந்தமாக இருந்தது.

நான் தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவனாக இருந்து வெளியேறிய மறு ஆண்டு (1958) பட்டதாரிகள் சிலர் அங்கு ஆசிரியராக நியமனம் பெற்றார்கள். அவர்களுள் புலோலியைச் சேர்ந்த எஸ். ஆழ்வார்ப் பிள்ளை (இளவரசு) ஆசிரியரும் ஒருவர். பெரியார் கந்த முருகேசனாரின் உறவினர்; மாணாக்கர். தமிழ்நாடு விருது நகரில் படித்துக் கலைமாணி பட்டம் பெற்றவர். படிக்கின்ற காலத்தில் திமுக. தலைவர்கள் சிபி. சிற்றரசு, ஆசைத்தம்பி ஆகியோருடன் நெருக்கமான உறவை வைத்துக் கொண்டிருந்தார். மேடைகளில் சோனா வாரியாகத் தொடர்ந்து கொட்டுகின்ற சிறந்த பேச்சாளன். அவர் தன்னோடு மிக நெருக்கமாக என்னை வைத்துக்கொண்டார். நான் அங்கு ஓர் ஆசிரியன். அதனால் ஆசிரியர்கள் மத்தியிலுள்ள விவகாரங்களை அறியாமல் இருக்கக்கூடாதென அனைத்தையும் அந்தரங்கமாக எனக்கவர் சொல்லி வந்தார்.

அப்பொழுது அவர் அங்கே இல்லாதிருந்தால், நான் பல விஷயங்களை அறியாதவனாக இருந்திருப்பேன்.

தொழில் சார்ந்த நிலையில் நான் கற்ற கல்லூரிக்குள்ளேயே ஆசிரிய அனுபவங்களை நான் பெற்றுக்கொள்ள ஆரம்பித்த சமயம்,

கல்லூரிக்கு வெளியே சமூக, அரசியல் விவகாரங்களிலும் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினேன்.

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட பொன். கந்தையாவை ஆதரித்து கிராமங் கிராமமாகப் பிரசாரக் கூட்டங்கள் அப்பொழுது நடைபெற்றன. அந்தக் கூட்டங்களுக்கு எல்லாம் கே. டானியல் முன்னின்று ஏற்பாடுகள் செய்தார். வடமராட்சிக் கிராமங்கள் சிலவற்றில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டங்களுக்கு டானியல் என்னை அழைத்துச் சென்று பேச வைத்தார்.

எங்களூர் அயிட்டியப் புலம் வயிரவர் கோயில் வீதியில் நான் ஒழுங்கு செய்த பிரசாரக் கூட்டத்தில் (02.03.1960) M.C. சுப்பிரமணியம், டானியல், எனது ஆசிரியர் சைவப் புலவர் சி. வல்லிபுரம் ஆகியோர் பங்கு பற்றி உரையாற்றினார்கள்.

அந்தத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளராக உடுவில் தொகுதியில் திரு. V. பொன்னம்பலம் போட்டியிட்டார். அவரை ஆதரித்து உடுவிலில் 16.03.1960 ஆம் ஆண்டு பிரமாண்டமான பிரசாரக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பேசுவதற்காக சைவப்புலவர் சி. வல்லிபுரம் புறப்பட்டுச் செல்லும்போது என்னையும் உடன் அழைத்துச் சென்றார். அந்தக் கூட்டத்தில் V. பொன்னம்பலத்தை ஆதரித்துப் பேசுவதற்கான வாய்ப்பினை வழங்கி, அன்று என்னைப் பேச வைத்தார்கள்.

அந்தப் பொதுத் தேர்தல் 19.03.1960-ல் நடைபெற்றது. பொன். கந்தையா உட்பட வடபிரதேசத்தில் போட்டியிட்ட இடதுசாரிகள் அனைவரும் தோல்வியுற்றார்கள். பின்னர் 9.9.1960-ல் பொன். கந்தையா காலமானார்.

தேர்தல் முடிந்த சில தினங்களின் பின்னர் மீண்டும் டானியல் என்னைத் தேடி (27.04.1960) வீடு வந்து சந்தித்து நீண்ட நேரம் என்னுடன் உரையாடி, முற்போக்கு எழுத்தாளர் சங்கம், எழுத்தாளர் அகிலனைச் சந்திப்பதற்கு ஏற்பாடு அழைப்புத் தந்து போனார். அவரது அழைப்பினை ஏற்று 29.04.1960-ல், யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற அந்தக் கூட்டத்துக்குச் சென்று கலந்து கொண்டேன்.

டானியல் ஒருவரை இனங்கண்டு மட்டிடுவதில் மகா நிபுணர் என்பதை அப்பொழுது நான் அறிந்திருக்கவில்லை. நான் என்னைச் சரியாக உணராதிருந்த காலத்தில் அவர் என்னை அப்பொழுது அறிந்து கொண்டார்கள் என்பதை இன்று நான் உணருகிறேன்.

அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் வாலிப முன்னணிச் செயலாளராக ஆசிரியர் கோ. மகாலிங்கம் அப்பொழுது இருந்து ஒடுக்கப்பட்ட சமூகத்து இளைஞர்களை ஒன்றுதிரட்டுவதில்

அயராது உழைத்தார். அவர் மகாசபைக் கூட்டத்துக்கு என்னை அழைத்துச் சென்று அதன் அங்கத்தவராகச் சேர்த்து விட்டார்.

மகாசபைக் கூட்டங்களுக்கு அக்காலத்தில் டானியல், ஜீவா, பசுபதி ஆகியோர் தவறாமல் வருகை தருவார்கள். அவர்கள் மீது ஒரு வகைக் கவர்ச்சி எனக்கு அப்போது இருந்து வந்தது.

தேவரையாளிச் சமூக முன்னோடிகள் என்று குறிப்பிட்டுப் பேசப்படுபவர்கள் காந்தியவாதிகள். சமய நம்பிக்கை மிக்க சைவர்கள். ஒடுக்கப்பட்ட சமூகத்தின் முன்னேற்றத்தை, சாத்வீக வழியில் கண்டடையலாம் என நம்பியவர்கள்.

அந்த நம்பிக்கையின் அடிப்படையில் ஆ.ம. செல்லத்துரை ஆசிரியர் 1960-ல் யாழ். வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றுக்கு என்னையும் உடன் அழைத்துச்சென்றார்.

யாழ். நகரத்தில் 1956-ல் ஆலயங்கள் சில திறந்து விடப்பட்டன. சாதிய சமூகத்தின் முழுமையான மனமாற்றம் காரணமாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு யாழ். நகரத்து ஆலயக்கதவுகள் திறந்து விடப்பட்டன என்று சொல்வதற்கில்லை. அந்த ஆலயங்களின் நாகரிகமான முன்மாதிரியைப் பின்பற்றி வேறு எந்தவொரு ஆலயமும் திறந்து விடப்படவில்லை. அதனால் தாராளப் போக்குள்ள நல்மனம் கொண்டவர்கள் சிலர் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக மேலும் ஆலோசனைகளை அவ்வப்போது மேற்கொண்டனர். அத்தகைய ஓர் ஆலோசனைக் கூட்டந்தான் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெற்றது. தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்திருந்த அ.ச. ஞான சம்பந்தன் அந்தக் கூட்டத்தில் விசேட அதிதியாகக் கலந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்துக் கல்விமான்கள் என்று கருதப்பட்ட சுமார் ஐம்பது பேர்வரை அந்தக் கூட்டத்துக்குச் சமூகம் அளித்திருந்தனர். அனைவரும் நஷனல் சால்வையும், திருநீற்றுப் பூச்சுமாகத் தோன்றினார்கள். பெரும்பாலும் எல்லோரும் ஆசிரியர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் சாதிய வெறி பிடித்த வைதிகர்கள் என்பதனை அவர்கள் தோற்றம் பறைசாற்றிக் கொண்டிருந்தது.

ஆசிரியர் ஆ.ம.செ. தோற்றத்தில் அவர்களைப் போன்றே இருந்தார்.

அங்கே வருகை தந்தவர்கள் அனைவரும் ஐம்பதாண்டு கால வாழ்வைக் கண்டவர்களாகவே காணப்பட்டார்கள்.

அவர்கள் மத்தியில் முற்றிலும் வித்தியாசமான ஒருவனாக நான் அங்கிருந்தேன். வயதில் மிகவும் குறைந்த இளைஞன். நஷனல்

அணியாது, சேட் அணிந்திருந்தேன். ஆலயப் பிரவேசம் என்பது என்னைப் பொறுத்தவரை சமய வழிபாட்டுடன் சம்பந்தப்பட்ட ஒன்றல்ல. ஒடுக்கப்பட்ட மக்களின் மனித உரிமையுடன் சம்பந்தப் பட்ட ஒன்றாகவே நான் கருதினேன்.

அந்தக் கூட்டம் ஆரம்பித்த பின்னர்தான் அங்கு வருகை தந்திருந்தவர்களைப் பார்த்து எனக்கு மேலும் அதிசயமாக இருந்தது. அவர்களுள் சிலர் எழுந்து ஆலயப் பிரவேசத்தை எதிர்த்து மிக மூர்க்கமாக வெட்கமின்றிப் பேசினார்கள். சபையில் இருந்த பெரும்பாலானவர்கள் தங்கள் கருத்துகளை வெளியில் எடுத்துச் சொல்லாமல் மௌனமாக அமர்ந்திருந்தார்கள். அந்த மௌனம் ஆலயப் பிரவேசத்தை ஆதரிப்பதாகவே இருந்தது. ஒருவர் தானும் ஆலயப் பிரவேசத்தை ஆதரித்து ஒரு வார்த்தை சொல்லவில்லை.

அவர்களுக்கெல்லாம் தனியொருவராக நின்று ஆ.ம.செ. பதில் சொன்னார். இடையிடையே நான் சில கருத்துகளை எடுத்துச் சொன்னேன்.

அங்கு நடைபெற்ற வாதபிரதிவாதங்களின் பிறகு அ.ச.ஞான சம்பந்தன் தமது கருத்துகளை முன்வைத்துப் பேசினார். ஐம்பதாண்டு களுக்கு முன்னதாக இந்தியாவில் இந்தப் பிரச்சினை தீர்ந்து விட்டதாகவும், இன்னும் இந்தப் பிரச்சினை இங்கு தீர்க்கப்படாது இருப்பது கண்டு தான் வெட்கப்படுவதாகவும் அவர் சொன்னார்.

ஆலயப் பிரவேசத்தை ஆதரித்து வெகு கரிசனையுடன் கருத்துகளை அவர் முன்வைத்தார் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் இந்தியாவில் எல்லாம் தீர்ந்து விட்டது என அவர் சொன்ன கருத்தில் உண்மைத் தன்மை இல்லை என்பதனை நான் அப்பொழுது விளங்கி வைத்திருந்தேன்.

காந்தீயக் கொள்கையின் வெற்றிதான் இந்தியாவில் நிகழ்ந்த ஆலயப் பிரவேசம் என அவர் தெரிவித்த கருத்து ஆ.ம.செ. வுக்கு உடன்பாடானதாக இருப்பதனை நான் உணர்ந்து கொண்டேன். உரிமை மறுக்கப்பட்ட மக்கள் யாராக இருந்தாலும் தமது உரிமைக்காகப் போராடாமல் இந்த உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையுள்ளவனாக நான் இருந்தேன். எனது நம்பிக்கையின் உண்மைத்தன்மையை யாழ்ப்பாணத்தின் சமூகப் போராட்ட வரலாறு பின்னர் எனக்கு உறுதிப்படுத்தியது.

அந்தப் போராட்டம் - அதன் வழி வந்த வெற்றிகள் - பின்னர் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாத சூழ்நிலையில் தடைப்பட்டுப் போனதற்கான காரணங்களை விளங்கிக் கொள்ளாது, போராட்ட வழிமுறைகள் தவறானவையென இன்று சொல்லு

கின்றவர்களின் அறியாமையைக் கண்டு நகைக்க வேண்டியதாக இருக்கின்றது.

நான் வயதில் சிறியவனாக இருந்த போதிலும் வயதில் மூத்தவர்கள் சிலரின் கண்களுக்கு அக்காலத்தில் உறுத்தலாக இருந்தேன்.

இலங்கைப் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 1960-ல் நடைபெற்ற சமயம் தமிழ்க் கட்சி ஒன்றின் முகவர் ஒருவர் என்னுடன் நேரில் மோதிக்கொண்டார்.

அவருக்குக் கட்சிக் கொள்கை என்று ஒன்றும் கிடையாது. அவர் எம்.பி.கட்சி. யார் அதிகாரத்தில் இருக்கின்றாரோ, அவரைச் சார்ந்து நின்று, அதன் வழி சமூகத்தில் செல்வாக்குச் செலுத்துவதற்கு முற்படுகின்ற ஒருவர். இடதுசாரிகள், M.C. சுப்பிரமணியம் என்றால் அவருக்கு ஒவ்வாமை நோய் வந்துவிடும்.

பொதுத் தேர்தலில் நான் பொன். கந்தையாவை ஆதரித்து நிற்பது அவருக்குக் கொஞ்சமும் பிடிக்க வில்லை. அவர் ஒரு தினம் என்னை நேரில் சந்திக்க நேர்ந்த போது, என்னுடன் வலிந்து வாக்குவாதப்பட்டார். இறுதியில் "உனக்கொரு நோட்டீஸ் எழுதத் தெரியுமா?" என என்னைப் பார்த்துக் கேட்டார்.

அவர் அப்படி என்னைக் கேட்டபோது, அது என் நெஞ்சைச் சுட்டது. நான் அப்பொழுது அவருக்குச் செயல் மூலம் பதில் சொல்ல விரும்பினேன். "சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த பண்டாரிகள்" என மகுடமிட்டு துண்டுப்பிரசுரம் ஒன்றினை எழுதி, அச்சுப் பதித்து வெளியிட்டேன்.

அந்தத் துண்டுப் பிரசுரத்தில் என்னோடு மோதிக்கொண்டவரின் பெயரை நான் எங்குமே குறிப்பிடவில்லை. ஆனால் அதனை வாசிக்கின்றவர்களுக்கு அந்தப் பிரசுரம் அவரையும் அவர் அரசியலையும் விமரிசிப்பதாக இருக்கின்றது என்பதனை விளங்கிக்கொள்ளத் தகுந்த வண்ணம் அது அமைந்திருந்தது. அந்தத் துண்டுப் பிரசுரத்தை எழுதுவதில் மார்க் அந்தனியின் பேச்சுச் சாதுரியங்களை நான் நன்றாகப் பயன்படுத்தி இருந்தேன்.

அதனைப் படித்த அவர் என் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்காகச் சட்டத்தரணிகளை நாடி ஓடினார். இறுதியில் எதுவும் செய்ய இயலாத நிலையில் எனது தந்தையாரிடம் வந்து முறைப்பாடு செய்தார். எனது தந்தையார் அவரிடம், "அவனுக்கு நோட்டீஸ் எழுதத் தெரியாது எண்டு நீ சொல்லியிருக்கக்கூடாது" எனத் தெரிவித்து விட்டு, என்னைக் கண்டித்து வைப்பதாகச் சொல்லி சமாதானம் செய்து அனுப்பி வைத்தார். பின்னர் "தம்பி, வயதுக்கு மூத்தவயளை

எடுத்தெறிஞ்சு நடவாத" என எனக்குச் சொன்னார். ஆனால் அந்தத் துண்டுப் பிரசுரத்தை நான் வெளியிடுவதற்குத் தேவையான பணத்தை எனது தந்தையாரிடந்தான் பெற்றுக் கொண்டேன்.

கல்லூரி முகாமையாளர் எனக்கு ஆசிரிய நியமனம் வழங்கி நான் ஆசிரியராகக் கடமை ஆற்றிய போதும் வித்தியா பகுதி 06.09.1960-ல்தான் எனது நியமனத்தை உறுதிப்படுத்தியது. அந்த நியமனம் பெற்று ஒரு மாத காலத்தின் பின்னர் நாட்டிலுள்ள பாட சாலைகள் அனைத்தும் அரசுடைமை ஆக்கப் பெற்றன. எங்கள் கல்லூரியும் அரசாங்கப் பாடசாலை ஆனது. பதில் நியமனம் பெற்று ஆசிரிய சேவையில் இணைந்த நான் அரசாங்கப் பாடசாலையில் நிரந்தர ஆசிரியர் ஆனேன்.

எனது முதல் மாதச் சம்பளத்தைப் பெற்றுச் சென்று தந்தையார் கையில் அதனைக் கொடுத்தேன். தந்தையார் எனது தாயாரை அழைத்து அவர் கையில் கொடுத்து விட்டு, "இனி அம்மாவிடம் கொடு" என்று சொன்னார். அடுத்த மாதம் தொடக்கம் தாயாரிடமே சம்பளத்தைக் கொடுத்தேன். பின்னர் சகோதரிகளின் கையில் கொடுத்து வந்தேன். அதன் பிறகு மனைவியிடம் கொடுக்கலானேன்.

எனது தேவைகளுக்கெல்லாம் அவர்கள்தான் எனக்குப் பணம் தந்து கொண்டிருந்தார்கள். கடந்த காலத்தில் பணத்துடன் இந்த வகையான ஓர் உறவுதான் எனக்கு இருந்து வந்தது.

அந்த ஆண்டு ஆசிரியக் கலாசாலைப் பிரவேசப் பரீட்சைக்கு நான் விண்ணப்பிக்க இயலாது போயிற்று. அடுத்த ஆண்டில் அந்தப் பரீட்சைக்கு நான் விண்ணப்பித்ததுடன், ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சைக்கும் தோற்றினேன். அந்தப் பரீட்சையில் சித்தி அடைந்ததுடன், ஆசிரியக் கலாசாலைப் பிரவேசப் பரீட்சையிலும் சித்தி அடைந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் பெற்றேன்.

அப்பொழுது வடமாநிலக் கல்விக் கந்தோர் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் இருந்தது. பிற்காலத்தில் சைவப் பெரியராகக் காவி உடை தரித்துக் கொண்டு திரிந்த ஒருவர் அப் பொழுது வித்தியாதரிசியாக இருந்தார்.

நேர்முகப் பரீட்சை 10.03.1962 ஆம் ஆண்டு காலை நேரம் கல்விக் கந்தோரில் நடைபெற்றது. எனது அறிவைச் சோதித்துப் பார்ப்பதற்கு, பல்வேறு வினாக்களைக் கேட்பார்கள் என்னும் நம்பிக்கையுடனேயே நான் அங்கு சென்றிருந்தேன். அந்த வித்தியாதரிசி நான் கொண்டு சென்ற எனது தராதரப் பத்திரம் முதலியவற்றைத் தட்டிப் பார்த்து விட்டு, "நீர் எந்த ஆசிரியக் கலாசாலைக்குப் போக விரும்புகிறீர்?" எனக் கேட்டார்.

"திருநெல்வேலி சைவாசிரியக் கலாசாலைக்குப் போக விரும்பு கின்றேன்" என நான் சொன்னேன்.

அப்பொழுது உடனே அவர், "நீர் கொழும்புத்துறை ஆசிரியக் கலாசாலைக்குப் போம். இப்ப அது கத்தோலிக்க ஆசிரியக் கலாசாலை அல்ல. அரசாங்கம் அதைக் கையேற்று விட்டது. நீர் அங்கே போய்ச் சைவம் வளர்க்க வேண்டும்" எனக் கூறினார்.

தேவரையாளி இந்துக் கல்லூரியில் இருந்து சென்றிருந்த என்னை அந்தச் சைவப் பெரியார் இனங்கண்டு கொண்டார் என்பதனைச் சட்டென்று நான் விளங்கிக் கொண்டுவிட்டேன்.

அதுவரை காலம் கத்தோலிக்க ஆசிரியக் கலாசாலையாக இருந்த கொழும்புத்துறை ஆசிரியக் கலாசாலையில் சைவம் வளர்ப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்ட முதல் ஆசிரிய மாணவன் நான்.

தேவரையாளி இந்துக் கல்லூரியில் எனக்குக் கல்வி கற்பித்த எனது ஆசிரியர்களுக்கும் இத்தகைய வரலாற்றுப் பெருமை உண்டு. சைவாசிரியப் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சிபெற்ற (1925) தாழ்த்தப்பட்ட சமூகத்து முதற் சைவாசிரியன் தான் எனக் கவிஞர் மு. செல்லையா பெருமைப்பட்டுக்கொள்வார். சமாசன, சமபோசன உரிமை பெற்று சைவாசிரியப் பயிற்சிக் கலாசாலையில் (1930) பயிற்சி பெற்ற தாழ்த்தப்பட்ட சமூக முதல் ஆசிரியர் தான் என சைவப்புலவர் பெருமைப்பட்டுக் கொள்வார். தெல்லிப்பளை ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் அனுமதி பெற்று பயிற்சி பெற்ற (1930) தாழ்த்தப்பட்ட சமூகத்தின் முதல் சைவாசிரியர் தான் என க. முருகேசு ஆசிரியர் பெருமைப்பட்டுக் கொள்வார்.

அவர்கள் வரிசையில் - அவர்கள் மாணவனாகிய என்னை - 1962-ல் அந்தச் சைவப் பெரியார் வரலாற்றுப் பெருமைக்குரியவன் ஆக்கினார்.

ஆனால் எனது ஆசிரியர்கள் போல அவர்கள் பாதையில் சென்று அதனைப் பெருமைக்குரியதாகக் கருதும் மனக்கருத்து எனக்கு இருக்கவில்லை.

ஆனால் அதற்கு முதல் ஆண்டு (1961) மார்கழி விடுமுறையில் கொழும்புத்துறை ஆசிரியக் கலாசாலைக்கு நான் செல்வதற்கான ஆசீர்வாதம் கிடைத்து விட்டதான எண்ணம் மனதில் அப்பொழுது தோன்றியது. யாழ்ப்பாணம் புனித சம்பத்திரிசியார் கல்லூரி விடுதி மேற்பார்யாளராக இருந்தவர் வண. பிதா. தாவீது அடிகள். அவர் பன் மொழிப் புலமையாளர். தமிழ் அறிஞர். யாழ். பொது நூலகம் தீயிட்டுக் கொளுத்தி எரிக்கப் பெற்ற சம்பவம் கேள்வியுற்ற அதேகணம் உயிர் துறந்தவர்.

அவர் ஒரு தினம் இருந்தாற்போல, ஒரு மாலை நேரம் கால் நடையாக எங்கள் வீடு வந்து சேர்ந்தார். எனது தம்பி அப்பொழுது புனித சம்பத்திரிசியார் கல்லூரி விடுதி மாணவனாகப் படித்துக்

கொண்டிருந்தான். அடிகளார் வீட்டில் இருந்த எல்லோரையும் அழைத்து நீண்ட நாட்பழக்கம் உள்ளவர் போல அன்போடு உரையாடினார். தேநீர் பருகினார். பின்னர் தம்பியையும் என்னையும் அழைத்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டார். எங்கள் இருவருக்கும் பல விடயங்களை எடுத்துச் சொல்லிக் கொண்டு வந்த அவர், 'கனங்குழாய்' என்னும் சொற்றொடருக்கு விளக்கம் சொல்ல ஆரம்பித்தார். தமிழ் இலக்கியங்களில் எங்கெல்லாம் இருந்து உதாரணங்களை எடுத்துச் சொல்லி விளக்கிக் கொண்டு போனார்.

பொலிகண்டி கடற்கரை வீதியில் ஆரம்பித்த எங்கள் நடை இரண்டு கிலோமீட்டர் தூரம் திக்கம் சந்தி வரை நீண்டு சென்றது. அப்பொழுதும் 'கனங்குழாய்'க்கான விளக்கம் பெருகிக் கொண்டே இருந்தது.

நான் உண்மையில் பிரமித்துப் போனேன். அடிகளார் ஒரு தமிழ்க் கடல் அல்ல, சமுத்திரம் என்பதனை உணர்ந்தேன். மாலை மயங்கி வரும் வேளை அடிகளார் எங்கள் இருவரையும் ஆசீர்வதித்து விட்டுப் பருத்தித்துறை நோக்கி நடந்து சென்றார்.

அடிகளாரின் அந்த ஆசீர்வாதம்தான் கத்தோலிக்க ஆசிரியக் கலாசாலையாக இருந்து வந்த கொழும்புத்துறை ஆசிரியக் கலாசாலைக்கு என்னைக் கொண்டு வந்து சேர்த்ததோ என நான் எண்ணினேன்.



எனது தகப்பனாரின் அக்கா மகன் சொந்தமாக வைத்திருந்த காரில் கொழும்புத்துறை ஆசிரியக் கலாசாலைக்கு 15.03.1962 காலையில் பெட்டி படுக்கைகளுடன் போய்ச் சேர்ந்தேன். அன்றைய தினத்துக்கு மறுநாள் விட்டு அடுத்த நாள் தேவரையாளி இந்துக் கல்லூரி அபிவிருத்தி நிதி சேகரிப்பதற்கான நாடக விழா. அந்த விழாவில் எமது கிராமத்து நாடக நடிகர்கள் இணைந்து நடித்த - நான் எழுதிய - 'வாழ்வளித்தவன்' என்னும் நாடகம் ஒன்றும் இடம்பெற்றது. ஆசிரியக் கலாசாலை விடுதியில் அனுமதி பெற்றுக் கொண்டு அங்கிருந்து நாடக விழாவுக்குச் சென்றேன்.

அந்த நாடகத்தில் திரை விலகியதும் முதற் காட்சியாக ஆசார சீலரான சைவப் பெரியார் பாத்திரம் ஒன்று மேடையில் தோன்றி, சுந்தரமூர்த்தி நாயனாரின் தேவாரம் ஒன்றை ஓசையுடன் பாடுகிறது. "தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன், திரு. நீலகண்டத்துக் குயவனார்க்கு.. குயவனார்க்கு.. ஐயையோ.. எப்படி நான் குயவனுக்கு அடியேன் என்று இந்த நாவினால் பாடுவேன்?" என அந்தப் பாத்திரம் சாதிக் கொழுப்பினால் அல்லற்பட்டு, அப்படிச் சொல்ல இயலாது. அந்தரப்படுவதாக எழுதி இருந்தேன். அதுவே சாதியத்துக்கு எதிராக நான் எழுப்பிய முதற் கலகக் குரல். பழைமை வாதம், வேண்டாத மரபு என்பவற்றை உடைக்கின்ற நவீன சிந்தனைப் போக்கின் வெளிப்பாடாக அந்த நாடகத்தை நான் எழுதி இருந்தேன். அதனால் எனக்குக் கல்வி கற்பித்த மூத்த ஆசிரியர்கள் சிலரின் முகச்சுழிப்பை நான் சம்பாதித்துக் கொண்டேன்.

ஆசிரியக் கலாசாலை விடுதியில் தங்கியிருந்து ஆசிரியப் பயிற்சி பெற்றுக் கொள்ள ஆரம்பிப்பதற்கு முன்னர், எனது குடும்பத்தவர்களை விட்டுப்பிரிந்து வாழ்ந்த அனுபவம் எனக்கு அப்பொழுது இருக்கவில்லை. அதனால் அந்த ஆசிரியக் கலாசாலையின் ஆரம்பகால வாழ்க்கை மனதுக்குக் கொஞ்சம் கவலையாகவே இருந்தது. முதல் ஆண்டுவரை கத்தோலிக்க சமயத்தவர்களான ஆசிரியர்கள் மாத்திரம் பயிற்சி பெற்று வந்த ஆசிரியக் கலாசாலையாக அது இருந்து வந்தது. அதனால் இரண்டாம் வருட மாணவர்கள் அனைவரும் கத்தோலிக்கர்களாக இருந்தார்கள். முதலாம் வருடத்தில் இந்துக்கள் பத்துப் பேர் வரை போய்ச் சேர்ந்தோம். ஏனையவர்கள் அனைவரும் கத்தோலிக்க சமயத்தவர்கள். போத்துக்கேயர் வருகையுடன் இந்த நாட்டில் பரவிய கத்தோலிக்க மதத்தின் செல்வாக்கு கடற்கரையை அண்டிய பிரதேசங்களிலேயே அதிகமாக இருந்தது. அந்தப் பகுதிகளில் இருந்து வந்த அனேகமானவர்கள் ஆசிரியர்களாகப் பயிற்சி பெற்றார்கள். புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு போன்ற பகுதிகளில் இருந்து வந்தவர்களின் பேச்சிலும் நடையுடையிலும் பெரும்பான்மை இனத்தவர்களின் பாதிப்புகளைக் காணக்கூடியதாக இருந்தது.

முதலாம் வருடத்தில் நான் படித்துக் கொண்டிருந்த காலத்தில் மாணவிகளும் அங்கு படித்தார்கள். கலாசாலைக்கு வெளியே பெண்களுக்குரிய விடுதியில் தங்கி இருந்த அவர்கள், காலையில் வகுப்புகள் ஆரம்பிக்கும் சமயம் கன்னியாஸ்திரிகளாக இருந்த ஆசிரியைகள் முன்னே வர, ஏனையவர்கள் அவர்களைத் தொடர்ந்து இரண்டு வரிசைகளில் வகுப்பறைகளுக்கு வந்து சேருவார்கள். வகுப்புகள் முடிந்து கலாசாலையில் இருந்து திரும்பிச் செல்லும் சமயத்திலும் அந்த வரிசைகள் தப்புவதில்லை. வரிசையாக வரும் அவர்களைக் கண்டு "கரிக்கோச்சி வருகிறது" என மாணவர்கள் தமக்குள் கிண்டலாகப் பேசிக்கொள் வார்கள்.

கொழும்புத்துறை ஆசிரியக் கலாசாலை வகுப்பறையில் அதுவரை நான் அறியாத ஒரு புதுமையைக் காண முடிந்தது. நான் படித்த, அறிந்த, பாடசாலைகளில், கல்லூரிகளில் எல்லாம் மாணவிகள் முன்வரிசை ஆசனங்களில் அமர்ந்திருக்க, மாணவர்கள் அவர்களுக்குப் பின்னுள்ள ஆசனங்களில் வரிசையாக உட்கார்ந்திருப்பார்கள். ஆனால் கொழும்புத்துறை ஆசிரியக் கலாசாலையில் மாத்திரம் ஆசிரிய மாணவர்கள் முன்வரிசைகளில் அமர்ந்திருக்க வேண்டும். பின்வரிசை ஆசனங்கள் ஆசிரிய மாணவிகளுக்குரியவையாக ஒதுக்கப்பட்டிருந்தன. அதனால் மாணவர்கள் சிலர் முகம் பார்க்கும் உடைந்த கண்ணாடித் துண்டுகளைத் தம்மோடு எடுத்து வரத் தவறுவதில்லை என்பது இந்த ஏற்பாட்டினைச் செய்து வைத்தவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

கலாசாலை வளாகத்துக்குள், கலாசாலையுடன் சேர்ந்த கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று இருந்தது. கத்தோலிக்க மாணவர்கள் தினமும் காலையில் எழுந்து, அந்த ஆலயத்துக்குச் சென்று வழிபாடு செய்து முடித்துக் கொண்டு திரும்பிய பின்புதான், விரிவுரை வகுப்புகளுக்குப் புறப்பட்டுச் செல்வார்கள். நான் கலாசாலைக்குச் சென்று சில காலத்தின் பின்னர் அவர்களின் வழிபாட்டு முறைகளை அறிந்து கொள்ளும் ஆவல் எனது மனதில் எழுந்தது. கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த எனது நண்பர்களுடன் சேர்ந்து ஒரு தினம் அவர்களது தேவாலயத்துக்குச் சென்று, அவர்களைப் போல முழந்தாளில் நின்று வழிபாட்டில் கலந்து கொண்டு விடுதிக்குத் திரும்பினேன்.

ஆசிரியக் கலாசாலை வாழ்வில் ஆரம்பம் முதல் இறுதிவரையுள்ள இரண்டு ஆண்டுகளும் உணவு எனக்கொரு பிரச்சினையாக இருந்து வந்திருக்கிறது. விடுதிச் சாப்பாடு உண்ண முடியாது மிகச் சிரமப்பட்டேன். மச்ச மாமிசம் உண்ணும் குடும்பத்தில் பிறந்தவனாக நான் இருந்த போதும், கலாசாலை விடுதியில் வழங்கப்பெற்ற அவற்றை என்னால் உண்ண முடியவில்லை. கலாசாலையில் சைவ உணவு உண்ணும் ஒருவனாக அக்காலத்தில் நான் இருந்து வந்தேன்.

இதுவரை இருந்து வந்த எனது வாழ்வு முறையில் ஆசிரியக் கலாசாலை வாழ்வு சில மாற்றங்களைத் தோற்றுவிக்கத் தவறவில்லை. ஆனால், என்னிடம் இருந்த வாசிக்கும் பழக்கத்தை என்னால் ஒதுக்கி வைத்துவிட முடியவில்லை. அதனால் வகுப்புக்குரிய பாடங்கள், பாட நூல்களைப் படிப்பதில் அதிக நாட்டம் கொள்ள முடியவில்லை. அதேசமயம் கலாசாலைப் பரீட்சைகள் எனக்குச் சிரமமானவையாக இருக்கவுமில்லை. கலாசாலைப் பாடங்களில் கல்வி உளவியல், கல்வித் தத்துவங்கள் போன்ற பாடங்கள் எனக்குப் புதியனவாக இருந்தன. அந்தப் பாடங்களைக் கவனமாகக் கற்றேன். முதலாம் வகுப்பு முதல் ஆசிரியக் கலாசாலைக்கு வந்து சேரும் காலம் வரை எனது கல்விசார் கற்றல் முயற்சிகள் இடையீடின்றித் தொடர்ச்சியாக இருந்து வந்துள்ளமை யினால் ஆசிரியக் கலாசாலையில் ஏனைய பாடங்கள் எனக்குப் பாரமானவையாகத் தோன்றவில்லை. அதனை இங்கு குறிப்பிட்டுச் சொல்வதன் மூலம் நான் தொடர்ந்து வாசித்துக் கொண்டிருந்தேன் என்பதனை வலியுறுத்துவதே எனது நோக்கம்.

எனது சம்பளத்தின் ஒரு பகுதியை மாதந்தோறும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் வாங்குவதற்கு ஒதுக்கினேன். அக்காலத்தில் வெளியிடப்பெற்ற ஈழத்து இலக்கிய நூல்கள் அனைத்தையும் பணம் கொடுத்து வாங்கிப் படித்தேன்.

நான் ஆசிரியக் கலாசாலையில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் எஸ்.பொ.வின் 'தீ' நாவல் பிரதி ஒன்றினை வாங்கிச் சென்றேன்.

கலாசாலையில் அக்காலத்தில் தீவிர வாசகர்களாக இரண்டாம் வருட மாணவனாக தா.பி.சுப்பிரமணியமும், முதலாம் வருடத்தில் நானும் இருந்தோம். வேறு இரண்டொருவர் நூல்கள் கையில் கிடைத்தால் மாத்திரம் இடையிடையே வாசித்துக் கொள்ளும் பழக்கமுள்ள வாசகர்கள். பெரும்பாலானவர்கள் தினசரிப் பத்திரிகைகளைத்தானும் கையினால் தொடுவதில்லை. அவர்கள் அனைவரும் ஒருவர் தவறாது போட்டி போட்டுக் கொண்டு என்னிடம் வாங்கிப் படித்த நூல் எதுவென்றால், அது எஸ்.பொ.வின் 'தீ' ஒன்றுதான்.

எங்கள் கலாசாலைக்குத் தமிழ்ப் பண்டிதர் ஒருவர் கோப்பாய் ஆசிரியக் கலாசாலையில் இருந்து தமிழ் விரிவுரையாளராக மாற்றலாகி வந்திருந்தார். நான் ஆசிரியக் கலாசாலை சென்று சுமார் ஒருமாத காலத்தின் பின்னர் ஒரு தினம், "கவிஞர் செல்லையாவைத் தெரியுமா?" என அவர் என்னைச் சந்தித்தபோது வினவினார்.

"நான் அவருடைய மாணவன்" என அவருக்கு அப்பொழுது சுருக்கமாகப் பதில் சொன்னேன். "நேற்று என்னைச் சந்தித்தவர், உம்மைச் சொந்தமென்று சொன்னார்" எனக் கூறிக் கொண்டு போய் விட்டார். அவர் எனது சாதி அடையாளத்தைத் தான் அறிந்து கொண்டு விட்டேன் என்பதையே அப்பொழுது எனக்குச் சொல்லி வைத்து விட்டுப் போனார் என்ற உண்மையை அந்தச் சமயம் நான் விளங்கிக் கொள்ளத் தவறி விட்டேன்.

திருநெல்வேலி ஆசிரியக் கலாசாலையில் வருடந்தோறும் தமிழ் விழா மூன்று தினங்கள் நடைபெற்று வந்தன. அந்த விழாவுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்த ஏனைய ஆசிரியக் கலாசாலைகளில் இருந்து தினமும் இரண்டு மாணவர்கள் சொற்பொழிவு ஆற்றுவதற்கு அழைக்கப்பட்டு வந்தார்கள்.

அந்த ஆண்டு விழாவில் பங்கு கொள்ளும் ஆசிரிய மாணவர்கள் இருவரின் பெயரைத்தருமாறு திருநெல்வேலியிலிருந்து கேட்டிருந்தார்கள். எங்கள் கலாசாலை கடந்த காலத்தில் இரண்டாம் வருடத்து மூத்த மாணவர்கள் இருவரையே அனுப்பி வைப்பது வழக்கம். ஆனால் அந்த வருடம் பழைய நடைமுறையை இரண்டாவது வருட மாணவர்கள் சிலர் எதிர்த்தார்கள். அவர்களிடம் இருந்து ஆட்சேபணை எழுந்தமையால் அதனைத் தட்டிக் கழிக்காது நடைமுறையை மாற்றுவதற்குத் தீர்மானித்தார்கள். முதலாம், இரண்டாம் வருட மாணவர்கள் மத்தியில் ஒரு போட்டி நடத்தி, இருவரைத் தெரிவுசெய்து, தமிழ்விழாவில் பேசுவதற்கு அனுப்பி வைப்பதென முடிவு செய்யப்பட்டது.

ஒரு நாள் இருந்தாற் போலத் தெரிவுப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் ஆசிரிய மாணவர்கள் தங்கள் பெயர்களைத் தருமாறு அறிவித்தல் வந்தது. போட்டி அன்றைய தினம் நடைபெறும்

ஏனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. பெயர்களைப் பதிவுசெய்து ஒரு மணி நேரத்தின் பிறகு, விரிவுரை மண்டபத்தில் வந்து கூடுமாறு அறிவித்தார்கள்.

முதலாம், இரண்டாம் வருட மாணவர்கள் பதினைந்து பேருக்கு அதிகமான தொகையினர் அந்தப் போட்டியில் கலந்து கொண்டார்கள். போட்டியாளர்கள் யார் யார் எந்த ஒழுங்கில் பேச வேண்டுமெனக் குலுக்கல் துண்டு மூலம் தீர்மானிக்கப் பெற்றது. முதலாம் இலக்கத் துண்டு எனது கையில் வந்து கிடைத்தது. அப்பொழுதுதான் இலக்கியச் சொற்பொழிவு ஒன்று செய்ய வேண்டுமெனத் தெரிவித்தார்கள். "காய்மாண்ட தெங்கின் பழம் வீழ..." எனத் தொடங்கும் நைடதப் பாடல் ஒன்றினை மையமாகக் கொண்டு இயற்கை அழகு பற்றிப் (06.07.1962) பேசினேன். அந்தப் போட்டி முடிவில் முதலாம் வருட மாணவர் ஒருவரும், இரண்டாம் வருட மாணவர் ஒருவருமாகத் தெரிவுசெய்யப் பெற்ற மாணவர்களுள் முதலாம் வருடத்தில் படித்துக் கொண்டிருந்த நான் தேர்ந்தெடுக்கப் பெற்றேன்.

திருநெல்வேலி ஆசிரியக் கலாசாலையில் நடைபெற இருந்த தமிழ் விழாவுக்குப் பத்து நாட்கள் முன்னதாக இந்தத் தெரிவுப் போட்டி நடந்து முடிந்தது. அந்த விழாவில் பேசுவதற்குத் தெரிவுசெய்யப் பெற்ற இரண்டாம் வருட மாணவன் தமிழ்ப் பண்டிதரைச் 'சிக்' கெனப் பிடித்துக் கொண்டான். நான் பண்டிதரை அணுக விரும்பவில்லை. பண்டிதர் என்னை இனங்கண்டு எனது வளர்ச்சியை உள்ளூர விரும்பாத ஒருவராக அவர் இருக்கின்றார் என்பதனை நான் அவதானித்து வைத்திருந்தது மாத்திரமல்லாது, அதற்கு இன்னொரு காரணமும் இருந்தது.

ஒருநாள் காலைவேளை பண்டிதர் எங்கள் வகுப்புக்கு வந்திருந்தார். எங்களுக்குக் கற்பிக்க வேண்டிய பாடத்தைக் கைவிட்டு விட்டு, பொழுதுபோக்கும் நோக்கத்துடன் வழமை போல வேறு விடயங்களைப் பேச ஆரம்பித்தார். அந்தப் பேச்சின் இடையே இருந்தாற் போல, "உங்களுக்குத் தெரியுமா? நாவிதன் ஒருவனுக்கு சாஹித்திய மண்டலப் பரிசு கிடைத்திருக்கிறது" என நக்கலாகச் சொல்லி விரிவுரை மண்டபத்தின் மேடையில் நின்று சிரித்தார். டொமினிக் ஜீவாவின் 'தண்ணீரும் கண்ணீரும்' சிறுகதைத் தொகுதிக்கு சாஹித்திய மண்டலப் பரிசு கிடைத்தமை கண்டு மனம் பொறுக்க இயலாமல் அவர் இப்படி ஏளனம் செய்கின்றார் என்பதனை நான் உடனே விளங்கிக் கொண்டேன். நாவிதனாக இருக்கும் டொமினிக் ஜீவா பரிசுபெற்றமையை அந்தப் பண்டிதரால் ஜீரணிக்க இயலவில்லை என்பதனை நான் அப்பொழுது உணர்ந்தேன். பண்டிதரின் அந்த நக்கல், அந்த ஏளனம் எனது நெஞ்சில் ஆழமாகக் குத்தியது. மனித நாகரிகமற்ற கொடுமையான இந்த சாதியத்துக்கு எதிராக எழுத வேண்டும் என்னும் எண்ணம் அந்தக் கணமே எனது மனதில் தோன்றியது. அதன் பிறகு

அந்தப் பண்டிதரை நான் நாடிச் செல்வதை முடிந்தவரை தவிர்த்து வந்தேன்.

திருநெல்வேலியில் நடைபெற்ற தமிழ்விழாவுக்கு எங்கள் இருவரையும் பண்டிதர் அழைத்துச் சென்றார். 16.07.1962 காலை நேர நிகழ்வில் நாங்கள் இருவரும் பங்கு பற்றினோம். பலாலி ஆசிரியக் கலாசாலை அதிபர் கந்தசாமி அன்றைய நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். என்னுடன் வந்திருந்த இரண்டாம் வருட மாணவன் பண்டிதரின் வழிகாட்டலில் கம்பராமாயணம் பற்றிப் பேசினான். கம்பராமாயணம் சுந்தரக்காண்டம் அப்பொழுது எங்களுக்குப் பாட நூலாக இருந்தது. அந்த மாணவனின் பேச்சு அந்தப் பாடநூலை ஒட்டியதாக அமைந்திருந்தது.

பலாலி ஆசிரியக் கலாசாலை தமிழ் விரிவுரையாளர் பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை, நான் பேசுவதற்கு முன்னர் கம்பராமாயணம் பற்றிச் சிறப்பான சொற்பொழிவு ஒன்று ஆற்றினார். 'கற்கண்டுப் பண்டிதர்' எனப் பெயர் பெற்ற சுவையான இலக்கியப் பேச்சாளர் அவர்.

அவரது பேச்சைத தொடர்ந்து 'புரட்சிக் கவிதைகள்' என்னும் தலையங்கத்தின் கீழ் ஒருமணி நேரம் நான் பேசினேன். பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன் போன்ற கவிஞர்கள் புரையோடிப் போன பழைய சமுதாயத்தை அழித்து, புதியதோர் உலகத்தைச் சிருஷ்டிக்க விழைந்த பாடல்களை எடுத்துச் சொல்லி எனது பேச்சினை நிகழ்த்தினேன். பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை பேசும் போது, இராவணன் பற்றிச் சொன்ன சமயங்களில் எல்லாம் 'பத்துத் தலைகளை உடைய இராவணன்' என்று திரும்பத் திரும்பக் கூறினார். அவர் மேடையில் அமர்ந்திருக்க, இராவணன் பற்றி பாரதிதாசன் எடுத்துச் சொன்ன, 'ஐயிரண்டு திசைமுத்தும் தன் புகழை வைத்தோன்' என்ற பாடல் அடியை நான் எடுத்துச் சொன்னேன். இராவணன் பத்துத் தலைகளை உடையவன் என்பது தவறு. பத்துத் திக்குகளிலும் தன் புகழைப் பரப்பியவன் அவன். வலிமை பொருந்திய பத்து மன்னர்களுக்குரிய பலத்தினை உடையவன் அவன். அதுவே அவனது பத்துத் தலைகள் எனப்படுகின்றன என விளக்கிக் கூறினேன். எனது கருத்துக்களைக் கேட்டுக்கொண்டிருந்த பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை மேடையில் இருந்து முணுமுணுக்க ஆரம்பித்து விட்டார். ஆனால், நான் சொல்ல வந்த கருத்துக்களைத் தெளிவாகத் தயக்கமின்றி எடுத்துக் கூறிய பின்னர், எனது பேச்சை முடித்துவிட்டு அமர்ந்தேன்.

காலை நேர நிகழ்வுகள் நடைபெற்று முடிந்த பின்னர் எங்கள் கலாசாலைப் பண்டிதர் எங்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டார். எனது பேச்சைக் கேட்டு, பண்டிதர் என்னைக் குறைபட்டுக்கொள்வாரென்று நான் எதிர்பார்த்தேன்.

ஆனால் அப்பொழுது அவர் வாய்திறந்து ஒன்றுமே பேசவில்லை. தலைவர் எனது பேச்சைப் பாராட்டி என்னை வாழ்த்தினார். சபையோரை எனது பேச்சு மிகவும் கவர்ந்தது. அவர் மௌனத்துக்கு அதுவே காரணமென நான் உணர்ந்து கொண்டேன்.

எங்கள் இருவரையும் கலாசாலைக்கு அண்மையில் வாழ்ந்த பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை இல்லத்துக்கு அவர் அழைத்துச் சென்றார். பண்டிதமணியின் மாணவன் தான் எனவும், நாவலர் வழிவந்தவர் பண்டிதமணி எனவும், தன்னிடத்தில் கல்விகற்கும் மாணவர்களாகிய நாங்கள் நாவலர் பரம்பரையில் வந்தவர்களெனவும், விரிவுரை வகுப்புகளில் பெருமையாகப் பண்டிதர் சொல்லிக் கொண்டிருப்பார். எங்கள் இருவரையும் பண்டிதமணியிடம் அழைத்துச் சென்ற அவர், "நான் இராம இலட்சுமணருடன் வந்திருக்கிறேன்" எனக் கூறி, தன்னை விசுவாமித்திரனாக மகிமைப்படுத்திக் கொண்டார்.

பண்டிதமணி முகம் மலர்ந்து அன்புடன் எங்களை நோக்கி மெல்ல ஒரு தடவை சிரித்தார். எங்கள் கலாசாலைப் பண்டிதர் சற்று நேரம் அமர்ந்திருந்து அவரோடு உரையாடிய பின்னர் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டார்.

பண்டிதமணியை அன்றுதான் முதன்முதலாக நான் சந்தித்தேன் என்பதால், அந்தச் சந்திப்பு எனக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதுகின்றேன்.

தமிழ் விழா நடந்து முடிந்து மறுநாள் கலாசாலையில் என்னைச் சந்தித்த பண்டிதர், தன்னிடம் வந்து பேச்சை நான் தயார் பண்ணவில்லையெனக் குறைபட்டுவிட்டு, "சிறுபிள்ளைக் குணம் உம்மை விட்டுப் போக வில்லை" எனக் கூறினார். எனது தமிழ் விழாப் பேச்சினால் அவருக்குண்டான மன உளைச்சலை இவ்வாறு அவர் வெளிப்படுத்தினார் என்பதனை நான் உணர்ந்து கொண்டேன்.

அவர் இராம இலக்குமண ரெனப் பண்டிதமணிக்கு அறிமுகப்படுத்திய இராமன் என்னானான் என்பது எனக்குத் தெரியவராது. ஆனால் இலக்குமணனாகிய நான் பாணத்துக்குப் பதிலாக எனது கையில் பேனாவைப் பிடிக்கப் போகின்றேன் என்னும் உண்மையை அப்பொழுது பண்டிதர் அறிந்திருக்க நியாயமில்லைத்தான்.

இந்தக் காலகட்டத்தில் எங்கள் கலாசாலை ஆசிரிய மாணவர்கள் அகில இலங்கைச் சுற்றுலா ஒன்றுக்கு ஏற்பாடு செய்து ஒரு தினம் கலாசாலையில் இருந்து பஸ் வண்டி ஒன்றில் புறப்பட்டார்கள். அவர்களுடன் நான் இணைந்து இந்த நாட்டின் பல பாகங்களுக்கும் இரண்டு வார காலம் சுற்றுப் பயணம் செய்தேன். மலையகப் பகுதிக்கு எதற்கும் அதற்கு முன்னர் சென்ற அனுபவம் எனக்கிருக்கவில்லை. அந்தச் சுற்றுலாவில் எனது உள்ளத்துக்கு மிகுந்த மகிழ்ச்சி அளித்த

பிரதேசம் மலையகம். அந்தச் சுற்றுப் பயணத்தின் போது மலையகத்தின் பல்வேறு இடங்களிலும் இரவு வேளை தங்கி இருந்திருக்கிறோம். ஓர் இரவு பண்டார வளையில் கழித்தோம். அந்தப் பண்டாரவளையே பின்னர் சில ஆண்டுகள் நான் வாழப்போகும் இடம் என்பதனை அப்பொழுது நான் அறிந்திருக்கவில்லை.

வருடத்தின் பிற்பகுதியில் ஒரு தினம் எங்கள் கிராமத்துக்கு அடுத்த கிராமத்தில் நடைபெற்ற உதைப்பந்தாட்டப் போட்டியைப் பார்க்க நான் சென்றிருந்தேன். அந்த விளையாட்டுப் போட்டி முடிவுற்று நான் வீடு புறப்படும் சமயம் எனது ஆசிரியர் கவிஞர் மு. செல்லையா திடீரென்று அங்கு வந்தார். "நாளைக்குப் பின்னேரம் வீட்டுக்கு ஒருக்கால் வா" எனச் சொல்லிக் கொண்டு அவருக்கே இயல்பான வேகத்தில் அங்கிருந்து சென்று விட்டார்.

அடுத்தநாள் மாலை வேளை அவர் சொன்னது போல அவர் வீடு போய்ச் சேர்ந்தேன். அப்பொழுது 'என்னைக் கவர்ந்த என் கவிதை" என்னும் தலைப்பில் ஈழத்து பிரபல கவிஞர்களின் கட்டுரைகள் 'கலைச்செல்வி'யில் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருந்தன. கவிஞர் செல்லையாவிடம் அத்தகைய கட்டுரை ஒன்றினைக் கேட்டிருந்தார்கள். கவிஞர் மு.செ. 'தோட்டியின் துயரக்குரல்' என்னும் தனது கவிதையே தன்னை மிகவும் கவர்ந்தது என்றும், அதற்கான காரணங்களையும் விளங்க வைத்து, அக்கவிதையையும் எனது கையில் தந்தார். "நான் நீண்ட காலமாகக் கட்டுரைகள் எழுதாமல் விட்டு விட்டேன். நீ இந்தக் கட்டுரையை எழுதி வைத்துவிட்டுப் போ" என உரிமையுடன் சொல்லிக் கொண்டு வெளியே போய்விட்டார்.

நான் கட்டுரை எழுதி முடிக்கச் சுமார் இரவு எட்டு மணிக்கு மேல் ஆகியிருக்கும். அப்பொழுதும் கவிஞர் திரும்பி வீடு வந்து சேரவில்லை. நான் எழுதிக் கொண்டிருந்த மேசையில் அந்தக் கட்டுரையை வைத்துவிட்டு, கவிஞரின் மனைவியிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டு வீடு வந்து சேர்ந்தேன். பின்னர் ஒரு தினம் கவிஞரை நான் சந்தித்த போது அந்தக் கட்டுரையைத் தான் அனுப்பிவைத்து விட்டதாகவும் அவர் என்னிடம் சொன்னார். கவிஞரின் கருத்துகளுக்கு எழுத்து வடிவம் கொடுத்தவன் நானே அல்லாது, அந்தக் கட்டுரை எந்த வகையிலும் எனக்குச் சொந்தமானதன்று.

ஐம்பதாண்டுகள் கழிந்த பின்னர் இந்த விவகாரத்தின் வெளிப்பாடு எப்படி அமைந்திருந்தது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்வதற்காகவே, அந்தச் சம்பவத்தை இங்கு நான் தெரிவிக்க வேண்டி நேர்ந்திருக்கிறது.

ஆசிரியக் கலாசாலையில் முதலாம் ஆண்டு முடிவுறும் இறுதி நாள். காலை விடிந்ததும் இரண்டாவது வருட மாணவர்கள் பெட்டி படுக்கைகளுடன் தத்தமது ஊருக்குப் புறப்படத் தயாராக இருந்தார்கள்.

கலாசாலையில் ஒன்றாகத் தங்கியிருந்து படித்த அனைவரையும் பிரிவுத் துயர் வருத்திக் கொண்டிருந்தது. ஒன்றாக உண்டு, ஒன்றாகப் படித்து, ஒன்றாகப் படுத்துறங்கிய நண்பர்கள். பிரிவு நிச்சயமானது என்று அறிந்திருந்தும் மனது துயர்ப்படாமல் இருக்க முடியவில்லை.

அப்பொழுது புத்தளத்தைச் சேர்ந்த இரண்டாம் வருட மாணவன் எட்மன் பீரிஸ் என்னைத் தேடி எனது கட்டிலுக்கு வந்தார். நான் வேறு சில நண்பர்களுடன் அப்பொழுது கட்டிலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தேன். "தம்பி, இஞ்சை வா" என என்னைப் பார்த்துச் சொல்லிக் கொண்டு அவர் விடுதி வாசல் நோக்கி நடந்தார். அவருடைய அந்த அழைப்பு எனக்கு ஆச்சரியமாக இருந்தது. என்னுடன் கூடி இருந்த நண்பர்கள் என்னை அதிசயமாகப் பார்த்தார்கள்.

எட்மன் பீரிஸ் எங்கள் கலாசாலையில் வாழ்ந்த வித்தியாசமான ஒரு மாணவர். யாரோடும் அதிகம் நெருங்கிப் பழகாத ஒருவர். இயல்பில் அவர் ஒரு முற்கோபி. அதனால் மற்றையவர்களும் பெரிதாக அவருடன் உறவாடுவதில்லை. உடல் தோற்றத்திலும் ஓங்கி உயர்ந்த கம்பீரமான ஒருவர். அவருக்கும் எனக்குமிடையே நெருக்கமான உறவேதும் இருக்க வில்லை. அங்கே நேரில் சந்திக்கும் சமயங்களில் எல்லாம் அன்பாகச் சிரித்துக் கொள்வார். விரிவுரைக்குப் புறப்படும் சமயம் முகத்தில் பூசிக்கொள்ளும் பவுடர் தன்னிடத்தில் இல்லாதிருந்தால், என்னிடம் வந்து "தம்பி, கொஞ்சம் பவுடர் தா" எனக் கேட்டு வாங்கிக்கொள்வார். கலாசாலை விடுதியில் ஒன்றாக வாழுகின்றவர் இடையே இருக்கக்கூடிய சாதாரணமாக உறவுதான் அவருக்கும் எனக்குமிடையே இருந்து வந்தது.

அப்பொழுது இரவு எட்டுமணி இருக்கும். வெளியே 'கும்'மென்ற இருள்! அவர் விடுதியில் இருந்து வெளிவந்து விளையாட்டு மைதானம் நோக்கி அந்த இருளில் நடந்து போய்க் கொண்டிருக்கிறார். நான் அவர் பின்னால் மௌனமாகப் போய்க்கொண்டிருக்கின்றேன். மைதானத்தின் நடுப்பகுதிக்கு வந்ததும், அந்தப் புற்றரையில் தான் மெல்ல அமர்ந்த வண்ணம் "தம்பி, இரு" எனக் கூறுகின்றார். நான் அவர் முன்னால் வியப்புடன் உட்காருகின்றேன். ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியாத அந்த இருளில் இருவரும் அமர்ந்திருக்கின்றோம்.

அப்பொழுது அவர், "தம்பி, காலையிலே நான் ஊருக்குப் புறப்பட்டு விடுவேன். நான் அடுத்த வருஷம் இங்கே இருக்கிறதாக இருந்தால் இதை உமக்குச் சொல்ல மாட்டேன். என்ன பிரச்சினை உமக்கு வந்தாலும் நான் உம்மைப் பாதுகாப்பேன். நான் போகப்போகிறேன். அதனாலே நீர் இஞ்சை கவனமாக இருக்க வேணும். எங்களுடைய வோடனாக இருக்கின்ற பாதர் உம்மை ஒரு கொம்யூனிஸ்ட் என்று சொல்லி, உம்மோடை மற்றவர்களைப் புழங்க

வேண்டாம் என்று சொல்லி வைத்திருக்கிறார். அவராலே உமக்கு இடைஞ்சல் வரும்; கவனமாக இருக்க வேண்டும். உம்மிலே எனக்கு நல்ல விருப்பம். நீர் கெட்டிக்காரன்; உம்முடைய எதிர்காலம் நன்றாக இருக்கும். எனது வாழ்த்துக்கள்" எனச் சொல்லி முடித்து விட்டு அவர் எழுந்தார்.

முரடன் என்று மற்றையவர்கள் கணித்து வைத்திருக்கும் அந்த மனிதனுக்குள்ளே எத்தகைய கசிவு! எப்படியான நல்ல இதயம்! உள்ளத்தில் உண்டான அதிசயத்தில் இருந்து நான் விடுபடாத நிலையில், என்னை இதயத்தால் நேசித்த அந்த மனிதனின் பின்னே தொடர்ந்து நடந்தேன்.



ஆசிரியக் கலாசாலை இரண்டாம் வருடம் - இறுதி ஆண்டு - மேலும் பல சமூக அனுபவங்களை நான் பெற்றுக் கொள்ள வாய்ப்பாக அமைந்த மிகவும் முக்கியத்துவம் உடைய ஒரு காலம். சாதியத்தின் பல்வேறு வகையான தோற்ற வெளிப்பாட்டினை அந்தக் காலகட்டத்தில் நான் அவதானித்து, உணர்ந்து, அறிந்து கொண்டேன். இந்துத்துவம், சாதியம் ஆகிய இரண்டும் ஒரு வண்டியின் இரண்டு சக்கரங்களாக, ஆதிக்க சக்திகளின் வாழ்வில் இணைந்து ஓடுகின்றன என்பதனை அக்காலத்தில் நான் பெற்றுக்கொண்ட வாழ்வனுபவங்கள் மேலும் உறுதிப்படுத்தின. அந்த வாழ்வனுபவங்களை வழங்குவதற்கென்றே திருநெல்வேலியில் இருந்து ஆசிரிய மாணவர்கள் கொழும்புத் துறைக்கு வந்து சேர்ந்தார்கள்.

நாங்கள் இரண்டாம் வருட மாணவர்களாகக் கற்கை நெறியை ஆரம்பித்த சமயம் (1963) திருநெல்வேலி சைவாசிரியக் கலாசாலை மூடப்பட்டது. அங்கு ஆசிரிய மாணவர்களாக இருந்த சைவாசிரியர்கள், தங்கள் கற்கை நெறியைத் தொடரும் பொருட்டுக் கொழும்புத்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். கொழும்புத்துறையில் இருந்த கிறிஸ்தவ மாணவிகள்- அப்பொழுது இந்துமதப் பெண்கள் மாத்திரம் கல்வி கற்றுக்கொண்டிருந்த - கோப்பாய் ஆசிரியக் கலாசாலைக்கு அனுப்பி வைக்கப் பெற்றார்கள். தமிழன் எங்கு புகுந்தாலும் அங்கு சாதி வந்து புகுந்துவிடும். தமிழ்ச் சைவன் எங்கு புகுந்தாலும் அங்கு சாதி எழுந்து தலைவிரித்து ஆட ஆரம்பித்து விடும். கொழும்புத்துறை ஆசிரியக் கலாசாலையில் அதன் ஆட்டம் மெல்ல ஆரம்பமாயிற்று.

ஆட்டம் எங்கள் குடும்பப் பொருளாதாரத்திலும் ஏற்படலாயிற்று. வசதியாக வாழ்ந்துவந்த எங்கள் குடும்பம் அந்த ஆண்டு ஆட்டங் காணத் தொடங்கியது. எங்களுக்காக ஓய்வு ஒழிச்சலின்றி உடல் உழைப்பு செய்து வந்த எங்கள் தகப்பனார் உடல் சற்றுத் தளர்ந்து போகலானார். அதனால் குடும்ப வருமானம் குறையத் தொடங்கியது. யாழ்ப்பாணம் புனித சம்பத்திரிசியார் கல்லூரி விடுதி மாணவனாகத் தங்கி இருந்து கல்வி கற்று வந்த தம்பி அந்தத் தருணம் கல்விபொதுத் தராதரப் பத்திரப் (சாதாரணம்) பரீட்சையில் சித்தி அடைந்தான். குடும்ப வருமானம் குறைய ஆரம்பித்ததும், யாழ்ப்பாணத்து விடுதியில் இருந்து அவனை விடுவித்து, வடமராட்சி பொலிகண்டியிலுள்ள எங்கள் இல்லத்தில் தங்கி இருந்து கல்வி கற்கத் தகுந்த ஏற்பாட்டினைச் செய்யத் தீர்மானித்தோம். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி க.பொத. (உயர் தரம்)க் கல்வியை அவன் தொடர்ந்து கற்பதற்குப் பொருத்தமான இடமெனக் கருதினோம்..

அக்காலத்தில் ஹாட்லிக் கல்லூரியை நிருவகித்தவர், வட பிரதேசத்தில் பிரபலியமான, புகழ் பூத்த ஓர் அதிபர். அவர் ஒரு கிறிஸ்தவர். அவரைக் கல்லூரி சென்று ஒரு தினம் சந்தித்தேன். தம்பியின் பாடசாலைத் தேர்ச்சி அறிக்கையைக் கையோடு கொண்டு சென்றேன். அதனை வாங்கிப் பார்வையிட்ட போதும், அதில் அதிக கவனம் செலுத்தாது தம்பியின் விளையாட்டுத்துறை ஈடுபாடு பற்றி அக்கறையுடன் வினவினார். புனித சம்பத்திரிசியார் கல்லூரி உதைப்பந்தாட்ட அணி, கிரிக்கெட் அணி இரண்டிலும் அவன் விளையாடிக் கொண்டிருக்கின்றான் என்ற தகவல் அவருக்குத் திருப்தி அளித்தது. இனி என்ன! அவனுக்கு அனுமதி கிடைத்துவிடும் என நான் எண்ணிக் கொண்டிருந்த தருணம், ஆரம்பக் கல்வியை எங்கே பெற்றுக் கொண்டாரென வினவினார். தேவரையாளி இந்துக் கல்லூரி என நான் பதில் சொன்ன போது அவர் கண்டுகொள்ள விரும்பிய சாதிய அடையாளத்தை அறிந்து கொண்டார். சற்று நேரத் தாமதத்தின் பின்னர், M.P. இடம் இருந்து சிபாரிசுக் கடிதம் ஒன்று வாங்கி வந்தால் அனுமதி தரலாம் எனக் கூறினார். அப்பொழுது பருத்தித்துறைப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த கே. துரைரத்தினம் அவர்களிடம் சென்று விடயத்தைச் சொல்லிச் சிபாரிசுக் கடிதம் ஒன்று பெற்று வந்து கொடுத்தேன். அதனை வாங்கி வைத்துக் கொண்டு வடமாநில வித்தியாதரிசின் அனுமதி பெற்றுக் கொண்டு வருமாறு கூறினார். அவனுக்கு அனுமதி வழங்குவதை எப்படியும் தட்டிக் கழித்துவிட எண்ணுகின்றார் என்பதனை நான் விளங்கிக் கொண்டேன். வித்தியாதரிசியின் அனுமதிக் கடிதம் என்னால் பெற்றுக் கொள்ள இயலாது என அவர் கருதி இருக்க வேண்டும்.

நான் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் M.C. சுப்பிரமணியம் அவர்களிடம் சென்று விஷயத்தை எடுத்துச் சொன்னேன். அவர் உடனே புறப்பட்டு வந்து, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் இருந்த கல்வி அலுவலகத்துக்கு என்னை அழைத்துச் சென்று அனுமதிக் கடிதம் பெற்றுத் தந்தார். அந்தக் கடிதத்தைக் கொண்டு சென்று ஹாட்லிக் கல்லூரி அதிபரிடம் கையளித்தேன். அதன் பின்னரே கிறிஸ்தவரான அந்த அதிபர் எனது தம்பி அந்தக் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கு அனுமதி வழங்கினார்.

யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவர்களின் அசல் பிரதிநிதியாக அந்த அதிபர் அப்பொழுது விளங்கினார். கொழும்புத்துறை ஆசிரியக் கலாசாலையில் உள்ளடங்கிக் கிடந்த யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவ சாதிய மனப்பாங்கு, திருநெல்வேலிச் சைவர்களின் வருகையுடன் சிறிது சிறிதாகச் சிலரிடத்தில் தலைகாட்டத் தொடங்கியது.

கொழும்புத்துறை ஆசிரியக் கலாசாலையில் இலங்கை சாஹித்திய மண்டலத்தின் அனுசரணையுடன் இலக்கிய விழா ஒன்று நடை பெறுவதற்கு ஏற்பாடாகி இருந்தது. அந்த விழாவில் கலாசாலை ஆசிரிய மாணவர்கள் சார்பில் நாடகம் ஒன்றினை அரங்கேற்றும் பொறுப்பினை நான் ஏற்றுக்கொண்டேன். விழாவில் மேடை யேற்றுவதற்கென 'தரகர் குடும்பம்' என்னும் நகைச்சுவை நாடகம் ஒன்றை எழுதினேன். அந்த நாடகம் பெயரளவில் ஒரு நகைச்சுவை நாடகமாக இருந்ததேயன்றி, உண்மையில் சமூகத்தை விமரிசனம் செய்யும் நாடகமாகவே அது இருந்தது. அந்த நாடகத்தின் பிரதான பாத்திரங்கள், தரகரும், அவர் மனைவியும்தான்! தரகர் பாத்திரத்தில் நானும், மனைவி பாத்திரத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த கத்தோலிக்கரான ஆசிரிய மாணவர் ஒருவரும் நடிப்பதற்கான ஏற்பாட்டினைச் செய்து ஒத்திகையும் பார்த்து வந்தோம்.

பெண் பாத்திரம் ஏற்று நடிக்க இருந்தவர் வயதில் என்னிலும் மூத்தவர். திருமணமானவர். கடந்த ஓராண்டு காலம் நல்ல நட்புறவுடன் பழகி வந்தவர். அந்த நாடகத்தில் பெண் பாத்திரம் ஏற்று நடிப்பதற்குத் தானாகவே விரும்பி முன் வந்தவர். நாடகம் மேடை ஏறுவதற்கு இடையில் ஒரு தினம் மாத்திரம் இருக்கையில் அவர் தான் நாடகத்தில் நடிக்க முடியாதெனத் திடீரென மறுத்து விட்டார். இன்னொருவரைத் தயார் செய்வதற்குக் காலம் போதாதென நான் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவர் முடிவாக மறுத்து நின்றார். அவர் அவ்வாறு மறுப்பதற்கான காரணத்தையாவது சொல்லுமாறு கேட்டேன். அதனையும் கூற முடியாதெனத் தட்டிக் கழித்தார். அப்பொழுதுதான் நான் தெளிவாக விளங்கிக் கொண்டேன். அந்த முடிவு அவர் ஒருவர் மட்டும் தனித்து நின்று எடுத்த முடிவல்ல. இன்னும் சிலர் சேர்ந்து அந்தரங்கமாக எடுத்த முடிவு என்பதனை அறிந்துகொண்டேன்.

அதனை எனக்கொரு சவாலாக எடுத்துக் கொண்டு செயற்படத் தீர்மானித்தேன்.

கலாசாலை முதலாம் வருடத்தில் மலையகம் இரத்தினபுரியைச் சேர்ந்த சாமி என்னும் ஆசிரிய மாணவர் ஒருவர் இருந்தார். அவர் கலாசாலைக்கு வந்த காலம் முதல் என்னுடன் நெருக்கமாக அன்புடன் பழகி வந்தார். அவரது நல்லியல்புகள் காரணமாக எனக்கும் அவர் நெஞ்சுக்கு நெருக்கமான ஒருவராகக் காணப் பட்டார். அவரை மெல்ல அணுகினேன். நாடகம் மேடை ஏறுவதற்கு இடையில் ஒருநாள் மாத்திரம் இருக்கிறது. எப்படி நாடக வசனங்களை மனனஞ் செய்வது? எப்படி நடிப்பது? என அவர் தயங்கினார். அவர் தயக்கம் நியாயமானது என உணர்ந்து கொண்டு, அதனை எவ்வாறு தீர்க்கலாமெனத் தீவிரமாகச் சிந்தித்து, இறுதியில் ஒரு மார்க்கம் கண்டேன்.

அந்த நாடகத்தில் வரும் தரகர் மனைவி சுளகில் அரிசியைப் போட்டு புடைத்த வண்ணம், அடுக்களைக்குள் இருந்து வெளி வருவதாகச் சிறிய மாற்றம் ஒன்றினைச் செய்தேன். அதன் பின்னர் நாடக உரையாடல்களைக் காகிதத்தில் எழுதி, கைகளில் தூக்கி வைத்துக் கொண்டிருக்கும் சுளகுக்குள் காகிதத்தை மறைத்து வைத்து, அந்தப் பிரதியை இரகசியமாகப் பார்த்துப் பார்த்துப் பேசி நடிக்க வைத்தேன். நாடகம் சிறப்பாக அரங்கேறி நடந்து முடிந்தும் பலரது பாராட்டைப் பெற்றது.

பொன். கந்தையாவின் பாராளுமன்றத் தேர்தல் காலத்தில் உண்டான கே. டானியலின் உறவு விடுபடாமல் இக்காலத்திலும் தொடர்ந்து கொண்டிருந்தது. டானியல் இடையிடையே கடிதம் எழுதினார். 'டானியல் கதைகள்' வெளியீட்டு விழா அழைப்பு கிடைத்து விழாவுக்குச் (03.02.1963) சென்றேன். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் எடுத்த இலக்கிய விழா - அங்கத்தவர்கள் மாத்திரம் கலந்து கொண்ட இரண்டாம் நாள் நிகழ்வு (08.05.1963) யாழ்ப்பாணம் மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்ற சமயம், அங்கு சென்றிருந்த அங்கத்தவரல்லாத என்னை மண்டபத்துக்குள் டானியல் அழைத்துச் சென்று தன்னருகே இருக்க வைத்துக் கொண்டார்.

எங்கள் ஆசிரியக் கலாசாலையில் கலாசாலை நடைமுறைக் காரியங்களைச் செவ்வனே செய்து முடிப்பதற்கென ஒரு மந்திரி சபை இருந்தது. பிரதம மந்திரி, கல்வி மந்திரி, உணவு மந்திரி, சுகாதார மந்திரி எனப் பல மந்திரிகள் ஆசிரிய மாணவர்கள் மத்தியில் இருந்து தெரிவு செய்யப் பெற்றிருந்தார்கள். அந்த மந்திரி சபையின் பிரதம மந்திரியாக, மாணவத் தலைவன் சந்தியாப் பிள்ளை இருந்தார். பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர் இளவாலையில் திருமணஞ் செய்து வாழ்ந்து வந்தார். அவர் என்னுடைய நல்ல நண்பராகவும் இருந்து

வந்தார். அந்த மந்திரி சபை முழுவதற்கும் பொதுச் செயலாளராக நான் தெரிவு செய்யப்பட்டிருந்தேன். பிரதமர், செயலாளர் ஆகிய இருவருக்கும் மாத்திரம் அந்த மந்திரி சபைக்குப் பொறுப்பான சகல காரியங்களிலும் தலையிடுவதற்கான உரிமை இருந்து வந்தது.

உணவு எப்பொழுதும் மனிதனுக்குப் பிரச்சினையான ஒன்றுதான்! மச்ச மாமிசம் உண்ணும் கிறிஸ்தவர்கள், மச்ச மாமிசம் உண்ணாத சைவர்கள், இருவகையான உணவுகளையும் ஏற்று உண்ணும் சைவர்களென முத்திறத்தார் ஆசிரிய மாணவர்களாக அங்கு இருந்தார்கள். இந்த வகையான பிரிவுகளால் அங்கு எந்தவிதமான சிக்கலும் அப்பொழுது உருவாகவில்லை. சிக்கல் யாழ்ப்பாணத்து மண்ணுக்கே உரித்தான குணாம்சத்துடன் வேறு வகையாக அங்கு உருவானது. திருநெல்வேலியில் இருந்து வந்தவர்களே அந்தச் சிக்கல்களுக்கெல்லாம் மூலகாரணமாகப் பின்னணியில் இருந்து செயற்பட்டார்கள்.

என்னோடு படித்துக் கொண்டிருந்த மாணவர்களுள் இருவர் ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்தவர்கள். அவர்களுள் ஒருவர் மல்லாகத்தைச் சேர்ந்தவர்; மற்றையவர் அச்சுவேலியைப் பிறப்பிட மாகக் கொண்டவர். ஆசிரிய மாணவர்கள் உணவு உண்ணும் மண்டபத்துள் பல மேசைகள் போடப்பட்டிருந்தன. மல்லாகத்தைச் சேர்ந்த நண்பர் இருந்த மேசையில் அவருக்கு அண்மையிலுள்ள அளவெட்டியைச் சேர்ந்த ஒரு சைவம் இருந்தார். மல்லாகத்தைச் சேர்ந்த ஒடுக்கப்பட்ட சாதிக்காரன் தனது மேசையில் அமர்ந்திருந்து உணவு உண்பது அளவெட்டியைச் சேர்ந்த சைவம் மனதில் கொதிப்பை மூட்டி விட்டது. அந்த மனக்கொதிப்பை உள்ளே அடக்கி வைத்துக் கொள்ள இயலாமல், மல்லாகக்காரனைத் தனிய, அந்தரங்க மாகச் சந்தித்து, அந்த மேசையை விட்டு மாறி, இன்னொரு மேசைக்குப் போய் உட்காருமாறு அவர் தெரிவித்தார்.

மல்லாகத்து நண்பர் அந்த விடயத்தை இரகசியமாக எனது செவியில் போட்டு வைத்தார். அந்தக் காலகட்டம் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை எழுச்சியுடன் செயற்பட்ட காலம். M.C. சுப்பிரமணியம் அதன் தலைவராக இருந்தார். நான் மகாசபைக் காரன் என்பது ஆசிரியக் கலாசாலையில் பரவலாக எல்லோருக்கும் தெரிந்திருந்தது. அளவெட்டிக்காரரின் சாதி அகங்காரம் வெளிப்பட்டு வீச்சுடன் செயற்படத் தகுந்த சூழ்நிலைகள் அப்பொழுது யாழ்ப்பாணத்தில் இல்லை என்பதனை நான் உணர்ந்திருந்தேன். ஆயினும் எனக்குள் நகைப்போடு கூடிய ஒருவகைச் சினம் மனதில் எழுந்தது. எனது ஆசிரியர்களான க. முருகேசு, சைவப் புலவர் சி. வல்லிபுரம் ஆகியோர் 1929, 1930ஆம் ஆண்டுகளில், ஆசிரியக் கலாசாலையில் முகம் கொடுத்த சமாசனம், சமபோசனப் பிரச்சினை

இன்னும் முற்றாகத் தீர்ந்து போய்விடாது, மூன்று தசாப்தங்களின் பின்னும் அதன் மிச்ச சொச்சம் உறுத்தலாக வெளிப்படுவதை நான் உணர்ந்து கொண்டேன்.

நான் அந்தத் தகவல் அறிந்து ஒரு வார காலம் கழிந்திருக்கும். கலாசாலை உணவு மண்டபத்தில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஒருநாள் மதிய உணவு வேளை எல்லோரும் எங்கள் மேசையில் உணவு அருந்திக் கொண்டிருந்தோம். அப்பொழுது அளவெட்டியைச் சேர்ந்த அந்த மாணவன் தான் உண்டு கொண்டிருந்த உணவைக் கோப்பையுடன் தள்ளி விட்டுத் திடீரென எழுந்தார். "ஆர் என்ரை கோப்பையை மாத்தி வைச்சது?" எனக் கேட்டுக் கொதித்தார். உணவு உண்டு கொண்டிருந்த எல்லோரும் தங்கள் கோப்பைகளைக் கூறுகுறிப்பாகப் பார்த்தார்கள். "என்ரை கோப்பையும் மாறிப்போச்சு" என வாய்விட்டுச் சொல்லி சங்கடப்பட்டார் மல்லாகத்தார்.

அவர்கள் இருவரது உணவுக் கோப்பைகளுந்தான் மாற்றி வைக்கப்பட்டிருக்கின்றன என்பது சட்டென்று எல்லோருக்கும் புரிந்தது. அளவெட்டி மாணவன் மேற்கொண்டு உணவு உண்ணாது, கோப்பையைத் தூக்கிச் சென்று சோற்றை வெளியே கொட்டி விட்டுத் திரும்பினார். அன்று மதியம் அவர் பட்டினி. மாலை கலாசாலையில் இருந்து புறப்பட்டுச் சென்று, புதிய உணவுக் கோப்பை ஒன்று அவர் வாங்கி வந்தார். மல்லாகத்து மாணவன் உணவு உண்ட தனது பழைய கோப்பையை உடைத்து வெளியே வீசினார்.

மல்லாகத்து மாணவனுக்கு உண்மையில் என்ன நடந்ததென்று தெரிய வராது. அவர்கள் இருவரினது உணவுக் கோப்பைகளும் எவ்வாறு இடம்மாறின? என்பதை அறிந்தவர் ஒரேயொருவர் அங்கு இருந்தார். ஆனால் அவர் அதனை வெளியில் சொல்லிக்கொள்ள வில்லை.

அந்தச் சம்பவம் நடந்து முடிந்து சில நாட்கள் கழிந்த பின்னர் இன்னொரு சம்பவம் நிகழ்ந்தது. அச்சுவேலி மாணவன் உணவு மந்திரியின் கீழ்ச் செயற்பட்ட உணவுக் குழுவில் இடம் பெற்றிருந்தார். எங்களுடைய உணவுக் கோப்பைகளில் உணவு பகிர்ந்தளிக்கும் வேலையை அங்கிருந்த சமையற்காரர்கள் செய்வார்கள். காலை வேளை வகுப்புகள் ஆரம்பிக்கும் நேரம் உணவு பரிமாறி முடிக்காதிருந்தால், உணவுக் குழுவைச் சேர்ந்தவர்கள் உள்ளே போய் சமையற்காரர்களுக்கு உதவியாக நின்று உணவைக் கோப்பைகளில் எடுத்து வைப்பார்கள். சில சமயங்களில் அச்சுவேலியைச் சேர்ந்தவர் அந்தப் பணியைச் செய்து வந்தார். திருநெல்வேலியில் இருந்து வந்த சைவங்களுக்கு அது தெரியவந்த போது, அச்சுவேலிக்காரனைக் கண்டு, "நீ தொட்டளைந்ததை நாங்கள் என்னெண்டு சாப்பிடுறது? இனி அப்பிடிச் செய்யக் கூடாது" என எச்சரிக்கை செய்தார்கள்.

அச்சுவேலி நண்பருக்கு தனது மனக்குமுறலை வெளியில் எடுத்துச் சொல்வதற்கு இருவர் மாத்திரந்தான் அங்கிருந்தோம். ஒருவர் மல்லாகத்தார்; மற்றையவர் நான். எங்கள் இருவரையும் தவிர வேறு யாரிடம் இதைப் போய் அவர் முறைப்பாடு செய்ய முடியும்? முதலாம் வருட மாணவர்களாக ஒடுக்கப்பட்ட சமூகத்தில் இருந்து இருவர் வந்திருந்தார்கள். அவர்களுக்கு அங்கு சிக்கல் உருவாவதை நாங்கள் விரும்பவில்லை. நாங்கள் மூவரும் சேர்ந்து ஒரு திட்டத்தை உருவாக்கி அதனைச் செயற்படுத்தத் தீர்மானித்தோம்.

ஒருநாள் காலை நாங்கள் மூவரும் உணவு மண்டபத்துக்குப் போனோம். அப்பொழுது சமையற்காரர்கள் இடியப்பங்களை எடுத்து கோப்பைகளில் வைப்பதற்குத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். அவர்களைத் தடுத்து அடுக்களைக்குப் போகும் வண்ணம் அனுப்பி வைத்தோம். அவர்கள் திரும்பிச் சென்று மதிய உணவு தயாரிக்கும் வேலைகளில் துரிதமாக ஈடுபட்டார்கள். நாங்கள் மூவரும் மிக ஆறுதலாக இடியப்பங்களை எண்ணி எடுத்து கோப்பைகளில் வைக்க ஆரம்பித்தோம். உணவு மண்டபக் கதவுக்கு வெளியே நின்ற சக மாணவர்கள் நேரம் பிந்திப் போய்விட்டது என அவசரப்பட்டார்கள். முதலில் மணி அடித்து, கதவு திறந்து விட்ட பின்னரே, எல்லோரும் உள்ளே வருவது வழக்கம். உணவு முற்றாகப் பகிர்ந்து முடிப்பதற்கு முன்னர், அந்த மணியை அடித்துக் கதவை நான் திறந்து விட்டேன். அவர்கள் எல்லோரும் பார்க்கத் தகுந்ததாக எனது நண்பர்கள் இருவரும் கோப்பைகளில் இடியப்பங்களை எடுத்து வைத்துக் கொண்டு நின்றார்கள். சாதிமான்களான சைவங்களும் அன்று மௌனமாக இருந்து உணவு உண்டு முடித்துக் கொண்டு மனப்பொருமலுடன் எழுந்து சென்றார்கள்.

இந்தச் சம்பவம் நடந்து முடிந்து சில நாட்களின் பிறகு ஒருநாள் காலை நாங்கள் படுக்கையில் இருந்து எழுந்து பார்த்த போது, எங்களுடைய உணவுக் கோப்பைகள் அனைத்தும் வெளியே தூக்கிப் போட்டு அடித்து நொறுக்கப்பட்டிருந்தன. அந்தக் கைங்கரியத்தைச் செய்து முடித்தவர் யார்? என்பது அன்றே எல்லோருக்கும் தெரிய வந்தது.

நெடுந்தீவில் பிறந்த வயதில் மூத்த ஆசிரியர்தான் அவர்! அவர் என் மீது மிகுந்த அன்புள்ள ஒருவராக இருந்தார். எங்கள் கலாசாலையில் அப்பொழுது வயதில் குறைந்தவர்களாக இருந்த இரண்டொரு மாணவர்களுள் நானும் ஒருவன். என்னை எப்பொழுதும் "மருமேன்... மருமேன்" என்று அழைப்பார். "மகள் வளர்ந்து விட்டாள், மருமேன். என்னை ஏமாத்திப் போடாதே!" எனப் பகிடி பண்ணுவார். சாதி வேறு பாடு பார்க்கும் உணர்வு அணுவுமில்லாத ஒருவர். மாலை வேளைகளில் கலாசாலை விட்டுத் தினமும் வெளியே செல்வார். திரும்பிவரும்போது

தலையில் தலைப்பாகை கட்டியிருப்பார். வாயில் மதுவின் வாடை அடிக்கும். பேச்சிலும் அது வெளிப்படும். சத்தம் போட்டுப் பேசுவார். வலிந்து யாருடனும் சண்டை சச்சரவுகளுக்குப் போக மாட்டார். இரவு நேரம் நாங்கள் படிக்கும் மண்டபத்தில் எப்பொழுதும் எனது மேசைக்கு அருகே அவரது மேசை இருக்கும். நான் எதனைச் சொன்னாலும் அதனைக் கச்சிதமாகச் செய்து முடித்து விட்டு, பின்னர் தான்தான் அதனைச் செய்ததாக மறுக்காமல் ஒப்புக் கொள்வார். அவர் மது வெறியில் அந்தக் காரியத்தைச் செய்ததாக எல்லோரும் கருதுவார்கள். சாதி வெறி காரணமாக புதுக்கோப்பை வாங்கியவர்களுக்கு ஒரு பாடமாகவே, கோப்பைகள் எல்லாம் அடித்து நொருக்கப்பட்டன. அந்தக கோப்பைகள் அடித்து நொருக்கப்படுவதற்குத் தூண்டுகோலாக இருந்தவர் யார்? என்பதை அவர் எந்தக் காலத்திலும் வெளியே சொல்லவில்லை.



திருநெல்வேலி ஆசிரியக் கலாசாலை மூடப்பட்டதுடன் வருடந்தோறும் நடைபெற்று வந்த தமிழ்விழா தடைப்பட்டுப் போயிற்று. அப்பொழுது கொழும்புத்துறை, நல்லூர், பலாலி, கோப்பாய் ஆசிரியக் கலாசாலைகள் ஒன்றாக இணைந்து கூட்டாகத் தமிழ்விழா ஒன்றினை மூன்று தினங்கள் நடத்துவதெனத் தீர்மானிக்கப் பெற்றது. அந்தத் தமிழ்விழாவை நடத்தி முடிப்பதற்குப் பொறுப்பாக, கோப்பாய் பெண்கள் ஆசிரியக் கலாசாலை தவிர்த்து கலாசாலைக்கு ஒருவராக மூன்று செயலாளர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். கொழும்புத் துறை ஆசிரியக் கலாசாலையில் இருந்து செயலாளராக நான் தெரிவு செய்யப்பட்டேன். நல்லூர் ஆசிரியக் கலாசாலையில் மூன்று தினங்கள் நடைபெற்ற அந்தத் தமிழ்விழாவின் முதலாம் நாள் (04071963) நிகழ்ச்சியின் இறுதியில் நன்றி தெரிவிக்கும் பொறுப்பு என்னிடத்தில் ஒப்படைக்கப்பட்டது.

அன்றைய நிகழ்வில் பண்டிதர் சோ. இளமுருகனார் கலந்து கொண்டு இலக்கியச் சொற்பொழிவு ஒன்றினை ஆற்றினார். மரபுப் போராட்டம் காரணமாக அவரது பெயர் ஈழத்து இலக்கிய வாசகர்களினால் நன்கு அறியப்பட்டதாக இருந்தது. மரபுப் போராட்டத்தின் 'தலைமைக் காரன்' அவர். 'இழிசனர் இலக்கியம்' என ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்த படைப்பாளிகளின் இலக்கியங்களை சாதி அகம்பாவத்துடன் இழிவு செய்தவர். தமிழ் விழாவில் இடம்பெற்ற அன்றைய அவர் பேச்சிலும் அந்த அகம்பாவத்தின் வெளிப்பாட்டினை நான் நன்கு அவதானித்தேன்.

நிலவுடைமைக்காரனான மேல்சாதிக்காரன் ஒருவனின் தண்டனையைப் பெற்ற பறை அறைவோன் சொல்லுவதாக, மேல்சாதிக்காரப் புலவன் பாடிய பாடல் ஒன்றினை விழா மேடையில் சொல்லி நகைச்சுவையாகப் பேசினார். (அந்தப் பாடல் இப்பொழுது எனது நினைவில் இல்லை.) நான் அந்தக் காலத்தில் வெளிவந்து கொண்டிருந்த நூல்கள், சஞ்சிகைகளை தவறாமல் வாங்கிப் படிக்கும் ஒருவனாக இருந்தேன்.

அந்தப் பாடலை நான் முன்னரே படித்திருந்தேன். தமிழ்விழா நடைபெறுவதற்குச் சிறிது காலத்துக்கு முன்னர் அந்தப் பாடல் சஞ்சிகை ஒன்றில் கட்டுரையுடன் மீள்பிரசுரம் செய்யப் பெற்றிருந்தது என்பதும் என் நினைவில் இருந்தது. அந்தப் பாடல் பறை அறைகின்றவன் நிலவுடைமையாளனை நோக்கி, "நீ எனக்கு அடித்து விட்டாய்! ஆனால் நான் அடித்தால் உன் மனைவி மக்கள் அழுவர். உன் உறவினர், சுற்றத்தவர் அழுவர். உன் அடிமைக் குடிமைகள் அழுவார்கள். உனக்குக் கள்ளுத் தரும் முற்றத்துப் பனைமரம் இரங்கி அழும்..." என்ற வகையில் பொருள்படுவதாக அமைந்திருந்தது. மேல் சாதிக்காரன் ஒருவன் இறந்து போனால் குடிமகன் வந்து பறை அடிக்கும் சம்பவத்தை உயர்சாதி மனப்பான்மையுடன் சித்திரிக்கும் பாடல் அது.

அந்தப் பாடலும் விளக்கமும் எனக்கு மனதில் சினத்தை ஊட்டியது. அத்துடன் அந்தப் பாடல் நான் அறியாததாக - எனக்குப் புதிதாக இருக்கவில்லை. அன்றைய விழாவின் இறுதியில் நான் நன்றி தெரிவித்துப் பேசும் பொழுது, "இளமுருகனாரின் பேச்சு புதிய மொந்தையில் பழைய கள்" எனக் குறிப்பிட்டுச் சொன்னேன். என்னுடைய அந்தக் கருத்து, பலருக்கு அன்று அதிருப்தியாக இருந்தது என்பதனை நான் கண்டுகொள்ளத் தவறவில்லை. ஆயினும், எனது மனக்கருத்தை ஒளிக்காது சத்தியத்துடன் உள்ளத்தில் உள்ளதை எடுத்துச் சொன்னேன் என்னும் மனத்திருப்தி எனக்கு உண்டானது.

தென்இந்தியச் சுற்றுப்பயணம் ஒன்றுக்கு 15.09.1963-ல் ஆசிரியக் கலாசாலையில் இருந்து நாங்கள் புறப்பட்டோம். இரண்டு வாரகாலம் தென்இந்தியாவின் பல பகுதிகளை ஓடியோடிப் பார்வையிட்டோம். கோயில்கள், சிற்பங்கள், சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்கள் என முடிந்தவரை பல இடங்களைச் சென்று தரிசித்தோம். அந்தச் சுற்றுப்பயணத்தில் தமிழ்நாட்டுக்கு வருகை தந்த நண்பர்கள் பலர் சினிமா நடிகர்கள், நடிகைகளைச் தேடிச் சென்று பார்ப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். சிலர் அந்த நடிகர்களுடன் சேர்ந்து புகைப்படங்களும் எடுத்துக் கொண்டார்கள். நான் யார் யாரைக் காண வேண்டுமென்று விரும்பினேனோ, அவர்களைச் சென்று பார்ப்பதற்குத் துணையாக எனது ஆசிரிய நண்பர்களுள் ஒருவர்தானும் இருக்கவில்லை. ஆயினும் தினத்தந்தி ஆசிரியர் ஆதித்தனாரை நேரில் கண்டு பேசினேன்.

நாவலர் நெடுஞ்செழியன் கூட்டம் ஒன்றில் பேசிக் கொண்டு நின்றதைத் தூர இருந்து பார்த்தேன்.

இந்தியச் சுற்றுலாப் பயணம் மனதுக்கு மகிழ்வு தந்ததெனினும், இன்றும் என் நெஞ்சை விட்டு அகலாது இரண்டு காட்சிகள் என்னைத் துன்பப்படுத்திக் கொண்டிருக்கின்றன. சென்னை நகரத்து வீதி ஓரத்தில் அரைகுறை ஆடையுடன் தேடுவார் அற்றுக் கிடந்த ஒரு பெண்ணின் சடலத்தைக் கண்டேன். ஹோட்டல்களுக்கு வெளியே வீசப்பட்டுக் கிடந்த எச்சில் இலைகளைக் குடைந்து குடைந்து கையில் எடுத்து பார்த்தேன். அந்தச் சுற்றுப் பயணத்தில் நான் கண்ட அந்தக் காட்சிகள் இரண்டும் இன்றும் என்நெஞ்சில் கிடந்து உறுத்திக் கொண்டிருக்கின்றன.

இந்தியச் சுற்றுப் பயணம் முடிந்து ஆசிரியக் கலாசாலைக்கு வந்து சேர்ந்து சில தினங்களின் பின் ஈழத்து இலக்கிய வரலாற்றில் அழியாத இடம்பெற்று விட்ட சாஹித்திய விழா யாழ். இந்துக் கல்லூரியில் 05.10.63-ல் நடைபெற்றது. எங்கள் கலாசாலையில் இருந்து அந்த விழாவைக் காண நான் ஒருவன் மாத்திரம் சென்றிருந்தேன். அப்பொழுது நான் எழுதுவதற்கு ஆரம்பிக்காத காலம். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் எனக்கு அக்காலத்தில் எந்தவிதத் தொடர்பும் இருக்கவில்லை. ஆனால் முற்போக்குக் கருத்துக்களை ஏற்றுக்கொண்ட ஒருவனாக இருந்தேன். அந்த விழாவில் நடந்தேறிய சம்பவங்களை எல்லாம் சாதாரணமாக ஒரு பார்வையாளனாக இருந்து நேரில் பார்த்தேன்.

அந்தச் சம்பவங்கள் பற்றி நாற்பதாண்டுகளுக்கு மேலாகப் பலரும் எடுத்துச் சொல்லி இருக்கின்றார்கள். அதனை மீண்டும் இங்கு விவரித்துச் சொல்ல வேண்டிய அவசியமொன்றும் எனக்கில்லையென நான் கருதுகின்றேன். முட்டை எறிந்து விழாவில் குழப்பம் விளைவித்தது தவறு எனக் குற்றஞ் சாட்டுகின்றவர்கள், அதற்கு முன்னர் நடந்த ஒழுங்கற்ற,நீதியற்ற காரியங்களை வசதியாக மறந்துபோய் விடுகின்றார்கள். முட்டை எறிந்தவர்கள் அவ்வாறு ஏன். நடந்து கொண்டார்கள்? அப்படி அவர்கள் நடக்கும்படி தூண்டி விட்ட சூழ்நிலைகள் எவை? முட்டை எறிந்து குழப்பம் விளைவிக்காது தங்கள் எதிர்ப்பினை அவர்கள் எவ்வாறு காட்டி இருக்கலாம்? எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத் தகுந்த முறையில் எதிர்ப்பினை எந்த விதமாக வெளிப்படுத்தலாம்?

இந்த வினாக்களுக்கெல்லாம் உண்மையான விடைகளைக் காணும் போதுதான் முற்போக்கு எழுத்தாளர் பக்கத்து நியாயங்களைப் புரிந்து கொள்ளலாம். அத்தோடு இன்னொன்றையும் இங்கு கவனத்தில் கொள்ளுதல் அவசியம் என நான் கருதுகின்றேன். முட்டை எறிந்து-அழுகிப் போன தக்காளிப்பழம் போன்றவற்றை எறிந்து எதிர்ப்புத் தெரிவிப்பது புதுமையான ஒரு காரியமல்ல. வளர்ச்சி அடைந்த

நாடுகளில் பெருந்தலைவர்களுக்கெல்லாம் இவ்வாறு தங்கள் எதிர்ப்பைக் காட்டி இருக்கின்றார்கள். முற்போக்கு எழுத்தாளர் சங்கம் புதுமையாகச் செய்த ஒரு காரியமல்ல அது. ஆனால் அதனை மிகத் தவறான, கேவலமான ஒரு செயலாக எடுத்துச் சொல்லிச் சொல்லி, தாங்கள் சொல்வதே மிகச் சரியென நிறுவுவதற்கு இன்றும் எத்தனித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அத்தகைய எத்தனத்துக்கு உறுதுணையாக முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்த சிலர் இன்று கருத்துக்களை வெளியிடுவது வேடிக்கையாக இருக்கின்றது. முட்டை எறிந்து கூட்டம் குழப்பப் பெற்ற காலத்தில் இந்த முற்போக்காளர்கள் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தி இருக்கலாம். இவர்கள் இன்று கூறும் கருத்துக்களை இன்னும் சில ஆண்டுகளின் பின்னர் மறுத்துச் சொல்ல மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? இது தொடர்பாகச் சொக்கன் அவர்கள் தமது இறுதிக்காலம் வரை கொண்டிருந்த கருத்தே ஏற்புடையதென நான் கருதுகின்றேன்.

முற்போக்கு எழுத்தாளனாக அக்காலத்தில் நான் இருக்கவில்லை. ஆனால் முற்போக்குக் கொள்கைகளை ஆதரிக்கின்ற ஒருவனாக இருந்ததினாலோ என்னவோ, எங்கள் கலாசாலைப் பண்டிதர் என்மீது மிகுந்த வெறுப்புடன் நடந்து கொண்டார்.

எங்கள் பண்டிதருக்கு 'யாப்புப் பண்டிதர்' என்று ஒரு பெயர் உண்டு. யாப்பிலக்கணத்தில் அவர் வல்லவர் எனச் சொல்லுவார்கள். நாங்கள் யாப்பிலக்கணம் கற்றுக்கொள்ள வேண்டுமென அவர் விரும்பினார். ஆசிரியர்களாக இருக்கின்றவர்கள் யாப்பிலக்கணம் கற்றிருக்க வேண்டும். யாப்பிலக்கணம் கற்றுக்கொண்டு விட்டால் கவிதைகள் எழுதலாம். கவிஞர்கள் ஆகிவிடலாம் எனக்கூறி, இரண்டு தினங்கள் எங்களுக்கு யாப்பிலக்கணம் கற்பித்தார். மூன்றாவது நாள் எங்கள் வகுப்புக்கு வந்து, எல்லோருக்கும் ஒரு கவிதை எழுதுங்கள் எனக் கட்டளை இட்டார். கவிதை என்பது யாப்பிலக்கணம் கற்று எழுதுவதல்ல என்பது எனது கருத்து. அது கடைச்சரக்கல்ல. ஆனால் விரிவுரையாளரான பண்டிதர் எழுதச் சொல்லுகின்றார் என்பதனால் மாணவர்கள் எல்லோரும் ஒவ்வொரு கவிதை எழுதினார்கள்.

பண்டிதர் முதலில் நான் எழுதிய கவிதையைக் கொண்டுவருமாறு பணித்தார். நான் எழுந்து சென்று கவிதை எழுதிய எனது கொப்பியை அவரிடம் கொடுத்து விட்டு அவர் மேசை அருகே தலைகுனிந்து நின்றேன். அடுத்தகணம் என்ன நடக்கப் போகின்றது என்பது எனக்கு ஓரளவு தெரியும். நான் எழுதிய அந்தக் கவிதையை வெட்டிச் சிதைத்து சத்திர சிகிச்சை செய்து முடித்துவிட்டு, ஏளனமாக என்னை நிமிர்ந்து பார்த்தார். "இதென்ன கவிதையா? உனக்கொரு இலக்கணமும்

தெரியாது. உனக்குக் கவிதை எழுத வராது" எனச் சொல்லி நையாண்டியாகச் சிரித்தார். நான் மௌனமாகத் தலைகுனிந்த வண்ணம் நிற்பது கண்டு கம்பராமாயணத்துக்குத் திடீரெனத் தாவினார். இராவணன் முதல்நாள் போரில் இராமனிடம் தோல்வி கண்டு எவ்வாறு தலைகுனிந்து நின்றான் என்பதைப் பாடலில் சொல்லி, அந்தக் காட்சியுடன் என்னை ஒப்பிட்டு இரசித்தார். நான் மனம் குன்றிப் போகாது, உள்ளே நகைத்த வண்ணம் அப்பொழுது நின்று கொண்டிருந்தேன் என்பது அவருக்கு எப்படித் தெரியும்?

அதன் பின்னர் மாணவத் தலைவன் சந்தியாப்பிள்ளையின் கவிதையை வாங்கிப் படித்துவிட்டு மிகவும் சிலாகித்துப் பாராட்டினார். சந்தியாப் பிள்ளையை மிகவும் உயர்த்திச் சொன்னார். எதிர்காலத்தில் சிறந்த கவிஞனாக வருவாய் என வாழ்த்துக் கூறினார்.

அந்த வகுப்பு முடிந்து நாங்கள் எல்லோரும் விடுதிக்குத் திரும்பிப் போனோம். அப்பொழுது நண்பர் சந்தியாப் பிள்ளை என்னிடம் வந்து, "மச்சான், என்னை மன்னித்துக் கொள். எப்படி அது நீ எழுதின கவிதை என்று வகுப்பிலே நான் சொல்லுகிறது? பண்டிதரின் பாராட்டு முழுவதும் உனக்குத்தான் உரியது. உன்னிலே அவருக்கொரு வெறுப்பு. அதுதான் உன்னை நக்கலடிக்கிறார்" எனச் சொன்னபோது, நான் அது கேட்டுச் சிரித்துக் கொண்டேன்.

ஆண்டுதோறும் நடைபெறுவது போல அந்த ஆண்டின் இறுதியில் கலாசாலைச் சஞ்சிகை ஒன்றினை வெளியிடுவதற்கான ஒழுங்குகள் வெளியிடுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தச் சஞ்சிகை ஆசிரியராக நான் இருப்பேன் என்னும் நம்பிக்கை எனக்கு மனதில் இருந்து வந்தது. எனக்கு மாத்திரமல்ல, அங்கு படித்துக் கொண்டிருந்த பலருக்கும் அந்த எண்ணம் இருந்தது. ஆசிரிய மாணவர்கள் அனைவரையும் ஒன்று கூட்டி கலாசாலைச் சஞ்சிகை ஆசிரியரைத் தெரிவுசெய்கின்ற சமயம், திருநெல்வேலிக்காரர்கள் எழுந்து தங்களில் ஒருவரைப் பிரேரித்து அனுமதித்தார்கள். அவருக்கு எதிராக இன்னொருவரைப் போட்டியாக நிறுத்தி, மாணவர்கள் மத்தியில் பிரிவினை உருவாக்கி, சஞ்சிகை வெளியீட்டில் குழப்பத்தைத் தோற்றுவிக்கக் கூடாது என்னும் கருத்து அங்கு நிலவியது. அதனால் அவர் ஏகமனதாகத் தெரிவு செய்யப் பெற்றார். அதன் பின்னர் தெரிவு செய்யப் பெற்ற மலர் வெளியீட்டுக் குழுவில் அங்கம் வகிப்பதற்கு முடிவாக நான் மறுத்து விட்டேன். அந்த மலரில் எழுதுவதையும் நான் முற்றாக நிராகரித்தேன். "கலாசாலை முடிந்து வெளியே சென்ற பின்னர் நான் எழுதிக் காட்டுகின்றேன்" என அப்பொழுது சபதம் எடுத்துக் கொண்டேன்.

கலாசாலை ஆண்டிறுதி எழுத்துப் பரீட்சைகள் தொடங்குவதற்கு முன்னர் செயல்முறைப் பரீட்சைகள் ஆரம்பமாயின. எழுத்துப்

பரீட்சைகள் எனக்குச் சிரமமானவையாகத் தோன்றவில்லை. செயல்முறைப் பரீட்சைகள் சில உண்மையில் எனக்குச் சிரமமானவை தான். நான் படிக்கும்போது அந்தப் பாடங்களில் அதிக அக்கறை கொள்ளாது இருந்து விட்டேன். ஆனால் பரீட்சையில் அந்தப் பாடங்களில் இருந்து நான் தப்பித்துக் கொள்ள இயலாது. அவற்றில் நான் சித்தி பெற்றேயாக வேண்டும். அந்தப் பாடங்களில் ஒன்று சங்கீதம். இசையில் என்னை மறந்து இலயித்துப் போகும் இயல்பு எனக்குண்டு. சுமாராகப் பாடுவேன். ஆனால் சங்கீதப் பாடத்தில் அதிகம் ஈடுபாடு காட்டாமல் இருந்து விட்டேன்.

சங்கீதம் செய்முறைப் பரீட்சராக ஒரு பெண் சங்கீத பூஷணம் கலாசாலைக்கு வந்திருந்தார். விரிவுரை மண்டபத்தில் மேடையில் விரித்திருந்த கம்பளத்தில் அவர் வந்து அமர்ந்தார். பரீட்சைக்குத் தேற்றும் ஆசிரிய மாணவர்களின் பெயர்ப் பட்டியல் அவர் கையில் இருந்தது. அந்தப் பட்டியலிலுள்ள வரிசைக் கிரமமாக ஒவ்வொரு மாணவனும் அழைக்கப் பெற்று பரீட்சிக்கப் பெற்றார்கள். எனது சந்தர்ப்பம் வந்தபோது நான் மெல்லச் சென்று அந்தப் பரீட்சகர் முன் அமர்ந்தேன். "சுர வரிசை மூன்று காலங்களிலும் பாட இயலுமா?" என அவர் முதலில் என்னிடம் கேட்டார். பாட முடியுமென நான் சொன்ன பதிலைக் கேட்டு, அவ்வாறு பாடுமாறு தெரிவித்தார். இரண்டு காலங்களில் பாடி முடித்துவிட்டு மேற்கொண்டு பாடாமல் நிறுத்தினேன். "ஏன் நிறுத்தி விட்டீர்? மூன்றாவது காலத்தில் பாடும்!" எனச் சொன்னார். மூன்றாவது காலத்தில் பாடத் தெரியாதென நான் அப்பொழுது பதிலளித்தேன். "மூன்று காலத்திலும் பாடமுடியுமென இப்பொழுதுதானே சொன்னீர்?" எனக் கேட்டு அதிசயமாக என்னை நோக்கினார். அப்பொழுது மிக நிதானமாக, "மூன்று காலங்களில் பாட எனக்குத் தெரியாது என்று முதலில் சொல்லி இருந்தால், இரண்டு காலங்களில் பாடும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருக்காது" என அமைதியாகச் சொன்னேன். எனது அந்தப் பதில் கேட்டு பரீட்சகர் முகம் திடீரென மலர்ந்தது. அன்பாக என் முகத்தை நோக்கினார். மெல்லச் சிரித்த வண்ணம், "நீர் மகா புத்திசாலியாக இருக்கிறீர்!" எனப் பாராட்டினார். "உம்முடைய புத்திசாலித்தனத்துக்கு நான் புள்ளி போடத்தான் வேண்டும்" என்றார். அதன் பிறகு ஒரு இசைப் பாடல், ஒரு தேவாரம் பாடும்படி சொன்னார். நான், "தாமரை பூத்த தடாகமெடி..." என்ற பாடலையும் ஒரு தேவாரத்தையும் பாடி முடித்துவிட்டு, எழுந்து வரும்போது சங்கீதப் பாடத்தில் சித்தியடைந்து விட்டேன் என்பது நிச்சயமாக எனக்குத் தெரியும்.

பாடசாலை மாணவனாக இருந்த காலத்திலேயே விளையாட்டுத் துறையில் நான் அதிக நாட்டம் காட்டவில்லை. சிறுவயது முதல் வாசிப்புப் பழக்கம் என்னைத் தொற்றிக் கொண்டு விட்டதே அதற்குக்

காரணம். ஆசிரியக் கலாசாலையில் உடற்பயிற்சிச் செயல் முறைப் பாடம் ஒன்று நடத்திக் காட்ட வேண்டும். அத்துடன் விளையாட்டுப் பயிற்சி ஒன்றும் மாணவர்களுக்கு அளிக்க வேண்டும்.

அந்த வார இறுதியில் வீட்டுக்கு வந்து உதைப்பந்தாட்ட நுணுக்கங்களை ஹாட்லிக் கல்லூரி உதைப்பந்தாட்ட அணித் தலைவனாக விளங்கிய எனது தம்பியிடம் கேட்டு அறிந்து கொண்டேன். உடற்பயிற்சி செயல்முறைப் பாடம் பரீட்சிப்பதற்கு, அதற்குப் பொறுப்பான கல்வி அதிகாரி கலாசாலைக்கு வந்திருந்தார். அவர் மிகவும் கடுமையாக நடந்து கொள்வார் என்னும் செய்தி, கலாசாலைக்கு அவர் வருவதற்கு முன்னரே பரவி இருந்தது. அன்று காலையில் மழை மெல்லத் தூற ஆரம்பித்தது. அதனால் விளையாட்டு மைதானத்தில் வைத்து அந்தச் செயல்முறைப் பாடம் பரீட்சிக்க இயலாது போனது. நீண்ட விரிவுரை மண்டபம் ஒன்றினுள் பரீட்சை ஆரம்பமானது. கல்வி அதிகாரி ஒரு கதிரையில் அமர்ந்திருந்தார். கலாசாலை வளாகத்துக்குள் இருக்கும் சாதனா பாடசாலை மாணவர்களைக் குழுக்களாக அழைத்து வந்து உடற்பயிற்சி வகுப்பினை நடத்திக் காட்ட வேண்டும்.

நான் வகுப்பு நடத்திக் காட்ட வேண்டிய சந்தர்ப்பம் வந்தது, கையில்லாத பெனியன், அரைக்காற் சட்டையுமாக மாணவர் முன் நின்று, மாணவர்களை இரண்டு வரிசைகளில் நிறுத்தி, அவர்களுக்குப் பயிற்சிகளைச் செய்து காட்டி, பின்னர் கட்டளைக்கு இணங்க பயிற்சிகளைச் செய்வித்து, நிறைவு செய்து கொண்டு விளையாட்டுக் கற்பிக்க ஆரம்பித்தேன். மாணவர்கள் முன்னே பந்தொன்றினை வைத்து, உதைப்பந்தாட்ட நுட்பங்களை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லி விளக்கினேன். எனது பேச்சாற்றல் எனக்குப் பெருந்துணையாக இருந்தது. பந்தை எவ்வாறு அடிக்க வேண்டுமென மாணவர்களுக்கு நான் அதை அடித்துக் காட்ட வேண்டும். அதுதான் கற்பித்தல் முறை. ஆனால் நான் அதைச் செய்யப் புகுந்தால், எனக்கு உதைப்பந்தாட்டம் தெரியாது என்பதை பரீட்சகர் நிச்சயம் கண்டு கொள்வார். விளையாட்டு என்பது வாய்ப் பேச்சல்ல. அது செயல்முறையானது. நான் அதுவரை கொடுத்த விளக்கங்கள் யாவும் பயனற்றவையாகப் போய் விடும். பரீட்சகர் பந்தை அடித்துக் காட்டுமாறு சொல்லி விடுவாரோ என்னும் அச்சம் எனக்கு மனதில் இருந்து கொண்டிருந்தது. ஆயினும் விளக்கங்கள் யாவையும் சொல்லி முடித்துவிட்டு பரீட்சகரைப் பார்த்து, "பந்தை அடிக்கவா ஸேர்!" எனத் தந்திரமாகக் கேட்டேன். "இந்த விளக்கத்துக்குப் பிறகு ஏன் அடிக்க வேணும்? வேண்டாம்" என அவர் சொன்ன பதிலின் பின்னர் தான், எனக்கு மனதில் அமைதி பிறந்தது. பிறகென்ன! அந்தப் பாடத்தில் நான் சித்தியடைந்தேன் என்று சொல்லவா வேண்டும்?

இந்தப் பாடங்களுடன் மிக முக்கியமான கற்பித்தல் செயல்முறையைப் பாடம் ஒன்று கலாசாலையில் இருந்து வந்தது. ஆசிரிய மாணவர்கள் தாங்கள் விரும்பும் ஒரு பாடத்தைத் தேர்ந்தெடுத்து கற்பித்தல் பயிற்சி வகுப்பை நடத்திக் காட்டலாம். ஆசிரிய மாணவர்கள் ஒவ்வொருவரும் தமது பயிற்சிக் காலத்தில் சக மாணவர்கள், விரிவுரையாளர்கள் முன்னிலையில் குறைந்தது இரண்டு தடவைகளாவது அத்தகைய வகுப்புக்களை நடத்திக் காட்ட வேண்டும். அந்த வகுப்புக்குக் 'கண்டன பாடம்' எனவும் ஒரு பெயர் உண்டு. கற்பித்தலிலுள்ள குறைபாடுகளை அவதானித்திருந்து தமது கண்டனத்தைப் பலரும் தெரிவிப்பதற்கும் அவர்கள் தவறுதில்லை.

நான் அந்த வகுப்புகள் நடத்திய சமயம் இலக்கியப் பாடத்தையே தேர்ந்தெடுத்தேன். ஏனைய பாடங்களைக் கற்பிப்பதற்கு இயலுமாக இருந்த போதிலும் இலக்கியத்தின் மேல் எனக்கிருந்த நாட்டம் காரணமாக, அந்தப் பாடத்தைத் தெரிவுசெய்து கற்பித்து வந்தேன். கம்பராமாயணம் அல்லது நளவெண்பா பாடல்களுள் ஒன்றினைத் தேர்ந்தெடுத்து எனது வகுப்பினை நடத்திக் காண்பித்து விரிவுரையாளர்களின் பாராட்டைப் பெற்று வந்திருக்கின்றேன்.

எனது ஆண்டிறுதிப் பரீட்சைக் கற்பித்தலுக்குக் கம்பராமாயணப் பாடல் ஒன்றினைத் தெரிவு செய்தேன். அந்த வகுப்பினைக் கலாசாலை விரிவுரையாளர்கள் மாத்திரம் பார்வையிட்டுப் புள்ளி போடுவார்கள் என்பது எனக்குத் தெரியும். சாதனா பாடசாலையில் எட்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த மாணவர்களை அழைத்து வந்து, பரீட்சைக்குரிய எனது வகுப்பினை நடத்தினேன். அந்த வகுப்பைக் கலாசாலைப் பண்டிதரும், இன்னொரு விரிவுரையாளர் செல்வநாதரும் பார்வையிட்டுப் புள்ளி போட்டார்கள்.

செல்வநாதர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர். இளவாலையில் திருமணஞ் செய்து வாழ்ந்து கொண்டிருந்தார். அவருக்கு என்மீது அக்கறை இருந்தது. சில சமயங்களில் புத்தகங்கள், சஞ்சிகைகள் என்னிடத்தில் வாங்கி வாசிப்பார். இரசிகமணி கனக செந்திநாதன் தனது மகளின் நினைவாகத் தொகுத்து வெளியிட்டிருக்கும் 'ஈழத்துக் கவிமலர்கள்' என்னும் தொகுதியை என்னிடம் பெற்றுச் சென்று பல நாட்கள் வைத்திருந்து படித்தார் என்பது இப்பொழுதும் என் நினைவில் இருக்கிறது. அந்த நூலில் தனது கைப்பட அவர் எனது பெயரை எழுதித் தந்துள்ளமையை நெஞ்சில் வைத்து இன்றும் அத்தொகுதியைப் பேணிப்பாதுக்காத்து வருகின்றேன்.

செய்யுள் இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர்கள் 'நயங் கூறுதல்' அல்லது 'நயங் காணல்' என்பது அக்காலத்தில் மிக முக்கியமான ஓர் அம்சம். இன்று செய்யுள் இலக்கியம் பற்றி மேடைகளில் பேசும்

இலக்கியப் பிரசங்கிகள் நயங் காணுகிறார்கள் என்பது இன்றைய இளைய தலைமுறையினருக்குத் தெரிய வராது. அக்காலத்தில் இருந்த ஆசிரியர்கள் அதனை நன்கு அறிந்திருந்தார்கள். பாடலைப் பாடிய புலவன் நினைத்துப் பார்க்காத - கற்பனை பண்ணாதவற்றை எல்லாம் மாணவர்களுக்கு வகுப்பில் இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர் தனது ஆற்றலின் வெளிப்பாடாக அந்தக் காலத்தில் எடுத்துச் சொன்னார். நானும் அதனைச் செய்ய வேண்டிய பரீட்சைத் தேவை எனக்கு இருந்தது.

நாடு துறந்து வனவாசம் வந்து விட்ட இராமனும் சீதையும் இரவு வனத்தில் படுத்துத் தூங்குகின்றார்கள். இளையவன் இலக்குமணன் வில்லைக் கையில் ஏந்திய வண்ணம் கண் துஞ்சாது அவர்கள் இருவருக்கும் காவலாக நிற்கும் காட்சியைச் சித்திரிக்கும் பாடலையே நான் வகுப்பில் கற்பித்தேன். அந்தப் பாடலில், "அல்லையாண்டமைந்த மேனி அழகனு மவளுந் துஞ்ச" என வரும் பகுதிக்கும் நயங் கூறுமிடத்து, "இராமனின் அழகை எடுத்துச் சொன்ன கம்பன், சீதை பற்றிக் குறிப்பிடும் போது சீதையின் அழகு பற்றிப் பேசாது, 'அவள்' என்று மாத்திரம் சொல்லுகின்றான். இலக்குமணன் விழித்திருந்து காவல் காத்துக் கொண்டு நிற்கும் வேளையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கும் சீதையின் தோற்றத்தினை எடுத்துச் சொல்லக் கூடாது என்னும் பண்பாட்டினால் 'அவள்' என்று மாத்திரம் குறிப்பிட்டான்" என நான் சொன்னேன்.

"வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியில்" என வரும் கம்பராமாயணப் பாடலில் இராமன் அழகு பற்றிச் சொல்ல வந்த கம்பன் "ஐயோ" எனவும் இறுதியில் குரல் எழுப்புகின்றான். அந்த "ஐயோ" இராமன் அழகை முழுமையாக எடுத்துச் சொல்ல இயலாத ஏக்கத்தினால் பிறந்ததெனப் பலரும் நயங் கூறக் கேட்டிருக்கின்றேன். அதனை மனதில் வைத்து 'அவள்' என்பதற்குப் புதிய நயம் ஒன்றினை நான் கூறினேன்.

வகுப்பு முடிந்து மாணவர்கள் அங்கிருந்து சென்ற பின்னர், பண்டிதர் அருகே வருமாறு என்னை அழைத்தார். நான் அவர் முன்போய் அமைதியாக நின்றேன். "சீதை என்ன பெற்றிக் கோட்டோடையோ படுத்திருந்தவள்?" என நக்கலாகக் கேட்டார். சீதையின் அழகைச் சொற்களினால் எடுத்துச் சொல்ல இயலாது என்பதனால் 'அவள்' என கம்பன் குறிப்பிட்டான் என்ற பழைய கருத்தினைக் கூறினார். பண்டிதரை விளங்கி வைத்திருந்த செல்வநாதர், "அவர் சொன்னதும் சரிதானே!" எனப் பண்டிதரைப் பார்த்துச் சொல்லி விட்டு, என்னை நோக்கி "நீர் போம்" எனக் கூறி மேலும் பண்டிதர் பேசாத வண்ணம் என்னை அங்கிருந்து அனுப்பி வைத்தார்.

எனக்கு அப்பொழுது திடமாக ஒன்று தெரியும். இந்தப் பண்டிதரால் எனது சித்திகளைத் தடுத்து நிறுத்திவிட இயலாது என்பதுதான், அது.

ஆசிரியக் கலாசாலையில் புதிய பல அனுபவங்களைப் பெற்று, கலாசாலைக் கல்வியை நிறைவுசெய்து கொண்டு மார்கழி விடுமுறையில் எனது வீட்டில் வந்து தங்கி இருந்தேன். அப்பொழுது சாதிக் கொடுமை கொழுந்து விட்டு எரிந்த சம்பவம் ஒன்று நீர்வேலியில் நடைபெற்றது. ஒடுக்கப்பட்ட மக்களின் வீடுகள் சாதி வெறியர்களால் தீ வைத்துக் கொளுத்தி எரிக்கப்பட்டன. அந்தச் சம்பவம் அறிந்து, சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவரைத் தேடித் சென்றேன். மகாசபையின் பணிப்பின் பேரில் நீர்வேலியில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக எங்கள் கிராமத்தில் 2012/1963 -ல் வீடு வீடாகச் சென்று உண்டியல் குலுக்கி நிதி சேகரித்தேன். மறுநாள் அந்த நிதியை எடுத்துக் கொண்டு நீர்வேலி சென்றேன். தீ மூட்டி எரிக்கப்பட்ட வீடுகளை மகாசபையைச் சேர்ந்தவர்கள் மீளக் கட்டிக் கொடுத்த சிரமதானப் பணியில் நானும் ஒருவனாகப் பங்கு கொண்டேன்.



10

இரண்டாண்டு கால ஆசிரியக் கலாசாலை வாழ்வு முடிந்து, பண்டாரவளை அட்டம்பிட்டிய மகா வித்தியாலயத்திற்கு ஆசிரியராக மாற்றம் பெற்று. 05.01.1964 அட்டம்பிட்டிய வந்து சேர்ந்தேன். அட்டம்பிட்டிய, பண்டாரவளை நகரில் இருந்து சுமார் பதினைந்து கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் சிறிய ஒரு பட்டினம். அந்தப் பட்டினத்திற்கும் பண்டாரவளை நகருக்கும் இடையே அடிக்கடி பஸ் வண்டிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. பசுமையான தேயிலைத் தோட்டங்கள் நான்கு திக்குகளிலும் சூழ்ந்திருக்கும் அழகிய சிறிய பட்டினம் அது. அந்தப் பட்டினத்துச் சேலைக் கடை 'சரோஜா ஸ்ரோஸ்' மாடியில் நான் தங்கியிருப்பதற்கு முதலில் இடம் கிடைத்தது. கொழும்புத்துறை ஆசிரியக் கலாசாலையில் என்னோடு படித்த மூத்த ஆசிரியர் வீ.கே.செல்லையா அங்கு வந்து சேலைக் கடை மாடியில் உடன் தங்கினார்.

அட்டம்பிட்டிய போய்ச் சேர்ந்த மறுநாள் (06.01.1964) மதிய உணவை முடித்துக் கொண்டு இருவரும் மகா வித்தியாலயம் சென்றோம். அந்த மகா வித்தியாலயத்தில் காலை நேரம் சிங்களப் பிள்ளைகளுக்கும், நடுப்பகலின் பின்னர் தமிழ்ப் பிள்ளைகளுக்கும் ஒரே கட்டடத்தில் மாறி மாறி வகுப்புகள் நடைபெற்றன. பகல் வேளை கடுமையான வெயில் எறிக்கும். இரவு வந்துவிட்டால் கொடுமையான குளிர் வருத்தும். எந்த நேரத்தில் மழை பொழியுமென்று சொல்ல இயலாது. திடீரென மழை கொட்டும். அடுத்த கணம் வெயில் வந்து காயும்!

அந்த வித்தியாலயம், அந்தப் பிரதேசத்தின் சீதோஷ்ணம் எல்லாமே எனக்குப் புதிதாக, புதுமையாக இருந்தன. அந்தப் பிரதேசத்தின் சூழலுடன் நான் இயைந்து போவதற்கு, எனக்குச் சில காலம் தேவைப்பட்டது.

எனக்கு ஒரு வருடம் முன்னதாக ஆசிரியப் பயிற்சியை முடித்துக் கொண்டு கலாசாலையில் இருந்து வெளியேறிய திருகோணமலையைச் சேர்ந்த நண்பர் தா.பி. சுப்பிரமணியம் பண்டாரவளை நகரிலுள்ள மகா வித்தியாலயம் ஒன்றில் அப்பொழுது ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவர் அக்காலத்திலேயே பத்திரிகைகளில் எழுத ஆரம்பித்து விட்ட ஓர் எழுத்தாளர். நான் ஆசிரியக் கலாசாலையில் இருக்கும் பொழுது இடையிடையே எனக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தார். அந்தத் தொடர்பு அறுந்து போகாத நிலையில் நான் அட்டம்பிட்டிய வந்து சேர்ந்த பின்னரும் அவர் கடிதங்கள் எழுதினார். அவரது கடிதம் எப்பொழுதும் ஓர் அஞ்சலட்டையாகத்தான் இருக்கும். அஞ்சலட்டையில் பச்சை அல்லது ஊதா வண்ண மையினால் மணி மணியான எழுத்துகளில் அழகாக எழுதுவார். அவர் கையெழுத்தில் வரும் அஞ்சலட்டைகளை கையில் எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொள்ள வேண்டும் போல இருக்கும். அப்படியொரு நேர்த்தி; புனிதம்; அழகு. அவர் எழுதும் அஞ்சல்கள், வழமையாக எனது இலக்கிய ஆர்வத்தைத் தூண்டி விடுகின்றவையாக இருந்து வந்தன.

நான் அங்கு வந்து சேர்ந்த ஆறு மாத காலத்தின் பின்னர் அவர் எழுதிய ஓர் அஞ்சலில், ஓய்வு நேரத்தை வீணாக்காது, அதனைப் பயன்படுத்தி இலக்கியம் படைக்குமாறு என்னைக் கேட்டிருந்தார்.

நான் உள்ளே கனன்று கொண்டிருந்தவன்.

"நாவிதனுக்குச் சாஹித்தியப் பரிசு கிடைத்திருக்கிறது" எனச் சாதி சொல்லி இழிவுபடுத்தக் கேட்டிருந்தேன்.

கலாசாலை சஞ்சிகை ஆசிரியராக வருவதில் இருந்து தடுக்கப்பெற்று உதாசீனப்படுத்தப்பட்டேன். கலாசாலையை விட்டு வெளியேறிய பின்னர் பேனாவைக் கையில் தூக்குகின்றேன் எனச் சபதமெடுத்திருந்தேன்.

நெஞ்சில் பட்ட மனக்காயங்களினால் உள்ளே கனன்று கொண்டிருந்த எனது உணர்வுகளை நண்பர் சுப்பிரமணியம் ஊதிப் பெருப்பித்தார். அவர் தந்த தூண்டுதலின் பிறகு, "இனி, நானும் எழுதுவேன்" எனத் தீர்மானித்துக் கொண்டேன்.

நான் தங்கிருந்த சேலைக்கடை மாடியில் அமர்ந்திருந்து எழுதுவதற்கு வசதியாக மேசை, கதிரைகள் இருக்கவில்லை. படுத்து எழும்புவதற்கு, எனக்கும் என்னுடன் தங்கியிருந்த ஆசிரியருக்கும் ஒவ்வொரு கட்டில் மாத்திரம் இருந்தது. இந்தச் சூழ்நிலையில் நான்

படுத்துறங்கும் கட்டிலில் அமர்ந்திருந்து, எனது மடியின் மீது தலையணையை வைத்து, அதன் மேல் ஒரு பயில் வைத்து, அதில் காகிதத்தை வைத்து எனது முதற் சிறுகதையை எழுதி முடித்தேன். அதனை 15.07.1964 ஆம் திகதி தபாலில் இட்டு யாழ்ப்பாணத்தில் இருந்து அப்பொழுது வெளிவந்து கொண்டிருந்த 'விவேகி' சஞ்சிகைக்கு அனுப்பி வைத்தேன்.

நான் பண்டாரவளை சென்று சிறிது காலத்தின் பின்னர் எனது தந்தையாரின் இடதுகால், கை இரண்டும் பாரிசவாத நோயினால் பாதிக்கப்பட்டு அவர் நிரந்தர நோயாளி ஆனார்.

பாடசாலை இரண்டாந் தவணை விடுமுறைக்காக மூடப்பட்டது. நான் 13.08.1964 காலையில் பண்டாரவளை அட்டம்பிட்டியவில் இருந்து வீடு வந்து சேர்ந்தேன். நான் வந்திறங்கும் கொடிகாமம் புகையிரத நிலையத்துக்கு, சற்றுக் காலதாமதமாகவே அன்று புகையிரதம் வந்து சேர்ந்தது. அதனால் நான் வீடு வந்து சேருவதற்கும் தாமதமானேன்.

நான் வீடு வந்து சேர்ந்து சிறிது நேரத்தின் பின்னர், எங்கள் வீட்டுப் படலையில் தபாற்காரனின் சயிக்கிள் மணியோசை கேட்டு நான் வெளியே போனேன். தபாற்காரன் எனது கையில் அந்த மாத 'விவேகி' யைத் தந்து விட்டுச் சென்றான். அந்தச் சஞ்சிகையைச் சுற்றி முகவரி எழுதப் பெற்ற காகிதத்தைக் கிழித்து, சஞ்சிகையைத் திறந்து புரட்டிப் பார்த்தேன். அப்பொழுது எனது கண்களையே எனக்கு நம்ப முடியவில்லை. நான் சிறுகதை அனுப்பி முழுமையாக ஒரு மாத காலங்கூட இன்னும் ஆகவில்லை. அந்த நிலையில் எனது முதற் சிறுகதை 'பிணைப்பு' விவேகியில் பிரசுரமாகி இருந்தது.

அப்பொழுது எனக்குண்டான மகிழ்ச்சியைச் சொற்களினால் வெளியில் எடுத்துச் சொல்லிட இயலாது. அப்படி ஓர் ஆனந்தம்; இல்லை பேரானந்தம்! எத்தனை தடவைகள் அந்தச் சிறுகதையை நான் படித்தேனோ எனக்குத் தெரியாது. பொதுவாக நூல்களைத் திரும்பத் திரும்ப படிக்கும் வழக்கம் இல்லாதவன் நான். அப்படிப் படித்துக் கொண்டிருப்பது எனக்குச் சலிப்பாக இருக்கும். ஆனால் எனது முதற் படைப்பில் அப்படி என்னதான் இருந்ததோ! சலிக்காமல் படித்தேன்; படித்தேன்; மீண்டும் மீண்டும் படித்தேன்.

எனது முதற் சிறுகதையைத் 'தெணியான்' என்னும் பெயரிலேயே எழுதி அந்தப் பெயரை எழுத்தில் பதிவு செய்தேன். இன்று தமிழ் இலக்கிய உலகில் 'தெணியான்' என்பது நான்தான். ஆனால் உண்மையில் எனது குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் தெணியார்தான். இந்தத் தெணியார்களின் முதல்வனாக ஒரு தெணியான் இருந்தார். அவர் பரம்பரையில் வந்த அவருடைய வாரிசுகள்தான் நாங்கள். அந்தத்

தெணியான் பிறந்து, வளர்ந்து வந்த குடும்பப் பின்னணியை முழுமையாக விளங்கிக்கொள்ள இயலாது!

எனது வீட்டுக்கு வடக்குத் திசையில் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கின்றது பாக்கு நீரிணை. அந்தக் கடற்கரை ஓரமாக பருத்தித்துறையில் இருந்து காங்கேசன்துறை வரை பிரதான வீதி ஒன்று நீண்டு செல்லுகிறது. பொலிகண்டி கந்தவனக் கோயில் சந்திக்குக் கிழக்கே, இப்பொழுது கடற்கரையோரத்தில் மீன் வியாபாரம் நடைபெறும் சந்தைக்கு நேர் எதிரில், பிரதான வீதிக்குத் தெற்குப் புறத்தில் சிதைந்து போன நிலையில் இன்றும் ஒரு மடம் இருக்கிறது. அந்தப் பகுதியில் வாழும் முதியவர்களால் இப்பொழுதும் 'பள்ளன் மடம்' என அது அழைக்கப்பட்டு வருகின்றது.

அந்த இடத்தில் முதன் முதலாக மடத்தைத் தாபித்தவன் பள்ளன் மடந்தையன். மடத்துக்குப் பின்னேயுள்ள நிலத்தில் மடந்தையன் குடும்பத்துடன் வாழ்ந்து வந்த வீடு இருந்தது. மடந்தையன் பிரதான வீதி அருகே வீடு, மடம் கட்டி வாழ்ந்த பதின்நான்கு பரப்பு நிலமும் அவருக்குச் சொந்தமாக இருந்தது. அந்த நிலம் 1819 ஆம் ஆண்டு ஆடி மாதம் 15 ஆம் திகதி மொத்தப்பரிசுசிதம்பரநாதர் கதிர்காமத்தம்பியினால் உறுதி முடித்து மடந்தையனுக்குச் சொந்தமாக வழங்கப்பட்டது. அங்கிருக்கும் மடம் பள்ளன் மடந்தையனால்தான் நிறுவப் பெற்றது என்பதனை அக்காலத்தில் வழங்கிய பின்வரும் கப்பற் பாடல் தெளிவுபடுத்துகின்றது.

"பருத்ததொரு சக்கோட்டை
திக்கமும் காண்க
பள்ளன் மடத்தடியும்
சோலைவனம் தோன்ற
ஒருத்தசிவ வாலயமாம்
கந்தவனக் கடவையும்
பிள்ளையா கோவிலும்
வன்னிமரமும் தெரிகுது
ஒருத்தனை இருத்திய
ஊரணிக் கரையில் ஓடியே வருகுது
போடடா நங்கூரம்
ஏலேயேலோ..."

மடந்தையன் வாழ்ந்த அந்த நிலத்தின் பெயர் நீத்துவான் தெணி. துரும்பதுறை என்ற ஒரு பெயரும் அதற்கு வழங்கி வந்திருக்கின்றது.

இரண்டு நூற்றாண்டு காலத்துக்கு முன்னர் பொலிகண்டி கடற்கரையில் பிரதான வீதி அருகே தனது சொந்த நிலத்தில் மடம்

அமைத்து, வீடு கட்டி வாழ்ந்த மடந்தையன், பின்னர் அவருக்கு உண்டான சமூக நிர்ப்பந்தம் காரணமாக, தனது வீடு நிலம் என்பவற்றைக் கைவிட்டு விட்டுக் குடிபெயர்ந்து, கிராமத்துக்குள்ளே வந்து புதிதாகக் குடியேறி வாழ்ந்த இடந்தான் நாங்கள் பிறந்த வீடு. நீத்துவான் தெணியில் இருந்து வந்து குடியேறியதனால், அவர் வாழ்ந்த இடம் தெணி எனவும், அவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் - பரம்பரை பரம்பரையாக - இன்றுவரை தெணியார் எனவும் அழைக்கப்பட்டு வருகின்றார்கள். அந்தத் தெணியாரில் ஒருவன்தான் நான். தெணியான் என்பது எனது குடும்பப் பெயர். இலக்கிய உலகில் அது எனது புனைபெயர்.

இரண்டு நூற்றாண்டு காலத்துக்கு முன்னர் இந்த மண்ணில் இழைக்கப்பட்ட சமூகக் கொடுமையின் - சாதிக் கொடுமையின் - அடையாளந்தான் தெணியான் என்னும் எனது புனைபெயர். ஒடுக்கப்பட்ட சமூகத்தின் இருநூறு ஆண்டுகால வரலாற்றின் ஒரு பகுதி எனது புனைபெயரின் பின்னே மறைந்து கிடக்கின்றது.

அந்த வரலாற்றுத் தலைமகன் தான் புதிதாக வந்து குடியேறிய இடத்தில் - எங்கள் வீட்டுக்கு முன்னே, ஈசானத்தில் கிணறொன்று தோண்டினார். எங்களுக்குச் சொந்தமான அந்தக் கிணறுதான் நான் அறிந்த காலம் வரை எங்கள் கிராமத்துப் பெரும்பகுதி மக்கள் பயன்படுத்தும் பொதுக் கிணறாக இருந்து வந்தது. அந்தக் கிணற்றை 'தெணியிற் கிணறு' என்றும், 'ஆழக்கிணறு' எனவும் பெயர் சொல்லி அழைத்தார்கள். கிணறு தோண்டியதுடன் மாத்திரம் அமையாது எங்கள் வீட்டுக்குத் தெற்கே செட்டித்துறை என்னும் இடத்தில் அண்ணமாள் வழிகாட்டுத்தலம் ஒன்றினை அவர் நிறுவினார். இன்று அந்த ஆலயம் செட்டிதுறை சித்திவிநாயகர் ஆலயமாக மாற்றமுற்று வளர்ந்து விளங்குகின்றது.

எங்கள் குடும்பத்து மூத்த தலைவன் மடந்தையனுக்கு மூன்று பெண்களும், ஓர் ஆணுமாக நான்கு பிள்ளைகள் இருந்திருக்கின்றார்கள். அவருடைய கடைசி மகளின் இளையபுத்திரன்தான் எனது தந்தை வழிப்பாட்டன். எனது பாட்டனாருக்கு மூத்தவரான அவர் தமையன் அந்தக் காலத்தில் பிரசித்தி பெற்ற ஒரு வைத்தியராக இருந்தார். அவரது மூத்தமகன் சபாபதிப்பிள்ளை தந்தையைப் போலவே சிறந்த ஒரு வைத்தியராக வாழ்ந்ததுடன், கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் பாடசாலையை 1916-ல் நிறுவினார். அவரது பிள்ளைகள் வைத்தியர்களாக, ஆசிரியர்களாக விளங்கினார்கள். அதிபர், கவிஞர், பொலிகை.ச.திருப்தி அவர்களுள் ஒருவர்.

வைத்தியம், சங்கீதம், கூத்து சார்ந்த தொடர்பு அறிவாற்றல் உள்ளவர்கள் எனது குடும்பத்தவர்கள். அவர்களிடத்தில் இருந்து வந்த ஆற்றல்களின் வெளிப்பாட்டினைப் பின்னர் நோக்கலாம்.

எனது தந்தையார் பெயர் நா. கந்தையா. தாயார் க. சின்னம்மா. தந்தையார் பொலிகண்டியில் எங்கள் இல்லத்தில் பிறந்தார். தாயாரின் பிறந்த ஊர் அல்வாய் வடக்கு வயல். தந்தையார் குடும்பத்தில் இளையப்பிள்ளை. அவருக்கு மூத்தவர்களாக ஒரு தமக்கை, இரண்டு தமையன்மார் இருந்தார்கள். அவருக்கு நேரே மூத்த தமையனார் இளம்பருவத்தில் காலமாகிவிட்டார்.

எனது பெற்றோர்கள் எனக்குச் சூட்டிய பெயர் நடேசு. நான் பொலிகண்டியில் 06081942-ல் பிறந்தேன். எனக்கு உடன் பிறந்தவர்களாகத் தமையனார் ஒருவர். தம்பி ஒருவன். அவன்தான் எழுத்தாளர் க. நவம். அவனுக்குக் கீழே மூன்று சகோதரிகள்.

எனது தகப்பனார் அந்தக் காலத்தில் ஏழாவது வகுப்பு வரை படித்திருக்கின்றார். பனையோலையில் எழுத்தாணி கொண்டு எழுதியே தனது ஆரம்பகாலக் கல்வியைக் கற்றார். இன்னுமொரு ஆண்டு கல்வி கற்று, தான் கிறிஸ்தவனாக மதம் மாறி இருந்தால் ஆசிரியராகி இருக்கலாம் என்று அவர் கூறுவார். தனக்கு நேர் மூத்த தமையனாரின் இளவயது மரணத்துடன் தனது கல்வி தடைப்பட்டுப் போனதாகச் சொல்லிக் கவலைப்படுவார்.

எனது தகப்பனார் மற்றையவர்களுடன் உரையாடும்போது முகபாவத்துடன் தலையசைத்து கையசைத்து நல்ல தமிழில் பேசுவது அவர் இயல்பு. பேச்சு வழக்கிலும் 'கிணற்றடி', இலட்சணம்' என்றுதான் சொல்லுவார். நல்ல இரசனை உள்ளவர். உள்ளத்தில் கருணை உள்ளவர். பிறருக்கு உதவி செய்வதில் முன்னிற்கும் சுபாவம் அவரிடத்தில் இருந்து வந்தது. குடும்பப் பொறுப்புடன் எப்பொழுதும் அடக்கமாக நடந்து கொள்ளுவார். பிள்ளைகளாகிய எங்களுக்காக உழைத்துச் சந்தனக் கட்டை போலத் தன்னைத் தேய்த்துக் கொண்டவர்.

எனது பெரிய தகப்பனார் எனது தகப்பனார் போன்ற ஒருவரல்லர். மிக வித்தியாசமான ஒரு மனிதர் அவர். நான் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் வில்லிபுத்தூராரின் 'கிருஷ்ணன் தூது' எனக்குப் பாட நூலாக இருந்தது. அந்த நூல் செய்யுள்களை மனனஞ் செய்ய எண்ணிச் சற்றுப் பலமாக வாய்விட்டுப் படிப்பதற்கு ஆரம்பித்தால், எனது பெரிய தகப்பனார் உடனே அந்தச் செய்யுளை முழுமையாகச் சொல்லி முடிப்பார். 'கிருஷ்ணன் தூது' பாடல்கள் முழுவதும் அவருக்கு மனப்பாடமாக இருந்தன. நிகண்டு, விவேகசிந்தாமணி, தோத்திரங்கள், நாடி சாத்திரம் முதலியனவும், வைத்தியப் பாடல்கள், சித்தர் பாடல்கள் என எல்லாமே அவருக்கு மனப்பாடமாக இருந்தன. ஒரு நோயாளியின் குணங் குறிகளை அவதானித்து நிலைமையைத் தீர்க்கமாக நிர்ணயம் செய்வதில் அதிசயப்படத் தகுந்த நிபுணத்துவம் அவரிடத்தில் காணப்பட்டது.

அவர் சற்று வசதியாகவும் வாழ்ந்தார். அதனால் வட்டிக்குப் பணம் கொடுத்து கொஞ்சமும் ஈவிரக்கமின்றி வட்டி அறவிடுவார். அவரிடம் இருந்த மிக முக்கியமான குணம் யாருக்கும் தலைபணிந்து நடக்காத இயல்பு. உயர் சாதிக்காரன் என்று இருக்கின்றவனையும் எந்தவிதத் தயக்கமில்லாது பெயர் சொல்லிக் கூப்பிடுவார். எங்கள் கிராம மக்கள் மத்தியில் முதன் முதலாக, தனது திருமணத்தின் போது மனைவி கழுத்தில் தங்கத் தாலி கட்டியவர் அவர்தான். பல வேடங்கள் தாங்கி நாட்டுக் கூத்துகள் பல அக்காலத்தில் ஆடினார். கூத்தாட்டு அரங்கிற்கு வெள்ளை கட்டக்கூடாதென தடுக்கப்பட்ட சமூக ஒடுக்குமுறையை எதிர்த்து வெள்ளை கட்டி, அதனால் சண்டையிட்டு வழக்காடியவர்களுள் அவரும் முக்கியமான ஒருவர். பழைய பாடல்களை இசையோடு அவர் பாடும் சமயங்களில் மெய்மறந்து இலயித்துக் கேட்டுக் கொண்டிருக்கலாம். பிள்ளைகள் இல்லாத அவர் தம்பியின் பிள்ளைகளாகிய எங்களை வாஞ்சையுடன் பார்த்து வளர்த்தார். அவர் தனக்குச் சொந்தமான காணிபூமி, சொத்து யாவற்றையும் எங்களுக்கே தந்து போனார். 1960-ல் அவர் காலமானதுடன் எங்கள் குடும்பத்தின் ஓரளவு வசதியான வாழ்வு மெல்லச் சரிய ஆரம்பமானது.

வீட்டில் பெண்கள் இல்லாத ஒரு குடும்பமாக எங்கள் தகப்பனாரின் குடும்பம் இருந்தது. தகப்பனாரின் மூத்த சகோதரி ஒருவர் மாத்திரம் அப்பொழுது வாழ்ந்து கொண்டிருந்தார். அதனால் எங்கள் தாயார்தான் பிறந்த ஊரை விட்டு வந்து பொலிகண்டியில் வாழ வேண்டி நேர்ந்தது. வெள்ளை உள்ளம் படைத்த அப்பாவி எங்கள் தாயார். அவருடைய பாட்டனார் ஒரு வைத்தியர்.

உயர்சாதியார் என்று சொல்லப்படும் சமூகத்துப் பெண்களும் எங்கள் தாயாரிடம் வந்து அவரது தங்க நகைகளை இரவலாகப் பெற்றுச் செல்வார்கள். தனது நகைகளை இரவல் கொடுத்துவிட்டுத் தான் நகை அணியாது கோயிலுக்குச் செல்லும் பெருந்தன்மை எங்கள் தாயாரிடம் இருந்தது. அவருக்கு ஒரு தமையனார் இருந்தார்; எங்கள் தாய்மாமனார். எங்கள் தாய் மாமனாரின் நினைவு நெஞ்சில் எழுந்தால், "ராராரா–ரீரீரீரீ–டூடூடூ..." எனக் கந்தசஷ்டி கவசம் அவர் பாடுகின்ற போது சிறுவயதில் நான் கேட்ட அவர் குரல் இன்றும் செவிகளில் ஒலிக்கின்றது. அவர் முருக பக்தர். திர்காம யாத்திரை போய்வருவார். அப்பொழுது கொடுக்கும் இடும்பன் இசை எனக்கு அதிசயமாக இருக்கும். வெள்ளிக் கிழமைகள் தோறும் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயம் சென்று வழிபாடு செய்துவரத் தவறமாட்டார். குழந்தைகள் இல்லாது போனது வாழ்க்கையில் பெரிய ஒரு மனக்குறையாக அவருக்கு இருந்து வந்தது.

எனது பெற்றோர் திருமணமாகி (ஒரு குழந்தை பிறந்து இறந்த பின்னர்) சில ஆண்டுகள் குழந்தைப் பேறு இல்லாது வாழ்ந்தார்கள். தாயாரின் வழிபடு தெய்வம் அல்வாய் வடக்கு சக்கோட்டை

பிள்ளையார் மீது நேர்த்தி வைத்தே, எனது தமையனார் பிறந்ததாகச் சொல்லுவார்கள். அந்தக் காலத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் உள்ளே செல்வதற்கு அனுமதிக்கப்படாத அந்தப் பிள்ளையார் கோயிலில் இப்பொழுதும் உள்ள பிள்ளையார் மூலவிக்கிரகம், பிள்ளைப் பாக்கியம் வேண்டி எங்கள் பெற்றோர் செய்து கொண்ட நேர்த்திக் கடனுக்காக எனது தகப்பனார் செய்து கொடுத்ததுதான்.

எனது குடும்பம் பற்றி ஓரளவேனும் அறிந்துகொள்ளாமல் என்னை முழுமையாக விளங்கிக்கொள்ள இயலாது என்பதனால் எனது குடும்பம், சமூகம், கல்வி ஆகியவற்றை இதுவரை நான் கோடிட்டுக் காட்டி இருக்கிறேன்.

எங்களை எந்தவிதக் குறைவும் இல்லாது வளர்க்க வேண்டும் என்பது எனது பெற்றோரின் ஒரே நோக்காக இருந்து வந்தது. இரத்த உறவுகள் என்று இரண்டொருவர் தவிரப் பெரிதாக எங்களுக்கு யாரும் உறவினர்கள் இருக்கவில்லை. ஆறு பிள்ளைகளாலான பெரிய குடும்பம் நாங்கள். நான், தம்பி, சகோதரிகள் எல்லோரும் பாட சாலைகளில் படித்துக் கொண்டிருந்தோம். எனது தாயாரும் நோயாளியாகிப் போன கஷ்டமான நிலை. குடும்பத்தைக் கொண்டு நடத்துவது தகப்பனாருக்குச் சிரமமாகவே இருந்தது. இந்த நிலையிலும் எனது தமையனாருக்கு 01.02.1960-ல் இளவயதில் திருமணஞ்செய்து வைத்து பெற்றோர்கள் ஆறுதல் கண்டார்கள்.

எனது தகப்பனார் உள்ளத்தில் பிள்ளைகளாகிய எங்களை இலக்காகக் கொண்டு ஓர் இலட்சியம் இருந்து வந்தது. அதனை ஒருநாள் மனந்திறந்து என்னிடத்தில் எடுத்துச் சொன்னார்.

"மேனை, புயல், மழை, வெயில் எண்டு பாராமல் இந்தப் பனையிலே ஏறி இறங்கிக் கஷ்டப்படும் வாழ்வு என்னோடை போகட்டும். இனி, நீங்கள் ஆரும் பனையிலே கால்வைக்கக் கூடாது. கவனமாகப் படியுங்கோ".

தந்தையார் சொன்ன இந்த மொழிகளே எனக்குக் கூறப்பெற்ற கீதா உபதேசம். இந்த உபதேசத்திலும் மேலான சிறந்த கீதை மொழி எனக்கு வேறொன்றில்லை என்பது எனது உறுதியான நம்பிக்கை.

இதனை அவர் கூறும்பொழுது தான் செய்த தொழில் கௌரவக் குறைவானது என்னும் எண்ணம் அவர் உள்ளத்தில் அப்பொழுது இருக்கவில்லை. அவர் மனம் அப்படிப்பட்டது. தொழிலை நேசிக்கின்றவர். சத்தியத்துடன் அந்தத் தொழிலைச் செய்தவர் அவர். அந்தத் தொழிலே எங்களை வாழவைத்தது என விசுவாசத்துடன் நம்பியவர். ஆனால் தான் அனுபவித்த கஷ்டங்களை, துன்பங்களை நெஞ்சில் நினைத்து பிள்ளைகளாகிய நாங்கள் அந்தத் துயரங்களை அனுபவிக்கக்கூடாதென எண்ணி மனம் கசிந்தவர். அதுதான் எனது தகப்பனார்.

எனது தகப்பனார் எண்ணம் போல அவர் பரம்பரையில் அவர் வழிவந்த வாரிசுகள் யாரும் இன்று அவர் செய்த தொழிலைச் செய்கின்றவர்களாக இருக்கவில்லை.

எனது தகப்பனார் எதிர்பார்த்தது போல அவர் வாழும் காலத்தில் நான் ஆசிரியராகி விட்டேன். ஆனால் நிச்சயமாக தெணியான் என்ற ஓர் எழுத்தாளனாக என்னை அவர் எதிர்பார்த்திருக்க மாட்டார். இனி, தெணியான் ஆன பின்னர் எனது இலக்கிய வாழ்வில் நான் பதித்து வந்த பாதத் தடங்களைப் பார்க்கலாம்.



முதலில் எனது தகப்பனார் பற்றிய தகவலைச் சொல்ல வேண்டி இருக்கிறது. பாரிவசாத நோயில் இருந்து ஓரளவு சுகப்பட்டு நடமாடித் திரிந்த தகப்பனார் , மீண்டும் படுக்கையில் விழுந்தார் என்ற அந்தத் தந்திச் செய்தி கிடைத்து மலையகத்தில் இருந்து நான் உடனே புறப்பட்டுச் சென்றேன். இடதுபக்கம் முற்றாகச் செயற்படாத நிலையில் அவர் படுக்கையில் கிடந்தார். ஒரு வார்த்தைதானும் அவரால் வாய் திறந்து பேசுவதற்கு இயலவில்லை. பிள்ளைகளாகிய எங்களைப் பற்றிய - திருமணமாகாத மூன்று பெண்பிள்ளைகள் பற்றிய எண்ணம் கடைசி காலத்தில் மனதில் பெரும் சுமையாக அவரை வாட்டிக் கொண்டிருந்ததை நான் அறிவேன். அது மாத்திரமல்லாது அவரது வாலிபப் பருவ வாழ்வு நினைவுகளும் அவரைத் துன்புறுத்தி இருக்க வேண்டும். "காயா மரத்தின் கனி பிஞ்சறுத்தனோ, கன்னியர்கள் பெரும்பழி கொண்டனோ!" எனத் தன்னை மறந்து சிலவேளைகளில் இடையிடையே அவர் பாடுவார்." பிள்ளை கஷ்டப்படப் போகிறான்" என என்னை நினைத்து அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்தார் என்பதும் எனக்குத் தெரியும்.

ஒரு நாள் நடுஇரவு தாண்டிய நேரம். வீட்டிலுள்ளவர் எல்லோரும் படுத்து உறங்கிப் போய்விட்டார்கள். அவர் படுக்கை அருகே அமர்ந்திருந்த அம்மா, சில நாட்கள் தொடர்ந்த கண் விழிப்பினால் உடல் சோர்ந்து தன்னை மறந்து சரிந்து உறங்கிப் போனார். தகப்பனார் படும் கஷ்டங்களைப் பார்க்க, எனக்கோ உறக்கம் வரவில்லை. நான் கன்வேஸ் கட்டில் ஒன்றில் சாய்ந்து இருந்த வண்ணம் தகப்பனாரையே பார்த்துக் கொண்டிருக்கின்றேன். அவர்

தொடர்ந்து ஓயாமல் விக்கல் எடுத்து மூச்சு விடுவதற்கு இயலாது அவஸ்தைப்பட்டுக் கொண்டு கிடக்கின்றார். இந்தச் சமயங்களில் குளுக்கோஸ் கொஞ்சம் எடுத்து நீரில் கரைத்துக் கரண்டியினால் கொஞ்சங் கொஞ்சமாகப் பருக வைத்தால், அவர் விக்கல் சற்றுத் தணிந்து போகும் என நான் அவதானித்து வைத்திருந்தேன். தந்தை படும் அவஸ்தை கண்டு துயரப்பெருமூச்சுடன் மெல்ல எழுந்து குளுக்கோஸ் எடுத்து கரைத்து அவர் வாயில் மெல்ல மெல்லப் புகட்டுகின்றேன். விக்கல் சற்றும் தணிகிறது. தனது வலது கரத்தைத் தூக்கி அருகில் அமர்ந்திருக்கும் என்னை வாஞ்சையுடன் மெல்லத் தடவி விடுகின்றார். எனது கையைப் பிடித்து முத்தமிடுகிறார். பின்னர் அந்தக் கரத்தை எடுத்துத் தலைக்கு வைப்பது போல மடித்துப் பாவனை காட்டி, என்னைப் போய்ப் படுத்துத் தூங்குமாறு தெரிவிக்கின்றார். அவரது வலது கண்ணில் இருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருக்கின்றது. நான் அந்தக் கண்ணீரைத் துடைத்துவிட்டுக் கொண்டு, கலங்கும் விழிகளுடன் எழுந்து சென்று திரும்பவும் கட்டிலில் அமர்ந்து கொள்ளுகின்றேன்.

மறுநாள் 18.08.1965 மாலை எனது தந்தையார் காலமானார்.

நோயின் கொடுமையினால் தான் கிடந்து தவித்துத் துடிதுடித்துக் கொண்டிருந்த சமயத்திலும் தனது பிள்ளை கண் விழித்துக் கஷ்டப்படக் கூடாது என நெஞ்சில் நினைத்த தந்தையின் உணர்வினைச் சொல்வதற்காகவே அதனை இங்கு தெளிவாகக் குறிப்பிடுகின்றேன்.

தந்தையார் மறைவுடன் பெரிய ஒரு குடும்பப் பொறுப்பை இளவயதில் நான் சுமக்க வேண்டிய நிலைக்கு ஆளானேன்.

குடும்பப் பொறுப்புகள் அதிகரித்த போதும் இலக்கியத்தின் மீது நான கொண்ட ஆர்வம் கொஞ்சமும் குறையவில்லை. முதற் சிறுகதை வெளிவந்த உற்சாகத்தில் வீரன்கேசரி, தினகரன் பத்திரிகைகளில் இலக்கியக் கட்டுரைகள் சில எழுதினேன். விவேகி, கலைவாணி, கலைச்செல்வி சஞ்சிகைகளில் எனது சிறுகதைகள் வெளிவந்தன. கலைவாணி 1965 பொங்கல் மலரில் எனது சிறுகதையைப் பிரசுரித்தது. 'கலைச்செல்வி' ஆசிரியர் 'சிற்பி' அறிமுகத்துடன் எனது சிறுகதையை வெளியிட்டு வைத்தார். பதுளை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெற்ற மா.பொ. சிவஞான கிராமணியாரின் அருமையான இலக்கியச் சொற்பொழிவினை (30.07.1966) அங்கு சென்று கேட்டு மகிழ்ந்தேன்.

கல்லூரி மாணவர்கள் மத்தியில் இலங்கை சாஹித்திய மண்டலம் அகில இலங்கை மட்டத்தில் நடத்திய சிறுகதைப் போட்டியில் பங்கு கொண்டு 'தாயுள்ளம்' சிறுகதைக்கு இரண்டாவது பரிசாக வெள்ளிப் பதக்கம் தம்பி பெற்றுக்கொண்டதன் மூலம் எனது குடும்பத்தில்

இன்னொரு எழுத்தாளன் இலக்கிய உலகில் முதல் அடி எடுத்து வைத்த சம்பவம் நிகழ்ந்தது.

தனியாரினால் நிருவாகிக்கப்பெற்ற ஆசிரியர்கள் விடுதி ஒன்று அட்டம்பிட்டியவில் இயங்கி வந்தது. அந்த விடுதியில் தங்கியிருப்பதற்கான இடம் கிடைத்ததும் நானும் என்னுடன் இருந்த ஆசிரியரும் சேலைக்கடையில் இருந்து அந்த விடுதிக்குச் சென்றோம். அந்த விடுதி அறை எனக்கு வெகு வசதியாக அமைந்திருந்தது. நான் அமர்ந்திருந்து வாசிப்பதற்கு, எழுதுவதற்கு வசதியான மேசை கதிரைகள் அறையில் இருந்தன. ஓய்வுநேரங்களில், விடுமுறை நாட்களில் சக ஆசிரிய நண்பர்கள் சீட்டாட்டத்தில் ஈடுபடுவார்கள். அந்தச் சமயங்களில் நான் எனது அறைக்கதவை உள்ளே பூட்டிக் கொண்டு அறைக்குள் இருந்து நூல்களை வாசித்துக் கொண்டிருப்பேன்.

பாடசாலை இரண்டாந் தவணை விடுமுறையில் வீட்டுக்கு வந்து தங்கி நின்ற போது 20.08.1966ஆம் திகதி யாழ்ப்பாணம் சென்று கஸ்தூரியார் வீதி ஜோசப் சலூன் உள்ளே அதன் பின்பகுதியில் இருந்த மல்லிகைக் காரியாலயத்தில் டொமினிக் ஜீவாவைச் சந்தித்தேன். அந்தச் சந்திப்பு எனது இலக்கியப் பயணத்தில் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை நான் அப்பொழுது உணர்ந்து கொள்ளவில்லை. அப்பொழுது ஜீவா எனக்குப் புதிய முகமல்ல. மகாசபைக் கூட்டங்களில் ஜீவாவை நான் பார்த்திருக்கின்றேன். இலக்கியக் கூட்டங்களிலும் கண்டிருக்கின்றேன். 'தண்ணீரும் கண்ணீரும்' தொகுதி ஒன்றை வாங்கிப் படித்திருக்கின்றேன். 'சரஸ்வதி'யிலும், 'தினகரன்' வாரப் பதிப்புகளிலும் வெளிவந்த ஜீவாவின் சிறுகதைகளை வாசித்திருக்கின்றேன். ஆனால் தனிப்பட்ட முறையில் நேருக்கு நேர் சந்தித்து அன்றுதான் முதன்முறையாக நெருக்கமாக உரையாடினேன். அந்தச் சந்திப்பு முடிந்து நான் அவரிடமிருந்து விடைபெறுகையில், "எழுதுங்கோ மாஸ்டர்" என்று சொல்லி என்னை அன்று அனுப்பி வைத்தார். இன்று நாற்பது ஆண்டுகள் கடந்த பின்னரும் ஜீவாவின் அந்தக் குரல் எனது செவிகளில் வந்து ஒலித்துக் கொண்டிருக்கின்றது. இன்றும் மல்லிகைக்கு என்னைத் தொடர்ந்து எழுத வைத்துக் கொண்டிருக்கின்றது.

நான் சென்று ஜீவாவைச் சந்தித்த சமயம் எனது சிறுகதைகள் சுமார் பத்துவரை சஞ்சிகைகளில் வெளிவந்து விட்டன. ஆனால் எனது மனதில் பட்ட காயங்கள் என் எழுத்துகளாக ஒன்றுதானும் அதுவரை வெளிவர வில்லை. ஆரம்பகால இளம் எழுத்தாளனாகிய நான் எழுதும் அத்தகைய எழுத்துக்களைப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஏற்றுக் கொள்ளமாட்டா என்ற தயக்கம் எனக்குள் மனதில் இருந்து வந்தது. ஜீவாவின் சந்திப்பு மனதில் இருந்து வந்த அந்தத் தயக்கத்தை முற்றாகப் போக்கியது. அதன் பிறகு துணிந்து சிறுகதை ஒன்றை எழுதி

மல்விகைக்கு அனுப்பி வைத்தேன். நான் எதிர்பார்த்தது போல அந்தச் சிறுகதை 1967 ஜனவரி மல்விகை இதழில் வெளிவந்தது. ஆனால் பிரசுரமான எனது எழுத்தைப் படித்து முடித்தபோது நான் பெரும் ஏமாற்றமே அடைந்தேன்.

கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த ஆரம்ப காலத்தில் நான் நேரில் பார்த்த ஒரு சம்பவத்தையே ஒரு சிறுகதையாக எழுதி அனுப்பினேன்.

நான் ஒரு தினம் யாழ்ப்பாண நகரத்துக்குச் சென்றிருந்தேன். தட்டிவான்கள் பயணிகளை ஏற்றி இறக்கிய காலமது. யாழ்ப்பாணத்தில் இருந்து வல்வெட்டித்துறை ஊடாகப் பருத்தித்துறை சென்றடையும் தட்டிவான் ஒன்றில் ஏறி நான் பிரயாணஞ் செய்து கொண்டிருந்தேன். வல்வெட்டித்துறை தாண்டினால் நான் பிறந்த கிராமம் பொலிகண்டியில் இறங்கலாம். நான் பிரயாணஞ் செய்த தட்டிவானுக்கும் பஸ் வண்டிக்கும் பிரயாணிகளைக் கொத்திக் கொண்டு போவதில் அடங்காத போட்டி. ஒன்றை ஒன்று முந்தி, போட்டி போட்டு ஓடிக்கொண்டிருந்தன. அந்த வான் நீர்வேலி வரை தளம்பித் தளம்பி வந்து ஒரு முடக்கிலே திரும்புகின்ற சமயம், சடுதியாக 'பிறேக்' போட்டு நிறுத்த முயன்றும் அது முடியாமல் சில யார் தூரம் இழுத்துக் கொண்டோடி, பின்னர் தரித்து நின்றது. வானில் இருந்த பெண்கள் எல்லோரும் ஒரே சமயத்தில் துடித்துப் பதைத்து 'ஐயோ.... ஐயோ....'' எனக் குரல் எழுப்பினார்கள். ஆண்கள் பலர் வானைவிட்டுக் கீழே குதித்து இறங்கி ஓடிப்போனார்கள்.

வீதி திருத்துவதற்காகக் குவிக்கப் பெற்றிருந்த கற்குவியல் அருகே வயது முதிர்ந்த கிழவன் ஒருவனைத் திடகாத்திரமான வாலிபன் ஒருவன் போட்டு அடித்துக் கொண்டு நின்றான். அவனுக்கு அந்த முதியவன் தந்தை போல இருக்கும். அவன் அடிப்பதும், கிழவன் கற்குவியல் மேல் விழுந்து பின்னர் எழுந்து கை எடுத்துக் கும்பிட்ட வண்ணம் நிற்பதும், மீண்டும் அவன் அடிப்பதும், கிழவன் திரும்பவும் விழுவதும் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. கிழவன் முகத்தில், உடலில் இருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. அப்பொழுதும் அவன் தாக்கிக் கொண்டு நின்றான்.

கோரமான அந்தக் காட்சி கண்டு மனம் பொறுக்காமல் எல்லோரும் ஓடிப்போனார்கள். போனவர்கள் அவனைத் தடுத்து எதுவும் செய்யாமல், போன வேகத்தில் மெல்லத் திரும்பி வந்தார்கள். அவன் அந்த முதியவனை அப்பொழுதும் போட்டு அடித்துக் கொண்டு நின்றான். திரும்பி வந்தவர்கள், ''அவற்றை வண்ணானாம். அதுதான் அடிக்கிறார்'' என அலட்சியமாகச் சொல்லிக்கொண்டு

வானில் ஏறினார்கள். அது கேட்டு நான் மனம் கொதித்தேன். அந்த முதியவனைப் போட்டடித்த அவன் மாத்திரமல்ல, இவர்களும் மனிதாபிமானம் இல்லாத மிருகங்களாக எனக்குத் தோன்றினார்கள். சாதி வெறி இவர்களை எப்படி மிருகங்களாக மாற்றுகிறது என்பதனை நேரில் கண்டேன். 16.09.1960-ல் நடந்த அந்தச் சம்பவத்தையே சிறுகதையாக எழுதி மல்லிகைக்கு அனுப்பி வைத்தேன். ஆனால் கதை பிரசுரமானபோது பசுக்கன்றொன்றை அந்த வான் மோதி, வீதியில் அது விழுந்து துடித்துக் கிடக்க, பிரயாணிகள் இறங்கி ஓடிப் போனதாக கதை மாற்றப்பட்டிருந்தது. நான் இட்ட தலைப்பை மாற்றி வேறொரு தலைப்பு இடப்பெற்றிருந்தது. அந்த மாற்றங்கள் எனக்கு ஏமாற்றத்தை அளித்தன.

இன்று காலத்துக்கேற்ற தந்திரோபாயத்துடன் கூர்மையாக நவீனப்படுத்தப்பட்டுத் தாக்கும் சாதிவெறியினை முடிந்தவரை வெளியே தெரியாமல் மூடி மறைத்துப் பேசுகின்றவர்கள் மத்தியில், அதன் பல பரிமாணங்களையும் இலக்கியத்தில் நான் புட்டு வைப்பதற்குக் களம் அமைத்துத் தந்திருக்கும் மல்லிகை அன்று சாதியம் பற்றிய எனது முதற்சிறுகதையை வெட்டி மாற்றி வெளியிட்டது என்பது ஒரு புதுமைதான்!

மல்லிகையில் எனது முதற் சிறுகதை வெளிவந்த காலத்தில் எனது வாழ்க்கையில் நான் ஒரு தவறு செய்தேன். நான் செய்த காரியம் இன்றுவரை சமூகத்தினால் அங்கீகரிக்கப் பெற்ற ஒன்றுதான்! சமூகம் அதனைத் தவறென்று கருதுவதில்லை. ஆனால் நான் அதனைத் தவறான நடத்தையாகவே கருதினேன். தவறெனக் கருதிய போதும் நிர்ப்பந்தம் காரணமாக நான் அந்தத் தவறைச் செய்ய வேண்டி நேர்ந்தது.

அந்தத் தவறு வேறொன்றுமல்ல; நான் பெண் பார்க்கப் போனேன்.

எனது தாயாரின் உறவினர் ஒருவர் அல்வாய் வடக்கு, வயலைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணத்தில் திருமணஞ் செய்து வாழ்ந்து வந்தார். அவர் யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த ஒரு பெண்ணை எனக்குத் திருமணம் பேசி, பெண்களின் உறவினர்களுடன் ஒரு தினம் எங்கள் வீடு வந்து சேர்ந்தார். மார்கழி விடுமுறையில் வீட்டில் நின்ற நான் அன்று பண்டாரவளை அட்டம்பிட்டிய புறப்பட்டுச் செல்வதற்குத் தயாராகிக் கொண்டிருந்தேன். வீட்டுக்கு வந்திருந்த உறவுக்காரன் எனக்கு அண்ணன் முறையானவர். என்னை அன்றே அழைத்து வந்து பெண் பார்க்கச் செய்கின்றேன் என, பெண்ணின் உறவினர்களுக்கு அவர் வாக்குறுதி அளித்து அவர்களை அழைத்து வந்திருக்க வேண்டும். எனது தங்கைகளுக்கு முதலில் திருமணம் செய்து வைக்க வேண்டும். பின்னர் அவர்கள் நன்மை கருதி எங்கள் ஊரில் வீட்டுக்கு அண்மையில்

வாழும் யாராவது ஒரு பெண்ணை நான் திருமணஞ் செய்து கொள்ள வேண்டும் என்னும் எண்ணம் என் மனதில் இருந்து வந்தது. அத்துடன் எந்த ஒரு பெண்ணையாவது போய்ப் பார்த்து, பிறகு அந்தப் பெண்ணை வேண்டாம் என்று சொல்லி ஒதுக்கி விடுவதை வெறுக்கின்றவன் நான். அப்படிச் செய்வதன் மூலம் பெண்ணை அவமதிக்கின்றோம் என்பதுதான் எனது மனக்கருத்து.

யாழ்ப்பாணத்தில் பிறந்த ஆடவன் தன்னை விலைபேசி விற்று, தனது சகோதரிகளுக்கு வாழ்வு தேடிக்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்த நிலையில்தான் இன்றும் இருக்கின்றான். எனது குடும்பம், "தந்தை போயினன்; பாழ்மிடி சூழ்ந்தது" என பாரதி தனது சுயசரிதையில் சொன்னது போன்ற நிலையில் அப்போது இருந்தது.

எனக்குத் திருமணம் பேசிவந்த அந்தப் பெண் குடும்பத்தில் ஏக புத்திரி. அவளுக்குச் சொந்தமாக இரண்டு வீடுகள் இருந்தன. அவள் தந்தை அப்பொழுது சிங்கப்பூரில் இருந்து பணம் சம்பாதித்து அனுப்பிக் கொண்டிருந்தார். அந்தப் பெண்ணை எனக்குத் திருமணஞ் செய்து வைத்து விட்டால், எனது குடும்பத்துக்குத் தாங்கள் உதவி புரிந்தவர்களாகி விடுவோம் என மனதில் திட்டமிட்டிருந்த உறவினர்கள் சிலர் இந்தத் திருமணப் பேச்சுவார்த்தைக்குப் பின்னணியில் இருந்தார்கள்.

எனது தந்தையினால் போஷித்து வளர்த்து உருவாக்கப்பட்ட அவர்கள், அவருக்குச் செய்யும் நன்றிக்கடனாக அதனைக் கருதி இருக்க வேண்டும்.

பெண் பார்க்கப் போவதில் எனக்குக் கொஞ்சமும் உடன்பாடில்லை. வீட்டுக்கு வந்திருந்த அண்ணன் உறவானவர் என்னை விட்டுவிடுவதாக இல்லை. அவர் விடாப்பிடியாக,சிறிய தாயாராகிய எனது அம்மாவைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டார். பெண்ணின் உறவினர்களிடம் இந்தக் காரியத்துக்காக அவர் பணம் வாங்கி இருக்கவேண்டுமென நான் உணர்ந்துகொண்டேன். நான் மலையகத்துக்குப் புறப்பட்டுக் கொண்டு நிற்கும் சமயம் அவர் குறுக்கே வந்து நின்றது அம்மா மனதில் ஒரு சிக்கலைத் தோற்றுவித்து விட்டது. அபசகுனமாக அம்மா அதைக் கருதினார். அன்று என் பயணத்தை அனுமதிப்பதில் அம்மாவுக்கு உடன்பாடில்லை. அன்று புறப்பட்டு மலையகம் செல்ல வேண்டாம் என முடிவாகச் சொல்லி விட்டார். அத்துடன் வீட்டுக்கு வந்திருந்த பெறாமகனின் அரியண்டம் அவரால் தாங்க இயலாமல், அவரோடு ஒரு தடவை போய் வருமாறு தாயார் என்னிடம் கேட்டுக் கொண்டார். நான் எனது தாயின் சொல்லைத் தட்டாமல், அவருடன் யாழ்ப்பாணம் சென்று (03.01.1967) பெண் பார்த்தேன். பெண்வீட்டார் உடனே எனது

முடிவைச் சொல்ல வேண்டுமென ஆவலுடன் எதிர்பார்த்தார்கள். நான் முடிவைப் பின்னர் தெரிவிப்பதாகக் கூறிவிட்டு அங்கிருந்து வீடு திரும்பினேன்.

மறுநாள் பண்டாரவளை புறப்பட்டுப் பாடசாலை வந்து சேர்ந்த பின்னர், இரண்டொரு தினங்கள் தாமதித்து, அந்தப் பெண் மதம் மாறி வந்தால் நான் திருமணஞ் செய்து கொள்ளுகின்றேன் எனத் தெரிவித்துக் கடிதம் எழுதி நோகாமல் தட்டிக் கழித்தேன். கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த அந்தப் பெண் ஒரு போதும் மதம் மாற மாட்டாள் என்பதனை உணர்ந்துகொண்டே நான் அப்படித் தெரிவித்தேன். அதனைத் தவிர அந்தச் சிக்கலில் இருந்து நான் விடுபட்டு தப்பித்துக் கொள்ள, எனக்கு வேறு மார்க்கம் எதுவும் இருக்கவில்லை.

நான் தீவிரமான மதவாதியாக இல்லாது இருப்பதனால், கத்தோலிக்கனாக மதம் மாறி அந்தப் பெண்ணைத் திருமணஞ் செய்து கொள்வேன் என அவர்கள் அப்பாவித்தனமாக எதிர்பார்த்தார்கள்.

அந்தச் சம்பவம் எனது உள்ளத்தைப் பெரிதும் பாதித்தது. எனது மனதில் ஒரு உறுத்தலாக அது என்னைத் துன்புறுத்திக் கொண்டிருந்தது. அந்த மனப்பாரத்தின் வடிகாலாக, 'பெண் பாவை' என்ற சிறுகதையை எழுதி, யாழ். இலக்கிய நண்பர் கழகம் நடத்திய சிறுகதைப் போட்டிக்கு அனுப்பி வைத்தேன். அந்தச் சிறுகதை, போட்டியில் முதல் பரிசு பெற்று, மல்லாகம் அ.மி. பாடசாலையில் இடம்பெற்ற விழாவில் இரசிகமணி கனகசெந்திநாதன் அவர்கள் கையினால் 02.01.1968-ல் அதற்குரிய பரிசினைப் பெற்றுக் கொண்டேன்.

எனது வாழ்வு அனுபவங்கள், நான் வாசித்த நூல்கள் என்பவற்றோடு மிக இளம் வயதில் ஆசிரியரானதும், தந்தையை இழந்ததும், திருமணமாகாதிருந்த மூன்று தங்கைகளுக்குப் பொறுப்புள்ள அண்ணனாக இருந்தும் என்னை நிதானப்படுத்தி நெறிப்படுத்தின. பண்டாரவளையில் நான் வாழ்ந்த ஆறாண்டுகளும் சமூக விடயங்களில் முழுவீச்சுடன் ஈடுபாடு கொள்வதற்கு இடையூறாக இருந்த ஒருகாலம். ஆனால் அந்த ஆறாண்டு காலம் எனது இலக்கிய ஆர்வத்தினை மேலும் வளர்த்துக் கொள்வதற்கு மிக வாய்ப்பான ஒரு காலமாக அமைந்தது. அந்தக் காலகட்டத்தில் இலங்கை, இந்திய எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் சிலர் பதுளைக்கு வந்து போனார்கள். அவர்களுள் அ.ந. கந்தசாமி, நவசோதி (28.07.1967), கு. அழகிரிசாமி, விஜயபாரதி (13.09.67), வீ. பொன்னம்பலம், அ. அமிர்தலிங்கம் ஆகியோர் குறிப்பிட்டுச் சொல்லத் தகுந்தவர்கள். அவர்கள் அனைவரும் பங்கு பற்றிய இலக்கியக் கூட்டங்களுக்கு அட்டம்பிட்டியவில் இருந்து பதுளைக்குச் சென்று கலந்து கொண்டேன். எனக்குத் துணையாக என்னோடிருந்த ஆசிரியர் எஸ்.

இராசலிங்கம் சில தினங்கள் பதுளைக் கூட்டங்களுக்கு வந்திருக்கின்றார்.

இந்தக் காலத்தில்தான் எம்.ஜி.இராமச்சந்திரன், சரோஜாதேவியுடன் ஒரு சமயம் நுவரெலியா வந்திருந்தார். நண்பர் இராசலிங்கம், நான் எங்கள் இருவரையும் தவிர எங்களோடிருந்த சக ஆசிரியர்கள் அனைவரும் அவர்களைப் பார்ப்பதற்கு நுவரெலியா சென்று வந்தார்கள். சென்று வந்ததல்ல புதுமை! அவர்களுள் ஓர் ஆசிரிய நண்பர் சில காலம் தனது கை ஒன்றைக் கீழே தொங்க விடாது, கையை மடித்துத் தூக்கிக் கொண்டு திரிந்தார். அந்தக் கையைத் தான் கழுவுவதில்லை என்றும் சொல்லிக்கொண்டார். ஏனெனில் சரோஜா தேவியின் முந்தானைச் சேலை அவருடைய அந்தக் கை மீது பட்டு விட்டதாம்! அவர் கற்பனையாகத்தான் அப்படிக் கூறித் திரிந்தார் என்பது வேறு விடயம்! ஆனால் இப்படியும் ஆசிரியர்கள் இருக்கின்றார்கள் என்பதுதான் உண்மை.

இந்த ஆசிரியர்கள் மத்தியில் வேலணையைச் சேர்ந்த எஸ். இராசலிங்கம், ஆரையம்பதியைச் சேர்ந்த ந. பாக்கியராசா ஆகிய இருவரும் என்னோடு மிக நெருக்கமாக வாழ்ந்ததுடன், எனது வளர்ச்சியில் அக்கறை உள்ளவர்களாகவும் இருந்தார்கள். இராசலிங்கம் ஒரு நல்ல வாசகர். காண்டேகரின் எழுத்தில் அவருக்கொரு மோகம். காண்டேகரின் நாவல்களைக் கொண்டு வந்து படிக்கும்படி எனக்குத் தந்து கொண்டிருந்தார். எனது எழுத்துக்களைப் படித்து, என்னைப் பாராட்டி உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார். அவர் தனது சொந்தச் சகோதரன் போலப் பாவித்து, காலை வேளையில் நாங்கள் இருவரும் வாங்கும் பசுப்பாலைத் தினமும் எனக்குக் காய்ச்சித் தந்தார்; தேநீர் தயாரித்துத் தந்தார். பிரயாணத்தின் போது எனது 'பாய்க்' கைத் தானே தூக்கிச் சுமந்தார். இவ்வாறெல்லாம் என்னைப் போஷித்தார். யாழ்ப்பாணத்துச் சாதிய அடையாளங்கள் எதுவுமில்லாத ஒரு மனிதனாக என்னோடு நடந்து கொண்டார்.

மட்டக்களப்பு ஆரையம்பதி நண்பர் பாக்கியராசா அதிகம் வாய்திறந்து பேசாத ஒருவர். "ஆளே" என்று என்னை அழைப்பார். இதயத்தில் நட்புடன் உறவாடினார். ஆரையம்பதியில் இருந்து அப்பொழுது வெளிவந்த கையெழுத்துச் சஞ்சிகைக்கு எனது படைப்புகளைக் கேட்டுப் பெற்றுக்கொண்டார். அவரைத் தேடி மலையகத்துக்கு வந்த எழுத்தாளர் ஆரையம்பதி தங்கராசாவை அங்குதான் முதன்முதலாக நான் சந்தித்தேன். நண்பர் பாக்கியராசா யாழ்ப்பாணம் வரும் சந்தர்ப்பங்களில் எல்லாம் என்னைத் தேடிவந்து, என்னோடு இரண்டொரு தினங்கள் தங்கிப் போவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

மலையகத்தில் வாழ்ந்த காலத்தில் கிழக்கு மாகாணத்து ஆசிரியர்கள், முஸ்லிம் ஆசிரியர்கள், சிங்கள ஆசிரியர்கள் எனப் பலரையும் சந்திக்க, பழக எனக்குச் சந்தர்ப்பம் கிட்டியது.

அந்தக் காலத்தில் பதுளை ஊவாக் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் அழைப்பினை ஏற்று, அங்கு சென்று அவர்கள் மத்தியில் ஒருதினம் (18.09.1966) உரையாற்றினேன். அப்பொழுது அந்த உயர்தர வகுப்பில் அங்குப் படித்துக் கொண்டிருந்த பதுளை மு.நித்தியானந்தன், எஸ். கணேசன் ஆகியோர் என்னைக் கண்டு பேசிப் பின்னர் நெருக்கமாகப் பழகி வந்தார்கள்.

'மௌனி கதைகள்' சிறுகதைத் தொகுப்பு அந்தக் கால கட்டத்திலேயே வெளிவந்திருந்தது. அந்தச் சமயம் தருமசிவராமுடன் நான் தொடர்பு கொண்டு, பணம் அனுப்பி வைத்த பிற்பாடு, அந்த நூலின் ஒரு பிரதியைத் திருகோணமலையில் இருந்து அவர் எனக்கு அனுப்பி வைத்தார். நல்ல நூல்களைத் தேடி வாசிக்கும் இலக்கிய ஆர்வம் காரணமாகவே அந்தத் தொகுதியை அப்பொழுது நான் முயன்று பெற்றேன்.



எனது தங்கையின் திருமணம் நடைபெற்று முடிந்து ஓராண்டின் பின்னர், குடும்பத்து மூத்தவர்கள் முன்னின்று 22.05.68-ல் எனது திருமணத்தை நடத்தி வைத்தார்கள். உறவுக்காரப் பெண் மரகதத்தை மணந்து கொண்டேன். எனது திருமண வைபவத்தில் அதிபர் எம்.எஸ்.சீனித்தம்பி தலைமை வகிக்க, சைவப்புலவர் சி. வல்லிபுரம் திருமண முறைகளைச் செய்து வைக்க, மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா வாழ்த்துரை வழங்கினார். ஜீவாவுடன் இளம் எழுத்தாளர் அ. கதிர்காமநாதன் திருமணத்துக்கு வருகை தந்திருந்தார். திருமணம் நடைபெறுவதற்கு முதல்நாள் பிற்பகல் ஜீவா எனது வீடு வந்து சேர்ந்தார். ஜீவா, கதிர்காமநாதன், நான் மூவரும் தேவரையாளி இந்துக் கல்லூரிக்குச் சென்றோம். அன்று மாணவர்கள் மத்தியில் ஜீவா நீண்டதொரு சொற்பொழிவை ஆற்றினார். காலை விடிந்தால் எனக்குத் திருமணம். திருமண அலுவல்களைக் கவனிக்காது இலக்கியக் கூட்டத்தில் வந்து நான் நிற்பது கண்டு சிலர் அதிசயப்பட்டார்கள். என்னிடம் அது பற்றிக் கேட்டார்கள். அப்பொழுது அவர்களுக்குப் பதில் ஒன்றும் சொல்லாமல் மெல்லச் சிரித்தேன். ஒரு பெண்ணை மணந்து கொள்வதற்கு முதல், இலக்கியத்தை மணந்து கொண்டவன் நான் என்பதைச் சொன்னாலும் அவர்கள் விளங்கி ஏற்றுக் கொண்டிருப்பார்கள் எனச் சொல்வதற்கில்லை.

சிறுவயது முதல் எனது ஆதர்சமாக இருந்தவன் மகாகவி பாரதி. ஆரம்ப காலத்தில் கவிதை மீது நான் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தேன். 'நிருத்தன்' என்ற பெயரில் இடையிடையே கவிதைகளும் எழுதி வந்திருக்கின்றேன். பின்னர் சிறுகதையே எனது மனக்கருத்துக்களைச்

சொல்வதற்குத் தகுந்த இலக்கிய வடிவம் என்பதனைத் தீர்மானித்துக் கொண்டேன். ஆயினும், கவிதைகள் மேல் - குறிப்பாக, பாரதி மேல் நான் கொண்ட பற்றுதல் கொஞ்சமும் மனதில் இருந்து குறையவில்லை. அதனால் நான் இருக்கும் பாடசாலையில் பாரதிக்கு விழா எடுப்பதில் எப்பொழுதும் நான் முன்நின்றேன்.

பண்டாரவளை, அட்டம்பிட்டிய மகா வித்தியாலயம் உண்மையில் ஒரு சிங்கள வித்தியாலயம். அதில் தமிழ்ப் பகுதியும் இருந்தது. ஆனால் தமிழ்ப் பகுதியில் பெரிதாக விழாக்கள் நடைபெறுவதில்லை. அங்கே எனது எண்ணம் போலப் பெரிய அளவில் பாரதி விழா ஒன்றினை நடத்துவதற்கான ஏற்பாடுகளை ஆசிரியர்கள் சேர்ந்து செய்தோம். பதுளை, பண்டாரவளை நகர்ப் பகுதிகளில் இருந்து பேச்சாளர்களை அழைத்துச் சிறப்பாக நடத்தினோம். அந்த விழாவில் எழுத்தாளர் இரா. சரசுவதியை அழைத்துப் பேச வைத்தோம். வித்தியாலயத்தில் படித்துக் கொண்டிருந்த மாணவர்களின் பெற்றோர்கள், சூழவுள்ள தேயிலைத் தோட்டங்களில் பதவிகளில் இருந்த கங்காணிமார், கிளாக்கர்மார், கணக்குப் பிள்ளை ஆகியோருக்கும் அழைப்புகள் அனுப்பினோம். எங்கள் அழைப்பினை ஏற்று பலர் அந்த விழாவிற்கு வருகை தந்திருந்தார்கள். அந்த வித்தியாலயத்தின் தமிழ்ப் பகுதி அதுவரை காணாத ஒரு பெருவிழாவாக அந்தப் பாரதி விழா நடைபெற்றது.

அந்த விழாவில் எங்கள் வித்தியாலயத்தில் இருந்து நான் அன்று பேசினேன். விழா முடிந்த பின்னர் பெரிய கணக்குப்பிள்ளை என்னைத் தேடி வந்து கையைப் பற்றிக் குலுக்கினார். "நீங்கள் ஒரு போராட்டக்காரனாக இருக்கிறியள்" என ஆங்கிலத்தில் கூறி மெல்லச் சிரித்தார். பின்னர் விடைபெற்றுக் கொண்டு சென்று விட்டார்.

ஒரு வார காலத்தின் பின்னர் ஒரு சனிக்கிழமை காலையில் ஆசிரியர்கள் தங்கியிருந்த தனியார் விடுதிக்கு எங்களைத் தேடி வந்தார். அவருடைய பிள்ளைகள் எங்கள் வித்தியாலயத்தில் படித்துக் கொண்டிருந்தார்கள். அவர் தனது பிள்ளைகளின் படிப்புச் சம்பந்தமாகத்தான் எங்களுடன் பேசுவதற்கு வந்திருக்கின்றார் என நான் எண்ணினேன். ஆனால் அவர் தமது வீட்டில் அன்றிரவு எங்களுக்கு ஒரு விருந்து தருவதற்காக அழைப்பு விடுத்தார். மாணவர்கள் வீடுகளுக்குச் செல்வது, விருந்துண்பது என்பவற்றைப் பொதுவாக - முடிந்தவரை நான் தவிர்த்து வந்தேன். விடுதியில் இருந்த சக ஆசிரியர்கள் முன்னரே அவர் இல்லத்துக்குப் போய் வந்திருக்கிறார்கள். நான் ஒருநாள் தானும் அங்கு சென்றதில்லை. அதனை அவர் மனதில் கொண்டு, "உங்களை அழைக்கிறதுக்காகத்தான் நான் நேரிலே வந்திருக்கிறன். தவறாமல் நீங்கள் வரவேணும்" எனத் தனிமையில் எனக்குச் சொன்னார்.

கணக்குப்பிள்ளை வயதில் மூத்தவர். எனக்குத் தகப்பன் போலக் கணிக்கத் தகுந்தவர். அவருடைய பிள்ளைகள் என்னிடத்திலும் படித்துக் கொண்டிருந்தார்கள். அதனால் அவர் விடுத்த அன்பான அழைப்பினைத் தட்டிக் கழிக்க இயலாது ஏனைய ஆசிரியர்களுடன் நானும் புறப்பட்டுப் போனேன். பெரிய கணக்குப்பிள்ளை, மனைவி, பிள்ளைகள் எங்கள் வரவை எதிர்பார்த்திருந்து அன்புடன் எல்லோரையும் உற்சாகமாக வரவேற்றார்கள். மொத்தம் எட்டு ஆசிரியர்கள் அங்கு போயிருந்தோம்.

மாலை ஆறுமணிக்கே அங்கு இருள் வந்து முற்றாகச் சூழ்ந்துவிடும். அத்தோடு குத்தும் பனிக்குளிர் உடலை உலுப்பிக் கொடுக வைக்கும். ஏழு மணியானால் வீதியில் சன நடமாட்டம் குறைந்து போய்விடும். இரவு ஒன்பது மணிக்கு முன்பு உண்வு முடிந்து படுக்கைகளில் போய் விழுந்து விடுவார்கள். அதனால் நாங்கள் அங்கு போய்ச் சேர்ந்தவுடன் எங்கள் விருந்து ஆரம்பமானது. கணக்குப் பிள்ளை சாராயப் போத்தலைத் தூக்கி வந்து மேசை மீது வைத்தார். போத்தல் மூடியைக் கழற்றி கிளாஸ்களில் ஊற்றிக் குடிக்க ஆரம்பித்தார்கள். நான் குடிப்பதில்லை. இருந்தாற் போல அவர்கள் மத்தியில் நான் தனிமைப்பட்டுப் போனேன். குடித்துக் கொண்டிருந்த அவர்களுக்கு இடைஞ்சலாக இல்லாமல் சற்று விலகி இருந்து கொண்டேன்.

கணக்குப்பிள்ளையின் மனைவி சூடான கோப்பி ஒன்றைக் கொண்டு வந்து தந்துவிட்டு என்னுடன் பேசிக் கொண்டிருந்தார். நேரம் நீண்டுபோய்க் கொண்டிருந்தது. வெளியே பனிக்கொட்டிக் கொண்டிருந்தது. வீட்டுக்குள்ளே போத்தல் மூடிகள் உடைந்து காரமாக, சூடாக, கொறிக்கும் இசைவுடன் சாராயம் உள்ளே இறங்கிக் கொண்டிருந்தது. அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தங்களை இழக்க ஆரம்பித்து விட்டார்கள். அவர்களுக்கு எங்கே தெரியப் போகின்றது, நேரம் கடந்து போய்க்கொண்டிருக்கின்றது என்பது? கணக்குப்பிள்ளையின் மனைவிதான் அதனை நினைவுபடுத்தினார். இறுதியில் வற்புறுத்தி, எல்லோரையும் சாப்பாட்டு மேசைக்கு அழைத்து வந்தார்.

சாப்பாட்டு மேசையின் நீளப்பாட்டில் இரு வரிசைகளிலும் ஆசிரியர்கள் எதிர் எதிரே அமர்ந்திருந்தோம். குறுக்குப்பாட்டில் தனி ஒருவராகக் கணக்கப்பிள்ளை அமர்ந்திருந்தார். அவருக்கு நேர் எதிரே மேசை ஓரத்தில் அவர் மனைவி அடக்கமாக நின்று எல்லோருக்கும் பார்த்துப் பார்த்து உணவு பரிமாறினார். நான் அந்த மேசையின் ஒரு தொங்கலில் கணக்குப்பிள்ளை மனைவிக்கு அருகில் போய்ப் பார்த்து உட்கார்ந்து கொண்டேன். மதுபோதையில் தங்களை மறந்துபோய்

இருக்கும்எனது ஆசிரியநண்பர்கள் அருகில் அமர்ந்திருக்கின்றவர்களின் சாப்பாட்டுக் கோப்பைக்குள் கை வைக்க மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? அத்தகைய சிக்கல் நிலைமையொன்று உருவாகாமல் என்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே நான் சற்று விலகி இருந்துகொண்டேன். என் அருகே நண்பர் இராசலிங்கம் அமர்ந்திருந்தார். நான் மற்றையவர்கள் போலச் சாராயம் பருகாது வெறும் கோப்பி மாத்திரம் குடித்து விட்டிருந்ததால் கணக்குப்பிள்ளை மனைவி மனதில் என்னைப் பற்றி ஒரு நல்ல அபிப்பிராயம் தோன்றி இருக்க வேண்டும். அவர் உணவு பரிமாறிய வண்ணம் என்னோடு மெல்ல உரையாடிக் கொண்டு நின்றார். அந்த உரையாடலின் போது, "ஸார், நீங்க பெரிய கிளாக்கர் வீட்டுக்குப் போறனீங்களா?" எனக் கேட்டார்.

பெரிய கிளாக்கரும் அவர் மனைவியும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். பெரிய கணக்குப் பிள்ளை மலையகத்தைச் சேர்ந்தவர். அவர் மனைவி கிழக்கு மாகாணத்தில் பிறந்தவர்.

யாழ்ப்பாணத்துப் பெரிய கிளாக்கரும் மனைவியும் இளக்காரமாக எண்ணி, இவர்களை மதித்து நடப்பதில்லை என்பதும், அதனால் இரு குடுமபங்களுக்குமிடையே மனப்பூசல் உள்ளூர இருந்து வந்ததும் நான் முன்னரே அறிந்து வைத்திருந்தேன். அதனால் "ஏன், அப்படிக் கேட்கிறியள்?" என அவரைப் பார்த்து நான் கேட்டேன். அப்பொழுது, "நீங்க வெல்லாம் அங்கிட்டுப் போகக் கூடாது ஸேர், தோட்டத்துப் பள்ளன் அவுகவூட்டுக் குசினிக்கே போவான் ஸேர்" என அவர் அருவருப்பது போல முகத்தைச் சுழித்துக் கொண்டு கூறினார். நான் "அப்படியா?" எனக் கேட்ட வண்ணம் அவர் முகத்தை நிமிர்ந்து பார்த்துச் சிரித்துக் கொண்டு தொடர்ந்து விருந்து உண்டேன்.

மறுநாள் காலை படுக்கை விட்டு எழுந்த பிற்பாடு, நண்பர் இராசலிங்கம் என்னைத் தேடிக்கொண்டு எனது அறைக்கு வந்தார். "நேற்று இரவு கணக்கப்பிள்ளையின்ரை மனிஷி என்ன சொன்னவ?" என்று என்னிடம் வினவினார். "நீங்கள் பக்கத்தில் இருந்து சொன்னதைக் கேட்டுத்தானே இருக்கிறியள்?" என்றேன் நான். "கோப்பையால மூஞ்சியிலே அடிச்சிருக்க வேணும்" என்றார் சினத்துடன்.

"ஏன் அடிக்க வேணும்? தோட்டத்துப் பள்ளன் குசினிக்குள்ளே போகக் கூடாது எண்டுதானே சொன்னார்! யாழ்ப்பாணத்துப் பள்ளன் போகக் கூடாது எண்டு சொல்லவில்லையே!" என்று சொல்லி நான் பலமாகச் சிரித்தேன்.

எனது பகடியைக் கேட்டு அவர் மனதில் எழுந்த சினம் ஆறி, அவரும் என்னோடு சேர்ந்து அப்பொழுது உரக்கச் சிரித்தார்.

அவர் மனைவி ஓர் ஆசிரியை. மாத்தளை பலாத்பல தமிழ் வித்தியாலயத்தில் அவர் மனைவி அப்பொழுது ஆசிரியையாகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். விடுமுறை நாட்களில் அவர் அங்கு போய் வருவார். மாத்தளை சென்று அந்தப் பிரதேசத்தைப் பார்த்து வருவதற்காக, ஒரு தடவை தன்னுடன் வருமாறு அவர் என்னைப் பல தடவைகள் அழைத்தார்.

அங்கே சென்று வருவதில் உள்ளூர மனதில் எனக்கொரு விருப்பம் இருந்தது. எழுத்தாளர், நண்பர் 'மலரன்பன்' சொந்த இடம் மாத்தளை. அங்கு சென்றால் அவரைக் கண்டு பேசலாம் என்பதுதான் எனது மனவிருப்பம். அவருக்கும் எனக்கும் அப்பொழுது கடிதத் தொடர்பு இருந்து வந்தது. மிக நீண்ட கடிதங்களை இலக்கிய நயத்துடன் அவர் எனக்கு எழுதுவார். 'தினபதி' பத்திரிகையில் அவர் எழுதி இருந்த 'பார்வதி' என்னை மிகவும் கவர்ந்த ஒரு சிறுகதை. எனது தம்பி க.நவம் 'விரதம்' என்ற நல்ல சிறுகதை ஒன்றைத் தினபதியில் எழுதி இருந்தான். நான் எழுதிய, 'அவள் ஒரு மனைவி', 'விடிவை நோக்கி' ஆகிய இரு சிறுகதைகள் வெளிவந்திருந்தன. 'விடிவை நோக்கி' சிறுகதை வெளிவந்து ஐந்து ஆண்டுகளின் பின்னரே, 'விடிவை நோக்கி' என்ற் எனது முதல் நாவல் வெளிவந்தது.

இந்த 'விடிவை நோக்கி' தொடர்பாக பிற்காலத்தில் நடந்த சுவாரசியமான இலக்கிய விவகாரம் ஒன்றினை நான் இங்கு குறிப்பிட வேண்டும். ஒரு சமயம் யாழ். மாகாணக் கல்விக் கந்தோரில் நடைபெற்ற தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் நேர்முகப் பரீட்சைக்கு நான் சென்றிருந்தேன். மாகாணக் கல்விப் பணிப்பாளரும், உதவிக் கல்விப் பணிப்பாளரான கவிஞர் ஒருவரும் அந்த நேர்முகப் பரீட்சையை நடத்தினார்கள். அந்தக் கவிஞர் பரீட்சகராக அங்கிருக்கின்றார் என்பது எனக்கு நம்பிக்கையையும் மன மகிழ்ச்சியையும் கொடுத்தது. அவருக்கும் எனக்கும் இடையே முன்னரே பழக்கம் இருந்தது; நட்பிருந்தது.

எனது 'விடிவை நோக்கி' நாவல் வெளிவருவதற்கு முன்னர் அதே தலைப்பில் அவர் ஒரு நெடுங் கவிதை எழுதி இருக்கின்றார் என்பதனையும் நான் அறிந்திருந்தேன். அந்த நேர்முகப் பரீட்சையில் என்னிடம் ஒரேயொரு கேள்விதான் கேட்கப்பட்டது. "விடிவை நோக்கி நாவலை எந்த ஆண்டில் எழுதினீர்?" என்பதுதான் அந்தக் கேள்வி. அந்தக் கேள்வியைக் கேட்டவர் வேறு யாருமல்லர், கவிஞர்தான்!

தனது கவிதைத் தலைப்பினை நான் கையாடி விட்டேன் என அவர் உள்ளத்தில் ஓர் எண்ணம் இருப்பதனை நான் உணர்ந்து கொண்டேன். இருவரும் நேரில் சந்தித்துப் பல தடவைகள் முன்னர்

பேசி இருக்கின்றோம். அந்தச் சமயங்களில் எல்லாம் கேட்காத அந்தக் கேள்வியை இப்பொழுது அதிகாரி என்னும் ஆசனத்தில் இருந்து கொண்டு கேட்கின்றாரே என என் மனதில் சினம் மூண்டது. அவர் வினாவுக்கு நேரே பதில் சொல்வதைத் தவிர்த்து விட்டு, "அந்த நாவல் எழுதுவதற்கு ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்னர் 'விடிவை நோக்கி' என்ற தலைப்பில் நான் சிறுகதை ஒன்றினை எழுதி இருக்கின்றேன்" எனக் கூறினேன். அதன் பின்னர் எந்தவொரு வினாவையும் அவர் என்னிடத்தில் கேட்கவில்லை. அப்பொழுது அவர் என்னை விளங்கிக் கொண்டார் என்பதனை நான் அவதானித்துக் கொண்டேன்.

தினம் ஒரு சிறுகதைத் திட்டத்தின் கீழ் 'தினபதி'யில் வெளிவந்த சிறுகதைகளை மூத்த எழுத்தாளர் ஒருவர் சிபார்சு செய்வது அப்போது நடைமுறையில் இருந்து வந்தது. எனது 'விடிவை நோக்கி' சிறுகதையை அ.செ. முருகானந்தன் அவர்கள் சிபார்சு செய்தார். அ.செ.மு. அப்பொழுது 'ஈழ நாடு' பத்திரிகையில் பணியாற்றிக் கொண்டிருந்தார். எனது நண்பர் பாமா ராஜகோபாலும் அப்பொழுது ஈழ நாட்டில் இருந்தார். எனது 'விடிவை நோக்கி' சிறுகதையைப் படித்த அ.செ.மு., "தெணியானின் கதைகளுக்குச் சிபார்சு தேவையில்லை. அவரேன் சிபார்சுக்காக அனுப்புகிறார்?" என ராஜகோபாலிடம் தெரிவித்த கருத்தினை அவர் என்னைச் சந்தித்த போது நேரில் சொன்னார்.

அதன் பிறகு நம் நாட்டில் வெளிவந்து கொண்டிருந்த தேசியப் பத்திரிகைகளின் வாரப் பதிப்புகளுக்கு நான் சிறுகதை எழுதத் தீர்மானித்தேன். வீரகேசரியின் வாரப்பதிப்பில் 11.9.1967-ல் ஒரு சிறுகதை வெளிவந்தது. 'தினபதி'யின் வாரப் பதிப்பு 'சிந்தாமணி' என்ற பெயரில் அப்பொழுது வெளிவந்து கொண்டிருந்தது. 'சிந்தாமணி'க்கு ஒரு சிறுகதை அனுப்பி வைக்கத் தீர்மானித்தேன். சில தினங்களின் பிறகு 'பெருமூச்சு' என்ற சிறுகதையை அனுப்பி வைத்து இரண்டு வாரங்கள் கழிந்த பிறகு, 'சிந்தாமணி' ஆசிரியர் தமது கைப்பட எழுதிய கடிதம் எனக்கு வந்து சேர்ந்தது. எனது சிறுகதை நன்றாக இருப்பதாகப் பாராட்டியதுடன் தொடர்ந்து எழுதுமாறு கேட்டுக்கொண்டார். அந்தக் கதை அடுத்த வாரம் வெளிவருகிறது எனவும் தெரிவித்திருந்தார். இறுதியில் எனது எதிர்காலம் சிறக்க வாழ்த்து கூறி இருந்தார். அவர் தெரிவித்தது போல அடுத்து வந்த ஞாயிறு 'சிந்தாமணி'யில் எனது சிறுகதை வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து 'சிந்தாமணி'யில் நான் சிறுகதைகள் தொடர்ந்து எழுதினேன். நான் ஒரு சிறுகதை அனுப்பி வைத்தால் மூன்றாவது வாரத்தில் தவறாமல் அது 'சிந்தாமணி'யில் வெளிவரும் என்னும் நிலைமை உருவாகி இருந்தது. சாதியம் பற்றிய எனது சிறுகதையை முதன்முதலாகச் 'சிந்தாமணி'தான் வெளியிட்டு வைத்தது.

இன்று எனது இலக்கிய அனுபவங்களை எழுதிக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் ஆரம்ப காலத்தில் வாழ்த்துக் கூறி, உற்சாகம் ஊட்டி எனது வளர்ச்சிக்கு வழிசமைத்துத் தந்த 'சிந்தாமணி' ஆசிரியர் இராஜ அரியரத்தினம் போன்ற பெரியவர்களை நன்றியுடன் நினைவுகூராமல் என்னால் இருக்க முடியாது.

ஆரம்ப எழுத்தாளனாக நான் இருந்த காலத்திலேயே நல்ல மேடைப்பேச்சாளன் என்ற பெயரைப் பெற்றிருந்தேன். எனது பேச்சாற்றல் காரணமாக எழுத்தாளன் என்ற நிலையில் விழா ஒன்றில் பேசுவதற்காக மாத்தளைக்கு வருமாறு எனக்கோர் அழைப்பு வந்து சேர்ந்தது. நண்பர் இராசலிங்கம் அப்பொழுது பண்டாரவளையில் இருந்து மாத்தளைக்கு மாற்றலாகிப் போய் இருந்தார். எனக்கு விடுக்கப் பெற்ற அழைப்பின் பின்னணியில் அவர் இருந்தார். அந்தச் சமயம் அவர் மனைவி ஆசிரியையாக இருக்கும் பலாத்பல தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறும் கலைமகள் விழாவில் கலந்து கொண்டு 'சிறுகதை இலக்கியம்' பற்றிப் பேசுமாறு வித்தியாலய அதிபர் அழைப்பு விடுத்திருந்தார்.

மாத்தளைப் பகுதிக்குச் சென்று அந்தப் பிரதேசத்தைப் பார்க்க வேண்டும்; நண்பர் மலரன்பனை நேரில் சந்தித்துப் பேச வேண்டும் என மன விருப்புடன் இருந்து வந்த நான் அதிபரின் அழைப்பினை நிராகரிப்பேனா!

மாத்தளைப் பயணம் எனது இலக்கியப் பயணத்தில் நான் என்றும் நினைவுகூர வேண்டிய மிக முக்கியமான ஒரு பயணமாக அமையப்போகின்றது என்பது எனக்கு அப்பொழுது நிச்சயமாகத் தெரியாது.



பண்டாரவளையில் இருந்து பஸ் வண்டி மூலம் மாத்தளைக்குப் புறப்பட்டேன். முதல் நாள் கண்டியில் நடைபெறும் பாரதி விழாவில் கலந்துகொண்டு பேசுமாறு எனக்கு அழைப்பொன்று விடுத்திருந்தார்கள். அதனால் மாத்தளைக்கு நேரே செல்லாமல் கண்டியில் போய் இறங்கினேன். கண்டியில் இருந்து 'செய்தி' வாரப் பத்திரிகை அப்பொழுது வெளிவந்து கொண்டிருந்தது. 'செய்தி'யில் சிறுகதைகள், கட்டுரைகள் எழுதி இருக்கின்றேன். பதுளை ஊவாக் கல்லூரியில் சந்தித்த எஸ். கணேசன் 'செய்தி'யில் பணிபுரிந்து கொண்டிருந்தார். 'செய்தி'க் காரியாலயம் சென்று அவரையும் ஆசிரியரையும் சந்தித்துப் பேசினேன். பின்னர், கண்டியில் ஆசிரியர்களாகப் பணிபுரிந்து கொண்டிருந்த செ. சதானந்தன், நவாலியூர் நா. செல்வதுரை ஆகியோர்களைக் கண்டு கதைத்தேன். மாலையில் கண்டி மகியாவ மறுமலர்ச்சி மன்றம் அங்குள்ள பாடசாலையில் நடத்திய பாரதி விழாவில் பங்குபற்றி உரையாற்றினேன். இரவு செய்தி நிருவாக ஆசிரியர் நாமு.நாகலிங்கம் இல்லத்தில் தங்கினேன். காலையில் எழுந்து கண்டியில் இருந்து மாத்தளைக்குப் பயணமானேன்.

மாத்தளை பலாத்பல தமிழ் வித்தியாலயத்துக்கு அண்மையில் நான் பஸ் வண்டியில் இருந்து இறங்கிய வேளை, நண்பர்கள் இராசலிங்கம், மலரன்பன் ஆகிய இருவரும் எனது வருகையை எதிர்பார்த்து அங்கு காத்து நின்றார்கள்.

வித்தியாலயத்தில் நடைபெறவிருந்த வாணி விழா தொடங்குவதற்குச் சற்று முன்னதாகவே நான் அங்கு போய்ச் சேர்ந்து

விட்டேன். அதனால் நண்பர் மலரன்பனுடன் சிறிது நேரம் மனம் விட்டுப் பேசுவதற்கு முடிந்தது. விழா நடைபெறவிருந்த மண்டபத்தை அவதானித்த போது எனக்குப் பெரிய வியப்பாக இருந்தது. ஒரு வாணி விழாவைக் காண இப்படியொரு மக்கள் கூட்டமா! என மனதில் எண்ணி ஆச்சரியப்பட்டேன். அங்கு சென்ற பின்னர்தான் அன்று நடைபெறும் 'வாணி விழா' நிகழ்ச்சி நிரல் எனது கையில் கிடைத்தது. இரா. சிவலிங்கம் அந்த விழாவில் பேசுகின்றார் என்பதனை அறிந்து கொண்டதும், அங்கு வந்து கூடி இருக்கும் பெருந்தொகையான மக்களின் வருகைக்கான காரணம் எனக்குப் புரிந்தது. அக்காலத்தில் மலையக மக்கள் மத்தியில் இரா. சிவலிங்கம் மிகுந்த செல்வாக்குடன் இருந்தார். அந்த நிகழ்ச்சியில் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை கலந்துகொள்ளுகின்றார்கள் என்பது எனக்கு மிகுந்த மன மகிழ்ச்சியைக் கொடுத்தது.

வாணி விழா (29.10.1968) சொற்பொழிவு நிகழ்வு கல்லூரி அதிபர் தலைமையில் ஆரம்பமானது. புலவர்மணி, பண்டிதர் தினகரிப்பிள்ளை, இரா. சிவலிங்கம், நான் நால்வரும் அன்றைய விழாப் பேச்சாளர்கள். அவர்கள் எல்லோரும் மூத்தவர்கள்; அனுபவசாலிகள். நான் வயதில் மிகக் குறைந்த இளம் வாலிபன். இரா. சிவலிங்கம் அந்தக் காலத்தில் மலையக மக்களால் பெரிதும் மதிக்கப் பெற்ற ஒரு தலைவர். அவர் நல்ல பேச்சாளர் என்றும் நான் அறிந்திருந்தேன். நிகழ்வுகள் ஆரம்பித்த வேளை இரா. சிவலிங்கம் அங்கு வருகை தந்திருக்க வில்லை.

அந்த விழாவில் முதல் பேச்சாளராகப் புலவர்மணி அவர்கள் பெரிதாகக் குரல் எழுப்பாது வெகு மென்மையாகச் சுவையுடன் பேசினார்கள். அவரை அடுத்துப் பண்டிதர் சங்க இலக்கியம் பற்றிப் பேசினார். அதன் பிறகு நான் சிறுகதை இலக்கியம் பற்றிப் பேச ஆரம்பித்தேன். அரைமணி நேரம் வரை நான் பேசி முடித்திருப்பேன். அப்பொழுது இரா. சிவலிங்கம் விழா மண்டபத்தின் வாசலில் தோன்றினார். சபையில் இருந்த மக்கள் அனைவரும் பின்புறமாகத் திரும்பி அவரைப் பார்க்கலானார்கள். இனி, நான் தொடர்ந்து பேசக்கூடாதென்று எனக்குள் தீர்மானித்துக் கொண்டேன். சிவலிங்கம் மேடையில் வந்து அமர்ந்த பின்னர், யாரும் எதிர்பார்க்காத நிலையில் எனது பேச்சைச் 'சட்'டென்று முடித்துக் கொண்டேன். அதன் பிறகு, பேசுவதற்கு ஆரம்பித்த சிவலிங்கம் வாணி விழாவில் தொட்டு, மலையக மக்கள் பிரச்சினைகள் பற்றி நீண்டதொரு சொற்பொழிவினைச் சிறப்பாக நிகழ்த்தினார்.

சொற்பொழிவு நிகழ்ச்சிகள் அனைத்தும் நிறைவுற்ற பின்னர், மதிய உணவு வழங்குவதற்காக அதிபர் எங்களை அழைத்துச் சென்றார். வித்தியாலயத்தில் நீளமான ஓர் அறையில் அதற்கான ஒழுங்குகள்

செய்யப்பட்டிருந்தன. சாப்பாட்டு மேசையில் புலவர் மணி அருகே நான் அமர்ந்திருந்தேன். மேடையில் நான் பேசிக் கொண்டிருந்தபோது புலவர்மணி எனது பேச்சை மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார் என்பதை நான் அப்பொழுது அவதானித்தேன்.

உணவு மேசையில் எனதருகில் அமர்ந்திருந்த புலவர்மணி நீண்ட நாள் உறவு பூண்டிருந்தவர் போல மிக அன்பாக எனது தோளில் மெல்லத் தடவிய வண்ணம் மென்மையாக, "தம்பி, எங்களுடைய காலம் முடிஞ்சு போய்ச்சு. இனி உங்களுடைய காலம். தமிழை நீங்கள் வளர்க்க வேணும். தமிழுக்குத் தொண்டு செய்ய வேணும். உங்களுடைய கையிலே இருக்கிற பேனா அதற்குப் பயன்பட வேண்டும். என்னுடைய வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்" எனக் கூறி என்னை ஆசீர்வதித்தார்.

அவர் வழங்கிய அந்த ஆசியினால் எனக்கு இதயம் நிறைந்தது. அதன் பிறகு வயிற்றுக்கு உணவு அவசியமானதாக எனக்குத் தோன்றவில்லை.

அங்கிருந்து புறப்படுவதற்கு நான் தயாரானேன். அன்றிரவு தன்னுடன் தங்கி நின்று மறுநாட் காலையில் புறப்பட்டுச் செல்லுமாறு நண்பர் மலரன்பன் கேட்டுக் கொண்டார். எனது பிரயாண ஒழுங்கு பற்றி முன்கூட்டியே குடும்பத்தவர்களுக்கு நான் அறிவித்திருந்தேன். நான் உரிய காலத்தில் வீடு போய்ச் சேரத் தவறினால் அவர்கள் குழப்பம் அடைவார்கள். அப்படியொரு மனக்கலக்கம் அவர்களுக்கு நான் கொடுக்க விரும்பவில்லை. நண்பருடன் தங்கி நிற்க வேண்டி நேருமென முன்கூட்டியே அறிந்திருந்தால் எனது பிரயாணத் திட்டத்தை மாற்றி இருப்பேன். எனக்கிருந்த சூழ்நிலையைச் சொல்லி நண்பர் மலரன்பனிடம் விடைபெற்றுக் கொண்ட வேளையில், "இன்னொரு சமயம் வருவேன். உங்களோடு தங்கி நிற்பேன்" எனக் கூறினேன். ஆனால் அது இன்றுவரை நிறைவேறவில்லை! அதன் பிறகு மலரன்பனை நான் சந்திக்கவே இல்லை என்பது மனதுக்கொரு சுமைதான்.

ஆனால் மாத்தளைப் பயணத்தில் நண்பர் மலரன்பனைச் சந்தித்துப் பேசிய நினைவுகள் இன்றும் என் உள்ளத்தில் பசுமையாக இருக்கின்றன.

ஈழத்தின் இலக்கிய வரலாற்றில் என்றும் அழியாத இடம் பெற்றவர் - மூத்த கவிஞர் - தமிழ் அறிஞர் - புலவர்மணி அவர்களின் ஆசி அன்று எனக்குக் கிடைத்தமையை நான் பெற்ற பெரும் பேறாகக் கருதுகிறேன்.

நண்பர் மலரன்பனுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற இயலாது போனமைக்கு, மலையகத்தில் இருந்து திடீரென யாழ்ப்பாணம் மாற்றலாகி வந்து விட்டதே காரணம். அடுத்த ஆண்டு முடிய, மலையகத்தில் ஆறாண்டு கால ஆசிரிய சேவை எனக்கு நிறைவு பெறும். அப்பொழுது சொந்த ஊருக்கு மாற்றலாகிப் போகும் வாய்ப்பும் கிடைக்கலாம் என்னும் எண்ணம் மனதில் இருந்து வந்தது. ஆனால் நான் எதிர்பாராத நிலையில் - அடுத்த ஆண்டு (1969) முடிய ஏழு மாதங்கள் இருக்கும் போது யாழ்ப்பாணக் கரவெட்டி ஸ்ரீநாரத வித்தியாலயத்துக்கு (01.06.1969) அனுப்பி வைக்கப்பட்டேன். அச்சுவேலியைச் சேர்ந்த இன்னொரு ஆசிரியரும் என்னைப் போல அங்கு ஆசிரியராக வந்து சேர்ந்தார்.

அந்தப் பாடசாலை புதிதாகக் கட்டி எழுப்பப் பெற்ற ஒரு பௌத்தப் பாடசாலை. அரசாங்கம் அந்தப் பாடசாலையைக் கையேற்ற போது, அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமை ஆற்றிக் கொண்டிருந்த எங்கள் இருவருக்கும் மாற்றந் தந்து அங்கே அனுப்பி வைத்தார்கள்.

அந்தப் பாடசாலையைக் கட்டி எழுப்பி, மாணவர்களைச் சேர்த்து, ஆசிரியர்களாகக் கடமை ஆற்றிக் கொண்டிருந்தவர்களுக்கு, அப்பொழுது நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. என்னுடன் மாற்றலாகி வந்திருந்தவர், வயதில் என்னிலும் மூத்தவராக இருந்தார். ஆனால் எனது ஆசிரிய சேவைக் காலம் அவரது சேவைக் காலத்திலும் அதிகமாக இருந்ததினால், அந்த வித்தியாலயத்தின் தற்காலிக அதிபர் பதவியை நான் ஏற்க வேண்டி நேர்ந்தது.

அந்தக் காலத்தில் கரவெட்டி, அல்வாய், அச்சுவேலி, புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் பௌத்தப் பாடசாலைகள் நிறுவப்பட்டன. இந்த நான்கு பௌத்த பாடசாலைகளும் ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் தோற்றுவிக்கப்பட்டன. ஒடுக்கப்பட்ட மக்கள் தலைவர் அம்பேத்கர் காட்டிய வழியில், வட பிரதேசத்தில் வாழ்ந்த மக்களை மதமாற்றம் செய்வதற்காகவே, பௌத்தப் பாடசாலைகள் தாபிக்கப்பட்டன என இன்றுவரை பலர் அரசியல் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். பௌத்தப் பாடசாலைகள் தாபிக்கப்பெற்ற காலத்தில் அதனைத் தமது அரசியல் இலாபங்களுக்காகப் பயன்படுத்தியவர்கள், ஒடுக்கப் பெற்ற சமூக மாணவர்கள் கல்வி கற்பதற்கு அதுவரை அனுமதிக்காத தங்கள் பகுதிப் பாடசாலைக் கதவுகளைத் திறந்து அவர்களை அனுமதிப்பதற்கு எந்தவித முயற்சியும் மேற்கொள்ளவில்லை! அதுவரை இருந்து வந்த சாதியக் கட்டமைப்பு குலையா வண்ணம் அதனைப் பேணும் வகையில், பௌத்தப் பாடசாலைக்குப் போட்டியாக ஒடுக்கப்பட்ட மாணவர் களுக்கென்று புதிய சைவப் பாடசாலை நிறுவும் அரும்பணியில் தமிழ் அரசியல் வாதிகள் முனைந்து நின்றார்கள்.

வடபிரதேசத்தில் பௌத்தப் பாடசாலைகள் தாபிக்கப்பட்ட காலத்தில் ஆட்சியில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இருந்தது. அரசாங்கத்தின் நோக்கம், பௌத்த சங்கத்தின் நோக்கம் எதுவாக இருந்தாலும், பாடசாலைகளை உருவாக்கி, அவற்றை நடத்தி வந்த ஆசிரியர்களின் அடிப்படை நோக்கம் வேறாகவே இருந்தது. அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை வடபிரதேசம் எங்கும் பரவலாகப் பதினைந்து பாடசாலைகளை நிறுவி, ஒடுக்கப்பட்ட சமூகப்பிள்ளைகள் கல்வி பெறும் வாய்ப்பினை வழங்கியதுடன், இந்தச் சமூகத்தவர்கள் பலருக்கு ஆசிரிய நியமனங்கள் பெற்றுக் கொடுத்த நிலைமைகள் தடைப்பட்டுப் போக, அதே வழியைப் பின்பற்றி பௌத்தப் பாடசாலைகளைத் தாபித்தார்கள். மதம் மாறுவது அவர்கள் நோக்கமல்ல. அரசியல்வாதிகள் தங்கள் இலாபங்களை நோக்கமாகக் கொண்டு அந்த மக்களுக்குப் பௌத்த சாயம் பூச முற்பட்டார்கள்.

பௌத்தப் பாடசாலைகளின் வருகைக்கு முற்பட்ட காலத்தில், நல்லூர் ஆசிரியக் கலாசாலையில் ஆசிரியப் பயிற்சி பெறுவதற்காக, உயர்ந்த சாதியார் என்று சொல்லிக் கொள்ளும் பலர் கிறிஸ்தவர்களாக மதம் மாறி, கலாசாலை அனுமதி பெற்றுக்கொண்டதுதான் யாழ்ப்பாணத்து இந்துக்களின் வரலாறு. அக்காலத்தில் மேற்கிளம்பாத எதிர்ப்புக்குரல்கள் பௌத்தப் பாடசாலைகள் நிறுவப்பட்ட சமயம் எழுந்தமைக்கு அரசியல் இலாபமும், சமூக ஒடுக்குமுறையைத் தொடர்ந்து பேணுவதற்கான எத்தனமுமே காரணங்கள்.

நான் கரவெட்டி ஸ்ரீநாரத வித்தியாலயத்துக்கு மாற்றலாகி வந்த பிற்பாடு, முன்னர் போல மீண்டும் சமூகத்துக்குள் வந்தேன்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராகச் சேர்ந்து கொண்டேன்.

மல்லிகையில் தீவிரமாக எழுத ஆரம்பித்தேன்.

ஜெயகாந்தன் கம்யூனிஸக் கருத்துகளில் இருந்து தடுமாறி விடுபட்டு, புதிய ஜெயகாந்தனாகக் கம்யூனிஸ விரோதக் கருத்துக்களை முன்வைக்க ஆரம்பித்ததைக் கண்டித்து, மல்லிகையில் அப்போது நானொரு கட்டுரை எழுதினேன். அந்தக் கட்டுரை வெளிவந்த பிற்பாடு, ஒரு தினம், மு. தளையசிங்கம் கஸ்தூரியார் வீதியில் என்னைச் சந்தித்தார். அவரை முன்னரே எனக்குத் தெரியும். அவருடன் பேசியும் இருக்கின்றேன். ஆனால் நெருக்கமான ஓர் உறவு அப்பொழுது இருக்கவில்லை. அன்று வீதியில் சந்தித்த மு.த., ஒரு 'மில்க் பாரு'க்கு என்னை அழைத்துச் சென்று எனக்குப் பால் வாங்கித் தந்ததுடன் தானும் வாங்கிக் குடித்தார். மிக நீண்ட நேரம் என்னுடன் இருந்து உரையாடினார். மல்லிகைக் கட்டுரையைப் பாராட்டிச் சொன்னார். அப்படியொரு கட்டுரை நான் எழுதுவேன் என அவர் எதிர்பார்க்

கவில்லை என்பதனை அவருடைய உரையாடலை அவதானித்து நான் உணர்ந்து கொண்டேன். அந்த எண்ணம் காரணமாகவோ, என்னவோ என்னை மிகவும் பாராட்டினார். அவர் மனந்திறந்து என்னைப் பாராட்டியதும், அவர் உரையாடிய முறையும் என்மனதைப் பெரிதும் கவர்ந்தன. அந்தச் சந்திப்பின் பிறகு அவர் மீது மிகுந்த மரியாதையும் அன்பும் நான் வைத்திருந்தேன். அவரைச் சந்திக்க நேர்ந்த போதில் எல்லாம் நெருக்கமாக அவருடன் நான் பழகி வந்தேன்.

அதனை இங்கு ஏன் இப்பொழுது குறிப்பிடுகின்றேன் எனில், அவரது மரணம் என்னை வெகுவாகப் பாதித்தது.

பாரதியின் மரணத்துடன் மு.த. இன் மரணத்தை இப்பொழுதும் எனது மனம் ஒப்பிட்டுப் பார்ப்பதுண்டு.

மதம் பிடித்த யானையினால் தாக்கப்பட்டு பின்னர் அதனால் நோய்வாய்ப்பட்டுக் கிடந்து காலமானான் பாரதி.

ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களுக்குத் தேவையான தண்ணீரைத் தாங்களே கிணற்றில் இருந்து அள்ளிக் குடிக்க வேண்டுமென போராட்டம் நடத்தி, சாதி வெறியர்களால் தாக்கப்பட்டு, நோய்வாய்ப்பட்டுக் கிடந்து காலமானார் மு.த.

யானையின் மதவெறிக்கு பாரதி பலி; சாதிய மதவெறிக்கு மு.தளையசிங்கம் பலி.

எனது உள்ளத்தில் தளையசிங்கத்துக்கு என்றும் உயர்ந்த ஓர் இடம் உண்டு.

தளையசிங்கத்தின் பாராட்டை நான் பெற்ற காலத்தில், பிறருடைய கவனத்துக்குரிய படைப்பாளியாக வளர்ந்து விட்டேனா? என எண்ணத் தோன்றியது. அப்படி இல்லையானால், எனது எழுத்துக்கள் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படாமல் நிராகரிக்கப் பட்டிருக்காதல்லவா!

எனது சிறுகதைகளை விரும்பி வரவேற்று தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டு வந்தது 'சிந்தாமணி'. அந்தச் சிந்தாமணிதான் எனது சிறுகதையை வெளியிடுவதற்கு முடியாதென நிராகரித்த முதல் பத்திரிகை. 'இந்தத் தேசத்துக்காக...' சிறுகதை அரசியல் கலப்புள்ளது எனக் கூறி, பிரதியைத் திருப்பி அனுப்பியது.

அந்தப் பிரதியைத் தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் 'தாமரை' சஞ்சிகைக்கு நான் அனுப்பி வைத்தேன். தாமரை அந்தச் சிறுகதையை 1971 செப்டம்பர் இதழில் வெளியிட்டு வைத்தது.

அந்தக் காலகட்டத்தில் எனது தம்பி நவரத்தினம் (க.நவம்) கல்முனை சாஹிராக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிக்

கொண்டிருந்தான். அவன் அந்தச் சிறுகதையை நாடகம் ஆக்கி, தமிழ்த் தினப் போட்டியில் மாணவர்களைக் கொண்டு நடிக்க வைத்தான். தேசிய மட்டப்போட்டியில் அந்த நாடகம் முதல் பரிசினைப் பெற்றுக் கொண்டது. தேசிய மட்டத்தில் நடந்த தமிழ்த் தின விழாவில் பிரதம அதிதியாகக் கல்வி மந்திரி பதியுதீன் முகமட் கலந்து கொண்டார். அந்த விழாவில் அந்த நாடகத்தை அவர் கண்டுகளித்தார்.

அதன் பிறகு அவர் பங்கு பற்றிய பல பொதுக் கூட்டங்களில் உரையாற்றிய சந்தர்ப்பங்களில் எல்லாம் 'இந்தத் தேசத்துக்காக...' எனக் கூறி கொண்டிருந்தார் என்பதனை நான் கேள்வியுற்றேன்.

இத்தனைக்கும் ஒரு பத்திரிகையில் நிராகரிக்கப் பெற்ற ஒரு சிறுகதையின் நாடக வடிவம் அது என்பது யாருக்கும் தெரிந்திருக்க முடியாது.

இந்தக் காலத்தில் எனது இன்னொரு சிறுகதைக்கும் இந்தக் கதி வந்து சேர்ந்தது.

ஒரு சமயம் அகில இலங்கை மட்டத்தில் நடைபெற்ற சிறுகதைப் போட்டி ஒன்றுக்கு நான் சிறுகதை ஒன்று அனுப்பி வைத்தேன். அந்தப் போட்டியில் எனது சிறுகதை பரிசு பெறவில்லை. அதுதான் போகட்டும்; பாராட்டுப் பெற்ற கதையாகவும் அது தேர்ந்தெடுக்கப் படவில்லை. ஆனால் அந்தப் போட்டியை நடத்தியவர்கள் பிரதியைத் தவறாமல் பெருந்தன்மையுடன் எனக்கு அனுப்பி வைத்தார்கள். எனது கையில் கிடைத்த அந்தப் பிரதியை 'வீரகேசரி' பத்திரிகைக்கு நான் அனுப்பினேன்.

நீண்ட காலமாகியும் அந்தச் சிறுகதை பிரசுரமாக வில்லை. என்னிடம் அதன் பிரதியும் இல்லை. நான் அதை மறந்தே போனேன்.

ஒருநாள் திடீரென அந்தப் பிரதி தபாலில் எனக்கு வந்து சேர்ந்தது. வீரகேசரியில் பணி ஆற்றிக்கொண்டிருந்த நண்பர் முருகபூபதி, நிராகரிக்கப்பெற்ற அந்தப் பிரதியைக் கண்டெடுத்து எனக்கு அனுப்பி வைத்தார். நான் அதைக் கொண்டு சென்று ஜீவாவிடம் மல்லிகைக்குக் கொடுத்தேன். மல்லிகை அந்தச் சிறுகதையை 1971 நவம்பரில் வெளியிட்டு வைத்தது.

இலங்கைக் கலாசாரப் பேரவை அடுத்த ஆண்டு (1972) ஜனவரியில் இலக்கிய விழா ஒன்றினை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்குத் தீர்மானித் திருந்தது. விழாக் குழுவின் தலைவராக பேராசிரியர் கா. சிவத்தம்பி இருந்தார். செயற்குழு உறுப்பினர்களுள் நானும் ஒருவன். செயற்குழு ஆலோசனைக் கூட்டம் முடிந்து மாலை வேளையில் பேராசிரியரின் காரில் நான் வீடு திரும்பி வருவேன். பேராசிரியாருடன் உரையாடிய வண்ணம் ஒன்றாகப் பிரயாணஞ் செய்து கொண்டு வருவது மிகச்

சுவையான ஓர் அனுபவம். அவ்வாறு ஒரு தினம் இருவரும் காரில் வந்து கொண்டிருக்கும்போது மல்லிகையில் வெளிவந்த அந்தச் சிறுகதை பற்றி எடுத்துச் சொல்லி, நல்ல சிறுகதையெனப் பேராசிரியர் பாராட்டினார். பேராசிரியர் கா.சி. சொல்லி முடிக்கும் வரை மௌனமாகக் கேட்டுக் கொண்டு வந்த நான், அந்தச் சிறுகதைப் போட்டிக்கு அனுப்பிப் பரிசு பெறாது போனது, வீரகேசரி பிரசுரிக்காமல் நிராகரித்தது ஆகிய சம்பவங்களை அவருக்கு எடுத்துச் சொன்னேன்.

பேராசிரியர் கா.சி. சற்று நேரம் மௌனமாக இருந்து மெல்லக் காரைச் செலுத்திக் கொண்டிருந்தார். பின்னர் அருகில் அமர்ந்திருந்த என்னைப் பார்த்து, "தெணி, இனிப் போட்டிகளுக்கு நீங்கள் கதைகளை அனுப்பவேண்டாம். உங்கள் கதைகளுக்கு.... உங்களுக்குப் பரிசு தரமாட்டார்கள். போட்டி நடத்துகிறவர்கள் யார்? நடுவர்கள் யார்? என்று பார்த்து போட்டிக் கதைகளை அனுப்பினால் ஒருவேளை பரிசுகள் தருவார்கள்" எனச் சொல்லி மெல்லச் சிரித்தார்.

அன்று முதல் (06121971) இனிமேல் போட்டிகளுக்கு எழுதுவதில்லை எனத் தீர்மானித்துக் கொண்டேன்.

அந்தச் சிறுகதைதான் 'மாத்து வேட்டி'. மல்லிகையில் வேறொரு தலைப்பில் அந்தச் சிறுகதை வெளி வந்தது. அதன் தலைப்பினை 'மாத்து வேட்டி'யாக மாற்றும்படி ஆலோசனை கூறியவர் பேராசிரியர் கா.சி.

மல்லிகைப் பந்தல் வெளியீடாக வெளிவந்திருக்கும் எனது இரண்டாவது சிறுகதைத் தொகுதி 'மாத்து வேட்டி'.

இந்தச் சிறுகதைகள் போல நிராகரிக்கப்பட்ட எனது படைப்புக்கள் இன்னும் சில உண்டு. அவை பற்றிய சுவாரசியமான தகவல்களைப் பின்னர் பார்க்கலாம்.



14

கரவெட்டி பௌத்தப் பாடசாலையில் இருந்து அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயத்துக்கு இடமாற்றம் 01.05.1972 பெற்றுக் கொண்டேன். இந்த மாற்றத்தை நானே விரும்பிக் கேட்டுப் பெற்றேன். கரவெட்டியில் மேலும் சில காலம் தொடர்ந்து இருந்திருந்தால் எனது தற்காலிக அதிபர் பதவி நிரந்தரமாக்கப்பட்டிருக்கும். அப்படியொரு வாக்குறுதி எனக்கு வழங்கப்பட்டிருந்தது. மிக இளம் வயதில் நான் அதிபராகி இருக்கலாம். நான் அதிபர் பதவியை விரும்பாததினால் அல்வாய்ப் பாடசாலைகளுக்கு மாறிச் சென்றேன்.

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயத்தில் இருந்து எனது தாயார் பிறந்த இல்லம் சுமார் இருநூறு மீற்றர் தூரத்தில் இருந்தது. அந்தப் பாடசாலை கட்டப்பட்டிருக்கும் நிலத்தில் நான்கு பரப்பு நிலம் எனது தாய்வழிச் சொத்து. எனது தாய்மாமன் நா.வடிவேலு, எனது தந்தையார் ஆகிய இருவருமாக 1954-ல் அந்தப் பாடசாலை தாபிக்கப்பெற்ற சமயம் அந்த நிலத்தைப் பாடசாலைக்குக் கையளித்தார்கள். ஸ்ரீலங்கா வித்தியாலயம் என அந்தப் பாடசாலையின் பெயர் இருப்பதனால், அல்வாயில் நிறுவப் பெற்ற பௌத்தப் பாடசாலையே இதுவெனத் தவறாக இன்றும் கருதுகின்றவர்கள் சிலர் இருக்கின்றார்கள். அல்வாயில் நிறுவப்பெற்றது சேமகே வித்தியாலயம் என்னும் பௌத்தப் பாடசாலை. அந்தப் பாடசாலையை, என்னுடன் ஒன்றாகப் படித்த, அல்வாயைச் சேர்ந்த, நீண்டகாலம் வேலையற்றிருந்த ஒருவரே முன்னின்று நிறுவினார்.

அல்வாயின் மூத்த ஆசிரியர் க. முருகேசு அவர்கள் அங்கே பௌத்தப் பாடசாலை தாபிக்கப்படுவதை மூர்க்கமாக எதிர்த்தார்.

பௌத்தம் மக்கள் மத்தியில் பரவுவதனைத் தடுப்பதுதான் அவர் எதிர்த்து நின்றதன் அடிப்படை நோக்கம் என இன்று கூறப்படுவது கற்பிதமான வெறும் போலி நியாயம். "எல்லோரும் வாருங்கள்! புத்த மதமே நமக்கு கதி அளிக்கும்!" எனத் தாழ்த்தப்பட்ட மக்களைக் கூவி அழைக்கும் மஞ்சள்நிறத் துண்டுப் பிரசுரம் ஒன்றினை 27.05.1953-ல் வெளியிட்டவர் அந்த ஆசிரியர். அந்தத் துண்டுப் பிரசுரத்தின் பிரதி ஒன்று இப்பொழுதும் எனது கைவசம் இருந்து வருகின்றது. அதனை அறியாமல் இவ்வாறு நடந்ததா? என இன்று சந்தேகம் எழுப்பு கின்றவர்களின அறியாமை கண்டு என்ன சொல்வது? அவர் தனது இல்லத்திற்குச் 'சித்தார்த்தரகம்' என அக்காலத்தில் பெயர் சூட்டி இருந்தார். தனது உறவினர்கள் சிலரை ம்ஞ்சள்நிற ஆடை உடுத்தவும் செய்தார். ஒடுக்கப்பட்ட மக்கள் சமூக ஒடுக்குமுறையில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்னும் உத்வேகத்துடன் இத்தகைய செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டார்.

அல்வாயில் தோற்றுவிக்கப் பெற்ற பௌத்தப் பாடசாலையை அவர் எதிர்த்து நின்றமைக்கு உள்ளீடான ஒரு காரணம் இருந்து வந்தது. ஸ்ரீலங்கா வித்தியாலயத்தில் கல்வி கற்றுக்கொண்டிருந்த மாணவர்களில் ஒரு பகுதியினரை, பௌத்த மதப் பாடசாலை எனப்படும் சேமகே வித்தியாலயத்தில் ஆசிரியர்களாகப் புதிய நியமனம் ஒன்றைப்பெற்றுக் கொள்வதற்காகப் படிப்பித்துக் கொண்டிருந்தவர்கள் அழைத்துச் சென்றார்கள். அதனால் ஸ்ரீலங்கா வித்தியாலயம் வீழ்ச்சி அடையும் நிலை உருவாகியது. அக்காலத்தில் அதிபராக இருந்த க. முருகேசு பௌத்தப் பாடசாலை அல்வாயில் தாபிக்கப்படுவதை எதிர்த்து நிற்க வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு ஆளானார்.

பௌத்தப் பாடசாலைகளை நிறுவியவர்கள் ஆசிரிய நியமனங்களைப் பெற்றுக்கொண்டு போய்விட்டார்கள். ஆனால் இன்று அல்வாயிலும், அச்சு வேலியிலும் பௌத்தப் பாட சாலைகளில்லை. பௌத்த மதம் சார்ந்தவர்களாக இவர்களுள் ஒருவர்தானுமில்லை.

கரவெட்டி பௌத்தப் பாடசாலையில் அதிபராகக் கடமை புரிந்து கொண்டிருந்த நான், பௌத்தப் பாடசாலைக்கு எதிராகச் செயற்பட்டுக் கொண்டிருந்த ஸ்ரீலங்கா வித்தியாலயத்தில் ஆசிரியராக வந்து சேர்ந்தேன். ஸ்ரீலங்கா வித்தியாலயத்தில் எனக்கொரு பாத்தியதை உண்டென்னும் எண்ணமும் மனதில் இருந்து வந்தது. பௌத்தம் எனக்கொரு பிரச்சினை அல்ல. சாதிப்பாகுபாட்டுக்கு அடிப்படையாக இருக்கும் இந்துமதக் கட்டுமானங்களை முற்றாக உடைக்க வேண்டுமென்றே நான் விரும்பினேன்.

அல்வாய் எனது தாயார் பிறந்த கிராமம் என்பதனால், அந்தப் பகுதி எனக்குப் புதிதல்ல. சிறுவயது முதல் நான் புழங்கி வந்த ஊர்.

என்னுடன் ஒன்றாகக் கல்வி கற்ற நண்பர்கள் பலர் அங்கே இருந்தனர். முற்போக்குச் சிந்தனையுடைய வாலிபக் கூட்டம் ஒன்று அங்கு அக்காலத்தில் இயங்கிக் கொண்டிருந்தது.

பல கட்சிகள் கூட்டுச் சேர்ந்த ஐக்கிய முன்னணி, சிறிமாவோ பண்டாரவளை நாயக்கவைப் பிரதமராகக் கொண்டு 1970-ல் அரசமைத்து ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் எம்.சி. சுப்பிரமணியம் நியமன உறுப்பினராக அந்த அரசில் இடம் பெற்றிருந்தார். அந்தச் சந்தர்ப்பத்தை வாகாகப் பயன்படுத்த எண்ணினேன். எனது கட்சித் தோழர் எஸ்.கே. இராசேந்திரன் தேவரையாளி இந்துக் கல்லூரியில் எழுதுவினைஞராகக் கடமை ஆற்றிக் கொண்டிருந்தார். அவரைச் சந்தித்து ஆலோசனை நடத்திய பின்னர், ஒருநாள் அவரும் நானும் அல்வாய் முத்துமாரி அம்மன் கோவில் முகாமையாளரைச் சந்திக்கச் சென்றோம்.

அந்தக் கோவிலில் வருடாந்த உற்சவம் நடைபெறும் காலத்தில் எனது பெத்தாச்சியுடன் (அம்மாவின் தாய்) அங்கு சென்றிருக்கின்றேன். தேர், தீர்த்தம் இரண்டும் ஒரே நாளில் அப்பொழுது அங்கே நடைபெறுவதைப் பார்க்க எனக்கு ஆச்சரியமாக இருந்தது இப்பொழுதும் நினைவில் இருக்கிறது.

கோயில் முகாமையாளரின் முதல் சந்திப்புடன் எங்களுடைய அலைச்சலும் ஆரம்பமானது. கோயிலைச் சார்ந்தவர்கள் எங்களை இழுத்தடிக்கத் தொடங்கினார்கள். நாங்கள் இருவரும் அங்கும் இங்குமாக அலைந்து கொண்டிருந்தோம். எங்களுடன் ஆதரவாக நின்றவர்களுக்கு உடனுக்குடன் தகவல்களைக் கொடுத்துக் கொண்டிருந் தோம்.

ஒருநாள் பிற்பகல் நண்பர் இராசேந்திரனும் நானும் ஒருவரைச் சந்திப்பதற்காக முத்துமாரியம்மன் கோயிலுக்குக் கிழக்கேயுள்ள வீதியில் சயிக்கிளில் சென்று கொண்டிருந்தோம். கோயிலுக்கு அண்மையில் வீதி மதகின் மீது இளைஞர்கள் சிலர் அப்பொழுது உட்கார்ந்திந்தார்கள். நாங்கள் வந்து கொண்டிப்பது கண்டு, "அல்லா.... அல்லா...." எனக் குரல் எடுத்துப் பாடத் தொடங்கினார்கள். நாங்கள் அவர்களைக் கடந்து சென்ற பின்னர் "பள்ளா.... பள்ளா...." எனப் பாட ஆரம்பித்தார்கள். அதைக் கேட்டதும் எனக்குப் பக்கென்று கோபம் பற்றிக் கொண்டு வந்தது. சயிக்கிள் பிறேக்கை அழுத்திப் பிடித்தேன். நண்பர் இராசேந்திரன் என்னைப் போல முன்கோபக்காரன் அல்ல. நிதானமாக எதையும் அணுகுகின்றவர். "பேசாமல் வாருங்கோ! அவன்கள் சண்டையைக் கிளப்பி எங்கடை காரியத்தைக் குழப்பப் பார்க்கிறான்கள்" எனச் சொல்லி என்னைச் சமாதானப்படுத்தி

அழைத்துக் கொண்டு சென்றார். அதன் பிற்பாடு தொடர்ந்து நாங்கள் எடுத்த முயற்சியினால் அந்த ஆலயத்துக்குள்ளே 15.08.1972-ல் ஒடுக்கப்பட்ட மக்கள் பிரவேசம் செய்தோம். இன்று எல்லோரும் அங்கு சென்று சமத்துவமாக வழிபட்டு வருகின்றனர்.

இலக்கியவாதி ஒருவரின் தொடர்பினால் நான் பெற்ற அனுபவத்தை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகின்றேன். எனது கிராமத்துக்கு அடுத்துள்ள கிராமத்தில் வாழ்ந்த இலக்கிய ஈடுபாடுள்ள ஒருவர் இடையிடையே என்னைத் தேடிவந்து சந்திப்பதுண்டு. ஒரு சமயம் அவர் எடுத்துக்கொண்ட முயற்சியினால் அவருடைய கிராமத்து ஆலய வீதியில் இலக்கிய விழா ஒன்று நடைபெறுவதற்கு ஏற்பாடாகி இருந்தது.

அந்த விழாவில் நான் கலந்து கொண்டு பேச வேண்டுமென அவர் என்னிடத்தில் வந்து கேட்டுக்கொண்டார். அந்தக் கிராமத்து மக்கள் கலை, இலக்கியங்களில் பெரிய அளவில் ஈடுபாடு உள்ளவர்கள் அல்லர் என்பது எனக்குத் தெரியும். அவர்களிடத்தில் இன்னும் நாகரிகம் அடையாத கிராமியத் தன்மைகள் நிறைய உண்டென்பதும் நான் அறிவேன். ஆயினும் அந்த இலக்கியவாதி வந்து கேட்கின்றார் என்பதனால் அவர் ஏற்பாடு செய்யும் அந்தக் கூட்டத்தில் பங்கு பற்றிப் பேசுவதற்கு நான் உடன்பட்டேன். அவர் அந்த விழாவுக்கான ஒழுங்குகளில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருப்பதை நான் அறிந்திருந்தேன்.

விழா நடைபெறுவதற்குச் சில தினங்களுக்கு முன்னர் அந்த இலக்கியவாதியிடம் இருந்து நான் எதிர்பாராத கடிதம் ஒன்று எனக்கு வந்து சேர்ந்தது. தங்கள் கிராமத்தில் நடைபெறவுள்ள சாதிமான்களின் விழாவில் நான் பங்கு பற்றிப் பேசுவதனால் கலவரம் உண்டாகும் என்றும், அதனால் அந்த விழாவுக்கு நான் வரவேண்டியதில்லை எனவும் அவர் அந்தக் கடிதத்தில் எனக்குத் தெரிவித்திருந்தார். அதன் பிற்பாடு அந்த இலக்கியவாதி என்னைத் தேடிவந்து சந்திப்பதைத் தவிர்த்துக் கொண்டார். அவர் என்னிடம் வராது போனதினால் நான் விசனப்பட்டுக் கொள்வதற்கு ஒன்றுமில்லை. ஆனால் அவர் படித்துவிட்டுத் தருவதாக என்னிடம் பெற்றுச் சென்ற மல்லிகையின் பழைய இதழ்கள் திரும்பி வருமென 1972 முதல் இன்றுவரை நான் எதிர் பார்த்துக் காத்திருக்கின்றேன்.

இலங்கை வானொலியுடன் தொடர்புகள் இல்லாதிருந்த நான் இந்தக் காலகட்டத்தில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டேன். எனது நாடகங்கள் வானொலியில் ஒலிபரப்பாகின. இலங்கை வானொலியில் சிறுகதைகள் ஒலிபரப்பு செய்வதற்கு ஆரம்பித்த போது (முன்னர் ஒலிபரப்பு செய்யப் பெற்று தடைப்பட்டிருந்திருக்க

வேண்டும்) முதற் சிறுகதையாக எனது 'விழுதுகள் வளருகின்றன' என்னும் கதையை 10.07.1973-ல் ஒலிபரப்பினார்கள். பின்னர் 13.08.1973-ல் அச்சிறுகதையை மறு ஒலிபரப்பு செய்தார்கள். இதற்கு முன்னர் யாழ். இலக்கிய நண்பர்கள் கழகம் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற 'பெண் பாவை' வாலிபர் வட்டத்தில் ஒலிபரப்பு செய்யப்பட்டது.

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த என்னை, தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு வருமாறு கேட்டு, அதிபர் என்னிடம் சம்மதக் கடிதம் ஒன்றைப் பெற்றுக்கொண்டார். அதன் பின்னர் சில நாட்கள் கழிந்து V.V. வைரமுத்துவுக்குப் பாராட்டு விழாவும் அதனைத் தொடர்ந்து நாடக விழாவும் இடம்பெற்றதற்கு முதல் நாள், 08.03.1973 -ல் நான் தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டு மீண்டும் வந்து சேர்ந்தேன். எனது தாய்வீடு வந்து சேர்ந்து விட்டதான ஓர் உணர்வு அப்பொழுது உள்ளத்தில் எழுந்தது.

நான் மலையகத்தில் இருந்து யாழ்ப்பாணம் மாற்றலாகி வருவதற்கு முன்னர், மலையகத்தில் வாழ்ந்த கடைசிக் காலத்தில், 'விடிவை நோக்கி' நாவலை எழுதி முடித்தேன். இது எனது முதல் நாவல். கண்டியில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த வாரப் பத்திரிகை 'செய்தி' அந்த நாவலைப் பிரசுரிப்பதாகத் தெரிவித்து ஏற்றுக் கொண்டது. பின்னர் இரண்டு ஆண்டுகள் கழிந்தும் அந்த நாவல் பிரசுரிக்கப்படாமல் இருப்பது கண்டு நான் எடுத்த பெரும் பிரயத்தனத்தின் பிறகு அந்தப் பிரதி எனது கைக்கு வந்து சேர்ந்தது. பதுளை எஸ். கணேசன் செய்தியில் உதவி ஆசிரியராக இருந்திருக்காது போனால் அந்தப் பிரதி என்னிடம் வந்து சேர்ந்திருக்குமென உறுதியாகச் சொல்ல இயலாது. ஆனால் திருப்பி அனுப்பப்பட்ட பிரதியில் ஒரு அத்தியாயம் எப்படியோ தொலைந்து போய்விட்டது. உண்மையில் அது தொலைந்துதான் போனதா? அல்லது தொலைக்கப்பட்டதா? என்பதில் இன்றுவரை எனக்குத் தெளிவில்லை.

அந்த நாவலின் பிரதான பாத்திரம் ஆசிரியர் கோவிந்தன். அவன் ஒடுக்கப்பட்டவர்களை அதுவரை அனுமதிக்காத சாதிமான்களின் பாடசாலை ஒன்றுக்கு மாற்றலாகி வருகின்றான். அவன் வருகையை எதிர்பார்க்கும் சாதிய சமூகம், பாடசாலை மதிலில் சித்திரம் ஒன்றைத் தீட்டி வைக்கின்றது. கோவிந்தன் என்றால் கண்ணன். கண்ணபிரான் மரமேறும் சீவற் தொழிலாளியின் அணிகலன்களை அணிந்து கொண்டு பனையில் ஏறுவதனைச் சித்திரிக்கும் காட்சி அது. அந்தக் காட்சியினையே அந்த அதிகாரம் விவரமாகச் சித்திரிக்கின்றது.

அந்தக் காட்சியே, அந்த நாவல் செய்தியில் பிரசுரமாவதற்குத் தடையாக இருந்திருக்கின்றது என்பதனை நான் புரிந்துகொண்டேன்.

வீரகேசரி நிறுவனம் நாவல்கள் வெளியிடுவதற்கு ஆரம்பித்த சமயம் - அவர்களின் கடிதங் கண்டு - கைவசம் இருந்த பிரதியை அனுப்பி வைத்தேன். அந்தப் பிரதி 1973 ஜூலை மாதம் நூலாக - வீரகேசரியின் பன்னிரண்டாவது வெளியீடாக வெளிவந்தது.

அதன் வெளியீட்டு விழா தேவரையாளி இந்துக் கல்லூரியின் திறந்தவெளி அரங்கில் அதிபர் எம்.எஸ். சீனித்தம்பி தலைமையில் 12.10.1973 மாலையில் நடைபெற்றது. பேராசிரியர் கா.சிவத்தம்பி, கலாநிதி சபா. ஜெயராசா, மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா ஆகியோரும்வேறு சிலரும்விழாவில்பங்குகொண்டுஉரையாற்றினார்கள்.

'விடிவை நோக்கி' எனது கன்னிப் படைப்பு. முதலாவது நூல் வெளியீடு. அந்த நூல் வெளியீட்டு விழாவுக்கு வருகை தந்து கலந்து கொண்ட மக்கள்தொகை போல, அதன் பின்னர் கல்லூரித் திறந்த வெளியரங்கில் நூல் வெளியீடுகள் இடம்பெறவில்லை. கல்லூரி மண்டபங்களிலேயே நான் நூல்வெளியீட்டு விழாக்களை நடத்தினேன்.

அக்காலத்தில் நான் ஒரு ஆரம்பகால எழுத்தாளன். பத்திரிகைகள், சஞ்சிகைகளில் தீவிரமாக எழுதிக் கொண்டிருந்தேன். தேசியப் பத்திரிகைகள் சிந்தாமணி, வீரகேசரி என்பவற்றில் எனது எழுத்துக்கள் வெளிவந்து கொண்டிருந்தன. அந்தப் பத்திரிகைகள் பொதுவாக வாசகர்கள் மத்தியில் எனக்குப் பரவலான அறிமுகத்தைத் தேடித் தந்தன. மல்லிகை எனக்குக் காத்திரமான களம் அமைத்துத் தந்தது. மல்லிகைக்கூடாக முற்போக்குச் சிந்தனையுள்ள பலரின் அறிமுகத்தை நான் பெற்றுக்கொண்டேன்.

நான் அடிப்படையில் எனக்கென்று ஒரு கொள்கையின்றித் தனித்து உதிரியாக நின்றவனல்லன். முற்போக்கு அணியில் ஒருவனாக அவர்களுடன் நெருக்கமான உறவு பூண்டவனாக இருந்தேன். அரசியல் சார்ந்த எனது கொள்கையுடன் முரண்பட்டு நின்றவர்கள், அந்த முரண்பாடு காரணமாக எனது படைப்புகளைத் திட்டமிட்டு மோசமாக விமரிசனம் செய்யும் நிலைக்கு அப்பொழுதும் நான் ஆளானேன்.

அதேசமயம் முற்போக்குச் சிந்தனையுள்ளவர்களின் ஆதரவும், நட்பும் என்னைத் தேடி வந்தது. உண்மையைச் சொல்வதானால், ஜீவாவுடன் நெருக்கமாக இருந்தவர்கள் அந்த நெருக்கத்தை என்னிடத்தும் காட்டினார்கள். எனது முதல் நாவல் 'விடிவை நோக்கி' வெளிவந்த காலத்தில் இதனை நான் நன்றாக உணர்ந்தேன்.

'விடிவை நோக்கி' நாவல் அறிமுக விழா ஒன்றுக்கான ஒழுங்குகளை நண்பர் முருகபூபதி முன்னின்று செய்தார். நீர்கொழும்பு இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் 27.10.1973 மாலையில் அந்த விழா நடைபெற்றது. டொமினிக் ஜீவா, முருகபூபதி, தெளிவத்தை ஜோசப், பஷீர் ஆகியோர் விழாவில் கலந்துகொண்டு நாவல் பற்றிப் பேசினார்கள். நண்பர் எஸ்.கே. இராசேந்திரன் அந்த அறிமுக விழாவுக்கு என்னுடன் நீர்கொழும்பு வந்திருந்தார்.

எனது இலக்கியப் பயணத்தில் என்றும் நினைவுகூரப்பட வேண்டியது கல்முனையில் நடைபெற்ற 'விடிவை நோக்கி' அறிமுக நிகழ்வு. 'விடிவை நோக்கி' நாவல் அறிமுகமும், டொமினிக் ஜீவா இலக்கியச் சந்திப்பும் ஒரே சமயத்தில் நடைபெறத் தகுந்த வண்ணம் கல்முனை எழுத்தாளர்கள் ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். அப்பொழுது கல்முனை சாஹிராக் கல்லூரி ஆசிரியராக இருந்த எனது தம்பி நவம் கல்முனை எழுத்தாளர்களுடன் இணைந்து செயற்பட்டான்.

கல்முனை பத்திமாக் கல்லூரியில், கவிஞர் நீலாவணன் தலைமையில் நாவல் அறிமுக விழா 28.11.1973-ல் இடம்பெற்றது. மருதூர்க்கொத்தன் நாவலைப் பற்றிப் பேசினார். அதன் பின்னர் அந்த அரங்கிலேயே ஜீவாவின் இலக்கியச் சந்திப்பு நிகழ்ந்தது. நீலாவணன் தனது இல்லத்தில் இரவு விருந்தளித்து எங்களைக் கௌரவித்தார்.

மறுநாள் மட்டக்களப்பு ஆசிரியக் கலாசாலை ஆசிரிய மாணவர் மத்தியில் ஜீவா, நான் இருவரும் பேசினோம். அதனை அடுத்து வந்த தினத்தில் கல்முனை சாஹிராக் கல்லூரி இலக்கிய வட்டக் கூட்டத்தில் இருவரும் உரையாற்றினோம். அன்றுமாலை சம்பாந்துரை எழுத்தாளர் சங்கத்தின் அழைப்பை ஏற்று அங்கு நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு இருவரும் உரையாற்றினோம். இரவு வெஸ்லி உயர்தர பாடசாலையில் கல்முனை எழுத்தாளர் சங்கம் எங்கள் இருவருக்கும் இரவு விருந்தொன்றை வழங்கிக் கௌரவித்தது.

கல்முனையில் தங்கியிருந்த நான்கு நாட்களும் மருதூர்க் கொத்தன், மருதூர்க் கனி, அன்பு முகைதீன் ஆகியோர் தங்கள் இல்லங்களுக்கு அழைத்து நட்புரிமையுடன் உபசரித்து மதிய உணவு, இரவு நேர உணவு என இருவருக்கும் நல் விருந்தளித்து அன்பினில் திணற வைத்தார்கள். நாம் அங்கு போய் நின்ற நான்கு தினங்களும் பாண்டிருப்பில் சண்முகம் சிவலிங்கம் இல்லத்தில் தங்கிஇருந்தோம். சண்முகம் சிவலிங்கம் மிகுந்த சிரத்தை எடுத்து எங்களைக் குறைவின்றிக் கவனித்துக் கொண்டார். காலை உணவு தினமும் அவர் இல்லத்தில் உண்டோம், அவர் குடும்பத்தவர்கள் எமக்களித்த பிட்டும், தயிரும், தேனும் என்றும் மறக்கக்கூடியவை அல்ல. இன்னொரு சிறப்பம்சம் நாங்கள் தங்கியிருந்த நான்கு நாட்களும் எங்கள் பிரயாணத் துக்கெனத் தனிக் கார் ஒன்றை ஒழுங்கு செய்து தந்தார்கள்.

அந்தப் பயணம் பற்றி இன்று நான் நினைத்துப் பார்ப்பதற்கும், எடுத்துச் சொல்வதற்கும் ஒரு காரணம் இருக்கின்றது. அன்று எமது முஸ்லிம் சகோதரர்களுடன் அவ்வாறு நெஞ்சுக்கு நெருக்கமாக இருந்தோம். அவர்கள் எங்களை வரவேற்று, உபசரித்து, உணவு தந்து தோழமையுடன் ஆதரித்தார்கள். அவர்கள் அத்தனை பேரும் அற்புதமான மனிதர்கள். ஆற்றல் மிகுந்தவர்கள். மருதூர்க் கனி, அன்பு முகைதீன், மருதூர்க் கொத்தன் ஆகிய முஸ்லிம் நண்பர்களுடன் நீலாவணனும் இன்று உயிருடன் இல்லை. நாங்கள் அவர்கள் அனைவரையும் தொலைத்து விட்டு நிற்கின்றோம்.

நாங்கள் தொலைத்தது எங்கள் நண்பர்களை மாத்திரமல்ல; நெஞ்சுக்கு நெருக்கமான எங்கள் உறவுகளும் தொலைந்துதான் போய்விட்டனவோ என இதயம் இன்று ஏங்குகின்றது.



கல்லூரி நாடக அரங்கில் மீண்டும் நான் தோன்றி நாடக மொன்றில் நடிக்க வேண்டிய அவசியமெனக்கு நேர்ந்தது. மேடை ஏறி நாடகத்தில் நடிப்பது எனக்கு ஒரு புதிய அனுபவமல்ல.

எனது குடும்பச் சூழல் நாடக அனுபவங்களை நிறைய எனக்குப் பெற்றுத் தந்திருக்கின்றது. எனது தந்தையாரின் அக்காவின் மூத்த மகன் சி. தம்பு இசை நாடக நடிகராக அக்காலத்தில் விளங்கினார். அத்தோடு இசை நாடகங்கள் பலவற்றைப் பயிற்றுவித்து மேடை ஏற்றும் அண்ணாவியராகவும் அவர் இருந்து வந்தார். வடமராட்சிப் பகுதியின் இசை நாடகப் பாரம்பரியம் பற்றி ஆய்வுகள் செய்து நூல்கள் எழுதியவர்களின் கண்களில் அவர் ஒரு நாடகக் கலைஞனாக வாழ்ந்தார் என்பது இற்றைவரை தென்படாது போய்விட்டது. இசை நாடகங்கள் பற்றிய ஆய்வுகள் செய்யக் கிளம்பியவர்கள் தம்மை, தம்மைச் சார்ந்தவர்களை, தங்கள் பகுதியை முதன்மைப்படுத்திப் புளுகு கின்றவர்களிடம் தகவல்களைப் பெற்று, அதுவே உண்மை வரலாறு என அடிப்படைத் தெளிவின்றிப் பதிவுகள் செய்து வைத்துள்ளனர். சி. தம்பு வாழ்ந்த காலத்தில் எல்லோரும் அவரை 'அண்ணாவியார்' என்றே அழைத்து வந்தார்கள். அரிச்சந்திரா, பவளக்கொடி, அல்லி அருச்சுனா, கண்டியரசன், வள்ளித் திருமணம் போன்ற இசை நாடகங்களை எல்லாம் அவர் 'பழக்கி' அரங்கேற்றினார். அவர் மேடையேற்றிய 'அல்லி அருச்சுனா' இசை நாடகத்தில் (முன்) அருச்சுனனாகப் பாத்திரம் ஏற்று மாணவப் பருவத்தில் எனது தம்பி க. நவம் நடித்திருக்கின்றான். அவன் அக்காலத்திலேயே நன்றாகப் பாடுவான். அண்ணாவியார் தம்புவின் நாடக அரங்கேற்றங்களின்

போது அறிவிப்பனாக 'கொப்பி பார்க்கின்றவனாக' எனது மாணவப் பருவத்தில் நான் செயற்பட்ட அனுபவங்கள் எனக்கு நிறைய உண்டு.

வடபிரதேசத்திலுள்ள பெரிய கல்லூரிகளில் பரிசளிப்பு விழா இடம்பெறத் தவறினாலும் கரவெட்டி, தேவரையாளி இந்துக் கல்லூரியில் வருடந் தோறும் தவறாமல் அந்த விழா நடைபெற்று வந்தது. பரிசளிப்பு விழாவின் இறுதி நிகழ்வாக வழமை போல மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறத் தவறுவதில்லை. அந்த நிகழ்ச்சிகளைப் பெற்றோரும் ஏனையவர்களும் மிகுந்த எதிர்பார்ப்புடன் கண்டு மகிழ்ந்தார்கள். கல்லூரிச் சமூகத்தின் பெருவிழாவாக எல்லோரும் கண்டுகளித்தனர். அந்த நிகழ்ச்சிகளின் முத்தாய்ப்பாக கல்லூரி ஆசிரியர்களின் நாடகங்கள் ஒரு காலத்தில் இடம்பெற்று வந்தன. நான் ஆசிரியரான ஆரம்ப காலத்தில் அந்த நாடகமொன்றில் நடித்திருக்கின்றேன். ஆசிரியர்களின் நாடகம் இடம்பெற்று வந்த வழக்கம் தடைபட்டுப் போன பின்னர், ஒரு பரிசளிப்பு விழாவில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளின் இறுதியில், நான் ஒரு நாடகத்தில் தோன்றி நடிக்க வேண்டிய அவசியம் எனக்கு வந்து சேர்ந்தது. அதற்கு முதல் ஆண்டு மாணவர்கள் சிலரை வைத்து நான் பயிற்றி அரங்கேற்றிய நாடகத்தை அந்த மாணவர்கள் அரங்கில் சிறப்பாகச் செய்யவில்லை என்னும் மனக்குறை எனது நெஞ்சில் கிடந்து உறுத்திக் கொண்டிருந்தது. அந்த மனக்குறையைப் போக்க வேண்டும். எண்ணத்துடன் நான் வேடம் தாங்கி மேடை ஏறத் தீர்மானித்தேன். எனது தீர்மானத்தைச் சிரமமின்றி சுலபமாக நிறைவேற்றும் நோக்கத்துடன், மாணவப் பருவத்தில் பல தடவைகள் நடித்த யூலிய சீஸர் நாடகத்தை மீண்டும் (16.06.1974) அரங்கேற்றினேன். நான் முன்னர் நடித்த மார்க் அந்தனி பாத்திரத்தை ஏற்று நடித்தேன். மாணவப் பருவத்தில் நண்பர் செ. சபாநாயகம் தாங்கிய புறூட்டஸ் பாத்திரத்தை ஆசிரிய நண்பர் செ. சதானந்தன் ஏற்று நடித்தார்.

கரவெட்டி, தேவரையாளி இந்துக் கல்லூரியில் சிக. இராசேந்திரன் (எழுதுவினைஞர்), செ. சதானந்தன், நான் ஆகிய மூன்று நண்பர்களும் அப்பொழுது ஒன்றாகக் கடமை ஆற்றிக்கொண்டிருந்தோம். அதனால் சமூகம் சார்ந்த பொது விடயங்களைப் பற்றிச் சேர்ந்து சிந்திப்பது, திட்டமிடுவது, செயற்படுத்துவது எல்லாம் எங்களுக்கு வெகுஇலகுவாக இருந்து வந்தது. குறிப்பிட்ட இந்த மூன்று இயல்புகளில் ஒவ்வோர் இயல்பில் மூவரும் முனைப்புடையவர்களாக இருந்தோம். அதனால் மூவரும் ஒன்று சேர்ந்து செய்கின்ற காரியங்கள் அக்காலத்தில் பிசகின்றிச் சிறப்பாக நிறைவேறின. எங்கள் செயற்பாடுகள் கண்டு மனம் பொறுக்காத தமிழ் அரசியல்வாதிகள் சிலர், தேவரையாளி இந்துக் கல்லூரிக்குள் இருக்கும் 'சிவப்புக்குழு'வை அங்கிருந்து கலைத்துவிட வேண்டுமென அக்காலத்தில் எண்ணியதும் உண்டு.

ஆனால் அந்தச் சலசலப்புக்களைக் கண்டு அஞ்சி கை கட்டிச் சும்மா இருந்துவிட அக்காலத்தில் எங்களால் இயலவில்லை. எமது சமூகத்துக்கு எங்களால் ஆனவற்றை நாங்கள் செய்து முடிக்க வேண்டுமெனத் துடிப்புடன் சிந்தித்துச் செயற்பட்டோம்.

நான் பொலிகண்டி கிராமத்தில் பிறந்தவன். எமது சமூக மக்கள் பெருந் தொகையினர் ஒன்று சேர்ந்து இந்தப் பகுதியில் வாழ்ந்து வருகின்றார்கள். இவ்வாறு வாழ்வது ஒருவகையில் எமக்குப் பலமாகவும் இருந்து வருகின்றது. எங்கள் சமூக மக்களின் ஒன்று திரண்ட பலத்தினைச் சிதைத்து விடும் நோக்கத்துடன், எங்கள் சமூக மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசத்துக்கு மத்தியில் அரசநிருவாக அடிப்படையில் கிராம எல்லைகளை இட்டு, பொலிகண்டி, அல்வாய் மேற்கு, கரணவாய் வடக்கு எனக் குள்ளத் தந்திரத்துடன் பிரித்து வைத்துள்ளனர். இவ்வாறு பிரித்து விடப்பட்டமைக்கு அக்காலத்தில் கிராமத் தலைமைக்காரனாக இருந்த விதானை ஒருவரே காரணராக இருந்தார் என்று அறியமுடிகின்றது. இதனால் எங்கள் சமூக மக்கள் ஒன்று சேர்ந்து தங்களுள் ஒருவரை ஒரு கிராமசபை உறுப்பினராகத்தானும் தெரிவுசெய்ய இயலாத நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத் தேர்தலிலும் உடுப்பிட்டித் தொகுதி, பருத்தித்துறைத் தொகுதியென இரு தொகுதிகளுக்குள்ளும் எங்கள் பகுதி மக்கள் பிரிந்து நிற்க வேண்டிய அவலநிலையே தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதனால் எங்கள் பகுதி மக்கள் தங்கள் மத்தியில் ஒரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளையினைத் திறந்து பயன் பெறுவதில் கூட பல்வேறு சிக்கல்கள், சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் இன்றும் வாழ்ந்து வருகின்றார்கள்.

இத்தகைய பின்னணிகளைக் கொண்டதாகத்தான் நான் பிறந்த பொலிகண்டி கிராமப் பகுதி இருந்து வருகின்றது. இந்தக் கிராமத்தில் கந்தவன ஆலயம் மிகவும் பிரசித்தி பெற்ற முருகன் கோயில். எங்கள் குடும்பத்தவர்களின் வழிபடு தெய்வம் அந்த முருகன்தான். எனது திருமணத்தின் போது எனது ஆசான் சைவப்புலவர் சி. வல்லிபுரம் வழங்கிய திருமண வாழ்த்துப் பத்திரத்தில், "கந்த வனப்பதியானருளாற் கல்வி நலம் பெறு கந்தையவேள் தந்த நடேசன் தமிழாசான்..." எனக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். இந்தக் கந்தவன ஆலயத்தின் மீது எனது பார்வை எப்பொழுதும் இருந்து வந்திருக்கின்றது. தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் தலைமைதாங்கிய வாத்தியாரான ஒரு சைவப் பழம், "தாழ்த்தப்பட்டவர்கள் இந்தக் கந்தவன ஆலயத்துக்குள் நுழைவதற்கு வந்தால் நாங்கள் கையில் வாளோடுதான் நிற்போம்" என ஆவேசம் கொண்டு பேசியதை அப்போது நான் கேட்டிருந்தவன். "இந்த ஆலயத்துக்குள்ளே பிரவேசிக்கும் சமயம் வரும் வேளையிற்தான் நான் இந்தக் கோயிலுக்குப்

போவேன்" என எனது தந்தையாருக்கு ஒருசமயம் சொல்லி, ஒரு சபதத்தை என்னுள்ளே எடுத்துக் கொண்டவன் நான்.

நான் பண்டாரவளையில் ஆசிரியராகக் கடமை ஆற்றிக் கொண்டிருந்த காலத்தில் எனது சக ஆசிரியராக இருந்த மட்டக்களப்பு நண்பர் ஒருவர் எனது வீட்டுக்கு வந்து தங்கி நின்ற வேளைகளில் எல்லாம், ஊரைச் சுற்றிக்காட்டிய போது கந்தவனக் கோவில் பக்கம் அழைத்துச் செல்வதைத் தவிர்த்து விட்டவன் நான். இவை யாவும் எனது உள்ளத்தில் சுமையாக எப்பொழுதும் இருந்து மனதில் உறுத்தலாகக் கிடந்து துன்புறுத்தின.

எனது மனப்பாரத்தை இறக்குவதற்கு இது நல்ல தருணமெனக் கண்டு, எனது நண்பர்கள் இருவருக்கும் எனது எண்ணத்தினை எடுத்துச் சொன்னேன். அவர்கள் இருவரது கருத்துக்களையும் கேட்டறிந்து கொண்டு, எங்கள் அயல் கிராமங்களில் வாழ்ந்த இளைய தலைமுறையினரை இணைத்து 'பொலிகண்டி கந்தவன ஆலயப் பிரவேச நடவடிக்கைக் குழு' ஒன்றினை நிறுவினோம். எமது மக்கள் வாழும் கிராமங்கள் தோறும் பிரசாரக் கூட்டங்களை நடத்தினோம். எனது பேச்சாற்றலை நன்கு திட்டமிட்டுச் சிறப்பாக இந்தச் சந்தர்ப்பத்தில் நான் பயன்படுத்தினேன். கூட்ட ஆரம்பத்தில் முணு முணுத்துக்கொண்டு வந்தமர்ந்த மூத்தவர்கள், கூட்டம் முடிந்த பின்னர், "நாங்கள் முன்னுக்குப் போகிறோம்" என எனக்கு வந்து சொன்னதைக் கேட்டு நான் மனம் பூரித்தேன். பிரசாரக் கூட்டங்களினால் எமது இளைஞர்கள் மத்தியில் வீறுகொண்ட எழுச்சி தோன்றி இருப்பதனை நன்கு அவதானித்தோம். இனி, எங்களாலும் அவர்களைக் கட்டுப்படுத்தி வைத்திருக்க இயலாதென்பதனை உணர்ந்து கொண்டோம்.

கோயில் முகாமையாளருக்கும், அரச உயர் அதிகாரிகளுக்கும் எமது கோரிக்கையை எழுத்து மூலம் அனுப்பி வைத்தோம். கோயில் முகாமையாளர் மாத்திரமல்ல, அரச அதிகாரிகளும் பாசாங்கு பண்ணுவார்கள் என்பது எங்களுக்கு நன்கு தெரியும். இந்தப் பகுதிகளில் அரச அதிகாரிகளாக இருக்கின்றவர்கள் பெரும்பாலும் யாருடைய பிரதிநிதிகளாக இருக்கின்றவர்கள் என்பது நாங்கள் உணராத ஒன்றல்ல.

அப்பொழுது ஆலயத்தில் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆலய முகாமையாளர் எதற்கும் இணங்கி வருகின்ற ஒருவராக இல்லை. வருடாந்த உற்சவங்கள் யாவும் நடந்து முடிந்த பின்னர் ஆலயப் பிரவேசம் பற்றி ஆலோசிக்கலாம் எனத் தட்டிக் கழிக்கப் பார்த்தார். கோயில் பூசகர் உடன்பட்டு வருகின்றாரில்லை என பாவம் பிராமணர் மீது பழியைச் சுமத்தினார். இந்தத் தந்திரோபாயங்களைக் கண்டு நாங்கள் ஏமாந்து போவதற்குத் தயாராக இல்லை.

இறுதியில் விசாரணைக்காகப் பொலிஸ் நிலையம் சென்றோம். வருடாந்த உற்சவம் முடிந்த பின்னர் ஆலயத்தை எல்லோருக்கும் திறந்து விடுவதாகப் பொலிஸ் அதிகாரியிடம் முகாமையாளர் பழைய பல்லவியைப் பாடினார். மகோற்சவம் முடிவடைவதற்கு முன்னர் நாங்கள் ஆலயப் பிரவேசம் செய்வதற்கு வசதியான தினம் எதுவெனக் கேட்டறிந்து கொண்ட சிங்களவரான அந்தப் பொலிஸ் அதிகாரி, அன்றைய தினம் ஆலயம் திறந்து வைத்திருக்க வேண்டுமெனவும், கதவுகளைப் பூட்டி வைத்தால் முகாமையாளரையும், பூசகரையும் கைது செய்வேன் எனவும் கண்டிப்பாகக் கூறி அனுப்பினார்.

குறித்த தினம் காலை வேளை பலர் நூற்றுக்கணக்கில் எமது சமூக மக்கள் நாங்கள் முன்னர் திட்டமிட்டப்படி பொலிகண்டி வீரபத்திர கோயிலில் வந்து கூடினார்கள். எனது ஆலோசனைப்படி ஒருவர் தவறாது எல்லோரும் தங்கள் கையில் ஒவ்வொரு தேங்காயுடன் வந்திருந்தார்கள். கோயில் கிணற்றில் நீர் அள்ளிக் கால் கழுவுவதற்குத் தேவையான வாளி, கயிறு என்பனவற்றைக் கிணற்றில் விட்டு வைத்திருக்க மாட்டார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அதனால் புதிய வாளி, கயிறு என்பவற்றை நாங்கள் கையோடு எடுத்துச் சென்றிருந்தோம். பாராளுமன்ற உறுப்பினர் எம்.சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் 30.06.1974-ல் ஆலயப் பிரவேசம் செய்து முடித்தோம். மறுநாளும் ஒருதடவை அந்த ஆலயத்துக்கு நான் சென்று வந்தேன். இன்று எந்தப் பிரச்சினையும் இல்லாது எல்லோரும் சமத்துவமாக ஆலயத்துள் சென்று வழிபட்டு வருகின்றனர்.

அதன் பின்னர் எங்கள் கவனம் அல்வாய் மாலிசந்தைப் பிள்ளையார் கோயில் பக்கம் திரும்பியது. அந்த ஆலயச் சூழலில் ஒடுக்கப்பட்ட மக்கள் பெருமளவில் வாழ்ந்து வரவில்லை. அயல் கிராமங்களில் வாழ்ந்து வரும் ஒடுக்கப்பட்ட மக்கள்தான் அந்த ஆலயத்துக்குச் சென்று வழிபாடு செய்து வருவார்கள். அதனால் பொதுமக்களைப் பெருமளவில் இணைத்து ஆலயப் பிரவேசம் செய்ய இருப்பதை எங்களிடம் கல்வி கற்றுக்கொண்டிருந்த மேல்வகுப்பு மாணவர்கள் அறிந்து எங்களுடன் வந்து இணைந்து கொண்டார்கள்.

நாங்கள் எல்லோரும் ஒன்றுக்கூடி 15.07.1974 ஆம் திகதி பிற்பகல் வேளை அந்த ஆலயத்தைச் சென்றடைந்தோம். அப்பொழுது அந்த ஆலயத்தில் மகோற்சவம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அன்று மிகச் சிறப்பான திருவிழா. நாங்கள் அங்கு சென்ற சமயம் லயஞான பூபதி தட்சணாமூர்த்தியின் தவில் கச்சேரி நடந்து கொண்டிருந்தது. தவில் கச்சேரியைக் கண்டு கேட்டு இரசிப்பதற்கு வந்திருந்த மக்கள் வெள்ளம் ஆலய வீதியிலும், ஆலயத்திற்கருகேயுள்ள பிரதான வீதியிலும் பெருகிநின்று அலைமோதியது. நாங்கள் ஆலயப் பிரவேசம் செய்ய இருக்கும் செய்தியினை முன்னெச்சரிக்கையாக

அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவருக்கு அறிவித்திருந்தோம். சபையின் செயலாளர் பி.ஜே. அந்தனி ஆசிரியர் அந்தச் சமயம் அங்கு வந்த ஆலய வீதியில் மக்களோடு மக்களாக நின்று கொண்டிருந்தார்.

நாங்கள் இருவரும், எமது மாணவர்களும் அமைதியாகச் சென்று ஆலயத்துள் பிரவேசித்தோம். சதானந்தன் வெளியே நின்றுவிட்டார். ஆலயப் பிரவேசம் நடைபெற இருக்கும் தகவலை ஆலய நிருவாகத்துடன் சம்பந்தப்பட்ட சிலர் முன்கூட்டியே அறிந்து வைத்திருக்க வேண்டும். அதனால் அசம்பாவிதம் எதுவும் நடக்காத வண்ணம் அவர்கள் எச்சரிக்கையாக நின்று, நாங்கள் ஆலயத்துக்குள்ளே சென்று வழிபடுவதற்கு வழிவிட்டு உதவினார்கள். விபூதி, சந்தனம் வழங்கினார்கள். எங்கள் நோக்கம் நிறைவேறிய பின்னர் நாங்கள் ஆலயத்துள் இருந்து மாணவர்களுடன் வெளியேறினோம். எங்களுடன் வந்த மாணவர்களைக் கட்டுப்படுத்தி, தொடர்ந்து அங்கு வைத்திருப்பது எங்களுக்குப் பெரும் பிரச்சினையாக இருந்தது. அவர்கள் அனைவரையும் அழைத்துக் கொண்டு நாங்கள் அங்கிருந்து புறப்பட்டோம். சற்றுத் தூரம் நாங்கள் வந்த பிற்பாடு, " கோயிலுக்குள்ளே பாளை வந்திருக்கோ எண்டு பாக்கவே போனனீங்கள்?" எனக் கேட்டுப் பல கேலிக்குரல்கள் எங்களை நோக்கி எழுந்தன. அந்தக் கூச்சல்களைக் கேட்டுக் கொதித்தெழுந்த எங்கள் மாணவர்கள், "பாளை சீவுகிற கத்தி உங்கடை தலையையும் சீவும்" என எதிர்குரல் வைத்தார்கள். எங்கள் நோக்கம் நிறைவேறிவிட்டது என்ற திருப்தியுடன் மாணவர்களை அமைதிப்படுத்தி அவர்களை ஒருவாறு அங்கிருந்து அழைத்துக் கொண்டு மீண்டோம்.

இந்த சம்பவங்களை இங்கு நான் குறிப்பிட்டுச் சொல்வதற்கு அடிப்படையான ஒரு நோக்கம் எனக்கு உண்டு.

பேனா பிடித்து எழுதுவது ஒன்றுதான் எழுத்தாளனாகிய எனது சமூகக் கடமை என்று நான் கருதி வாளா இருந்துவிடவில்லை. ஒடுக்கப்பட்ட சமூக மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள், ஒடுக்குமுறைகளுக்கு எதிராக நான் செயற்பட்டு வந்திருக்கின்றேன். செயற்பாடில்லாத எழுத்துக்கள் மக்களை ஏமாற்றும் போலிப்படைப்புகள் என்னும் எனது கருத்துநிலையை விளங்கிக் கொள்ளுகின்றவர்கள்தான் உண்மையில் எனது எழுத்துக்களின் ஆத்மாவைப் புரிந்துகொள்ள முடியும்.

தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் சாதியக் கொடுமைக்கு எதிராகச் சிந்தித்துச் செயற்படுவதோடு மாத்திரம் எம்மை முடக்கிக் கொள்ளாது, அதற்கு அப்பாலும் சிந்தித்துச் செயற்பாட்டாளர்களுடன் இணைந்து நின்றோம். இந்தக் கால கட்டத்தில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இரு தினங்கள் (30, 31.05.1975) பண்டார நாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் மகாநாடு ஒன்றினை நடத்தியது. நானும்

எனது நண்பர்களும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்று மகாநாட்டில் கலந்துகொண்டோம். எனது தம்பி க.நவம் கல்முனையில் அப்பொழுது ஆசிரியராக இருந்தான். அங்கிருந்து கொழும்பு வந்து அந்த மகாநாட்டில் அவன் கலந்துகொண்டான். பின்னர் கொழும்பு சோனக இஸ்லாமியக் கலாசார மண்டபத்தில் 26.06.1976-ல் இடம் பெற்ற மகாநாட்டிலும் பொதுச் சிந்தனையுடன் நாங்கள் சென்று பங்குபற்றினோம்.

ஆசிரியன், எழுத்தாளன், பட்டிமண்டபப் பேச்சாளன், அரசியல் சமூகச் செயற்பாட்டாளன் என அக்காலத்தில் ஓய்வொழிச்சல் இன்றி நான் அலைந்து திரிந்த போதும், தினமும் எனது தாயாரைப் போய்ப் பார்த்து வருவதற்குத் தவறுவதில்லை. நான் பிறந்த வீட்டில் எனது சகோதரிகளுடன் அம்மா அப்பொழுது வாழ்ந்துகொண்டிருந்தார். நான் இப்பொழுது வாழ்ந்து வரும் இல்லத்தில் இருந்து எனது பிறந்த வீடு அதிக தூரத்தில் இல்லை. நான் பாடசாலையில் இருந்து வீடு வந்து மதிய உணவு உண்ட பின்னர், முதல் வேலையாகத் தினமும் அம்மாவைத் தேடிக்கொண்டு போய் விடுவேன்.

எனது தாயார் சற்று நோய்வாய்ப்பட்டு நடைகுன்றி இருந்தார்.

நான் அங்கு சென்றவுடன் அணிந்திருக்கும் 'சேட்'டைக் கழற்றித் தொங்கவிட்டு விட்டு அம்மா அருகே, அம்மாவின் படுக்கையில் அமர்ந்து விடுவேன். அம்மா மெல்ல எழுந்து, தாய்ப்பசு ஈன்ற கன்றினைத் தனது நாவினால் நக்கி விடுவதுபோல தளர்ந்து போன தனது கையினால் எனது முதுகினை மெல்லத் தடவி விடுவார். அப்பொழுது எனது அன்னையின் கரம் எனக்கு ஆனந்தமாக இருக்கும். அப்படி அன்னை தரும் ஆனந்த சுகத்தை அனுபவிப்பதற்கு ஆயிரம் பிறவிகள் எடுத்து வந்து எனது அன்னையின் அருகில் அமரலாம் போல அந்தச் சமயம் எனக்குத் தோன்றும். அப்படியொரு பரவசம்! என்னுடன் பேசிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் அநிச்சையாக அம்மா எனது முதுகினைத் தடவிக் கொடுத்துக் கொண்டே இருப்பார். இது அம்மாவின் வழமையான காரியம்.

ஒருதினம்வழமைபோலநான் அம்மாவைத்தேடிக்கொண்டுபோய் அவருடன் பேசிக்கொண்டிருந்து விட்டு அங்கிருந்து புறப்படும் வேளை அம்மா சொன்னார், "தம்பி, நெஞ்சிலே கொஞ்சம் சளியாக இருக்கு. நாளைக்குப்பள்ளிக்குடத்துக்குப்போகேக்கை,டாக்குத்தருக்குச் சொல்லி இஞ்சை ஒருக்கால் அனுப்பி விடு."

"இப்ப போய்க் கூட்டிக்கொண்டு வரட்டுமே அம்மா!" என நான் கேட்டேன். "வேண்டாம். நாளைக்கு அனுப்பினால் போதும்" எனத் தடுத்து விட்டார்.

நான் விடைபெற்றுக் கொண்டு அப்பொழுது திரும்பி வந்து விட்டேன்.

மறுநாள் அதிகாலையில் இருள் முற்றும் கலையாத வேளையில் என்னைத் தேடி வந்து படுக்கையில் இருந்து எழுப்பினார்கள்.

எனது அம்மா போய்விட்டார் என்ற செய்தி கேட்டு நான் அதிர்ந்து போனேன்.

எனது சகோதரியிடம், "களையாக இருக்கு. கொஞ்சம் கோப்பி தாருங்கோ" எனக் கேட்டு வாங்கிக் குடித்து விட்டுப் படுத்துக்கொண்ட அம்மா, எங்கள் யாருக்கும் சொல்லாமல் கொள்ளாமல் (14.11.1975) திடீரென மறைந்து போய் விட்டார்.

எங்கள் தந்தையாரின் மறைவு நிகழ்ந்த போது, அம்மா இருக்கின்றார் என்னும் நம்பிக்கைப் பலம் மனதில் அப்பொழுது எனக்கு இருந்தது. அம்மா இறந்து போன சமயம் இந்த உலகில் எல்லாவற்றையுமே இழந்து நான் தனித்துப் போய் நிற்பதான உள்ளுணர்வு எனக்குள்ளே தோன்றி என்னை உலுப்பியது.

அன்னையின் மரணம் நிகழ்ந்து எட்டுச் சடங்கு முதலியவை நடந்து முடியும்வரை வீட்டில் இருந்து வெளியில் அதிகம் செல்ல வேண்டாமெனக் குடும்பத்தவர்கள் என்னைத் தடுத்தனர். அதனால் மனைவி, பிள்ளைகள் இருவருடனும் நான் பிறந்த வீட்டில் அப்பொழுது தங்கி இருந்தேன். வெளியில் சொல்லிக் கொள்ள இயலாத மனப்பாரத்துடன் அம்மாவை எண்ணி உள்ளே அழுது கொண்டுதான் நான் அப்பொழுது இருந்தேன்.

அந்தச் சமயத்திலும் கைகட்டிக் கொண்டு சும்மா உட்கார்ந்திருக்க எனக்கு முடியவில்லை.

அன்னையின் மரணச் சடங்குகள் நடந்து முடிந்த இரண்டாவது நாள், எங்களூர் இளைஞர்கள் சிலருக்குத் தகவல் சொல்லி அனுப்பி அவர்களை வீட்டுக்கு அழைத்தேன்.

எங்கள் கிராமத்து மக்கள் மத்தியில் அப்பொழுது ஒரு பிரச்சினை உருவாகி இருந்தது. அந்தப் பிரச்சினை உருவாவதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தவன் நான்.

எங்கள் கிராமத்தில் ஓர் ஆலயம் உண்டு. அது அயிட்டியப்புலம் வயிரவர் ஆலயம். அந்த ஆலயம் தனிமனிதன் ஒருவருக்குச் சொந்தமாக இருந்து வந்தது. எனது தந்தை வழி வந்த தூரத்து உறவுக்காரன் அவர். அதேசமயம் எனது மனைவியின் பெரிய தகப்பனார். அந்த ஆலயத்தில் மார்கழி மாதத் திருவெம்பாவைப் பூசைகள் மாத்திரம் ஒழுங்காகவும், ஓரளவு சிறப்பாகவும் நடைபெற்று வந்தன. அந்தப் பத்து நாட்களுக்கும்

உரிய பூசைகளை மாத்திரம் எங்கள் கிராமத்தில் வாழும் வெவ்வேறு குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் பொறுப்பேற்று செய்து வந்தார்கள். இறுதிப் பூசை தீர்த்தோற்சவம். அதுபற்றிய ஒரு தகவலை முதலில் இங்கு தவறாமல் குறிப்பிட்டாக வேண்டும்.

அந்த வயிரவசாமியின் தீர்த்தோற்சவத்தன்று, அவருக்கென்றுரிய கேடகத்தில் சுவாமியை ஏற்றி வைத்து, கேடகத்தை இளைஞர்கள் பலர் சேர்ந்து தங்கள் தோள்களின் மீது தூக்கிச் சுமந்து பொலிகண்டி கடற்கரையில் தீர்த்தமாடுவதற்குக் கொண்டு செல்வது வழக்கம். கடற்கரையில் மீன் விற்கும் இடத்துக்குக் கிழக்கே, குடியிருப்புகள் இல்லாத, பலரும் சென்று மலங் கழிக்கும் அருவருப்பான இடத்திலேயே எங்கள் சுவாமி தீர்த்தமாடுவார். கால் வைத்தால் உடல் கூசும். அந்த இடத்திலேயே தீர்த்தமாடுவதற்குக் காலங்காலமாக எங்கள் சுவாமி அனுமதிக்கப்பட்டு வந்தார். அந்த இடத்துக்கு மேற்குப் புறமாக மக்கள் குடியிருப்புகள் மத்தியில், பொலிகண்டி கந்தவனக் கோவிலுக்கு எதிரில் சுவாமி தீர்த்தமாடுவதற்கு வசதியான, சுத்தமான இடம் ஒன்றுண்டு. பொலிகண்டி கந்தவனநாதர் அங்கு வந்துதான் மாசிமகத் தீர்த்தம் ஆடிச் செல்வது வழக்கம். அந்த இடத்தில் எங்கள் சுவாமி தீர்த்தம் ஆடக்கூடாதென கந்தவன ஆலயத்தைச் சேர்ந்த சாதிமான்கள் தடுத்து வந்தார்கள். கடற்கரை ஓரமாக இருக்கும் நிலம் கந்தவன ஆலயத்துக்குச் சொந்தமானது. அதனால் அந்த நிலத்துக்கு வந்து கடலில் தீர்த்தமாடுவதைக்கூட யாழ்ப்பாணத்துச் சாதி மனப்பாங்கு அங்கீகரிக்க மறுத்தது.

அவர்கள் விதித்திருக்கும் அந்தத் தடையை உடைத்து சுத்தமான அந்த இடத்தில் எங்கள் ஆலயச் சுவாமி தீர்த்தமாடச் செய்ய வேண்டுமென எங்கள் இளைஞர்களுக்கு எடுத்துச் சொன்னேன். இளைஞர்கள் அதனை உற்சாகமாக வரவேற்றார்கள். இளைஞர்கள் ஒன்று சேர்ந்து எங்கள் ஆலயச் சுவாமி தீர்த்தமாடுவதற்கு கந்தவனநாதர் தீர்த்தமாடும் அந்த இடத்துக்குத் தூக்கிச் சென்றோம். என்ன அதிசயம்! அந்தப் பகுதிக்குள் நாங்கள் நுழைய முடியாத வண்ணம் தடுத்து, வீதி ஓரமாகப் பூவரசம் கதிகால்கள் நாட்டி, புதிதாக ஒரு வேலி போடப்பட்டிருந்தது. எங்கள் இளைஞர்கள் அந்த வேலியைப் பிடுங்கி எறிவதற்கு முற்பட்டபோது, அவ்வாறு செய்ய வேண்டாமென அவர்களைத் தடுத்தேன். அப்படிச் செய்தால் நிச்சயம் நாங்கள் நீதிமன்றத்துக்கு இழுக்கப்படுவோம் எனத் தெரிவித்தேன். பின்னர் அந்த வேலிக்கு மேல் சுவாமியைத் தூக்கி எடுத்து கடற்கரைக்குக் கொண்டு சென்று தீர்த்தம் ஆடுவோம் எனக் கூறினேன். அவ்வாறே அந்த ஆண்டு எங்கள் ஆலயச் சுவாமி தீர்த்தமாடி முடித்துக் கொண்டு ஆலயத்துக்குத் திரும்பினார். அடுத்த ஆண்டு எங்கள் ஆலயச் சுவாமி தீர்த்தமாடச் சென்ற சமயம் அந்த வேலி அந்த இடத்தில் இருக்கவில்லை.

இப்பொழுது வருடந்தோறும் கடற்கரையில் குறிப்பிட்ட அந்த இடத்திலேயே எங்கள் ஆலயச் சுவாமி தீர்த்தமாடித் திரும்பி வருகின்றார்.

எங்கூளூர் அயிட்டியப்புலம் வயிரவர் ஆலயத்தில் திருவெம்பாவைப் பூசைகள் நடைபெற்று முடிந்து விட்டால் அங்கு வழிபாடு செய்வதற்கென்று மக்கள் பெருமளவில் செல்வதில்லை. அந்தணர் ஒருவர் தினமும் வந்து மணி அடித்துப் பூசை செய்துவிட்டுப் போய்விடுவார். அந்த ஆலயத்தில் பூசைகள், வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்று வராதிருப்பதற்கு அந்தக் கோயில் தனிமனிதனுக்குச் சொந்தமாக இருந்ததே அடிப்படைக் காரணம். அதனை ஊர்மக்கள் எல்லோருக்கும் பொதுவான ஒரு சொத்தாக மாற்றி விட்டால் கோயில் சிறப்பாக நடைபெறும் என்று கருதினேன். எனது எண்ணத்தைக் கோரிக்கையாக முன்னின்று கோயில் உடமையாளரிடம் முன்வைத்தபோது, அதனை அவர் ஏற்றுக்கொள்ளாது நிராகரித்தார். ஆலயத் திறப்பினை எனது கையில் தந்துவிடுவதாகவும், அதனைப் பொறுப்பேற்றுக் கொள்ளு மாறும் தெரிவித்தார். எனக்கென்ன கோயிலா தேவை? அவர் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள நான் மறுத்துவிட்டேன்.

அந்த ஆண்டு திருவெம்பாவைப் பூசைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கண்டுவிட வேண்டுமென நான் விரும்பினேன். பூசைகள் ஆரம்பிப்பதற்கு ஒருமாத கால இடைவெளி மாத்திரம் எனது அன்னையின் மரணத்தின் பின்னர் இருந்தது. அதனால் வேகமாகச் செயற்பட வேண்டியது அவசிய மெனக் கருதினேன். கோயில் ஊர்மக்களுக்குரிய பொதுச் சொத்தாக்கப் படாத இடத்து திருவெம்பாவைப் பூசைகளை நிராகரிக்குமாறு கோரும் துண்டுப் பிரசுரம் ஒன்றை எழுதி, நான் அழைத்த இளைஞர் கைகளில் கொடுத்து, அதனை அச்சேற்றி எங்கள் கிராமத்து மக்கள் மத்தியில் வீடுதோறும் விநியோகிக்கும் வண்ணம் செய்தேன்.

நானும் நான்கைந்து இளைஞர்களும் இணைந்து எடுத்துக் கொண்ட இந்தத் தீவிர நடவடிக்கையின் பேறாக, கோயில் உரிமையாளர் தனது ஆலயத்தினை எங்கள் கிராமத்து மக்களின் பொதுச் சொத்தாக 13.12.1976 -ல் தருமசாதனம் எழுதித் தந்தார்.

இன்று அந்த ஆலயம் புதிதாக நிர்மாணிக்கப்பெற்று ஸ்ரீமுருக மூர்த்தி ஆலயமாகச் சிறப்பாக ஊர் நடுவே உயர்ந்து நிற்கின்றது.

இந்தக் காலகட்டத்தில் சமூக நடவடிக்கைகளில் மட்டுமல்லாது ஈழத்துத் தமிழ் இலக்கியம் சார்ந்த நிலையிலும் நான் அப்பொழுது ஒரு பிரச்சினையை முன்வைத்தேன். 'ஈழத்துத் தமிழ் இலக்கியமும் அதன் தலைமையும் அதன் தவறுகளும்' என்னும் விவாதத்தினை 1977 ஏப்ரல்

மல்லிகையில் தொடக்கிவைத்தேன். அந்தக் கட்டுரையைத் தொடர்ந்து ஒரு வருடகாலம் சாதக, பாதகமான கருத்துக்களை முன்வைத்து பலர் அந்த விவாதத்தைத் தொடர்ந்தனர். இறுதியில் அந்த விவாதத்தை ஆரம்பித்து வைத்தவன் என்ற காரணத்தினால் 1978 ஏப்ரல் மல்லிகையில் கட்டுரை ஒன்றினை எழுதி, விவாதத்தை முடித்து வைத்தேன். அந்த விவாதம் பலரையும் என்னைத் திரும்பிப் பார்க்கும் வண்ணம் செய்ததுடன், மல்லிகையும் பலரது கவனத்துக்கு உள்ளாகியது என்பது யாராலும் மறுக்க இயலாத நிச்சயமான உண்மை.



16

தேவரையாளி இந்துக் கல்லூரியில் அதிபர் எம்.எஸ். சீனித்தம்பியின் காலத்தில் நான் ஆசிரியராகக் கடமையாற்றிய ஏழாண்டு காலம் எனக்கு மிக மகிழ்ச்சி நிறைந்த ஒரு காலம். எனது ஆசிரிய வாழ்க்கையில் அக்காலம் ஒரு பொற்காலம் என்று சொல்லலாம். அதிபர் சீனித்தம்பியிடம் கல்வி கற்ற மாணவன் நான். அதனால் அவருக்கும் எனக்குமிடையே வெளியில் சொல்லிக் கொள்ளாத நெருக்கமான ஓர் உறவு இருந்து வந்தது. அந்த உறவு தந்தைக்கும் மகனுக்குமான உறவு போன்றது.

அவர் விருப்பத்தின் பேரில்தான் நான் தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு மாற்றலாகி வந்தேன். க.பொ.த. சாதாரண வகுப்புதான் அப்பொழுது அந்தக் கல்லூரியில் இருந்த பெரிய வகுப்பு. அதிபர் அந்த வகுப்பைத் தனது நேரடி மேற்பார்வையின் கீழ் வைத்திருந்தார். அந்த வகுப்பின் வகுப்பாசிரியராகவும் அவரே இருந்தார். நான் அங்கு வந்து சேர்ந்ததும் முதல் வேலையாக, அந்த வகுப்புக்குரிய வகுப்பாசிரியராக என்னை நியமித்துத் தனது பொறுப்பினை என்னிடத்தில் கையளித்தார். எண்கணிதம், குடியியல் (அரசறிவியல்) ஆகிய இரண்டு பாடங்களையும் அந்த வகுப்பில் நான் கற்பிப்பதற்கு வகை செய்தார். பிற்காலத்தில் தமிழ் (இலக்கியமும் இணைந்தது) மாத்திரம் எல்லா வகுப்புகளுக்கும் கற்பிக்கும் ஓர் ஆசிரியனாக நான் நிலை பேறடைந்தேன்.

கல்லூரியில் முக்கியமான விடயங்கள் சம்பந்தமாக முடிவுகள் எடுக்கவேண்டிய வேளையில் அதிபர் காரியாலயத்துக்கு அழைத்துத் தனிமையில் என்னுடன் கலந்தாலோசிப்பார். பொதுவாக

அபிப்பிராயங்களைக் கேட்டறிந்து கொண்டு இறுதியாக ஒரு முடிவுக்குத் தான் வருவார். பரிசளிப்பு விழா, விளையாட்டுப் போட்டி போன்ற முக்கியமான நிகழ்வுகள் கல்லூரியில் நடைபெறும் சமயங்களில் அந்த நிகழ்வுகளுக்குரிய பிரதம விருந்தினர்களைத் தன்னிச்சையாக அவர் தானே தெரிவு செய்வதில்லை. கல்லூரி ஆசிரியர்களைக் கூட்டி, அவர்களது ஆலோசனையைக் கேட்டறிந்த பின்னரே பிரதம விருந்தினர்களாக யார்யாரை அழைப்பதென முடிவு செய்வது அவரது நிர்வாக முறைமை. அதனால் ஆசிரியர்களின் ஆதரவினையும், ஒத்துழைப்பினையும் அவரால் பிசகின்றிப் பெற்றுக் கொள்ள முடிந்தது. கல்லூரி நிர்வாகத்தில் அவருக்குச் சிக்கல்கள் இருப்பதில்லை.

அந்தக் காலத்தில் கல்லூரியில் நான் செல்லப்பிள்ளையாக இருந்து வந்தேன்.

கல்லூரிப் பரிசளிப்பு விழா ஆரம்பித்து இருபதாம் ஆண்டு. அந்த ஆண்டு பரிசளிப்பு விழாவில் முதன்முறையாகக் கல்லூரிச் சஞ்சிகை ஒன்றினை வெளியிட்டு வைப்பதாகத் தீர்மானிக்கப் பெற்றது. 'தேவரையாளி இந்து' என்னும் அந்தச் சஞ்சிகையின் இணையாசிரியர்களுள் ஒருவராக நான் நியமிக்கப் பெற்றேன். பேராசிரியர் க. கைலாசபதியை அழைத்து அவரால் அந்தச் சஞ்சிகையை வெளியிட்டு வைக்க வேண்டுமென ஆசிரியக் கழகம் முடிவு செய்தது.

அப்பொழுது யாழ்ப்பாண வளாகம் ஆரம்பித்த காலமது. பேராசிரியர் க. கைலாசபதி அந்த வளாகத்தின் தலைவராக நியமனம் பெற்று இருந்தார். எங்கள் கல்லூரி அதிபர் தெரிவித்ததற்கு இணங்க, நான் யாழ்ப்பாணம் திருநெல்வேலி சென்று பேராசிரியர் க. கைலாசபதியை வளாகத்தில் சந்தித்தேன். புதிதாக ஆரம்பித்த வளாகத்தின் தலைவராக இருந்த மையினால் அவருக்கிருந்த வேலைப்பளுக்களுக்கு மத்தியிலும் எனது வேண்டுகோளை ஏற்று எங்கள் கல்லூரிக்கு வருகை தந்து 'தேவரையாளி இந்து'வை வெளியிட்டு வைப்பதாக உடன்பட்டார்.

பரிசளிப்பு விழா நடைபெறுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் எங்கள் கல்லூரி அதிபர் என்னை அழைத்து, "விழாவுக்கு வர கைலாசபதிக்கு நேரமில்லை போல இருக்கிறது. போய் ஒருக்கால் கண்டுகொண்டு வாரும்" எனத் தெரிவித்தார்.

கைலாசபதியைத் தேடிக்கொண்டு வளாகத்துக்கு நான் சென்ற சமயம் இராமநாதன் மண்டபத்து மேல்மாடியில் தனது காரியாலயத்தில் அவர் இருந்தார். அப்பொழுது வளாகத்துக்கு வேண்டிய சிற்றாழியர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சை அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. நான் அங்கு வந்து நிற்கும் செய்தியை

அறிந்ததும் உடனே உள்ளே வருமாறு அவர் என்னை அழைத்தார். எங்கள் கல்லூரிப் பரிசளிப்பு விழா நடைபெறும் அன்றைய தினம், வளாகம் சம்பந்தமான கூட்டம் ஒன்று கொழும்பில் தனக்கு இருப்பதால் வருகை தர இயலாத நிலையில் இருப்பதாகத் தெரிவித்தார். தனக்குப் பதிலாக வளாகத்தில் நூலகராக இருக்கும் நண்பர் சிவநேசச் செல்வனை அழைத்துச் செல்லுமாறு எனக்கு மாற்று யோசனை ஒன்றைத் தெரிவித்தார்.

"அழைப்பிதழில் உங்களுடைய பெயரை அச்சிட்டு விட்டு சஞ்சிகையை வெளியிட்டு வைப்பதற்கு சிவநேசச் செல்வனை வருமாறு நான் போய் எப்படிக் கேட்கலாம்?" என அவரிடத்தில் வினவினேன். "அது ஒரு பிரச்சினைதான்" என்று சொல்லிக் கொண்டு, நடத்திக் கொண்டிருந்த நேர்முகப் பரீட்சையைத் தற்காலிகமாக நிறுத்தி விட்டு, உடன் இருந்து நேர்முகப் பரீட்சை நடத்தியவர்களைச் சற்றுநேரம் பொறுத்திருக்குமாறு தெரிவித்துக் கொண்டு - என்னை அழைத்துக் கொண்டு மாடியை விட்டுக் கீழே இறங்கி வந்தார். இருவரும் நூலகத்திற்குச் சென்றோம். எனக்கேற்பட்டிருக்கும் இக்கட்டான நிலையை செல்வனுக்கு எடுத்துச் சொல்லி, தனக்குப் பதிலாக எங்கள் கல்லூரிப் பரிசளிப்பு விழாவுக்குச் சென்று வருமாறு கேட்டுக் கொண்டார். அவர் வேண்டுகோளினை ஏற்றுக்கொண்டு 12.08.1975-ல் நடைபெற்ற எங்கள் பரிசளிப்பு விழாவுக்கு வருகை தந்து 'தேவரையாளி இந்து' சஞ்சிகையை நண்பர் சிவநேசச் செல்வன் வெளியிட்டு வைத்தார்.

அடுத்த ஆண்டு நடைபெற்ற கல்லூரிப் பரிசளிப்பு விழாவுக்கு பேராசிரியர் கைலாசபதியையும் அவர் பாரியாரையும் பிரதம விருந்தினராக இல்லத்துக்கு நேரில் சென்று நான் அழைத்தேன். அந்த விழாவுக்கு (03.06.1976) மனைவியுடன் அவர் வருகை தந்து எங்கள் மனக்குறையைப் போக்கிக் கௌரவித்துச் சிறப்பித்தார். குறிப்பிட்ட அந்தச் சமயங்களிலும் யாழ். வளாகத்திலும், திருநெல்வேலியில் கைலாசபதி வாழ்ந்த இல்லத்திலும் நான் சென்று அவரைச் சந்தித்திருக்கின்றேன். அப்பொழுதெல்லாம் அவர் என்னை வரவேற்று உபசரித்து ஒரு படைப்பாளியைக் கௌரவித்து நடக்கும் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டார்.

கரவெட்டி, தேவரையாளி இந்துக் கல்லூரி வரலாற்றில் அதிபராக இருந்து தனக்கெனத் தனித்துவமான ஓர் இடத்தை நிறுவிக் கொண்டவர் எம்.எஸ். சீனித்தம்பி அவர்கள். அதிபர் பதவியினை 1954ஆம் ஆண்டு முதல் 1979ஆம் ஆண்டு டிசம்பர் வரை அவர் வகித்து வந்தார். அதிபர் பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர், தம்மோடு பணிபுரிந்த ஆசிரியர்களை நேரில் சந்தித்து விடைபெற்றுக் கொள்வதற்காக 22.01.1980-ல் கல்லூரிக்குக் காலை நேரம் வருகை தந்திருந்தார். ஆசிரியர்களை அவர்களது வகுப்பறைகளுக்குத் தேடிச் சென்று

அவர்களுடன் சிலவார்த்தைகள் பேசி, பின்னர் கைகுலுக்கி விடைபெற்றுக் கொண்டு வந்தார். நான் அப்பொழுது எனது வகுப்பறைக்குள் நுழைவது கண்டு மரியாதையுடன் கதிரையில் இருந்து எழுந்து பணிவுடன் நான் நின்று கொண்டிருந்தேன். விரைவாக வகுப்பறைக்குள் நடந்து என் எதிரே நின்று ஒருகணம் குறிப்பாக ஆழமாகக் கூர்ந்து எனது முகத்தை நோக்கினார். மறுகணம் தனது இருகரங்களையும் மேலே தூக்கி, எனது தலையைப் பிடித்து சற்று முன் வளைத்து அணைத்து எனது நெற்றியில் முத்தமிட்டுவிட்டு, கலங்கிய விழிகளுடன் என்னைத் திரும்பிப் பார்க்காது வகுப்பறையில் இருந்து வெளியே திரும்பி நடந்தார்.

நான் ஒருகணம் நிலைகுலைந்து போனேன். அப்பொழுது அங்கிருந்து சென்றுகொண்டிருக்கும் அவரை விழிகள் பனிக்கப் பார்த்து நின்றேன்.

இன்று அந்தச் சம்பவத்தை நான் திரும்பிப் பார்க்கும் பொழுது என்னைப் போல பாக்கியசாலியான ஆசிரியன் இன்னொருவன் இருக்க இயலாதென எனது மனதுக்குத் தோன்றுகின்றது.

அதிபரின் மகத்தான சேவையைக் கௌரவித்துக் கல்லூரிச் சமூகம் சேவை நலம் பாராட்டு விழா ஒன்றினை 02.06.1980-ல் கல்லூரித் திறந்தவெளி அரங்கில் எடுத்தது. இந்த விழாவில் 'தேவரையாளி இந்து' இரண்டாவது இதழ் அன்னாரின் சேவை மலராகச் சிறப்பாக வெளியிட்டு வைக்கப் பெற்றது. அவரது மாணவனும் பின்னர் அவரின் கீழ் ஆசிரியராகப் பணிபுரிந்தவனுமாகிய நான், அந்தச் சேவை மலரின் ஆசிரியனாக இருந்து, அதனை வெளியிட்டு வைக்கும் பெரும் பொறுப்பினை முழுமையாக ஏற்று, எனது கடமையைக் குறைவின்றிச் செய்து முடித்தேன் என்பது இப்பொழுதும் மனதில் இனிக்கின்றது.

குறிப்பிட்ட சில பாடங்களை மாணவர்களுக்குச் சிறப்பாகக் கற்பிக்கத் தகுந்த ஆற்றலுள்ள ஆசிரியர்களைத் தனியார் கல்வி நிறுவனங்களின் நிருவாகிகள் தேடித் தேடிப் பிடிப்பார்கள். ஆசிரியர்களிடத்தில் இருக்கும் திறமைகளைத் தங்களுக்குரிய மூலதனமாக்கி, ஆசிரியர்களைச் சுரண்டித் தங்களை வளப்படுத்திக் கொள்வதுதான் அவர்களின் ஒரே நோக்கம். தனியார் கல்வி நிலையங்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் 'சரஸ்வதியைக் காசுக்கு விற்கின்றவர்கள்' என கே. டானியல் கூறுவார். இந்தக் கருத்தினைத் தமது குறுநாவல் ஒன்றிலும் அவர் பதிவு செய்திருக்கின்றார்.

எனது குடும்பத்தின் தேவைகளை நிறைவுசெய்ய வேண்டிய காரணத்தினால் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு மாலை வேளைகளிலும், விடுமுறை நாட்களிலும் நான் கல்வி கற்பிக்கச் சென்றேன். நான் வாழ்ந்து வரும் வடமராட்சிப் பகுதியில் மாத்திரமல்லாது யாழ் நகரத்துக்கும்

வாரத்தில் மூன்று தினங்கள் சென்று வந்தேன். நான் தமிழ் கற்பிக்க வேண்டும் என்றே எல்லோரும் என்னிடத்தில் கேட்டுக்கொண்டார்கள். தமிழ் கற்பிப்பதில் எனக்கிருந்த ஆற்றல் மாத்திரமன்றி, நான் தமிழ் எழுத்தாளனாக இருந்து வந்ததும் எல்லோரும் என்னிடத்தில் தமிழ் கற்பிக்குமாறு கேட்டுக் கொண்டதற்குரிய காரணமாக இருந்திருக்க வேண்டும். யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் தட்டாதெருச் சந்தியில் 'தமிழ் - தெணியான்' எனப் பெரிய அளவில் அறிவித்தல் விளம்பரம் எழுதி வைத்திருந்தார்கள். அந்தத் தனியார் கல்வி நிலையத்தில் நான் கற்பித்த க.பொத.(சாதாரணம்) தர வகுப்புக்கு வந்து, தமிழ் ஒரு பாடம் மாத்திரம் படித்து விட்டுச் சென்ற மாணவர்கள் பலர் இருந்தார்கள்.

தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் அன்று பட்டிமன்ற மேடைகளுக்குச் செல்ல வேண்டிய அவசியம் இருந்து வந்தது. அந்த மேடைகளில் தோன்றி, அறிமுகமும் பிரபலியமும் பெற்றுக்கொள்வது அவர்களது தொழிலுக்கு உறுதுணையாக வந்தமைந்தது. அதனால் அக்காலத்தில் பலராலும் அறியப் பெற்ற பட்டிமன்றப் பேச்சாளனாக நான் துலங்கினேன்.

அக்காலகட்டத்தில் தமிழ்நாட்டில் இருந்து 20.06.1976-ல் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த தெ.பொ.மீனாட்சி சுந்தரம்பிள்ளை, 28.08.1980-ல் தாமரை ஆசிரியர் சோமு, 28.07.1982-ல் தா. பாண்டியன், 01.03.1981-ல் இராஜபாளையம் கோதண்டம், ஜெகன்நாதராஜா, 04.08.1981-ல் சிங்கள எழுத்தாளர் குணசேனவிதான ஆகியோரின் கூட்டங்களுக்குச் சென்று நேரில் சந்தித்துப் பேசும் சந்தர்ப்பங்கள் கிட்டின. முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் உபதலைவராக அப்பொழுது நான் இருந்தமையால், இராஜபாளையம் எழுத்தாளர்களுக்கு யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலையக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய இன்னொரு முக்கியமான ஓர் எழுத்தாளரை நான் சந்தித்து உரையாடினேன். யாழ்ப்பாண நகரம் செல்லும் சமயங்களில் எல்லாம் டானியல், ஜீவா இருவரையும் கண்டு பேசிக் கொண்டு திரும்புவதுதான் எனது வழக்கம். ஸ்ரான்லி வீதியில் இருந்த டானியலின் கராஜிற்கு, டானியலைத் தேடிக்கொண்டு 09.09.1981-ல் நான் சென்றேன். அப்பொழுது டானியலுடன் ஒருவர் அங்கு பேசிக்கொண்டிருந்தார். "இவர்தான் எழுத்தாளர் பித்தன்" என டானியல் அவரை எனக்கு அறிமுகஞ்செய்து வைத்தார். எதிர்பாராத நிலையில் மூத்த எழுத்தாளர் பித்தனைச் சந்தித்தது எனக்கு மிகுந்த மனமகிழ்ச்சியை அளித்தது. சிறிது நேரம் அவர்களுடன் இருந்து உரையாடி, தேநீர் அருந்திவிட்டு விடை பெற்றுக்கொண்டு திரும்பி வந்தேன். பித்தனோடு எனக்கேற்பட்ட

முதற்சந்திப்பு அது. அதன் பிறகு பித்தனை நான் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டாமலே போயிற்று. ஆயினும் அவரைச் சந்தித்து அவருடன் சிறிது நேரம் உரையாடினேன் என்னும் பசுமையான நினைவு இன்று மனதுக்கு நிறைவைத் தருகின்றது.

ஆக்க இலக்கியக் கர்த்தாக்களின் ஒவ்வொரு படைப்பும் உருவானதற்குப் பின்புலமான ஒவ்வொரு கதை உண்டு. அதனைக் கதையின் கதை என்று சொல்லலாம். கதையின் கதைகள் ஒவ்வொன்றும் நதிமூலம், ரிஷிமூலம் போன்றவை. வெளியில் எடுத்துச் சொல்லப்படக் கூடாதது. ஆனால் சில படைப்புகள் எவ்வாறு உருவாயின என்பதனைத் தவிர்க்க இயலாமல் வெளியில் எடுத்துச் சொல்ல வேண்டி நேர்ந்து விடுகிறது. அப்படியானவற்றை வெளியே எடுத்துச் சொல்லலாம். எனது 'கழுகுகள்' நாவல் தோன்றிய கதையை இங்கு குறிப்பிடலாம் என்று எண்ணுகின்றேன்.

எனது தாயாரின் உடன்பிறப்பாக ஒரேயொரு தமையன் இருந்தார். எனது தாய்மாமன். அவருக்குக் குழந்தைகள் இல்லை. அவர் நோய்வாய்ப்பட்ட போது அவரைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு எனக்கிருந்தது. ஒருசமயம் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் அவருடன் நான் தங்கி இருந்தேன். அங்கு நான் தங்கி இருந்த இரண்டொரு தினங்களில் பணம் பறிப்பது ஒன்றினையே நோக்கமாகக் கொண்டு பெரும்பாலும் எல்லோரும் செயற்படுவதனை அவதானித்தேன். மனிதநேயம் சிறிதுமின்றி நடைபெறும் கொடுமைகள் என் மனதை உறுத்தத் தொடங்கின. அதன் பிறகு தினமும் நடைபெறும் சம்பவங்களைக் குறித்து வைத்துக் கொண்டேன். இவ்வாறு இரண்டு வாரங்கள் செய்தேன்.

என்னுடன் ஆசிரியராகப் பணிபுரிந்த வல்லை சு. சக்திவடிவேல் அருமையான கையெழுத்துச் சஞ்சிகை ஒன்றினை வெளியிட்டுக் கொண்டிருந்தார். அவர் தனது சஞ்சிகையில் தொடராக வெளியிடுவதற்குத் தகுந்த ஒரு படைப்பினை எழுதித் தருமாறு என்னைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவரது வேண்டுகோளுக்கு இணங்கி, வைத்திய சாலையில் நான் கண்டு, அவதானித்துக் குறித்து வைத்திருந்தவற்றைக் 'கழுகுகள் வட்டமிடுகின்றன' என்னும் குறுநாவலாக அவருக்கு எழுதிக்கொடுத்தேன்.

அதன் பிறகு ஒருதினம் மல்லிகைக் காரியாலயத்தில் ஜீவாவைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்த போது, நாவல் ஒன்று எழுதுமாறு ஜீவா என்னிடம் கூறினார். எனது எழுத்துக்களைத் தொடர்ந்து படித்து வந்திருக்கும் ஜீவா, இதற்கு முன்னர் ஒருநாள் "மாஸ்ரர், நீங்கள் நாவல் எழுதலாம்" என பேசிக்கொண்ட சமயம் சொன்னார். அதனையும் மனதில் கொண்டு கையெழுத்துச் சஞ்சிகையில் வெளியிடப்பட்ட குறுநாவலை விரிவுபடுத்தி முழுநாவலாக எழுதி 'கழுகுகள்' என மகுடமிட்டு ஜீவாவிடம் அந்தப் பிரதியைக் கொடுத்தேன்.

ஜீவா தமிழ்நாடு செல்லும்போது அந்தப் பிரதியைக் கையில் கொண்டு சென்று நர்மதா வெளியீடாக நூலாக்கி, நூல் பிரதிகளை 30.12.1981-ல் மல்லிகைக் காரியாலயத்தில் வைத்து எனது கையில் தந்தார். 'கழுகுகள்' நாவலை நூலாக்கிய முழுப்பொறுப்பும், பெருமையும் ஜீவாவுக்கே உரியன. அந்த நாவல் பேராசிரியர் நந்தியின் மிகுந்த கவனத்துக்கு உள்ளானது. தமது விரிவுரைகளின் போது 'கழுகுகள்' நாவல் பற்றி மாணவர்களுக்கு அவர் எடுத்துச் சொல்லி அவர்களை எச்சரித்திருக்கின்றார்.

மல்லிகையில் எழுதுவதற்கு ஜீவா எனக்கு நிறைவான சந்தர்ப்பங்களைத் தந்தார். மல்லிகை என்னை முழுமையாக உள்வாங்கிக் கொண்டது என்றே சொல்ல வேண்டும். நான் மல்லிகை எழுத்தாளனாக எல்லோராலும் இனங்காணப்பட்டேன். தேசியப் பத்திரிகைகளில் இடையிடையே எனது எழுத்துக்கள் வெளிவந்து கொண்டிருந்தன. ஆனால் மல்லிகை எனது பிரதான தளமாக அமைந்திருந்தது. நான் எழுதிக்கொடுத்தவை யாவும் மல்லிகையில் பிரசுரமாகிக் கொண்டிருந்தன. ஜீவா கேட்டுக்கொண்ட சமயங்களில் எல்லாம் எனது மனதில் பதிவாகிக் கிடந்தவற்றை ஆக்கங்களாக எழுத்தில் வடித்துக் கொடுத்தேன். சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் என பல்வேறு ஆக்கங்களைத் தொடர்ந்து எழுதி வந்தேன். வெவ்வேறு பெயர்களில் எல்லாம் எழுதினேன்.

ஜீவா தொடர்ந்து எனக்குச் சந்தர்ப்பங்களை அளித்துக்கொண்டு வந்தார். சமூக நோக்கு, அரசியல் நோக்கு என்பவற்றில் இருவரும் ஒத்த கருத்துள்ளவர்களாக இருந்து வந்தோம். நான் இதுவரை எழுதியிருக்கும் சிறுகதைகளுள் ஐம்பது சதவீதமானவை மல்லிகையில் பிரசுரமானவை என்பது உண்மை. அதனால் மல்லிகை வட்டத்தினால் நன்கு அறியப்பெற்ற பரிச்சயமான ஓர் எழுத்தாளனாக நான் வளர்ந்து வந்தேன். ஆனால் டானியலுக்கு ஒரு மனக்குறை இருந்து கொண்டு வந்தது. "ஜீவாவுக்கு உங்களைச் சரியாகப் பயன்படுத்தத் தெரிய வில்லை" எனத் தனது மன ஆதங்கத்தை ஒருதினம் என்னிடம் வெளியிட்டார். அதுபற்றி அவரிடம் மேலும் தெளிவாக நான் கேட்டறிந்து கொள்ளவில்லை. அவர் மனதில் என்ன கருதினார் என்பது இன்றுவரை எனக்குத் தெரியவராது.

மல்லிகை தவிர்ந்த ஏனைய சிறுசஞ்சிகைகளின் பக்கம் எனது கவனம் திரும்பவில்லை. யாழ்ப்பாணத்தில் இருந்து மல்லிகை வெளிவந்து கொண்டிருந்த, அதன் சமகாலத்தில் சுந்தர் சிரித்திரனை வெளியிட்டுக்கொண்டிருந்தார். என்னை நேரில் சந்திக்கும் சமயங்களில் எல்லாம் சிரித்திரனுக்கு எழுதுமாறு அவர் கேட்பதுண்டு. அவர் விருப்பத்தை நிறைவுசெய்யும் நோக்கத்துடன் 'குருகுலம்' என்ற சிறுகதையை சிரித்திரனுக்கு அனுப்பி வைத்தேன். சிரித்திரன் - 1975 ஆண்டுமலரில் அந்தச் சிறுகதை இடம் பெற்றது. தமிழ்க் கதைஞர்

வட்டம் (தகவம்) காலாண்டு காலத்துக்குரிய இலங்கைச் சிறுகதைகளை மதிப்பீடு செய்து பணப்பரிசும், சான்றிதழும் வழங்குவதற்கு ஆரம்பித்த காலம் அது. தகவத்தின் அந்தப் பரிசிலை முதன்முதலாக 'குருகுலம்' கவிஞர் மு. செல்லையா அவர்களின் 'குடிகாரன்' பாடலையும், அந்தப் பாடலுக்கான விளக்கத்தினையும் ஒரு கட்டுரையாக எழுதி சிரித்திரனுக்கு அனுப்பி வைத்தேன். எனது பெயரை நீக்கி விட்டு அந்தக் கட்டுரை சிரித்திரனில் வெளியிடப்பட்டது. குறிப்பிட்ட இந்த இரண்டு ஆக்கங்கள் மாத்திரந்தான் சிரித்திரனில் வெளிவந்திருக்கும் எனது படைப்புகள்.

'கழுகுகள்' நாவல் அறிமுகக் கூட்டம் ஒன்று 03.03.1982-ல் யாழ்ப்பாணத்தில் நடைப்பெற்றது. யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தின் முன்பகுதியில் எனது 'கழுகுகள்', காவலூர் ஜெகன் நாதனின் 'யுகப்பிரவேசம்' ஆகிய இரண்டு நூல்களினதும் அறிமுகக் கூட்டம். கலாநிதி கா. சிவத்தம்பி தலைமையில் மாலைவேளை நடைபெற்றது. 'கழுகுகள்' நாவலை சி. மௌனகுரு விமரிசனம் செய்தார். அந்த அறிமுகக் கூட்டத்தினை ஜீவா ஒழுங்கு செய்து நடத்தி வைத்தார். ஜீவாவின் ஏற்பாட்டில் நடைபெற்ற கூட்டமாக இருந்தபோதிலும், எனது அழைப்பினை ஏற்று டானியல் அந்தக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்தார்.

வதிரி தமிழ் மன்றத்தில் நண்பர் க. லோகநாதன் ஆசிரியர் தலைமையில் 09.03.1982-ல் மாலைவேளை 'கழுகுகள்' அறிமுகக் கூட்டம் ஒன்றைப் பின்னர் நடத்தினோம். ஈழத்து இலக்கிய உலகில் யாரும் எதிர்பார்க்காத ஓர் அதிசயம் அந்த அரங்கில் அன்று இடம்பெற்றது. ஜீவா, டானியல் இருவரும் ஒரே மேடையில் வந்து அமர்ந்திருந்து எனது 'கழுகுகள்' நாவல் பற்றிப் பேசினார்கள். இருவரும் நண்பர்களாக, தோழர்களாக நெருக்கமாக ஒருகாலத்தில் இருந்தவர்கள். பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியில் 1964-ல் தோன்றிய கொள்கை வேறுபாடு காரணமாக இருவரும் பிரிந்து போனார்கள். அந்தப் பிரிவின் பின்னர் அவர்கள் இருவரும் ஒரே மேடையில் சந்தித்துக் கொண்டது அன்றுதான். அவர்கள் இருவராலும் தவிர்க்க இயலாத ஒருவனாக நான் இருந்து வந்ததுதான் அந்தச் சந்திப்பு நிகழ்ந்ததுக்கான அடிப்படைக் காரணமாக அமைந்தது.

அந்தக் கூட்டம் நடந்து முடிந்த பின்னர், அவர்கள் இருவரும், டானியலுடன் சேர்ந்து உடன் வந்திருந்த டானியலின் நண்பர் இக்பாலும் இரவு எனது இல்லத்தில் தங்கி, காலையில் புறப்பட்டுச் சென்றார்கள்.

டானியல், ஜீவா ஆகிய இருவரும் தமக்குள் இருந்து வந்த கசப்புணர்வுகளை ஒழித்துவிட்டு மீண்டும் நெருங்கி வருவதற்கான ஆரம்பமாக இந்த நிகழ்வு அமைந்தது.

அந்த ஆண்டு வெளிவந்த இலங்கை நாவல்களுள் சிறந்த மூன்று நாவல்களைத் தெரிவுசெய்து தகவம் பரிசில் வழங்கிக் கௌரவித்தது. தகவத்தின் கணிப்பில் 'கழுகுகள்' இரண்டாவது இடத்தினைப் பெற்று, பணப் பரிசிலையும் பெற்றுக் கொண்டது.

'கழுகுகள்' மீது முன்வைக்கப் பெற்ற விமர்சனக் கருத்துக்கள் சிலவற்றுடன் டானியல் உடன்பாடில்லாது இருந்தார். அந்தக் கருத்துக்கள் அவர் உள்ளத்தில் சினத்தை மூட்டின. குறித்த அந்த நாவல் பற்றி என்னோடு அவர் பேசிக் கொண்டிருந்த ஒரு சமயம், "ஆசுபத்திரி பற்றி இப்படி விவரித்து என்னாலை ஒரு நாவல் எழுத முடியாது" எனப் பெருந்தன்மையுடன் எனக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

இந்தக் காலகட்டத்தில் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்த ஜீவாவின் பேட்டிகள், கருத்துகளை ஜீவாவின் விருப்பத்துக்கிணங்க, படித்து ஒரு நூலாகத் தொகுத்து அவரிடம் 01.01.1982-ல் மல்லிகையில் வைத்துக் கையளித்தேன். பின்னர் அந்தத் தொகுப்பு, 'இலங்கையில் இருந்து ஓர் இலக்கியக் குரல்' என்னும் நூலாக, தமிழ்நாட்டு நர்மதா பதிப்பகம் அதனை வெளியிட்டு வைத்தது.

கண்களில் எந்தவிதக் குறைபாடும் இல்லாது அழகுக்காகக் கண்ணாடி அணிந்து கொண்டிருக்கும் சிலரை நான் அறிவேன். எனது குடும்பத்தில் எனது தம்பி சிறுவனாக, மாணவப் பருவத்தில் கண்ணாடி அணிய ஆரம்பித்து விட்டான். அதனால் கண்ணாடி அணிந்து கொண்டு திரிவதிலுள்ள சிரமங்களை நான் நன்கு அறிவேன். அதனால் எனது கண் பார்வையில் சிறிது குறைபாடு ஏற்பட்டிருப்பதனை நான் உணர்ந்து கொண்ட பின்னரும் சற்றுக் காலங் கடத்தி வந்தேன். அப்பொழுது நான் வாசிக்கும் நூல்களை எனது கண்பார்வையில் இருந்து தூரத் தூரப் பிடித்துக் கொண்டு செல்ல வேண்டிய சூழ்நிலை எனக்கு உருவானது. அதன் பிறகு தாமதிக்காது கண் வைத்திய நிபுணரைச் சந்தித்து, கண்களைப் பரிசோதனை செய்வித்தேன். அவர் சிபார்சு செய்த கண்ணாடியை 20.03.1982 முதல் அணிந்துகொள்ள ஆரம்பித்தேன். அன்று முதல் இயல்பான வாழ்க்கை நிலையில் இருந்து நான் விடுபட்டு ஒரு சிரமத்தைச் சுமந்து திரியும் நிலைக்கு ஆளானேன்.



நான் ஆசிரியராகப் பணிபுரிந்த பாடசாலைகளில் எல்லாம் மாணவர் தமிழ் இலக்கிய மன்றங்களுக்குப் பொறுப்பாசிரியராக இருந்து வந்தேன். தேவரையாளி இந்துக் கல்லூரியிலும் அந்தப் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்தக் கல்லூரியின் நிறுவுநர் சைவப் பெரியார் கா. சூரன் அவர்கள், வடபிரதேசத்திலுள்ள ஏனைய கல்லூரிகளை நிறுவிய நிலவுடைமையாளர் போன்ற ஒருவரல்லர். சைவ அபிமானம், கல்வியில் நாட்டம் என்பனவே அவரது சொத்துகளாக இருந்து வந்தன. வேறு எந்தச் சொத்துடைமையும் இல்லாத அவர், காலப்போக்கில் வரலாற்றில் இருந்து ஓரங்கட்டப்படும் ஒரு நிலைமை, எமது பிரதேசத்தில் மெல்ல உருவாகிக் கொண்டு வந்ததை நான் உன்னிப்பாக அவதானித்து வந்தேன். தர்மம் ஒருபோதும் தோற்றுப்போகக்கூடாது என்பதில் எப்பொழுதும் தீவிரமாக இருப்பவன் நான். அதனால் அவர் ஆற்றிய சமயப் பணி, கல்விப் பணி என்பவற்றைத் தெளிவாக எடுத்து விளக்கி, கட்டுரைகள் சிலவற்றைப் பத்திரிகைகளில் எழுதினேன். இச்சமயம் அவரின் பிறந்த நூற்றாண்டுக் காலம் வருவதைக் கவனத்தில் கொண்ட, அந்தச் சந்தர்ப்பத்தினை முறையாகப் பயன்படுத்தத் தீர்மானித்தேன். அவரது நூற்றாண்டு விழாவினை, கல்லூரி அதிபரின் அனுசரணையுடன் மாணவர் தமிழ் இலக்கிய மன்றச் சார்பில் நடத்தி முடிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து முடித்தேன். 21.05.1982-ல் நடைபெற்ற அந்த விழாவுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் நண்பர் கலாநிதி நா.சுப்பிரமணிய ஐயர் எனது அழைப்பினை ஏற்று வருகை தந்து நினைவுச் சொற்பொழிவினை நிகழ்த்தினார். அதன் பின்னரே சூரனின் சொந்தக்

கிராமத்திலும் அன்னாரின் நூற்றாண்டை நினைவுகூரும் கூட்டம் ஒன்று நடை பெற்றது.

கல்வித்துறை சார்ந்த மேன்நிலைப் பதவியில் இருக்கின்றவர்கள் இன்று பணிப்பாளர்கள் என்றே குறிப்பிடப்படுகின்றனர். சில காலங்களுக்கு முன்னர் அவர்கள் அதிகாரிகள் என அழைக்கப் பெற்றார்கள். கல்விப் பிரதேசங்கள் கோட்டங்கள், வலயங்களாகப் பிரிக்கப்படுவதற்கு முன்னர், வட்டாரங்கள், மாநிலங்களாகப் பகுக்கப்பட்டிருந்தன. ஒரு வட்டாரத்துக்குப் பொறுப்பாக இருந்தவர் வட்டாரக் கல்வி அதிகாரி என அழைக்கப் பெற்றார். எங்கள் கல்லூரி உடுப்பிட்டி வட்டாரத்தைச் சார்ந்தது. உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரியாக அப்பொழுது க.ஈ. சுரபாதம் இருந்து வந்தார். கல்வி அதிகாரிகள் தங்களுக்குக் கீழ் பணிபுரியும் ஆசிரியர்களுடன் நெருக்கமான உறவுகளைப் பொதுவாக வைத்துக்கொள்வதில்லை. எங்கள் வட்டாரக் கல்வி அதிகாரி என்மீது மிகுந்த அன்பும் மதிப்பும் வைத்திருந்தார். தனது வட்டாரத்தில் நான் ஆசிரியராக இருப்பது தனக்குப் பெருமையென ஒரு சமயம் மனந்திறந்து என்னிடம் சொன்னார்.

அவர் வட்டாரக் கல்வி அதிகாரியாக இருந்து வந்த காலத்தில், கல்லூரியில் இருந்து நான் மாற்றலாகிச் செல்ல வேண்டிய சூழ்நிலையொன்று உருவானது. நாற்பது வயதுக்கு உட்பட்ட ஆசிரியர்கள் வெளிமாவட்டங்களில் போதுமான காலம் கடமையாற்றி இருப்பினும், ஒரே பாடசாலையில் குறிப்பிட்ட காலத்துக்கு மேல் சேவையாற்றி இருந்தால் சிலகாலம் கஷ்டப் பிரதேசங்களில் மீண்டும் சேவை செய்ய வேண்டுமெனப் பணிக்கப்பட்டது. எங்கள் கல்லூரியில் கடமையாற்றிக் கொண்டிருந்த ஆசிரியர்களுள் நானும் இன்னும் இருவரும் அங்கிருந்து மாற்றம் பெற்றுச் செல்ல வேண்டியவர்களாக இருந்தோம்.

இந்தச் செய்தி அறிந்து ஒரு சனிக்கிழமை காலை நேரம் வட்டாரக் கல்வி அதிகாரியின் காரியாலயத்துக்கு நான் சென்றேன். வட்டாரக் கல்வி அதிகாரிக்கு எனது வருகையின் உள்நோக்கம் அப்பொழுது 'சட்'டென்று விளங்கி இருக்க வேண்டும். "ஏன் தம்பி வந்தீர்?" எனச் சிரித்த வண்ணம் என்னைப் பார்த்துக் கேட்டார். அவர் முன்னால் உள்ள கதிரையில் மெல்ல அமர்ந்த வண்ணம், "எனக்கு மாற்றமாம்! அதுதான் அறிந்து கொண்டு போக வந்தனான்" எனச் சொன்னபோது, "ஓமோம்... இங்கே இருந்து போக வேண்டியதுதான்" எனச் 'சட்'டென்று கூறினார். "போக வேண்டி வந்தால், போவேன்" என அசட்டுத் துணிச்சலுடன் நான் உடனே அவருக்குச் சொன்னேன். "உந்தக் கதைகளை விட்டுப்போட்டு உம்மடை வேலையைப் போய்ப் பார் தம்பி" என அந்தக் கதைக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு, என்னை அங்கிருந்து அனுப்பி வைத்தார்.

இரண்டு வாரங்களின் பின்னர் என்னோடு கடமையாற்றிய ஓர் ஆசிரியர் கிளிநொச்சிக்கும், இன்னொருவர் வடமராட்சி கிழக்குக்கும் மாற்றஞ் செய்யப்பெற்று, எங்கள் கல்லூரியில் இருந்து வெளியேறிப் போனார்கள்.

அரசியல்வாதி ஒருவருக்கு எனது அரசியல் கருத்துக் காரணமாக என்மீது அதிருப்திதோன்றி இருந்தது. அரசியல்வாதிகள் ஆசிரியர்களைப் பகடைக்காயாகக் கணித்துத் "தண்ணியில்லாக் காட்டு"க்கு அனுப்பி வைப்பதுதான் அவர்களிடம் இருக்கக்கூடிய அதிகாரத் திறமை. என்மீது அதிருப்தி கொண்ட அந்த அரசியல்வாதி, என்னையும் ஏதோவொரு காட்டுக்கு அனுப்பி வைப்பதற்கு மனங் கொண்டார். அந்த எண்ணத்துடன் வட்டாரக் கல்வி அதிகாரியைச் சந்தித்த சமயம், "தெணியான் எப்பிடி?" என அவரிடத்தில் விசாரித்தார். அந்த விசாரணையின் உள்நோக்கத்தை வட்டாரக் கல்வி அதிகாரி தெளிவாகப் புரிந்துகொண்டு, "பள்ளிக் கூடத்தில் ஒழுங்காகப் படிப்பிக்கின்றார், ரியூட்டரிகளிலும் நிற்கிறார். பட்டி மன்றங்களில் பேசிக் கொண்டு திரிகிறார். பத்திரிகைகளில் எழுதுகிறார். அவர் படிப்பித்த தமிழ்ப் பாடத்தில்தான் O/L பரீட்சையில் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருக்கின்றார்கள். இவ்வளவையும் எப்படிச் செய்கிறார் என்றுதான் எனக்கு விளங்கவில்லை" எனக் கூறிவைத்தார். அவர் விரிவாக எடுத்துக் கூறிய பதில் கேட்டு, அந்த அரசியல்வாதி தனது மனதில் இருந்த எண்ணத்தினை அவருக்கு வெளியிடாமல் மௌனமானார்.

நான் முப்பதாண்டு காலம் தொடர்ச்சியாகத் தேவரையாளி இந்துக் கல்லூரியில் பணிபுரிந்து இறுதியில் அங்கிருந்து ஓய்வுபெற்றேன்.

ஒருநாள் காலை வேளை வட்டாரக் கல்வி அதிகாரி ஈ.சுரபாதம் கல்லூரிக்குத் திடீரென வருகை தந்திருந்தார். ஆசிரியர்கள் நேரம் பிந்தாமல் பாடசாலைக்கு வருகின்றார்களா? எனக் கண்காணிப்பதே, இத்தகைய வருகையின் நோக்கம். அன்று ஆசிரியர்கள் ஒவ்வொருவராகக் கல்லூரிக்கு வந்து தினவரவு ஏட்டில் கைச்சாத்திட்ட பின்னர், அவர்கள் அந்த வாரம் வகுப்புகளில் கற்பிப்பதற்குரிய பாடக் குறிப்புகளை அவர்களிடம் பெற்றுப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார் கல்வி அதிகாரி.

அந்தச் சமயம் நான் கல்லூரிக்குப் போய்ச் சேர்ந்தேன். நான் கைச்சாத்திட்டு முடிந்ததும், "தெணியான், பாடக் குறிப்பைக் கொண்டு வாரும்" என அவர் என்னை அழைத்தார். என்னிடம் பாடக்குறிப்பு இருக்கவில்லை. நான் பெரும்பாலும் எழுதுவதில்லை. நான் கற்பிக்கும் வகுப்புகளுக்கு எல்லாம் தமிழ்ப் பாடம் கற்பிக்கும் ஓர் ஆசிரியராக நான் இருந்தேன். தமிழ் தொடர்ந்து கற்பித்துக் கொண்டிருந்ததினால் பாடக் குறிப்பு எழுதுவதனை நான் கைவிட்டுவிட்டேன். ஆக்க

இலக்கியம் படைக்கும் எனக்கு, இயந்திரமாகப் பாடக் குறிப்புகள் எழுதிக் கொண்டிருப்பது உபத்திரவமாகத் தோன்றியது. பாடக் குறிப்பு எழுதாத ஆசிரியர்களைக் கல்வி அதிகாரி விசாரித்துக் கண்டித்துக் கொண்டிருந்தார். அவர்கள் மத்தியில் அவரால் கண்டிக்காமல் என்னை விட்டுவிட முடியாது என்பதனை நான் உணர்ந்து கொண்டேன்.

நான் சற்று நேரம் யோசித்தேன். ஆசிரியர்கள் சிலர் அவர் முன்னே நின்று கொண்டிருந்தார்கள். நான் எனது கையில் இருந்த புத்தகங்களுக்கிடையில் வைத்திருந்த பழைய கொப்பி ஒன்றினை எடுத்து விரித்து, அவரிடம் அதனை நீட்டினேன். அவர் அந்தக் கொப்பியைக் கையில் வாங்கி, நான் விரித்துக் கொடுத்த பக்கத்தை நோட்டமிட்டார். பின்னர் மறுபக்கங்களைத் தட்டிப் பார்த்தார். அதன் பிறகு கொப்பியை மூடிக்கொண்டு என்னிடம் நீட்டிய வண்ணம், "நல்லா எழுதி இருக்கிறீர்" எனச் சொன்னார். நன்றி சொல்லிவிட்டு அதனைப் பெற்றுக் கொண்டு அங்கிருந்து மெல்ல விலகிப் போனேன்.

இனி, இக்காலகட்டத்தில் மல்லிகையில் வெளிவந்த கட்டுரைப் பற்றிப் பார்க்கலாம்.

"கந்தையா நடேசனால் (தெணியான்) கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட விமர்சனத் தொடரும் அதற்கு எழுந்த பதில்களும், மறுபதில்களும் மல்லிகையின் வளர்ச்சிப் பாதையில் முக்கியமான மைல் கற்கள் என்று கூடச் சொல்லலாம்" என நண்பர் முருக பூபதியினால் குறிப்பிட்டுச் சொல்லப் பெற்ற விவாதத் தொடரின் ஆரம்பக் கட்டுரையை 1982ஆம் ஆண்டு மல்லிகையின் 18ஆவது ஆண்டு மலரில் எழுதினேன். எனது நீண்டகால அவதானத்தின் பின்னர் மனதில் எழுந்த கருத்தினை ஒரு கட்டுரையாக முன்வைத்தேன். விவாதத்துக்குரிய பொருளாக அந்தக் கட்டுரை அமையப் போகின்றது என்பதனை உணர்ந்துகொண்டே அதனை எழுதினேன். முன்னரும் எனது கட்டுரை ஒன்றினை மையமாகக் கொண்டு மல்லிகையில் விவாதமொன்று நடந்து முடிந்த அனுபவம் எனக்குண்டு. "இலங்கை முற்போக்கு இலக்கியமும், அதன் எதிரணியினர்களான மரபுப் பண்டிதர்களும், மார்க்ஸியப் பண்டிதர்களும்" என்னும் இக்கட்டுரை நான் எதிர்பார்த்தது போலச் சர்ச்சைக்கு உள்ளானது. தங்கள் வழமையான எழுத்துப் பணியினை நான் குறிப்பிட்ட மார்க்ஸியப் பண்டிதர்கள் குறைவின்றிச் செய்தார்கள். கருத்துநிலையில் விவாதத்தினை முன்வைக்க இயலாமல், தனிப்பட்ட முறையில் என்னைத் தரக்குறைவாகத் தங்கள் பத்திரிகையில் தாக்கி எழுதி, தங்கள் மேதாவித்தனத்தை என்றும் போல் பதிவு செய்து வைத்துக் கொண்டார்கள். இத்தகைய திருத்தொண்டினைச் செய்து வருவது ஒன்றினையே தமது அந்தரங்க நோக்கமாகக் கொண்டு, காலத்துக்குக் காலம் ஒரு பத்திரிகையை இலக்கிய முலாம் பூசி வெளியிட்டுக் கொண்டு வருவது அவர்கள் வழக்கம்.

நான் அந்தக் கட்டுரையில் முன்வைத்த கருத்தினை நிராகரித்து முற்போக்கு அணியினர் சிலரும் மல்லிகையில் எழுதினார்கள். சாதியப் பார்வையுடன் டானியல், ஜீவாவை முதன்மைப்படுத்தி, வர்க்கச் சிந்தனைக்கு முரணாக நான் எழுதி இருப்பதாகக் குற்றஞ்சாட்டினார்கள். வர்க்கத்தை மீறிய சாதியம் டானியல், ஜீவா மீது தனது ஆதிக்க பார்வையைப் பதிக்கின்றது என்பதனை அந்தக் கட்டுரையில் நான் வலியுறுத்தி இருந்தேன்.

அன்று நான் தெரிவித்த அந்தக் கருத்து தவறானது அல்ல என்பதனை நிறுவும் வகையில், "டானியல், ஜீவா இருவரும் வெறும் கதை சொல்லிகள்" என்னும் புதிய கண்டுபிடிப்பொன்று அண்மையில் முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

அந்த விவாதத்தினை மல்லிகையில் ஆரம்பித்தவன் நான் என்ற காரணத்தினால், அந்த விவாதத் தொடரை முடித்து வைக்கும் பொறுப்பினை மல்லிகை ஆசிரியர் என்னிடத்தில் விட்டு வைத்தார். இனி இந்த விவாதத்தினைத் தொடரப் போவதில்லை என்னும் அவர் முடிவினை ஏற்றுக் கொண்டு, தொடரை ஆரம்பித்து ஓராண்டு காலத்தின் பின்னர் 1983ஆம் ஆண்டு நவம்பர் மல்லிகையில் இறுதிக் கட்டுரையை நான் எழுதினேன்.

என்ன ஆச்சரியம். அதன் பின்னர் கடிதங்கள் என்னும் போலி மகுடமிட்டு விவாதக் கட்டுரைகள் இரண்டு மல்லிகையில் வெளிவந்தன. எனது கட்டுரையின் அடிப்படைக் கருத்தினை முற்றாக நிராகரித்து, அந்த நிராகரிப்புக்கு மறுப்பெதுவும் என்னால் சொல்வதற்கு இயலாதென்னும் பாங்கில் எள்ளல் இழையோட அக்கட்டுரைகள் எழுதப்பட்டிருந்தன. அந்தக் கட்டுரைகளில் தெரிவிக்கப் பெற்ற கருத்தினை மறுத்து கடிதம் என்ற பொய்மையில் தோய்த்து ஒரு கட்டுரையினை நானும் ஒருவேளை எழுதி இருக்கலாம். இப்படி நடக்குமென்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. மல்லிகையில் இனி எந்தவிவாதக்கட்டுரையும்நான்எழுதுவதில்லையென அப்போது முடிவு செய்து கொண்டேன். அதன் பின்னர் சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட சில விடயங்கள் சம்பந்தமாக விவாதம் ஒன்றினை ஆரம்பிக்குமாறு மல்லிகை ஆசிரியர் கேட்டுக் கொண்ட போதும் நான் அதனைக் கவனத்தில் கொள்ளாது தவிர்த்து விட்டேன்.

அந்த விவாதத்தினைப் பிரதானமாகக் கொண்டு 'எண்பதுகளில் மல்லிகை விமர்சனங்கள்' என்னும் ஆய்வினை மேற்கொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவி ம. தேவகௌரி தமது தமிழ் சிறப்புக் கலைமாணி (1992) இறுதித் தேர்வுக்குக் கட்டுரை சமர்ப்பித்தார். நூலாக அந்த ஆய்வு பின்னர் வெளிவந்திருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து 'மக்கள் இலக்கியம்' என்னும் சஞ்சிகையொன்று வெளிவந்தது. அந்த சஞ்சிகையின் பிரதம

ஆசிரியராக தோழர் வீ. சின்னத் தம்பி இருந்தார். டானியல், அவரைச் சார்ந்தவர்கள் இணைந்து நின்று அந்தச் சஞ்சிகையை வெளியிட்டார்கள். அதன் வெளியீட்டு விழா யாழ்ப்பாணம் நிம்மர் மண்டபத்தில் 20.11.1982 பிற்பகல் வேளை இடம்பெற்றது. அந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுவதற்காக வடமராட்சியில் இருந்து புறப்பட்டுச் சென்று யாழ். வைத்தியசாலைக்கு முன்னுள்ள பஸ்தரிப்பு நிலையத்தில் பஸ்வண்டியில் இருந்து இறங்கினேன். அப்பொழுது பேராசிரியர் க. கைலாசபதி அருகிலுள்ள கண்ணாடிக் கடைக்குள் இருந்து வெளியே வந்து கொண்டிருப்பது கண்டு வீதியிற் சற்றுத் தரித்து நின்றேன். அவர் என் அருகே வந்து, "மக்கள் இலக்கியம் வெளியீட்டு விழாவுக்குத்தானே!" என வினவினார். பின்னர் தொடர்ந்து, "என்னை அழைக்க மாட்டார்கள், தெணியானுக்குத் தெரியுந்தானே!" எனக் கூறினார். அதனைத் தொடர்ந்து, "கண்பார்வை சரியாக இல்லை. கண்ணாடி மாற்ற வேண்டி இருக்கு. செனற் மீட்டிங் முடிந்து வளாகத்தில் இருந்து நேரே இங்கே வந்திருக்கிறேன். எனக்குக் களைப்பாயிருக்கு, தெணியான். நான் வாறன்!" சொல்லிக் கொண்டு என்னிடம் விடைபெற்றுக் கொண்டு விரைவாக அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

அந்தச் சந்திப்பு மிக முக்கியமான ஒரு சந்திப்பாக அமையுமென அப்பொழுது நான் அறிந்து கொள்ளவில்லை.

அந்தச் சந்திப்பு நிகழ்ந்து இரண்டு வார காலத்தின் பின் 06.12.1982-ல் கைலாசபதி கொழும்பில் காலமான செய்தி அறிந்து நான் அதிர்ச்சி அடைந்தேன். "எனக்குக் களைப்பாயிருக்கு, தெணியான். நான் வாறன்" என இறுதியாக அவர் சொல்லிப் போன வார்த்தைகளுக்கு அப்பொழுது புதிய அர்த்தம் இருப்பதான புரிதலில் மனம் எண்ணி எண்ணித் தவித்துப் போயிற்று.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் எடுத்த பாரதி நூற்றாண்டு விழா கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு எனப் பரவலாக நாடெங்கும் நடைபெற்றது. அந்தச் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளைச் செயலாளராக அப்பொழுது நான் இருந்து வந்தேன்.

தமிழ்நாட்டில் இருந்து சிதம்பரரகுநாதன், பேராசிரியர் எஸ். இராமகிருஷ்ணன், நாவலாசிரியை ராஜம் கிருஷ்ணன் ஆகியோர் அந்த விழாவுக்கு வருகை தந்திருந்தனர். மூன்று தினங்கள் யாழ்ப்பாணத்தில் அவர்கள் தங்கி இருந்த சமயம் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி நிரல் விழாக் குழுவினரால் ஒழுங்குப்படுத்தித் தயாரிக்கப் பெற்றது. அந்தத் திட்ட ஒழுங்குக்கமைய வடமராட்சிப் பகுதியில் இரண்டு நிகழ்ச்சிகளில்

அவர்கள் பங்குபற்றுவதற்கு ஏற்பாடாகி இருந்தது. வதிரி தமிழ் மன்ற நிகழ்ச்சியை அதன் செயலாளருக்குத் தெரிவித்து விட்டு நான் ஏற்பாடு செய்தேன். கம்பர்மலை நிகழ்ச்சி டானியல் மூலமாக என்னோடு தொடர்பு கொண்டபோது நான் ஒழுங்கு செய்து கொடுத்தேன்.

வடமராட்சித் தனவந்தர் ஒருவர் இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்ட பின்னர், தான் வாழும் பகுதிக்கு அவர்களை அழைத்து ஒரு விழாவினைத் தான் முன்நின்று செய்ய வேண்டுமென மனங்கொண்டார். அதன் மூலம் மக்கள் மத்தியில் தனது செல்வாக்கினை எதிர்கால அரசியல் நோக்குடன் பெருக்குவதே அவரது அடிப்படை நோக்கம். தமது நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்காக யாழ். கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயத்துக்கு ஓடோடிச் சென்றார். அவர்கள் ஜீவாவைக் கண்டு பேசுமாறு சொல்லி அனுப்பி வைத்தார்கள். ஜீவா, "செயலாளர் தெணியான். அவரிடம் பேசுங்கள்" எனக் கூறி அனுப்பி விட்டார். அந்தத் தனவந்தர் நேரில் என்னிடம் வராது நெல்லியடியில் வாழ்ந்த கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் பொன். குமாரசாமியை அணுகினார். பொன். குமாரசாமியிடம் ஒரு கடிதத்தைப் பெற்று, அக்கடிதத்தினைத் தான் நேரில் கொண்டு வராது இன்னொருவர் மூலம் கொடுத்து அனுப்பி வைத்தார்.

நான் அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்தேன். ஒரு சந்தர்ப்பம் அவருக்கு வழங்க முடியுமானால் அதனைச் செய்யுமாறு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. எந்த வகையிலும் கட்டாயப்படுத்தாத மிகத் தந்திரோபாயமான கடிதமாக அது இருந்தது. நிகழ்ச்சி நிரல்கள் தயாரிக்கப்பட்டு விட்டதால் இனிமேல் எதுவும் செய்ய இயலாதெனக் கடிதம்கொண்டுவந்தவரிடம் கூறினேன். வதிரி தமிழ்மன்ற நிகழ்ச்சியினை ரத்து செய்துவிட்டு, அந்தச் சந்தர்ப்பத்தினைத் தங்களுக்குத் தருமாறு கடிதம் கொண்டு வந்தவர் என்னிடத்தில் கேட்டுக் கொண்டார். அப்படிச் செய்ய முடியாதென நான் உறுதியாக மறுத்துவிட்டேன். இத்தகையை நெருக்கடிக்கு மத்தியில்தான் வதிரி தமிழ் மன்றத்துக்கு தமிழ்நாட்டு இலக்கியவாதிகளை நான் அழைத்து வந்தேன் என்பது பலருக்குத் தெரியவராது.

பின்னர் அந்த வடமராட்சித் தனவந்தரிடம், 'இப்பகுதியில் இடம்பெற்ற பாரதி விழாக்களுக்குப் போகவில்லையா?' என ஒருவர் வினவியபோது, "உவங்கடை இடங்களுக்கு நான் போகமாட்டேன்" என இறுமாப்புடன் அவர் சொன்னாரென நான் அறிந்து கொண்டேன். "உவங்கடை இடங்கள்" என அவர் குறிப்பிட்டுச் சொன்ன இடங்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதி என்பதனை இங்கு விளங்கிக்கொள்ள வேண்டும். அதன் பிறகு நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் எனது பெயரைப் பகிரங்கமாகச் சொல்லி மனக்காழ்ப்புடன் அவர் திட்டித் தீர்த்தார் என்பதனையும் நான் அறிய முடிந்தது.

பாரதி நூற்றாண்டு விழா நிகழ்வுகள், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் 23.03.1983-ல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாயின. அன்று காலை ஊர்காவற்றுறையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. பிற்பகல் சாவகச்சேரி றிபேக் கல்லூரி தமிழ் மன்றத்தில் பேராசிரியர் எஸ். இராமகிருஷ்ணன் உரையாற்ற இருந்தார். யாழ் நகரில் இருந்து பேராசிரியரை ஒரு காரில் அங்கு நான் அழைத்துச் சென்றேன். அங்கிருந்து இருவரும் வடமராட்சி திரும்பினோம். பாரதியின் ஞானகுரு அருளம்பல சுவாமிகளின் சமாதியைத் தரிசிக்க வேண்டுமென அவர் தெரிவித்தார். வியாபாரி மூலை வீரபத்திரர் ஆலயத்துக்கு அருகே அமைந்துள்ள சுவாமிகளின் சமாதிக்கு அவரை அழைத்துச் சென்றேன்.

தெய்வ ஆலயம் ஒன்றினை அடியான் ஒருவன் தரிசனம் செய்வது போல அருளம்பல சுவாமிகள் சமாதியை பேராசிரியர் மிகப் பணிந்து அடக்கமாகச் சுற்றி வலம் வந்து வணங்கினார். அன்று இருவரும் ஒன்றாகக் காரில் பிரயாணஞ்செய்த சமயம் பேராசிரியர் என்னிடத்தில் ஒரு கேள்வியைக் கேட்டார். "இலக்கியரீதியாக இங்கு வெற்றி பெற்ற முற்போக்கு இயக்கம், அரசியல்ரீதியான வெற்றியை ஏன் பெற்றுக் கொள்ள முடியாது போனது?" என்பதே அந்தக் கேள்வி. அந்தக் கேள்விக்கான முறையான பதிலினை அப்பொழுது உண்மையில் என்னால் எடுத்துச் சொல்வதற்கு இயலாது போயிற்று.

அன்று மாலையில் வதிரி தமிழ்மன்றத்தில் நடைபெற்ற நிகழ்வுக்கு நாவலாசிரியை ராஜம் கிருஷ்ணனை அழைத்து வந்தேன். அதன் பின்னர் கம்பர்மலை பொன். கந்தையா சனசமூக நிலையத்தைப் பேராசிரியர் இராமகிருஷ்ணன் திறந்துவைத்து உரையாற்றினார். அங்கு நிகழ்ந்த அந்த உரை அரங்கில் டானியல் கலந்துகொண்டார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் தமக்கிருந்த உறவுகளை முற்றாகத் துண்டித்து விட்டு இருந்த டானியல், அந்த நிகழ்வில் வந்து பங்குகொண்டது நல்லதொரு சகுனமாக அமைந்தது.

மறுதினம் 24.03.1983 காலை ராஜம்கிருஷ்ணனைப் பலாலி ஆசிரியக் கலாசாலைக்கு அழைத்துச் சென்றேன். ஆசிரிய மாணவர்கள், விரிவுரையாளர்கள் மத்தியில் அவர் அங்கு உரை ஆற்றினார். அன்று பிற்பகல் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் எஸ். தர்மலிங்கம் அவர்கள் தலைமையில் பிரதானமான பாரதி நூற்றாண்டு விழா நடைபெற்றது. மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காகச் சென்றிருந்த சிதம்பர ரகுநாதனை நண்பர் முருகபூபதி அந்த நிகழ்வுக்கு அழைத்து வந்தார். தமிழ்நாட்டு எழுத்தாளர்கள் மூவரும் அந்த நிகழ்வில் அன்று உரை ஆற்றினார்கள். இறுதியில் எனது நன்றியுரை அங்கு இடம்பெற்றது.

அடுத்தநாள் 25.03.1983 யாழ். வளாகத்தில் மூவரும் உரை ஆற்றினார்கள். பிற்பகல் வேளை தோழர் R.R.பூபாலசிங்கம் இல்லத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

அன்று மதிய உணவு தான் எல்லோருக்கும் வழங்குவதாக டானியல் உடன்பட்டிருந்தார். தமிழக எழுத்தாளர் மூவரும் கொழும்பு திரும்பிச் செல்வதற்கான விமானப் பயணச் செலவினையும் அவரே ஏற்றுக்கொண்டார்.

மதிய உணவுக்கு யார்யாரை அழைக்கலாம் என நான் டானியலிடம் ஆலோசனை கேட்டேன். "அந்த ஒழுங்குகளை நீங்களே செய்யுங்கள். அழைப்பு உங்களுடையதாகவே இருக்கட்டும். நான் அழைப்பு விட்டால் என்னோடை நிற்கிறவையாலே எனக்குக் கரைச்சல்" என மிக அந்தரங்கமாக அவர் என்னிடம் அப்போது கூறினார். ஜீவா, பொருளாளர் கலா பரமேஸ்வரன் ஆகிய இருவரு டனும் நான் கலந்தாலோசித்து விழா நடைபெறுவதற்கு வேண்டிய உதவிகள் செய்தவர்களை மதிய உணவுக்கு முக்கியமாகத் தவறாமல் அழைப்பதெனத் தீர்மானித்தோம்.

அந்த விழா நடவடிக்கையில் மிக உற்சாகமாக ஓடியாடிப் பங்கு பற்றிச் செயற்பட்டவர் புதுவை இரத்தினதுரை. டானியல் வழங்கும் மதிய போசனத்தில் வந்து கலந்துகொள்ளுமாறு அவரையும் அழைத்திருந் தோம். அந்த மதியபோசன விருந்தினை நல்லூர் கோயில் வீதியிலுள்ள மூத்த மகனின் இல்லத்தில் டானியல் ஒழுங்கு செய்திருந்தார். தனது சயிக்கிளில் மல்லிகைக் காரியாலயத்திலிருந்து என்னை அந்த விருந்துக்கு ஏற்றிச் செல்வதாக முதல்நாள் இரத்தினதுரை எனக்கு வாக்களித்திருந்தார். நான் மல்லிகைக்குச் சென்ற சமயம் அவர் என் வரவை எதிர்பார்த்து அங்கு காத்திருந்தார். வழமையாக எப்பொழுதும் அவரிடத்தில் இருக்கும் உற்சாகம் அப்பொழுது இல்லை என்பதனை எனது முதற்பார்வையிலேயே நான் உணர்ந்து கொண்டேன். அவர் என்னைக் கண்டதும், "தெணியான் அண்ணை, உங்களை ஏற்றிக் கொண்டுப் போய் விடுகிறேன். நான் விருந்துக்கு வரயில்லை" என மறுப்புத் தெரிவித்தார். டானியலுக்கும் அவருக்குமிடையே இருந்து வந்த நெருக்கமான உறவும், பின்னர் உண்டான மனக்கசப்பும் நான் அறியாதவையல்ல. ஆனால் அதனை நான் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இருவரையும் பழைய உறவு நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென நான் விரும்பினேன். அத்தோடு அவரை விட்டு, நான் மட்டும் சென்று விருந்தில் கலந்துகொள்வதற்கு எனக்கு விருப்பமில்லை. விருந்துக்கு அவர் என்னுடன் வரத்தான் வேண்டுமென நான் விடாப்பிடியாக நின்றேன் அப்பொழுது, "வந்தால் டானியல்..." என சொல்லித் தயங்கினார். "பிசகாக அப்படி ஒன்றும் நடக்கா"தெனக் கூறி, வற்புறுத்தி அவரை அழைத்துக் கொண்டு புறப்பட்டேன்.

இருவரும் சயிக்களில் சென்றிறங்கி நான் முன்னே செல்ல எனக்குப் பின்னால் இரத்தினதுரை வந்துகொண்டிருந்தார். விருந்துக்கு வருகின்றவர்களை வீட்டு வாசலில் நின்று வரவேற்றுக் கொண்டிருந்த டானியல், இரத்தினதுரை வந்துகொண்டிருப்பதைக் கண்டு முகம் மலர்ந்து, "இரத்தினதுரை, வா" என அன்பாக வரவேற்றார். இரத்தினதுரையின் முகம் அந்தக் கணமே மலர்ந்தது. அங்கு வரும் போதில் அவருக்கிருந்த தயக்கம் எப்படிப் பறந்ததோ தெரியாது. அவருக்கே இயல்பான அந்தக் கலகலப்புடன் அதன் பின்னர் வெகு உற்சாகமாகத் தோன்றினார்.

கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் ஒருவரை ஒருவர் அணைத்துப் போகும் சிறந்த பண்பாடு மூத்த தலைமுறை எழுத்தாளர்களிடம் அன்று இருந்து வந்தது. அவர்கள் தமக்குள் உரையாடும் சமயங்களிலும், ஒருவரை ஒருவர் விளிக்கும் வேளைகளிலும் அவர்களுக்குள் இருந்துவந்த போலித்தனமற்ற உறவின் நேர்த்தியினை நான் பல தடவைகள் நேரிற் கண்டு வியந்திருக்கின்றேன்.



எனது மாணவப் பருவத்தில் வீடு தேடிவந்து என்னைச் சந்தித்தவர் டானியல். அரசியல், சமூக நோக்கங்களுக்காக அப்பொழுது என்னைத் தேடிவந்த போதும், ஏதோ ஒரு வகையில் என்னைச் சரியாக இனங்கண்டவர் அவர். என் மீது நம்பிக்கை வைத்திருந்தார். நான் அப்பொழுது எழுத்தாளனல்லன். வெறும் வாசகன்தான். ஆனால், அக்காலத்திலேயே இலக்கியக் கூட்டங்கள், நூல் வெளியீட்டு விழாக்கள் என்பவற்றுக்கெல்லாம் எனக்கு அழைப் பனுப்பி வைத்துப் பங்குபற்றச் செய்தார். சமூகம் பற்றிய கருத்து நிலையில் இருவரும் ஒன்றுபட்டு நின்றோம். ஆனால், அரசியல் நோக்கில் எங்கள் இருவருக்கும் வேறுபாடு இருந்து வந்தது. அந்த வேறுபாட்டையும் மீறி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகக் கொண்ட வேட்கை எங்கள் இருவரையும் இறுக்கமாக இணைத்து வைத்திருந்தது.

டானியல், ஜீவா இருவருக்கும் இடையே உறவுப் பாலமாக ஒருகாலத்தில் நான் இருந்து வந்தேன்.

இருவரும் நண்பர்களாக, தோழர்களாக, சக எழுத்தாளர்களாக உறவு பூண்டு வாழ்ந்து வந்தார்கள் என்பது எல்லோரும் அறிந்ததுதான். இருவரும் கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கம் வகித்தவர்கள். கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபட்ட சமயம் (1964) இருவரும் வெவ்வேறு அணி சார்ந்தவர்களாகப் பிரிந்து நின்று தீவிரமாகச் செயற்பட்டார்கள். அரசியல் முரண்பாடு - கருத்து முரண்பாடு என்பவற்றைச் சுயமுரண்பாடாகக் கருதிச் செயற்படும் தீவிரத் தன்மை அக்காலத்தில் கட்சி சார்ந்தவர்களிடம் இருந்து வந்திருக்கின்றது. இதனால் இருவருக்குமிடையே இறுக்கமான உள்முரண்பாடுகள் இருந்து வந்தன.

நான் இவர்கள் இருவருக்கும் அடுத்த தலைமுறையைச் சேர்ந்த எழுத்தாளன். இவர்களைப் போலவே ஒடுக்கப்பட்ட சமூகத்தில் இருந்து வந்தவன். அரசியலில் ஜீவா சார்ந்து நின்ற அணியைச் சார்ந்தவன். ஒடுக்கப்பட்ட சமூகம் பற்றிய சிந்தனைப் போக்கில் டானியலுக்கு மிக நெருக்கமானவன். இந்தக் காரணங்களினால் இவர்கள் இருவரினதும் அன்புக்குப் பாத்திரமானவன். இருவரு டனும் நான் மிக நெருக்கமான உறவுடன் பழகி வந்தவன். நான் டானியலைத் தேடிச் செல்லும் சமயங்களில், "ஜீவா என்ன செய்கிறான்?" என மிக உரிமையுடன் விசாரிப்பார். ஜீவாவைச் சந்திக்கும் வேளைகளில் "டானியல் என்னவாம்?" எனக் கேட்டு வைப்பார். இவர்கள் இருவ ருக்கும் மத்தியில் முரண்பாடுகள் மேலும் வளராத வண்ணம் வெகு நிதானமாக நான் நடந்து கொண்டேன்.

டானியல், ஜீவா இருவரினதும் வயது முதிர்ச்சி, அனுபவம், அரசியல் மாற்றங்கள் என்பவற்றுடன் எனது உறவு, முயற்சி என்பன காரணமாக, ஜீவாவின் பிறந்த தினத்தில் அவரை வாழ்த்துவதற்காக டானியல் மல்லிகை காரியாலயத்திற்கு வந்தார். இந்த முயற்சியில் 'முரசொலி' ஆசிரியர் எஸ். திருச்செல்வத்திற்கு (எஸ்தி) பங்குண்டு என்பது மறுப்பதற்கில்லை. பின்னர் டானியலின் படத்தினை அட்டையில் தாங்கி மல்லிகை இதழ் 1983 டிசம்பரில் வெளிவந்தது. டானியலிடம் படத்தைப் பெற்று, பேராசிரியர் கா. சிவத்தம்பியிடம் டானியல் பற்றிய அறிமுகக் கட்டுரையை வாங்கி, மல்லிகைக்கு நான் அவற்றைக் கொடுத்தேன். அல்வாயூர் கவிஞர் மு. செல்லையாவின் படம் மல்லிகை அட்டையில் 1982 நவம்பரில் இடம்பெறுவதற்கும் காரணமாக இருந்து, அவர் பற்றிய அறிமுகக் கட்டுரையைப் பேராசிரியர் கா. சிவத்தம்பியிடம் பெற்றுக் கொடுத்தேன் என்பதும் இங்கு குறிப்பிடுதல் அவசியமாகிறது.

எண்பதுகளின் ஆரம்பத்தில், ஜீவா, டானியல் இருவரும் தமக்குள் இருந்து வந்த மனக்கசப்புகள் ஓரளவு தீர்ந்து ஒருவர் மீது ஒருவர் மதிப்புடன் இருந்து வந்தார்கள். ஆனால் டானியலின் 'அடிமைகள்' (ஒக்டோபர் 1984) நாவல் வெளிவந்த சமயம் அவர் மீது ஜீவா ஒரு தினம் தனது அதிருப்தியை என்னிடம் வெளிப்படுத்தினார். அந்த அதிருப்தி தோன்றுவதற்கு நான் காரணமாக இருந்தேன். டானியல் தனது 'அடிமைகள்' நாவல் முன்னுரையில் என்னைப் பற்றிக் குறிப்பிடும்போது "அரசியலில் அவர் என் வயப்படவில்லை. சரியான நிலைப்பாட்டுக்கு வரவில்லை. சூழ்நிலைகள் அவர் வரவைத் தடுக்கின்றன" என எழுதி இருக்கின்றார். அதனைப் படித்த ஜீவா, "உங்களைத் தடுக்கிறது யார்? நான்தான் என்று நினைக்கிறாரோ?" எனச் சினந்து கொண்டார். ஜீவா இப்படி நடந்து கொண்டாரென நான் போய் டானியலிடம் இதனைச் சொல்லி வைக்கவில்லை. அப்படிச் சொல்வதனால் மீண்டும் மனக்கசப்புத்தான் இருவர் மத்தியிலும் தோன்றும் என்பதனைக் கருத்தில் கொண்டு நான் மௌனமாக இருந்து விட்டேன்.

டானியல் கருதியது போல என்னை யாரும் எந்த வகையிலும் தடுக்கவில்லை. யாருக்கும் எடுப்பார் கைப்பிள்ளையாக எந்தக் காலத்திலும் நான் இருந்ததில்லை. எனது சுயத்தை இழந்து விடாமல் நான் நானாகவே இருந்து வருவதுதான் எனக்குரிய இயல்பு.

ஜீவா அந்தச் சந்தர்ப்பத்தில் அவ்வாறு சினந்து கொண்டாலும், டானியலிடத்தில் அவர் கொண்டிருந்த மதிப்பினையும், டானியலுக்கும் எனக்குமிடையே இருந்துவந்த உறவினைக் கௌரவிக்கும் குணஇயல்பினையும் நான் நன்றாக அறிந்து வைத்திருந்தேன்.

எனது முதலாவது சிறுகதைத் தொகுதி 'சொத்து' தமிழ்நாடு என்.சி.பி.எச். வெளியீட்டாக 1984 ஜூனில் வெளிவந்தது. அந்தப் பிரதியை என்னிடம் பெற்று, அதனைத் தமிழ்நாட்டுக்கு எடுத்துச் சென்று நூலாக்கித் தந்தவர் ஜீவா. அந்த நூலை நான் தொகுத்துக் கொண்டிருந்த சமயம் அதற்குரிய முன்னுரையை யாரிடம் பெற்றுக்கொள்ளலாம் என ஜீவாவிடமே ஆலோசனை கேட்டேன். ஜீவா எந்தவிதத் தயக்கமுமின்றி உடனே, "டானியலிடம் வாங்குங்கோ!" எனக் கூறினார். அவர் தெரிவித்த கருத்து எனக்கும் உடன்பாடானதாக, மனதுக்கு உவப்பானதாகத் தோன்றியது. அதன் பின்னர் டானியலிடம் முன்னுரை வாங்கி அந்தத் தொகுதியில் இடம் பெறச் செய்தேன்.

எனது இலக்கிய வாழ்வின் வளர்ளிம் பருவத்தவனாக நான் இருந்த காலத்தில், என் மீது அன்பும் அக்கறையுமுள்ளவர்களாக டானியல், ஜீவா ஆகிய இருவரும் இருந்து வந்தது போல, எனக்கு மிக நெருக்கமான இன்னொருவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி. இவர்கள் மூவரையும் எனது நண்பர்கள் என்று நான் ஒருபோதும் அழைப்பதில்லை. அப்படி அழைப்பதில் ஒரு தயக்கம் மனதளவில் இப்பொழுதும் எனக்குண்டு.

பேராசிரியர் கா. சிவத்தம்பி பற்றிய விவரணக் குறும்படம் ஒன்று சிலகாலத்துக்கு முன் தயாரித்தார்களல்லவா! அந்தப் படம் தயாரித்த சமயம் பேராசிரியர் கா.சி. உடன் தொடர்புள்ள பலரை நேரிற் சென்று சந்தித்திருக்கிறார்கள். அவர்கள் சென்று சந்தித்த பலருள் கலாநிதி சொக்கனும் ஒருவர். இலங்கை இலக்கியப் பேரவை நல்லூர் ஆதீனத்தில் 06.06.2004-ல் நடத்திய பரிசளிப்பு விழாவுக்குக் கலாநிதி சொக்கன் வருகை தந்திருந்தார். அந்த விழாவில் என்னை அவர் சந்தித்த வேளை, "சிவத்தம்பி பற்றி விவரணப் படம் தயாரித்தவர்களை, உங்களைப் போய்ச் சந்திக்குமாறு திரும்பத் திரும்ப நான் சொன்னேன். அவர்கள் வந்து சந்திக்கவில்லையா?" என வினவினார். அவர்கள் என்னைச் சந்திக்காதது அறிந்து பெரிதும் விசனப்பட்டார்; கவலைப்பட்டுக் கொண்டார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பிக்கும் எனக்குமிடையே இருந்துவரும் நெருக்கமான உறவினை நன்கறிந்தவர்களுள் கலாநிதி சொக்கனும் ஒருவர். அதனால் தான் பேராசிரியர் பற்றிய விவரணப் படம்

தயாரித்தவர்கள் தவறாமல் என்னைச் சந்திக்க வேண்டுமென அவர் அக்கறைப் பட்டுக்கொண்டார்.

விவரணப் படம் தயாரித்தவர்கள் பேராசிரியருக்கும் எனக்கு மிடையேயுள்ள உறவினை அறியாதவர்களாக இருக்கலாம். அல்லது அவர்கள் சந்திக்க வேண்டிய முக்கியமான ஒருவராக நான் அவர்களுக்குத் தோன்றாமல் போயிருக்கலாம். அல்லது வசதியீனம் காரணமாகச் சந்திக்க முடியாது தவிர்த்திருக்கலாம். எதுவாக இருப்பினும் இங்கு குறிப்பிட வேண்டும் என்பது எனக்கு அவசியமுமல்ல. பேராசிரியருக்கும் எனக்குமிடையே இருந்து வரும் உறவு எத்தகையது என்பதனை அறியத்தருவதற்காகவே இங்கு அதனைக் குறிப்பிடுகின்றேன்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளராக (01.08.1978) வந்த பின்னரே அவருடன் நெருக்கமாகப் பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அதற்கு முன்னரே அவரை நான் நன்கு அறிந்து வைத்திருந்தேன். எனது 'விடிவை நோக்கி' நாவலின் வெளியீட்டு விழா தேவரையாளி இந்துக்கல்லூரியில் நடைபெற்ற போது, பேராசிரியர் கா. சிவத்தம்பி அந்த விழாவில் கலந்து கொண்டு, அந்த நாவல் பற்றிக் கருத்துரை வழங்கினார். அரசினர் நூல் அபிவிருத்திச் சபை 'சங்கப் பலகை' என்னும் அமைப்பின் மூலம் புதிய எழுத்தாளர் அறிமுகக் கூட்டம் ஒன்று யாழ். நூல் நிலையக் கேட்போர் கூடத்தில் 12.05.1975-ல் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் எனது 'விடிவை நோக்கி' நாவல் மதிப்பீடும் அறிமுகமும் இடம்பெற்றன. எனது நாவலை ஏ.ஜே. கனகரட்னா மதிப்பீடு செய்வதற்கான ஏற்பாட்டினை கா.சி. ஒழுங்கு செய்து வைத்திருந்தார். ஏ.ஜே.கே. பொதுவாகவே மேடை ஏறிப்பேசுவதற்கு விரும்பாத ஒருவர். எனவே தனது மதிப்பீட்டுக் கட்டுரையினைப் பா. சத்தியசீலனிடம் கொடுத்து விழா மேடையில் அக்கட்டுரையினை வாசிக்கும்படி செய்தார். அறிமுகம் செய்து வைக்கப் பெற்ற புதிய எழுத்தாளர்களும் அந்த விழாவில் பேசுவதற்கான வாய்ப்பு வழங்கப் பெற்றது. அன்று அந்த விழாவில் நானும் பேசினேன். பேராசிரியர் கா.சி. விழாவுக்குத் தலைமை தாங்கினார். விழா முடிந்த பின்னர் தனது காரில் என்னை ஏற்றிக்கொண்டு ஊர் திரும்பினார்.

இந்தச் சமயத்தில் ஏ.ஜே. கனகரட்னா பற்றி நான் இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமானது. ஏ.ஜே.கே. உடன் நான் மல்லிகையில் எழுத ஆரம்பித்த காலம் முதல் தொடர்ந்து நட்புறவு இருந்து வந்திருக்கின்றது. சந்திப்பதற்கு வாய்ப்புக் கிடைத்த வேளைகள் எல்லாம் அவருடன் அந்நியோன்னியமாகப் பேசிப் பழகி வந்திருக்கின்றேன். உடல்நிலை சரியில்லாமல் திருநெல்வேலியில் அவர் தங்கி இருந்தசமயம் அவரைச் சந்திக்க வேண்டும் என்பதற்காகவே நேரில் சென்று கண்டு பேசி இருக்கின்றேன். அவருடன் பழகிய சில சந்தர்ப்பங்களில் சுவாரசியமான அனுபவங்களையும் நான்

பெற்றிருக்கின்றேன். எனது சிறுகதை ஒன்றினை ஆங்கிலத்தில் அவர் மொழிபெயர்க்க விரும்பி மல்லிகையில் பிரசுரமான 'நான் ஆளப்பட வேண்டும்' என்னும் கதையினை மொழிபெயர்த்தார். லண்டனில் வெளியிடப்பட இருக்கும் தொகுதி ஒன்றுக்கு அதனை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவித்ததுடன், அதன் பிரதி ஒன்றினையும் எனக்கு அனுப்பி வைத்தார். இன்று அந்தப் பிரதியை மிகக் கவனமாக நான் பேணி வைத்துக் கொண்டிருக்கின்றேன்.

பேராசிரியர் காசி.யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பதினெட்டு ஆண்டுகளுக்கு (01.08.1978 - 30.10.1996) மேல் பணியில் இருந்திருக்கின்றார். அந்தப் பதினெட்டு ஆண்டுகள் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியும் பயனுமுள்ள காலமாகக் கழிந்து போயிருக்கின்றன. வாரத்தில் ஒரு நாள் - பெரும்பாலும் மாலை வேளைகளில் - வல்வெட்டித்துறையில் இருக்கும் அவர் இல்லத்தில் சந்திப்பேன். சில நாட்களில் காலை நேரம் நான் செல்வதுண்டு. நீண்ட நேரம் இருவரும் அமர்ந்து உரையாடுவோம். இலக்கியம், சமூகம், அரசியல், சாதியம், கல்வி எனப் பலதுறை சார்ந்த விடயங்களையும் இருவரும் பேசிக்கொண்டிருப்போம். சிலசமயம் எங்கள் குடும்ப விவகாரங்களையும் மனந்திறந்து நாங்கள் பேசுவதுண்டு. அக்கா (பேராசிரியரின் மனைவி) ஓய்வாக இருக்கும் சில சமயங்களில் வந்து எங்கள் உரையாடலில் கலந்து கொள்வார்.

எங்கள் சந்திப்பும் உரையாடலும் நாங்கள் வேலை செய்யும் இடத்திலோ அல்லது வேறு இடத்திலோ நிகழாமல் பேராசிரியர் இல்லத்தில் இடம்பெற்று வந்ததினாலும், ஒவ்வொரு வாரமும் நான் அங்கு சென்று வந்ததினாலும் காலப்போக்கில் அந்தக் குடும்பத்தில் ஒருவனாகக் கருதப்பட்டேன். அக்காவும் பிள்ளைகளும் (மருமக்கள்) எப்பொழுதும் என்னை அன்போடு வரவேற்று உபசரிப்பார்கள். அதனால் தயக்கமின்றி உரிமையுடன் நான் அங்கே போய்வந்து கொண்டிருந்தேன்.

பேராசிரியரும் நானும் அமர்ந்து பேச ஆரம்பித்து விட்டால் காலங்கடந்து போய்க் கொண்டிருப்பதனை நாங்கள் மறந்து போவோம். நிலாக் காலமாக இருந்தால் எங்கள் உரையாடல் இரவு பத்து மணி தாண்டியும் நீண்டுகொண்டு செல்வதுண்டு. வல்வெட்டித்துறையிலுள்ள பேராசிரியர் இல்லத்தில் இருந்து பொலிகண்டியில் இருக்கும் எனது வீடு சுமார் இரண்டு கிலோ மீற்றரிலும் அதிக தூரம். அந்தவேளையில் அக்கா வந்து மெல்லிய ஒரு கண்டிப்புடன் எங்கள் உரையாடலைத் தடுத்து என்னை வீட்டுக்கு அனுப்பி வைப்பார். அந்தக் காலத்தில் நான் சிகரெற் புகைக்கும் பழக்கமுள்ளவன். தேநீர் பருகியவுடன் பேராசிரியருக்கு முன் அமர்ந்திருந்து சிகரெற் புகைப்பேன். ஆனால், அக்கா வந்திருக்கும் சமயங்களில் சிகரெற் புகைப்பதற்கு உள்ளூரத் தயங்குவேன்.

எப்பொழுது அக்கா என்னைக் கண்டிப்பாரோ என்ற அச்சம் மனதில் என்றும் இருந்து வந்தது.

பேராசிரியரின் வீடு கடற்கரைக்கு மிக அண்மையில் இருக்கிறது. நாட்டு நிலைமை குழப்பமடைந்து யுத்த சூழ்நிலை உருவான பின்னர் நாங்கள் இருவரும் பேசிக்கொண்டிருக்கும் சில சமயங்களில் கடலில் இருந்து பீரங்கித் தாக்குதல் ஆரம்பித்து விடும். உடனே இருவரும் எழுந்து வீட்டுக்குப் பின்னுள்ள பதுங்குகுழிக்குள் போய் இருப்போம். அந்த வேளைகளிலும் மௌனமாகப் பதுங்கி இருக்க முடிவதில்லை. அங்கும் பேசிக்கொண்டே இருந்தோம் என்பதனை இன்று நினைத்துப் பார்க்கும்போது எனக்கு வியப்பாகத்தான் தோன்றுகிறது.

ஒரு தினம் நான் பேராசிரியருடன் பேசிக்கொண்டிருந்த சமயம் அவர் என்னிடம் கூறினார்; "தெணி, நீங்கள் எனக்குக் கிடைத்தது நான் செய்த பாக்கியம். நான் சொல்வதைக் கேட்பதற்கும் தகுந்த ஓராள் தேவையல்லவா!"

பேராசிரியர் இப்படிச் சொன்னாராயினும், உண்மையில் பாக்கியம் செய்தவன் நான்தான். நான் அவரிடத்தில் பல விடயங்களை நேரில் நிறையக் கேட்டு அறிந்துகொண்டேன். சிறுவயது முதல் இன்றுவரை நல்ல நூல்களைத் தேடி வாசிக்கும் பழக்கமுள்ளவன் நான். அதனாலும் வேறு வழிகளிலும் எனக்குள் வரும் சந்தேகங்களைத் தீர்த்துத் தெளிவுபடுத்தும் ஆசானாக அவர் இருந்து வந்தார்.

அவர் நடத்தையில் நயக்கத்தக்க நாகரிகங்கள் பல இருப்பதனை நான் அவருடன் பழகிய அக்காலத்தில் கண்டுகொண்டேன். அவை எல்லோரும் பின்பற்ற வேண்டிய சமூக நாகரிகங்களாக எனக்குத் தோன்றுகின்றன. அவரைத் தேடி வீட்டுக்கு யார் வந்தாலும் வயது வேறுபாடின்றி எழுந்து நின்று வரவேற்பது அவரிடத்திலுள்ள மிகச் சிறந்த ஒரு பண்பு. வீடு வந்தவர் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்படும் சமயம், இருக்கை விட்டு எழுந்து வெளியே அழைத்துச் சென்று வழியனுப்பி வைப்பார். இவை மாத்திரமன்றி இன்னும் பல சிறப்பான குணங்களைச் சொல்லலாம்.

நான் அவருடன் பேசிக்கொண்டிருந்து விட்டு, அங்கிருந்து புறப்படும் சமயங்களில் என்னுடன் கதைத்துக் கதைத்து வெளிக் 'கேற்' வரை தவறாமல் தவறாமல் வந்து வழியனுப்பி வைப்பார். நாட்டில் குழப்பமான சூழ்நிலைகள் உருவான பின்னர், என்னை வழியனுப்பி வைக்கும் போது ஆயிரம் தடவைகள், "தெணி, கவனம்... தெணி, கவனம்...." எனத் திரும்பத் திரும்பச் சொல்லியே அனுப்பி வைப்பார். சிலவேளைகளில், "தெணி, நடு றோட்டாலே போக வேணும். றோட்டோரத்தில் என்னென்ன புதைச்சு வைச்சிருக்கிறான்களோ தெரியாது.....!" எனச் சொல்லிக் கொண்டு, சயிக்கிள் வண்டியில் ஏறிவந்து கொண்டிருக்கும் என்னை, அவரது கண்பார்வையில் இருந்து

மறையும் வரை பெற்ற பிள்ளையை வெளியே அனுப்பி வைத்து விட்டு கவலையுடன் வழிபார்த்து நிற்கும் தாயைப் போல வீதியில் நின்று கொண்டிருப்பார்.

யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா ஒன்றுக்கு சென்னைப் பல்கலைக்கழக உபவேந்தர் சுப்பிரமணியம் சிறப்பு அதிதியாக வருகை தந்து கலந்து கொண்டார். பேராசிரியர் கா.சிவத்தம்பி தமது இல்லத்தில் ஒருநாள் காலை நேரம் அவருக்கு விருந்தளித்துக் கௌரவித்தார். அந்த விருந்தில் கலந்துகொள்ளுமாறு பேராசிரியர் பாலகிருஷ்ணனுடன் என்னையும் அழைத்திருந்தார். விருந்து நடந்து முடிந்த பின்னர் சிறிது நேரம் பேசிக்கொள்ளக் கிடைத்த சந்தர்ப்பத்தில் உபவேந்தர் சுப்பிரமணியம் தொடர்ந்து என்னுடன் உரையாடிக் கொண்டிருந்தார். நான் அதனை அவதானித்து விட்டு, "என்ன ஸேர், நாங்கள் இருவரும் மாத்திரம் பேசிக்கொண்டிருக்கிறோம்" எனச் சொல்லி அவர் கவனத்தைத் திசைதிருப்ப எண்ணினேன். "பரவாயில்லை, ஒரு எழுத்தாளருடன் பேசுவதையே நான் விரும்புகிறேன்" எனக் கூறி தொடர்ந்து என்னுடன் உரையாடினார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டுச் செல்லும் போது, சென்னைக்கு வரும் சமயத்தில் தவறாது தன்னை வந்து சந்திக்குமாறு கூறிச்சென்றார்.

இந்த அனுபவம் பேராசிரியர் கா.சி. இன் உறவு காரணமாக நான் பெற்றுக் கொண்டதுதான்.

பேராசிரியர் கா.சி . உடன் டானியல், ஜீவா ஆகிய இருவருக்கும் சுமுகமான உறவு இருந்து வந்தது.

நான் பட்டிமன்றப் பேச்சாளனாக மேடைகளில் ஒரு காலத்தில் பேசிக்கொண்டு திரிந்ததைப் பேராசிரியர் கா.சி. சிறிதும் விரும்பவில்லை. பேராசிரியரைப் போலவே டானியலுக்கும் அதில் உடன்பாடு கொஞ்சமும் இருக்கவில்லை. பேராசிரியர் ஒருதினம் உறுதியாகச் சொன்னார், "மேடையில் நின்று காற்றோடு யுத்தம் புரிவதை விட்டுவிடுங்கோ, தெணி! உங்களிடம் ஒரு பேனா இருக்கு. போயிருந்து எழுதுங்கோ!" இந்தக் கருத்தினையே டானியலும் என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

அவர்கள் இருவரும் அக்கறையுடன் தெரிவித்த கருத்தினை ஏற்றுக்கொண்டு அதன் பிறகு நான் பட்டிமன்றங்களில் பேசுவதை முற்றாக நிறுத்திக் கொண்டேன்.

ஒரு தினம் டானியலின் கராஜில் இருந்து அவருடன் நான் பேசிக்கொண்டிருந்த போது, 'ஈழநாடு' சபா அங்கு வந்து சேர்ந்தார். மூவரும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருக்கையில் 'ஈழநாடு' வாரப்பதிப்பில் தொடர்ச்சியாகச் சில வாரங்கள் வெளியிடத் தகுந்த நாவல் ஒன்று எழுதித் தருமாறு அவர் என்னிடம் கேட்டார். அவர்

வேண்டுகோளைக் கருத்தில் கொண்டு நாவல் ஒன்று எழுதும் வண்ணம் டானியல் என்னை வற்புறுத்தத் தொடங்கினார். அவரை நான் சந்திக்கும் சமயங்களில் எல்லாம் தொடர்ந்து அவர் வற்புறுத்தி வந்தார்.

அதன் பின்னர் 'பரம்பரை அகதிகள்' நாவலை எழுதுவதற்கு ஆரம்பித்தேன். அந்த நாவலின் முதல் ஐந்து அத்தியாயங்களை எழுதி முடித்த பின்னர், அவற்றைக் கொண்டு சென்று டானியலிடம் (02.06.1984) கொடுத்தேன். படித்துவிட்டு, 'ஈழநாடு' சபாவிடம் கொடுக்குமாறு தெரிவித்தேன். நான்கு நாட்கள் கழித்து மீண்டும் நான் யாழ்ப்பாணம் சென்ற சமயம் (06.06.1984) டானியலைச் சந்தித்தேன். அந்தச் சமயம் எனது நாவலில் முதல் அத்தியாயத்தை மாத்திரம் டானியல் படித்து முடித்திருந்தார். அவர் என்னைக் கண்டதும் தானாகவே எனது நாவலின் முதல் அத்தியாயம் பற்றிச் சொல்ல ஆரம்பித்தார். இறுதியில், "நான் சாகிறதுக்கு முந்தி, நீங்கள் வந்து விடுவியள்" எனப் பெருமையுடன் கூறி, மகிழ்ச்சி பொங்க என்னை நோக்கினார்.

டானியல் கூறிய பாராட்டு எனக்கு மனமகிழ்ச்சியைக் கொடுத்ததேதோ உண்மைதான். அதேசமயம் தனது மரணம் பற்றி அவர் உள்ளத்தில் இருந்த எண்ணத்தின் வெளிப்பாட்டையும் நான் கண்டுகொண்டேன். அதனால் அவர் எனக்குத் தெரிவித்த பாராட்டு எனக்கு முழுமையான மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை. அந்த மகிழ்ச்சிக்கிடையே மனநெருடலையும் அது எனக்கு ஊட்டியதென்பதே உண்மை.

அந்த ஒரு அத்தியாயத்தைத் தான் படித்துப் பாராட்டி எனக்குச் சொன்னதுடன் மாத்திரம் நின்று விடாமல் தன்னுடன் வேலை செய்த வீ. சின்னத்தம்பியிடமும் அதனைச் சிலாகித்துக் கூறி படித்துப் பார்க்கும் வண்ணம் அவரிடம் கொடுத்தார் என்பதனைப் பின்னர் சின்னத்தம்பி என்னிடம் தெரிவித்தார்.

அதுதான் டானியல் என்பதனை அப்பொழுது நான் தெளிவாக உணர்ந்து கொண்டேன்.

'ஈழமுரசு' ஆசிரியர் எஸ். திருச்செல்வம் நாவல் ஒன்று தருமாறு என்னிடம் கேட்டார். 'பனையின் நிழல்' நாவலை எழுதி அவருக்கு அப்போது கொடுத்தேன். அந்த நாவல் 01.07.1984 முதல் 'ஈழமுரசு' வார இதழில் டானியலின் அறிமுகத்துடன் ஆரம்பமானது. அதே தினத்தில் டானியலின் 'சொக்கட்டான்' நாவல் 'வீரகேசரி' வாரப் பதிப்பில் வெளிவரத் தொடங்கியது.

தனியார் கல்வி நிலையத்துக்கு கஸ்தூரியார் வீதியால் நான் சிலசமயம் நடந்து செல்வதுண்டு. அப்படிச் சென்று வரும் வேளைகளில் 'சிரித்திரன்' ஆசிரியரைச் சில நாட்களில் சந்திப்பேன்.

அந்தச் சந்திப்புகளின் போது சிரித்திரனுக்கு ஒருகதை தருமாறு அவர் என்னைக் கேட்டுக்கொண்டிருந்தார். அவர் வேண்டுகோளுக்கு இசைந்து 'காவல் அரண்கள்' சிறுகதையை எழுதி அவருக்குக் கொடுத்தேன். கோயில் பூசகர்களாக இருக்கும் அந்தணர்கள் கோயிலை ஆளும் நிர்வாகிகளினால் - முகாமையாளர் - ஆதீன கர்த்தாவினால் எவ்வாறு வஞ்சிக்கப்படுகின்றார்கள் என்பதனைத் தெளிவாகச் சித்திரிக்கும் சிறுகதை அது. ஆனால் என்னிடம் கேட்டுக் கதையைப் பெற்றுக்கொண்ட சிரித்திரன் அதனைப் பிரசுரிக்காது காலம் கடத்தி வந்தார். ஒருவருட காலம் கடந்த பின்னரும் சிரித்திரன் அதனை வெளியிடாது தன்னிடம் வைத்துக் கொண் டிருந்தார்.

ஒருதினம் டானியலை யாழ்ப்பாணத்தில் நான் சந்தித்த போது, "மாஸ்ரர் சிரித்திரனுக்கு ஒரு கதை குடுத்தனீங்களா?" என என்னிடம் அவர் கேட்டு விட்டு, "அவர்களுக்கு சோலி சுறட்டில்லாத எழுத்துகள் தான் குடுக்க வேணும்." கேட்டு வாங்கிப் போட்டேன். என்ன செய்கிறது!' என்று அறியாமல் முழிக்கிறாராம்" எனத் தொடர்ந்து கூறி மெல்லச் சிரித்தார்.

"உங்களுக்கு இந்தத் தகவலெல்லாம் யார் சொன்னது?" என நான் அப்பொழுது விசாரித்தேன். "நேற்று செம்பியன் வந்தார். அவர்தான் சொன்னார்" என அவர் தெரிவித்தார்.

அதன் பிறகு சிரித்திரனுடன் தொடர்புகொண்டு சற்றுச் சிரமத்தின் பின்னர் அந்தப் பிரதியை நான் மீளப் பெற்றுக் கொண்டேன். அப்பொழுது 'ஈழமுரசு' ஆசிரியராக இருந்த எஸ்.தி. இடம் அந்தப் பிரதியைக் கொடுத்தேன். அவர் 08.09.1985 வார இதழில் அதனை வெளியிட்டு வைத்தார்.

இன்னொரு நாள் நான் டானியலைச் சந்தித்த வேளை, "யாழ்ப்பாணத்தில் இலக்கியக்காரர்கள் சில பேர் சேர்ந்து அறக்கட்டளை ஒன்று நிறுவி இருக்கிறார்களாம். அந்த அறக் கட்டளை மூலம் பரிசுகள், பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்க இருக்கிறார்களாம். பரிசு, பட்டங்கள் பெறுகின்றவர்களைத் தேர்வு செய்வதற்குச் சான்றோர் குழு ஒன்றை நிறுவி இருக்கின்றார்கள். அந்தச் சான்றோர் குழுவில் நானும் ஒருவனாக இருக்க வேணுமென்று என்னிடம் வந்து கேட்டிருக்கின்றார்கள்" எனச் சிரித்த வண்ணம் கூறினார். "நீங்கள் அந்த நியமனத்தை ஏற்றுக்கொண்டு விட்டியளா?" என அப்பொழுது நான் அவரிடத்தில் கேட்டு வைத்தேன்.

அவர் முகத்தில் இருந்த மெல்லிய புன்னகை கொஞ்சமும் மாறாமல், 'நான் சான்றோரல்லவே! யாழ்ப்பாணத்தார் எப்போது என்னைச் சான்றோராக ஏற்றுக்கொண்டார்கள்?!' என வந்தவர்களிடம் கேட்டதாக எனக்குச் சொல்லிப் பலமாகச் சிரித்தார்.



யாழ்குடா நாட்டில் ஆயுதம் தாங்கிய போராட்ட சூழ்நிலை 1983-ல் ஆரம்பித்த பின்னர் யாழ்ப்பாணம் தனியார் கல்வி நிறுவனத்துக்கு வாரத்தில் மூன்று தினங்கள் நான் போய்வருவது தடைப்பட்டுப் போனது. அதன் பிறகு எங்கள் பகுதித் தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்று கல்வி கற்பிப்பதையும் நான் முற்றாக விலக்கிக் கொண்டேன். பூரணமான மனவிருப்புடன் அதுவரை அங்கு நான் சென்று வரவில்லை. அதனால் அதனை விட்டு விலகியதில் உள்ளூர மனம் மகிழ்ந்தேன். அதேசமயம் முன்னர் போல நான் யாழ் நகர் போய்வரும் சந்தர்ப்பம் எனக்கு இல்லாமல் போயிற்று. ஜீவா, டானியல் இருவரையும் ஒவ்வொரு வாரமும் தவறாமல் சந்தித்து வந்த சூழ்நிலை விடுபட்டுப் போயிற்று.

இந்தச் சூழ்நிலையில் டானியலிடம் இருந்து ஒருதினம் எனக்கொரு தந்திச் செய்தி வந்து சேர்ந்தது. அந்தச் செய்தி டானியல் நோய்வாய்ப்பட்டிருப்பதனை எனக்கு அறியத்தந்தது. நான் உடனடியாகப் புறப்பட்டு (01.05.1985) யாழ் நகரம் சென்று நல்லூர் கோயில் வீதியில் இருக்கும் டானியல் இல்லம் போய்ச் சேர்ந்தேன். அப்பொழுது டானியல் படுக்கையில் கிடந்தார். அந்தச் சமயம் என்ன நடந்து என்பதனை 'தண்ணீர்' நாவல் முன்னுரையூடாக டானியல் வாக்குமூலம் அறியத் தருவதே பொருத்தமானதெனக் கருதுகின்றேன். அதற்கு முன்னர் வெளிவந்த, 'அடிமைகள்' நாவல் முன்னுரையில் அவர் குறிப்பிட்டுள்ளதனைக் கவனத்தில் கொள்வதும், இரண்டு முன்னுரைகளையும் ஒப்பிட்டு நோக்குவதும் அவசியமென எனக்குத் தோன்றுகிறது.

'அடிமைகள்' முன்னுரையில்; 14.04.1983-ல் டானியல் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"தெணியான் சாதி விவகாரத்தின் வேர்களைத் துருவிப் பிடிக்கும் ஆற்றல் உள்ள படைப்பாளியாக வளர்ந்து வருகிறார். சமீப காலத்திலிருந்து அவரின் எழுத்து ஆளுமைவிரிவடைதையும் அவதானிக்கின்றேன். ஆயினும் இந்த மிகுதிப் பகுதியைப் பூர்த்தியாக்கும் பணிக்கு அவரைப் பொறுப்பாளனாக்க என்னால் முடியவில்லை. ஏனெனில் அரசியலில் அவர் என்வயப்படவில்லை. சூழ்நிலைகள் அவர் வரவைத் தடுக்கின்றன. காலஓட்டத்தில் அவர் அரசியல் நிலைப்பாட்டில் சரியான பங்கெடுப்பினைக் கொள்ளும் நிலை ஏற்படின் குறிப்பிட்ட இருவருமே இதைப் பூர்த்தி செய்யப் பொருத்தமானவர்கள் என இதைப் பிரசுரிக்க விரும்புவர்களுக்கு ஆலோசனை கூற விரும்புகின்றேன்."

'தண்ணீர்' நாவல் முன்னுரையை (24.01.1986) இனி நோக்கலாம்.

"இதைப் பத்தாவது அத்தியாயம் வரை எழுதிவிட்டு அதற்கு மேல் ஒருவரிகூட எழுத முடியாத நிலைக்குத் தள்ளப்பட்ட நான் மறுபடியும் படுக்கைக்குத் தள்ளப்பட்டேன். நாவலைத் தொடர்வது சிரமமாகி விட்டது. படுக்கையில் கிடந்தபடியேயாவது நான் வாய்மொழியாகச் சொல்ல வேறொருவரைக் கொண்டு எழுதுவிக்கலாமோ என்று யோசித்து, எனது கடைசி மகள் தாரகாவைக் கொண்டு எழுத முயன்றேன். அவள் உலக ஞானம் அற்றவள். வயது பதின்மூன்றுதான். எனது உணர்வுகளைப் புரிந்து நாவலைத் தொடர அவளால் இயலவில்லை. பின்பு எனது அன்புக்குரியவரான தெணியானை அழைத்து நாவலின் முடிந்த விவரத்தைக் கூறி, இரண்டு நாட்கள் அவரை எனது வீட்டோடு தங்க வைத்து, முடிந்ததை அவர் வாய் மூலமாகவே படிக்க வைத்து மிகுதியை இப்படி இப்படித்தான் செய்ய வேண்டுமென்று எனது அபிப்பிராயங்களையும் அவரிடம் கலந்து கொண்டபோது, அவர் அதை ஒப்புக்கொண்டு முடிந்த பகுதியை எடுத்துச் சென்றார்.

சில நாட்களில் மறுபடியும் படுக்கையை விட்டு எழுந்தேன். அப்போது வந்திருந்த அவர், "உங்களால் முடிந்த வரை எழுதுங்கள். முடியாத நிலையில் நான் தொடர்கிறேன்" என உறுதி அளித்தார்.

மறுபடியும் தண்ணீரைத் தொடர்ந்தேன்."

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் 'அடிமைகள்' நாவலைத் தொடர்ந்து எழுதுவதற்கு என்னைப் பொறுப்பாளனாக்குவதற்குத் தயக்கம் காட்டிய டானியல், 'தண்ணீர்' நாவலைத் தொடர்ந்து எழுதிப் பூரணப் படுத்தும் பொறுப்பினை என்னிடத்தில் ஒப்படைத்தார். ஆனால் அவரே அந்த நாவலை எழுதக் கூடியதான உடல்நிலை தேறிய பின்னர், மேலும் தொடர்ந்து ஒவ்வோர் அத்தியாயமாக எழுதி

என்னிடம் தந்து கொண்டிருந்தார். இருபத்துநான்கு அத்தியாயம் வரை எழுதி நாவலை முடித்து அதற்கான முன்னுரையையும் எழுதி எனது கையில் ஒப்படைத்துள்ளார்.

அதன் பின்னர் மீண்டும் டானியல் நோயின் தாக்கத்துக்கு ஆளானார். சிறிது தூரம் நடந்து செல்வதற்கே அவர் சிரமப்பட்டார். சிறுநீர், இரத்தப் பரிசோதனைக்காக தனியார் வைத்திய நிலையத்துக்கு வாகனத்தில் அழைத்துச் சென்று, பின்னர் கைத்தாங்கலாகக் கூட்டிப் போய்ப் பரிசோதனைகளைச் செய்வித்தேன். இங்கு நடைபெற்ற வைத்திய சிகிச்சையினால் நோய்கள் குறைவதாக இல்லை. பின்னர் டொக்டர் 'நந்தி' போன்றவர்களுடன் கலந்தாலோசித்த பிறகு, வைத்திய சிகிச்சைக்காக டானியல் தமிழ்நாடு செல்லத் தீர்மானித்தார்.

தமிழ்நாடு சென்ற பின்னர் அங்கிருந்து எனக்குக் கடிதம் எழுதினார்.

நான் சற்றும் எதிர்பார்க்காத நிலையில் தமிழ்நாடு தஞ்சாவூரில் 23.03.1986-ல் காலை 8.40 மணிக்கு டானியல் காலமானார் என்னும் செய்தி மறுநாள் மாலையில் எனக்குக் கிடைத்தது.

அடுத்தநாள் காலையில் யாழ்ப்பாணம் சென்று டானியல் இல்லத்துக்குப் போனேன். அன்று (25.03.1986) டானியல் இல்லத்தில் அஞ்சலி நிகழ்வொன்று நடைபெற்றது. அந்த நிகழ்வு நடந்து முடிந்த பின்னரே வடமராட்சியிலுள்ள எனது இல்லத்துக்கு இரவு வந்து சேர்ந்தேன்.

அந்த நிகழ்வு சம்பந்தமாக இங்கு நான் குறிப்பிட வேண்டி இருக்கின்றது.

டானியல் காலமான போது வேறெந்த ஓர் எழுத்தாளனுக்கும் நடைபெறாத அளவு நினைவஞ்சலிக் கூட்டங்கள் யாழ் குடாநாடு முழுவதும் பரவலாக இடம்பெற்றன. வடமராட்சி, யாழ்ப்பாணம், இணுவில் ஆகிய இடங்களில் டானியல் மறைந்த ஒருமாத காலத்துள் எட்டு நிகழ்வுகளில் அவற்றை ஏற்பாடு செய்தவர்களின் அழைப்பினை ஏற்றுச் சென்று அஞ்சலி உரை ஆற்றினேன். ஆனால் டானியல் இல்லத்தில் நடைபெற்ற முதல் அஞ்சலிக் கூட்டத்திலும், 15.04.1986 அங்கு இடம்பெற்ற டானியலின் மணிவிழாவினை நினைவுகூரும் கூட்டத்திலும் பார்வையாளனாக மாத்திரம் நான் கலந்துகொண்டேன். அந்த நிகழ்வுகளை ஒழுங்கு செய்தவர்கள் என்னைத் தவிர்த்து விடுவதில் மிகக் கவனமாக இருந்து செயற்பட்டார்கள்.

இக்காலகட்டத்தில் 'அம்பலத்தரசன்' என்னும் பெயரில், 'ஈழமுரசு' வார இதழில் வெளிவந்து கொண்டிருந்த சிறுகதைகளை விமர்சித்துக் கட்டுரைகள் எழுதினேன். ஒருமாத காலத்தில் நான்கு

வாரங்களும் வெளிவந்த சிறுகதைகளை மதிப்பீடு செய்து அடுத்த மாதம் மூன்றாவது வார ஞாயிறு இதழில் எனது கட்டுரை வெளிவந்து கொண்டிருந்தது. அப்பொழுது 'அம்பலத்தரசன்' யார்? என்பது பலருக்கும் தெரியவராது. அந்தக் கட்டுரைகள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்த போது அந்தப் புனைபெயருக்குரியவரை அறிவதற்குச் சிலர் முற்பட்டார்கள். 'நடேசன் என்றால் அம்பலத்தரசன்தானே!' என மூதறிஞர் சொக்கன் ஒரு தினம் என்னிடம் கேட்டு வைத்தார். அதன் பின்னர் எனது சிறுகதை ஒன்றினை 'ஈழமுரசில்' கொடுத்து பிரசுரிக்கச் செய்தேன். அடுத்த மாதம் அந்தச் சிறுகதையினை மிகக் கடுமையாக விமர்சித்து எனது கட்டுரையில் எழுதினேன். அந்தக் கட்டுரையைப் படித்த ஒரு வாசகர் என்னைச் சந்தித்தபோது, "உங்கட கதையைப் போட்டு அடிச்சிருக்கிறான்கள். பார்க்கவில்லையா?" எனச் சொல்லி, "ஆர் அந்த அம்பலத்தரசன்?" என என்னிடம் கேட்டார். நான் அப்பொழுதும் அம்பலத்தரசனைக் காட்டிக் கொடுக்கவில்லை.

அந்த ஆண்டு இறுதிப் பகுதியில் கட்டைவேலி / நெல்லியடி கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றம் சிறுகதைத் தொகுதி ஒன்றினை வெளியிட்டு வைத்தது. வடமராட்சியைச் சேர்ந்த பன்னிரண்டு எழுத்தாளர்களின் சிறுகதைகள் 'உயிர்ப்பு' என்னும் அந்தத் தொகுதியில் இடம்பெற்றன. பேராசிரியர் கா. சிவத்தம்பி சிறுகதை இலக்கியம் பற்றி, 'உயிர்ப்புகளின் உயிரைத் தேடி' என்னும் தலைப்பில் மிக ஆழமும் விரிவுமான சிறப்பான கட்டுரை ஒன்றினை இத்தொகுதியை மையமாக வைத்து எழுதித் தந்தார். தொகுதியின் அட்டைப் படத்தில் தொகுதியில் இடம்பெற்ற சிறுகதைகளை எழுதிய கதாசிரியர்களின் நிழற்படங்கள் இடம்பெற்றிருந்தன. அந்தப் படங்களைத் திட்டமிடாமல் விசிறிப்போட்டது போல இடம்பெறச் செய்ய வேண்டும் என்னும் எண்ணமே எனக்கு மனதில் இருந்தது. ஆனால் திட்டமிட்டு வரிசைப்படுத்தியது போல படைப்பாளிகளின் படங்கள் இடம்பெறச் செய்து நூலின் அட்டை தயாரிக்கப்பட்டது. சிறுகதைகளுடன் அவற்றை எழுதிய எழுத்தாளர்களைப் பற்றிய அறிமுகக் குறிப்புகளும் நூலில் இடம் பெற்றிருந்தன.

அந்த நூலின் தயாரிப்பு வேலைகள் யாவும் தனியொரு மனிதனால் செய்யப்பட்டவில்லை. அதற்கென ஒரு குழுத் தெரிவு செய்யப் பெற்று அந்தக் குழுவினரே அந்த வேலைகள் யாவற்றையும் கலந்தாலோசித்துத் திட்டமிட்டுச் செய்தார்கள். அந்தச் செயற்குழுவில் நானும் ஒருவன். அந்தத் தொகுதியில் 'உவப்பு' என்னும் என்னுடைய சிறுகதை முதற் கதையாக இடம்பெற்றது. 'மல்லிகை' இதழில் மார்ச் 1986-ல் வெளிவந்த சிறுகதை அது. பேராசிரியர் கா. சிவத்தம்பியின் மதிப்பீட்டில் அந்தத் தொகுதியில் இடம்பெற்ற சிறுகதைகளுள் மிகச் சிறந்த படைப்பெனக் குறிப்பிட்டுச் சொல்லப் பெற்றது. மிகச் சுருக்கமாக, இறுக்கமாகப் பேராசிரியர் தமது கருத்தினை வெளியிட்டிருந்தார். பலருடைய

சிறுகதைகள் இடம்பெற்றுள்ள தொகுதி நூலில், எனது கதை பற்றி விரிவாக எடுத்துச் சொல்வதில் அவருக்கொரு தயக்கம் இருந்தது. எங்கள் இருவருக்குமிடையே இருக்கும் நெருக்கமான நட்புறவே அந்தத் தயக்கத்துக்கு அடிப்படை நான் அறிவேன். பேராசிரியரே அதனை என்னிடம் சொல்லி இருந்தார்.

அந்தத் தொகுதியின் வெளியீட்டு விழா 14121986-ல் நடைபெற்றது. பேராசிரியர் கா. சிவத்தம்பி சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவதற்காக அந்த விழாவுக்கு வருகை தந்திருந்தார். படைப்பாளிகள் சார்பில் பேசுவதற்கு நானும், வெளியீட்டுக் குழுவில் ஒருவரான இன்னொரு எழுத்தாளரும் இடம் பெற்றிருந்தோம். அந்த எழுத்தாளர் தனக்குரிய சந்தர்ப்பத்தில் பேசும்போது எழுத்தாளர்கள் பற்றிய குறிப்புகளுடன் அவர்களுடைய ஜாதகக் குறிப்பையும் இடம் பெறச் செய்திருக்கலாமெனக் கிண்டல் செய்தார். இவ்வளவுக்கும் அந்த நூலைத் தயாரித்தவர்களுள் அவரும் ஒருவர். அவர் தொடர்ந்து பேசும் போது எனது சிறுகதையை மிக மோசமாக விமர்சித்தார். பேராசிரியர் சிவத்தம்பி எழுயிருக்கும் மதிப்பீடு கண்டு அழுக்காறு கொண்ட அவர் மனம் அதனை ஜீரணிக்க முடியாத அவஸ்தையில் தன்னை வெளிப்படுத்தியது.

அந்த விழாவுக்குத் தலைமைதாங்கிக் கொண்டிருந்த தலைவர் அந்த நூல் வெளியீடு சம்பந்தமான சகல காரியங்களையும் அறிந்திருந்த ஒருவர். முன்னரெல்லாம் ஒழுங்காகக் கூட்டங்களை நெறிப்படுத்தி நடத்தி வந்தவர். வரம்பு மீறிக் கிண்டலும் கேலியுமாகப் பேசியவரின் கருத்துத் தொடர்பாக உண்மைகளைச் சபையில் அவர் எடுத்துச் சொல்லி இருக்கவேண்டும். அப்படிச் சொல்லித் தனது தலைமைத்துவப் பொறுப்பினைச் செம்மையாகப் பேணிப் பாதுகாப்பாரென நான் எதிர்பார்த்தேன். அது நடக்கவில்லை!

அதன் பின்னர் நான் பேசவேண்டிய சந்தர்ப்பம் எனக்கு வந்தது. நடந்த சம்பவங்கள் எல்லாம் எனக்கு மனதில் சினத்தை மூட்டி விட்டன. என்னால் தவிர்க்க இயலாத நிலையில் கருத்து நிலையில் மிகக் காரசாரமாக எனக்கு முன் பேசியவருக்கு நான் பதிலிறுக்க வேண்டி நேர்ந்தது.

"எப்பொழுதும் முதற் கல்லை நாங்கள் போடக் கூடாது" என மந்திரம் போலப் பேராசிரியர் கா. சிவத்தம்பி இடையிடையே சொல்லிக் கொண்டிருப்பார். வெளியீட்டு விழாவில் எனது கருத்துக்களை நான் தெரிவித்ததுடன் அந்த விவகாரத்தை அப்படியே விட்டு விட்டேன். அதுதான் எனது இயல்பு.

இரண்டாவது கல் நான் போட்டுவிட்டேன் அல்லவா!

ஆனால் அந்த அதிருப்தியாளர் அதன் பிறகும் சும்மா இருக்க வில்லை. அவர்கள் இயல்புக்குரிய வழமையான காரியத்தை அவர் செய்தார். அவர்கள் கோஷ்டியில் இருந்து அப்பொழுது அவர்களுடன் சேர்ந்து ஒத்தோடிக் கொண்டிருந்த ஒரு கவிஞரைப் பிடித்து, எனது 'உவப்பு' என்னும் அந்தச் சிறுகதை தரங்குறைந்த ஒரு படைப்பென விமர்சனம் ஒன்று எழுதுவித்து, அவர்கள் கோஷ்டிக்குரிய சஞ்சிகையில் பிரசுரிக்கச் செய்தார்.

ஆனால் அந்தத் தொகுதியில் இடம் பெற்ற சிறுகதைகளுள் 'உவப்பு' என்னும் எனது சிறுகதை மாத்திரம் தேர்ந்தெடுக்கப்பெற்று, சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பெற்று, சிங்களச் சிறுகதைத் தொகுதி ஒன்றில் இடம்பெற்றுள்ளது என்பது பலருக்குத் தெரியவராது! பேராசிரியர் கா.சிவத்தம்பி எழுதிய கட்டுரை ஒன்றில் ஈழத்து இலக்கியங்களில் மெஜிகல் ரியலிசப் படைப்புக்கு முன்னோடியாக 'உவப்பு' சிறுகதையைக் குறிப்பிட்டுள்ளார் என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

டானியலின் மறைவு இவ்வளவு விரைவில் நிகழும் என நான் எதிர்பார்க்கவில்லை. என்னை மிகவும் நேசித்த அவர் மறைவினால் நான் உள்ளே உறைந்து போனேன். எனது குடும்ப உறுப்பினர் ஒருவரை நான் இழந்து போனதான துயரத்தில் சில காலம் தவித்துக் கொண்டிருந்தேன்.

டானியலின் 'தண்ணீர்' நாவல் கையெழுத்துப் பிரதியாகத் தொடர்ந்து என்னிடம் இருந்து வந்தது. அந்த நாவல் நூலாக்கப் பெறாமல் அப்படி இருந்தது எனக்கு மன உளைச்சலைக் கொடுத்தது. எப்படியும் அதனை நூலாக்க வேண்டுமென நான் விரும்பினேன். டானியல் இறந்து ஆறு மாத காலம் கழிந்த பின்னர் அந்த எண்ணம் மனதில் தீவிரங் கொண்டது.

எனது மனதில் இருந்து வந்த எண்ணத்தினை ஒருதினம் ஜீவாவிடம் எடுத்துச் சொன்னேன். தமிழ்நாட்டுப் பதிப்பகம் ஒன்றி னூடாக அதனை நூலாக்கலாம் என்னும் ஆலோசனையை ஜீவா அப்பொழுது எடுத்துச் சொன்னார். டானியலின் நாவலை நூலாக்குவதில் ஜீவா சம்பந்தப்படுவதனைச் சிலர் விரும்ப மாட்டார்கள் என்பது நான் உணராததல்ல. ஆனால் அவர்களைப் பற்றியெல்லாம் நான் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல், என்னிடம் ஒப்படைத்த பிரதியினைப் பொறுப்புடன் நூலாக்க வேண்டும் என்னும் எண்ணத்துடன் செயற்பட்டேன்.

நாவல் பிரதியைக் கையில் எடுத்துப் படிப்பதில் எனக்கு மிகுந்த மனச்சங்கடம் இருந்து வந்தது. அதனால் அதனைப் படிப்பதனைத் தவிர்த்து வந்தேன். நூலாக்கம் செய்ய வேண்டும் என்னும் எண்ணம் மனதில் தோன்றிய பின்னர் அந்தப் பிரதியை எடுத்துப் படிக்க

ஆரம்பித்தேன். அப்பொழுதுதான் அந்த நாவலில் அவசியமான சில மாற்றங்கள் செய்ய வேண்டி இருப்பதனை நான் கண்டுகொண்டேன்.

'தண்ணீர்' நாவலில் மணியகாரன் பாத்திரமொன்று வருகின்றது. அந்த மணியகாரன் சராசரி மணியகாரர்களில் இருந்து சற்று வித்தியாசமான ஒரு பாத்திரம். குறிப்பிட்ட மணியகாரனின் மருமகன் முதலியார். அவர் மணியகாரனுக்கு முரண்நிலையிலுள்ள ஒரு பாத்திரம். மணியகாரன், முதலியார் இருவரையும் ஒருவராகவே டானியல் கருதி இருக்கவேண்டும். அதனால் முதலியாரின் நடத்தைகளை மணியகாரனின் நடத்தைகளாக நாவலில் சித்திரித்திருக்கின்றார். மணியக்காரன் பாத்திரம் குழப்பமான முரண்பாடுள்ள ஒரு பாத்திரமாகப் படைக்கப் பட்டிருந்தது. அந்தக் குறைபாட்டினால் நாவலில் தொய்வும், யதார்த்தமற்ற தன்மையும் தூக்கலாக வெளிப்படுவதனை நான் உணர்ந்தேன்.

எந்த அளவு குறைந்த மாற்றங்களை நான் செய்ய இயலுமோ, அதனை மாத்திரம் மிக நிதானமாகச் செய்து, மணியகாரன், முதலியார் ஆகிய இரண்டு பாத்திரங்களையும் 'தண்ணீர்' நாவலில் நான் இடம்பெறச் செய்தேன்.

நிலவுடைமையாளன் ஒருவன் அடிநிலை மக்களின் நலனுக்காக ஒரு காரியத்தைச் செய்வதாயின் தனது வர்க்க நலன் பேணும் நோக்கம் அவனது செயலில் உள்ளார்ந்து மறைந்து கிடக்கும் என்பது உண்மை. அந்தக் கருத்தியலில் மிகத் தெளிவும் வலுநம்பிக்கையும் உடையவர் டானியல். ஆனால் நிலவுடைமையாளனின் நடத்தைகள் ஒரு சில இடங்களில் வெறும் கற்பிதமாகவே நாவலில் உருவாக்கப்பட்டிருந்தது. அந்தக் கற்பிதங்கள், குறித்த ஒரு பகுதி மக்களின் எதிர்ப்பினையும், அதிருப்தியையும் சம்பாதிக்கக் கூடியவையாகத் தென்பட்டன. அதனால் நாவலில் இருந்து அதனை நீக்கி, பாதிப்பு ஏற்படாத வண்ணம் செப்பனிட்டேன்.

இவற்றைப் பற்றி யாருக்கும் தெரியாது; யாரும் இவற்றைப் பற்றிப் பேசுவதில்லை. ஆனால் நாவல் முடிவில் நான் செய்த ஒரு மாற்றத்தைப் பற்றியே சிலர் நெஞ்சில் அடித்துக் கொள்ளுகின்றார்கள். ஓர் எழுத்தாளனின் படைப்பில் நான் கைவைத்து விட்டதாக, சில ஆண்டுகளுக்கு முன்னதாக ஒரு சஞ்சிகையில் கண்ணீர் வடித்திருக்கின்றார்கள். தமிழ் இலக்கியத்தின் மீது இவர்களுக்குத்தான் எவ்வளவு கரிசனை? இப்படி எழுதுகின்றவர்களின் அந்தரங்கம் என்ன என்பதை நான் புரிந்துகொண்டு அப்பொழுது மௌனமாக இருந்து விட்டேன்.

அந்த நாவல் இறுதியில் இப்படி முடிகின்றது.

தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்களுக்கு வேண்டிய நன்னீர்த் தேவையினை நிறைவு செய்வதற்காகக் கிணறு ஒன்றைத் தோண்டி முடிக்கின்றார்கள். முதன்முதலாக அந்தக் கிணற்றில் இருந்து புதிய நீரை அள்ளி எடுத்து, கிணற்றடியில் பொங்கலிடத் தீர்மானிக்கின்றார்கள். பொங்கலுக்குரிய நாளில் இருள் முற்றாகக் கலையாத வைகறை இருளில், அந்தக் கிணற்றைத் தோண்டி முடிப்பதில் பிரதான பங்காளியாக விளங்கிய மாதன், வீட்டில் இருந்து எழுந்து கிணற்றை நோக்கி வருகின்றான்.

அப்பொழுது கிணற்றுக்குள் இருந்து ஓரிருவர் வெளியே தாவி ஓடுகிறார்கள். மாதன் கிணற்றுக்குள் இறங்கியபோது அவனுக்குத் தூர் வடை வீசுகிறது. கிணற்று நீரைத் தொட்டபோது அதில் இருந்து வீசிய துர்வாடை அவனை ஒரு மாதிரிச் செய்கிறது. அதற்குப் பின்னரும் மாதன் அந்த நீரை அள்ளிக் குடிக்கிறான். இறுதியில் கட்டைப் பெருவிரலைக் கடித்துத் துப்பி விட்டு, இரத்தத்தினால் 'நஞ்சு' என கல்லின் மேல் எழுதிவிட்டு இறந்து போகின்றான்.

இவை எனக்கு யதார்த்தமாகத் தோன்றவில்லை. டானியல் இல்லத்தில் இரு தினங்கள் நான் தங்கி இருந்தபோது, நாவலின் இந்த முடிவை அவர் எடுத்துக் கூறிய சமயம், எனது கருத்தினை அவரிடத்தில் எடுத்துச் சொன்னேன்.

அவர் முடிவில் "உங்கள் விருப்பம் போலச் செய்யுங்கள்" என்றார். பின்னர் அப்படியொரு சிறுகதை தான் எழுதி இருப்பதினால் அந்த முடிவே இடம்பெறலாம் எனக் கூறினார். அது செயற்கையான - வலிந்து சொல்லும் முடிவாகத் தோன்றுகின்றதென நான் திரும்பவும் அவருக்கு விளக்கிச் சொன்னேன். நீண்ட நேரத்துக்குப் பின்னர் "ஏதோ உங்கடை எண்ணம் போலச் செய்யுங்கோ" என்று மீண்டும் சொன்னார்.

தண்ணீர் நாவல் யதார்த்தமாக - சிறப்பாக அமைய வேண்டும் என்னும் நோக்கத்துடன், டானியலிடம் இது பற்றிச் சொல்லி இருக்கின்றேன் என்னும் நம்பிக்கையுடன், சிறிய மாற்றம் ஒன்றைச் செய்தேன். நீர் நிறைந்த குண்டுக்குள் மாதன் தலைகுப்புற விழுந்து, மீண்டு எழுந்திருக்க முடியாத நிலையில் இறந்துகிடந்தான் என்பதுதான் நான் செய்த அந்த மாற்றம்.

ஒரு படைப்பாளியின் படைப்பில் கைவைக்க வேண்டிய, மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் எதுவும் எனக்கில்லை. டானியலின் 'தண்ணீர்' நாவலில் தவிர்க்க இயலாது அவசியம் கருதி மாற்றங்கள் சிலவற்றைச் செய்ய வேண்டி நேர்ந்தது. இந்த மாற்றங்களை 1986ஆம் ஆண்டு நான் செய்தேன். இதுபற்றி இதுவரை நான் வெளியில் எடுத்துச் சொன்னதில்லை. இப்பொழுது சொல்ல வேண்டும் என்று நான் கருதவில்லை. ஆனால் பேராசிரியர் அ. சண்முக தாஸ் தேவரையாளி

இந்துக்கல்லூரியில் நடைபெற்ற எனது மணிவிழாவில் (18.04.2003) "தண்ணீர்" நாவலில் பல திருத்தங்கள் தெணியான் செய்திருக்கின்றார் என்பது உண்மை" என மேடையில் பகிரங்கமாக அறிவித்தார். அதன் பிறகே அந்த உண்மைகளை இன்று விளக்கமாக வெளியில் எடுத்துச் சொல்ல மனங்கொண்டேன்.

நான் அந்த நாவலில் செய்ய வேண்டிய மாற்றங்களைச் செய்த பிற்பாடு, டானியலுக்கு வேண்டியவரிடம் படிக்கக் கொடுத்தேன். அதன் பிறகு தட்டச்சில் பொறித்துத் தரும்படி கேட்டு அந்தப் பிரதியை ஒருவரிடம் ஒப்படைத்தேன்.

அந்தச் சமயம் டானியலின் மூத்த மகனிடம் இருந்து எனக்கு ஒரு கடிதம் வந்து சேர்ந்தது. தங்கள் தந்தையாரின் நாவலை நூலாக்க விரும்புவதால் அந்தப் பிரதியைத் தன்னிடம் தருமாறு கேட்டிருந்தார். அந்தக் கடிதம் எனக்குப் பெரிய மகிழ்ச்சியைக் கொடுத்து, பாரத்தைச் சுமக்க வேண்டியவர் பொறுப்பை உணர்ந்து நூலை வெளியிடுவதற்கு அவர் முன்வந்திருக்கின்றார் என எண்ணினேன். அந்த ஆண்டு க.பொ.த.(சாதாரண) பரீட்சை விடைப் பத்திரங்களை மதிப்பீடு செய்து புள்ளி வழங்கும் பணி கொழும்பில் இடம்பெற்றது. நான் அங்கிருந்து பத்துத் தினங்களின் பின் திரும்பி வரும்போது தட்டச்சில் பதிக்கும் வேலை முடிவுற்று விடும். அதனை உங்கள் கையில் ஒப்படைக்கின்றேன் எனத் தெரிவித்து விட்டு 24121986-ல் கொழும்பு புறப்பட்டுச் சென்றேன்.



பரீட்சை விடைப்பத்திர மதிப்பீடு கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் இடம்பெற்றது. தமிழ்மொழிப் பாட மதிப்பீட்டுப் பணியில் நான் ஈடுபட்டேன். அந்தக் கல்லூரி அதிபராக அப்பொழுது தோழர் மாணிக்கவாசகர் இருந்தார். அவரை 'மாணிக்ஸ்' எனத் தோழர்கள் அன்பாக அழைப்பார்கள். அவருக்கும் எனக்கும் முன்னரே பழக்கமும் உறவும் இருந்து வந்தது. எனது தம்பி நவரத்தினம் (க. நவம்) கனடா போய்ச் சேருவதற்கு முன்னர் இறுதியாக அந்தக் கல்லூரியில்தான் ஆசிரியராகப் பணியாற்றினான். அதனால் அந்தக் கல்லூரியுடன் எனது ஈடுபாடு பெருமளவு இருந்து வந்தது. மதிப்பீட்டுப் பணியுடன் தோழர் "மாணிக்ஸை" தினம் சந்தித்துப் பேசும் மகிழ்ச்சியான சூழ்நிலையில் நான் அங்கு கடமையில் ஈடுபட்டிருந்தேன்.

மதிப்பீட்டுப் பணியில் ஈடுப்பட்டிருந்த ஆசிரியர்கள் அந்தக் கல்லூரிக்கு அண்மையாயுள்ள ஹமீட் அல் உசைனியா மகா வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தோம். அந்த மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக இருந்த கலைவாதி கலீலுடன் ஒவ்வொரு இரவும் நீண்ட நேரம் இருந்து மகிழ்ச்சியாக இலக்கியம் பற்றிப் பேசினேன். மதிப்பீட்டுப் பணிகள் முடிந்த மாலைவேளையில் இலக்கிய நண்பர்கள் யாராவது என்னைத் தேடிக்கொண்டு தினமும் அங்கு வருவார்கள். அவர்களுக்காக, நான் தங்கி இருந்த இடத்தில் மூன்று கதிரைகள் எடுத்துப் போட்டு வைத்திருந்தேன்.

ஒருநாள் மாலைநேரம் எழுத்தாளர் திக்குவல்லை கமால் என்னைத் தேடிக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தார். அவரோடு சேர்ந்து

ஓர் இளைஞரும் வந்திருந்தார். அவர்கள் இருவரையும் அன்போடு வரவேற்று விட்டுக் கமாலுடன் பேசிக் கொண்டிருந்தேன். சற்று நேரம் கழித்த பின்னர்தான் அந்த இளைஞர் கதிரையில் உட்காராது நின்று கொண்டிருப்பது திடீரென்று எனது கவனத்துக்கு வந்தது. யாராக இருந்தாலும் அவர்களை நிற்க வைத்து, நான் அமர்ந்திருந்து பேசும் சமூக நாகரிகம் அறியாதவனல்லன் நான். அதனால் குற்ற உணர்வு மனதை உறுத்த, அந்த இளைஞரைப் பார்த்து கதிரையில் அமருமாறு கேட்டுக் கொண்டேன். அவர் எனது வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளாது பணிவுடன் மறுத்தார். அப்பொழுது கமாலுக்கு மரியாதை கொடுத்து அவரோடு சமனாக உட்காருவதற்கு மறுக்கின்றார் என மனதில் எண்ணிக் கொண்டேன். ஆயினும் இலக்கியக்காரர்கள் சந்தித்து விட்டால், அவர்களுக்கிடையேயான உரையாடல் 'பிலாக்காய்ப் பால்' போல அறாமல் நீண்டு நீண்டு செல்லுமல்லவா! நாங்கள் இருவரும் பேசி முடியும்வரை அந்த இளைஞர் தொடர்ந்து நின்று கொண்டிருப்பதனை நான் கொஞ்சமும் விரும்பவில்லை.

அதனால் மீண்டும் அந்த இளைஞரைப் பார்த்து உட்காருமாறு கூறினேன். அவர் உட்கார முடியாதென உறுதியாக மறுத்தார். அந்த மறுப்பில் இருந்த உறுதி என்னை அதிசயப்பட வைத்தது. அதற்கான காரணத்தை உடனே அறிந்துகொள்ள வேண்டுமே என்னும் ஆவல் அப்பொழுது மனதில் எனக்குத் தோன்றியது. "இருக்கிறதுக்கு ஏன் மறுக்கிறீர்? சொல்லும்?" என வற்புறுத்தலின் பின்னர் அந்த இளைஞர் மிகுந்த பணிவுடன், "ஸேர், நான் நவம் ஸேரின்ரை மாணவன்; நீங்கள் அவரின்ரை அண்ணா. எப்படி ஸேர் உங்களோடை சமனாகக் கதிரையில் நான் இருக்கிறது." எனக்கேட்டார்.

உண்மையில் நான் அதிர்ந்து போனேன். இப்படி ஒரு குருபக்தி! இப்படி ஒரு பண்பாடு! இதனை வட பிரதேசத்துக்கு வெளியில்தான் கண்டுகொள்ளலாம் என்பதும் தெளிவாக எனக்குத் தெரியும்.

கொழும்பில் எனது பணியை முடித்துக் கொண்டு அந்தப் புதுமையான அனுபவத்துடன் - யாழ்ப்பாணம் - வீடு திரும்பிய சமயம் (06.01.1987) இன்னொரு புதுமையான அனுபவம் என்னைக் காத்திருந்தது. டானியலின் 'தண்ணீர்' நாவல் பிரதி - அதன் தட்டச்சுப்பிரதி என்பவற்றை நான் தட்டச்சுப் பதிக்கக் கொடுத்தவரிடம் இருந்து டானியலின் மூத்தமகன் எனக்குத் தகவல் தராமல் எடுத்துச் சென்று விட்டார் என்பதுதான் அந்த அனுபவம்.

டானியலின் நாவல் என்ற சொத்துக்குச் சோந்தையுள்ள தத்துவக்காரன் அவர் புதல்வன்தான். ஆனால் அந்தப் பிரதியை டானியல் என்னுடைய கையில்தான் ஒப்படைந்திருந்தார். "டானியலுடன் நெருக்கமான உறவு எங்களுக்குண்டு; டானியலின்

கொள்கையைப் பின்பற்றுகின்றவர்கள் நாங்கள்" என்று சொல்லிச் சொல்லி, அதனையே தங்களுக்குரிய பெரிய இலக்கிய அந்தஸ்தாக நிறுவிக்கொள்ள அவரைச் சுற்றி நின்ற சிலர் எத்தனித்தார்கள். அந்த நிலையில் நான் இல்லை என்பதனை டானியேல் உணர்ந்திருந்தார். அதனால்தான் அந்தப் பிரதியை எனது கையில் தந்திருக்க வேண்டும். பிரதியை என்னிடம் இருந்தே டானியல் மகன் பெற்றுச் சென்றிருக்க வேண்டும். நான் தட்டச்சுப் பதிக்கக் கொடுத்தவரிடம் இருந்து எனக்கு எந்த விதத் தகவலும் தெரிவிக்காது பிரதியை அவர் எடுத்துச் சென்றார். நான் டானியலின் கையெழுத்துப் பிரதியைத் தட்டச்சில் பதிக்குமாறு யாரிடத்தில் கொடுத்திருந்தேனோ, அவர் நேர்மையாக எனது கையில் அந்தப் பிரதியைத் திருப்பித் தந்திருக்க வேண்டும். அவர்கள் முறையாக, நேர்மையாக நடந்து கொள்ளத் தவறிவிட்டார்கள் என்பதனை நான் கண்டு கொண்டேன். இவ்வாறெல்லாம் நடப்பதற்கான ஒரு பின்னணி அப்பொழுது இருந்தது என்பதையும் நான் தெளிவாக உணர்ந்து கொண்டேன்.

'தண்ணீர்' நாவல் நூலாக வெளிவருவதற்கு எந்தவகையிலும் நான் இடையூறாக இருக்கக்கூடாது என்னும் எண்ணத்துடன் நடந்தவற்றை மனதுள் புதைத்து விட்டு மௌனமாக இருந்துவிட்டேன்.

அந்த நாவல் நூலுருப் பெற்று உடனடியாக வெளிவரும் என நான் எதிர்பார்த்தேன். அதற்காகத்தான் அத்தனை அவசரமாகப் பிரதியை எடுத்துச் சென்றிருக்கின்றார்கள் என அப்பொழுது எனக்கு நானே சமாதானம் தேடிக் கொண்டேன்.

ஆனால் ஒரு வருடம் எட்டு மாதங்களின் பின்னரே அந்த நாவல் நூலாக வெளியிட்டு வைக்கப் பெற்றது.

வடபிரதேசத்தில் போர்க்காலச் சூழ்நிலை உருவான பின்னர், வீடுகளைவிட்டு அடிக்கடி இடம் பெயர்ந்து ஓடிக் கொண்டிருந்தவர்கள் வடமராட்சி மக்கள்தான். கடற்கரையை அண்டிய பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கே அவலமான அந்த நிலைமை பெரும்பாலும் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. எனது வீடும் கடற்கரையில் இருந்து அதிக தூரமில்லை. நாங்களும் அடிக்கடி இடம்பெயர்ந்து கொண்டிருந்தோம். இலங்கை இராணுவத்தின் வடமராட்சி "ஒப்பரேஸன் லிபரேஸன்" நடவடிக்கைகள் 26.05.1987 காலையில் ஆரம்பமாயின. இராணுவம் பலாலி முகாமில் இருந்து வெளியேறி முன்னேறிக் கொண்டு வந்தது.

அந்த நடவடிக்கைகள் ஆரம்பித்த பின்னர் ஒருநாள் மாத்திரம் குடும்பத்துடன் வீட்டில் தங்கி இருந்தேன். இராணுவம் முன்னேறி வந்துகொண்டிருப்பதை அறிந்து மறுநாள் இரவோடு இரவாக வதிரி பூவற்கரைப் பிள்ளையார் கோயிலுக்குக் குடும்பத்துடன் போய்ச்

சேர்ந்தேன். எங்களைப் போலக் குடும்பம் குடும்பமாக இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் அந்த இடத்துக்கு வந்து தங்கி இருந்தார்கள். வடமராட்சிப் பகுதியிலுள்ள ஆலயங்கள் பலவற்றில் மக்கள் இவ்வாறு அகதிகளாகச் சென்று தஞ்சமடைந்திருந்தார்கள். உண்பதற்கு உணவு, சுகாதார வசதி, தங்கி இருப்பதற்கு வசதி, இவை எதுவும் இல்லாது, அடுத்த கணம் என்ன நடக்குமோ என்ற பீதியுடன் மக்கள் கலங்கிக் கொண்டிருந்தார்கள். காசு கையில் இருந்தபோதும் பிள்ளைகள் உண்பதற்கு வேண்டிய உணவை வாங்கிக் கொடுப்பதற்கு உணவு எதுவும் கிடைக்காத பரிதாப நிலை.

கோயிலில் தங்கி இருந்த குழந்தைகள் முதல் நோயாளிகள், முதியவர்கள்வரை உண்பதற்கு உணவு ஒன்றுமே இல்லாது தவித்துக் கொண்டிருந்தார்கள். மக்கள் பட்டினியாகக் கிடந்து தவிப்பதனைப் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பதற்கு முடியவில்லை. ராஜ ஸ்ரீகாந்தனின் உறவினர்கள் இல்லங்கள் அந்த ஆலயத்துக்கு அண்மையில் நெருக்கமாக இருந்தன. ஆனால் அவர் குடும்பத்துடன் வந்து மக்களுடன் மக்களாக அங்கு தங்கி இருந்தார். அவரும், நண்பர்களான சிக.இராசேந்திரன், க.லோகநாதன் ஆகியோரும் நானும் இன்னும் சிலரும் சேர்ந்து அந்த ஆலயத்தில் கூடியிருக்கும் மக்கள் பசியைப் போக்க என்ன செய்யலாம்? என ஆலோசித்தோம். இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தோம். ஆலயத்துக்கு அண்மையில் இருக்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையின் கதவில் தொங்கிக் கொண்டிருந்த பூட்டை உடைத்து, அங்கிருந்த அரிசி மூட்டைகளைத் தூக்கி வந்தோம். கோயில் கிடாரங்களில் அரிசியைப் போட்டு கஞ்சி காய்ச்சிப் பசியினால் வாடிக் கொண்டிருந்த மக்களுக்குப் பகிர்ந்தளித்தோம். இதனை வெற்றுப்புகழ் பாடித்திரிவதற்காக அன்று நாம் செய்யவில்லை. பசிக் கொடுமையினால் வயிறு கொதித்த மக்களுக்கு எங்களால் முடிந்தவற்றைப் பொறுப்புடன் செய்தோம். இந்தக் காரியத்தை எல்லோருடன் இணைந்து நின்று செய்த நான், முண்டி அடித்து கஞ்சி பெற்றுக் கொண்ட மக்கள் மத்தியில் எனது பிள்ளைகளுக்குச் சிறிய அளவிலாவது அந்த உணவை வாங்கிக் கொடுக்க எனக்கு இயலவில்லை. இதனை அவதானித்த ராஜ ஸ்ரீகாந்தன் எப்படியோ முயன்று அந்தக் கஞ்சியில் சிறிதளவு வாங்கிவந்து எனது பிள்ளைகளுக்கு உண்ணக் கொடுத்தார்.

எனது இளையமகனுக்கு அப்பொழுது வயது ஏழு. அவன் உண்பதற்கு உணவில்லாது தாயின் மடியில் மயக்கமுற்றவனாக சோர்ந்து படுத்துக் கிடந்த கொடுமையான காட்சி என் நெஞ்சை உலுக்கியது. அவனுக்கு எந்தக் குறையுமில்லாது அவனைப் பேணிப்பாதுகாத்து வளர்க்க வேண்டிய நான் அப்பொழுது எதுவும் செய்வதற்கு இயலாத கையறு நிலையில் கலங்கிக் கொண்டு நின்றேன்.

ஆனால் இன்று அந்தச் சம்பவத்தை நினைத்துப் பார்க்கும்பொழுது, ஒரு வகையில் அது எனக்குக் கிடைக்கப் பெற்ற பெரும் பாடமாகத் தோன்றுகிறது. புத்தன் பெற்ற ஞானம் போல எனக்கு அப்பொழுது கிடைக்கப் பெற்ற போதங்கள் அமைந்தன. நட்பு, உறவு என்பவற்றின் போலித்தனங்களை நான் தரிசிக்கும் வாய்ப்பினை அந்தச் சந்தர்ப்பம் எனக்கு வழங்கியது. நேரந்தவறாது உணவுகளைச் சமைத்து உண்டு முடித்துவிட்டு, முகத்தில் பவுடர் தடவிக்கொண்டு கண்ணீர் சிந்தித் துன்பப்பட்டுக் கொண்டிருந்த மக்கள் மத்தியில் பொய் முகங்களுடன் சிலர் நடமாடிக் கொண்டிருந்தார்கள். என்னை நேரில் சந்திக்க நேர்ந்த போது சிலர் போலித்தனமான அனுதாபத்தை வெளிப்படுத்தினார்கள். சிலர் கண்டு போலியாகச் சிரித்தார்கள். வேறு சிலர் கண்டும் காணாதவர்கள் போல மெல்ல விலகிப் போனார்கள். இவர்கள் எல்லாரும் ஓரளவு வசதி படைத்தவர்கள். ஆனால் தனது பல குழந்தைகளுடன் அங்கு தங்கி இருந்த ஏழைப் பெண்ணொருத்தி எனது உறவுக்காரி - என்னைக் கண்ட சமயம் காகிதத்தில் சுருட்டி வைத்திருந்த புழுக்கொடியல் இரண்டினை எடுத்து "அத்தான், சாப்பிடுங்கோ" என என்னை நோக்கி நீட்டினாள். எனக்குப் பசி பிறந்தது. உறவு, மனிதநேயம் என்பவற்றை அந்த ஏழைப்பெண்ணிடம்தான் நான் கண்டுகொண்டேன். வயிற்றுப் பசியின் கோரக் கொடுமை அறிந்தவளல்லவா, அந்த வறிய பெண்!

நான் வீடு விட்டுப் புறப்பட்ட நேரம் முதல் சில தினங்கள் எந்த ஒரு உணவும் உண்ணவில்லை. எனக்குப் பசி இல்லை. "பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்" என நான் கொண்டிருந்த நம்பிக்கை பொய்த்துப் போயிற்று. உயிரச்சம், மனக்கலக்கம், ஏக்கம் என்பன இருளாக மனதில் கவிந்து கிடக்க வயிறு எங்கே பசிக்கப் போகிறது.

மூன்றாவது நாள் இராணுவம் அந்த ஆலயத்துக்கு வந்து சேர்ந்தது. இளைஞர்கள் பலரைக் கைது செய்து கொண்டு போனது. அதன்பிறகு ஒரு வாரகாலம் கழித்துக் குடும்பத்துடன் வீடு திரும்பி வந்தேன்.

அதன்பிற்பாடு ஒருமாதகாலம் வீட்டுக்கு அருகிலுள்ள ஆலயத் திலும், வீட்டிலுமாக இரவு வேளைகளில் அயலில் இருக்கும் அனை வரும் ஒன்றாகத் தங்கினோம். நெல்லியடி மத்திய மகா வித்தியாலய இராணுவ முகாம் 06.07.1987 தகர்க்கப்பட்டது.

மீண்டும் அகதி வாழ்வு. எங்கள் கிராமத்தில் தங்கியிருப்பதிலும் பார்க்க, அல்வாய் வடக்கில் எனது தாயார் வழிவந்த இல்லத்தில் போய்ப் பாதுகாப்புத் தேடித் தங்கி இருந்தேன். அந்த இடமும் பாதுகாப்பானதாக இல்லை என்பனை உணர்ந்து, பின்னர் வடமராட்சிக்கு வெளியே வலிகாமப் பகுதியில் (09.07.1987) தாவடிக்குச் சென்று குடும்பத்துடன் தங்கினேன். எனது சகோதரிகள் மூவரும் குடும்பங்களுடன் அங்கு வந்து தங்கி இருந்தனர். வேறு சில குடும்பங்களும் அங்கே இருந்தன.

நாங்கள் வாழத் தகுந்த அடிப்படை வசதிகள் தானும் இல்லாத பழைய நாற்சார் வீடு அது. நான் அந்த வீட்டில் தங்கியிருப்பதை அறிந்து நண்பர் பேராசிரியர் சோ. கிருஷ்ணராசா என்னைத் தேடிக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தார். வசதிகள் அற்ற கஷ்டமான சூழ்நிலையில் நான் வாழ்ந்து கொண்டிருப்பதை நேரிற்கண்டு, நான் குடும்பத்துடன் தங்கி இருப்பதற்கு வசதியான ஒரு வீடு ஒழுங்கு செய்து தரலாமெனவும், அங்கு வந்து தங்கி இருக்குமாறு நட்புரிமையுடனும் கேட்டுக் கொண்டார். ஆனால் நான் அவர் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டேன். நெருக்கடி மிகுந்த அந்தச் சூழ்நிலையில் எனது சகோதரிகள், பிள்ளைகளை விட்டுப் பிரிந்து விலகி இருப்பதற்கு இயலாதென அவருக்குத் தெரிவித்துவிட்டுத் தொடர்ந்து அந்தப் பாழ்மண்டபத்தில் தங்கி இருந்தேன்.

தாவடியில் நான் தங்கி இருந்த சமயம் தினமும் 'மல்லிகை'க்குச் சென்று வந்தேன். ஜீவாவின் மணிவிழாக் காலம் அது. மணிவிழாமலர் "மல்லிகை ஜீவா" தொகுப்பாசிரியர்களாகப் பேராசிரியர் நந்தியும் நானும் இருந்து செயற்பட்டோம். நான் தாவடியில் தங்கி இருந்ததும், நித்தமும் மல்லிகைக்குப் போய் வந்து கொண்டிருந்ததும் மணிவிழா மலரைத் தொகுப்பதற்கு வெகுவசதியாக இருந்தது. ஆனால் நான் அமர்ந்திருந்து அந்த வேலைகளைச் செய்வதற்குத் தகுந்த ஆசன வசதிகள் அந்தப் பழைய வீட்டில் எனக்குக் கிடைக்கவில்லை. எனது முதற் சிறுகதையை எழுதும்பொழுது மடிமீது தலையணையை வைத்து அதன்மேல் ஒரு பயிலை வைத்து எழுதி முடித்ததுபோல மணிவிழாக் கட்டுரைகளை வாசித்துத் தொகுக்கும் வேலைகளைச் செய்து முடித்தேன். அதன் பின்னர் கட்டுரைகள் யாவற்றையும் நந்தி அவர்களின் பார்வைக்குக் கொடுத்தேன்.

இந்திய இராணுவத்தின் வருகையுடன், சுமார் ஒருமாத காலத்தின் பின்னர் 03.08.1987-ல் தாவடியில் இருந்து நாங்கள் வீடு திரும்பினோம்.

அன்றைய தினம் 'முரசொலி' தினசரியில் எனது "பொற்சிறையில் வாடும் புனிதர்கள்" நாவல் வெளிவரத் தொடங்கியது. ஈழத்துப் பிராமணர்களின் வாழ்வை மையமாகக் கொண்டு வெளிவந்த முதல் நாவல் அது. அந்த நாவலை நான் எழுத வேண்டி நேர்ந்த சூழ்நிலைகள் எவ்வாறு உருவாகின என்பதனை நூலின் முன்னுரையில் (என்னுரை) தெளிவாக எழுதி இருக்கின்றேன். அதனை நான் எழுதி முடிப்பதற்கான பெருமளவு தகவல்களை எனது நண்பர் பா. ரத்தினஸபாபதி அய்யரும், சில தகவல்களை மதிப்பிற்குரிய எழுத்தாளர் கே. டானியலும் எனக்குத் தந்தார்கள்.

அந்த நாவல் பற்றிக் குறிப்பிடுகையில் அதனோடு தொடர்புப்பட்ட முக்கியமான தகவல்கள் சிலவற்றை இங்கு நான் தெரிவித்தாக வேண்டும்.

தனியார் கல்வி நிலையங்களுக்கு நான்சென்று வந்த காலத்தில், வடமராட்சியில் இருக்கும் குறிப்பிட்ட ஒரு கல்வி நிலையத்துக்குப் போய் வந்து கொண்டிருந்தேன். நான் கற்பித்துக் கொண்டிருந்த கல்லூரி வகுப்புகள் முடிந்தபின்னர் அவசர அவசரமாக அந்தத் தனியார் கல்வி நிலையம் போய்ச் சேருவேன். வகுப்புகள் ஆரம்பிப்பதற்குச் சுமார் பதினைந்து நிமிடம் முன்னதாக நான் அங்கு சென்றுவிடுவது எனது வழக்கம். அந்தக் குறுகிய கால இடைவெளி எனக்கு மிகவும் தேவைப்பட்டது. சயிக்கிளில் வேகமாகச் செல்லும் நான் சற்று நேரம் ஓய்வெடுத்து, தண்ணீர் குடித்து, சிகரெற் புகைத்து என்னை ஆசுவாசப்படுத்திக் கொள்வேன்.

அந்தச் சமயம் அங்கு நிற்கும் மாணவர்கள் யாரையாவது அழைத்து நான் குடிப்பதற்குத் தேவையான தண்ணீரை எடுப்பிப்பது வழக்கம். அப்பொழுது அங்கிருந்த க.பொ.த. சாதாரண தர வகுப்பில் அந்தணர் குடும்பத்து மாணவன் ஒருவன் படித்துக் கொண்டிருந்தான். அவர்களுக்குத் தமிழ்மொழியும் இலக்கியமும் கற்பிக்கும் ஆசிரியராக நான் இருந்தேன். குறிப்பிட்ட அந்த மாணவன் மிகச் சுறுசுறுப்பானவன்; கெட்டிக்காரன். ஆனால் அவனுக்குச் சில வசதிக் குறைவுகள் இருந்து வருவதனை நான் அவதானித்து வைத்திருந்தேன். அதனால் அவன் மீது வெளியில் சொல்லிக் கொள்ளாத அனுதாபமும் அக்கறையும் எனது மனதில் இருந்து வந்தது.

அவனுக்கு மிகப் பிரியமான ஓர் ஆசிரியனாக நான் இருந்தேன். அதனால் வெகு நெருக்கமாக, அன்பும் மதிப்பும் பூண்ட மாணவனாக என்னோடு அவன் நடந்து கொள்வான். எனது தண்ணீர்த் தேவை அறிந்து, தான் முந்திக் கொண்டு வந்து, செம்பொன்றில் தண்ணீர் எடுத்து வந்து பெரும்பாலும் அவனே எனக்குத் தருவான். தண்ணீரைத் தந்துவிட்டு அங்கிருந்து அவன் போய் விடமாட்டான். அடக்க ஒடுக்கமாக எனக்கு முன் நின்று வகுப்பு ஆரம்பிக்கும் வரை பேசுவான்.

ஒருதினம் அவன் என்னுடன் பேசிக் கொண்டு நின்ற சமயம் அவனைப் பற்றி விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும் என்னும் எண்ணம் மனதில் எனக்குத் தோன்றியது. அப்பொழுது அவனைப் பார்த்து, "இது உங்கட சொந்த இடமா?" என வினவினேன். "இல்லை ஸேர், இங்கே சித்தியோடை இருக்கிறான், சொந்த இடம் மாவிட்டபுரம்" என்றான் அவன்.

அவன் மாவிட்டபுரம் என்று சொன்னதும் எனது உள்ளம் விழித்துக் கொண்டது. மாவிட்டபுரத்தில் இருக்கும் கந்தசாமி கோயிலில், ஒடுக்கப்பட்ட மக்கள் ஆலயப் பிரவேசம் செய்வதற்கு, பெரும் போராட்டம் நடத்திய தலமல்லவா அது? அந்த ஆலயத்தின் பூசகராக இருந்த அந்தணர் ஒடுக்கப்பட்ட மக்கள் முன்னெடுத்த ஆலயப் பிரவேச முயற்சியை மூர்க்கமாக எதிர்த்து நின்றவர்களுள்

ஒருவர். அவர் பெயர் உடனே எனது நினைவுக்கு வந்தது. அவர் பெயரைச் சொல்லி 'அவரை உனக்குத் தெரியுமா?' என வேடிக்கையாக அவனிடம் கேட்டேன்.

அவன் மெல்லச் சிரித்தவண்ணம் "ஸேர், அவர்தானே என்ரை அப்பா!" எனச் சொல்லிக் குழைந்து நின்றான்.

நான் அதிர்ச்சியில் சிலகணங்கள் வாய்திறந்து பேச இயலாது மௌனமாக அவன் முகத்தை கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தேன். இன்னொரு வகையில் அவன் சொன்ன செய்தி எனக்கு அதிசயமாக இருந்தது. அந்த முதியவருக்கு இந்த வயதில் ஒரு மகன் இருக்கிறானா? என மனதில் எண்ணி வியந்து கொண்டிருந்தேன். எனது பார்வையும் மௌனமும் கண்டு அவன் என்ன விளங்கிக் கொண்டானோ தெரியாது. எனது மௌனத்தைக் கலைப்பது போல, "நான் அவற்றை மூன்றாவது தாரத்தின்ரை மகன்...ஸேர்" எனத் தொடர்ந்து சொன்னான்.

நான் அவனை முற்றாக அப்பொழுது விளங்கிக் கொண்டுவிட்டேன். அவனுடைய சொந்த வாழ்வில் இருக்கக் கூடிய நெருக்கடிகளை உணர்ந்துகொண்டேன். அதன்பிறகு அவன்மீது நான் மனதில் கொண்ட பற்றுதல் அதிகமாயிற்று.

"பொற்சிறையில் வாடும் புனிதர்கள்" நாவலை நான் எழுதிக் கொண்டிருந்த காலத்தில், அவன் பொதுப் பரீட்சையில் சித்தி அடைந்து அந்தத் தனியார் கல்வி நிலையத்தை விட்டுப் போய்விட்டான். நானும் அங்கிருந்து விலகி விட்டேன். ஆனால் நாவலை நான் எழுதிக் கொண்டிருந்த சமயம் மீண்டும் அவன் வந்து என்னைச் சந்தித்தான். தனக்கு நடந்த துயரமான சம்பவங்களை எனக்கு எடுத்துச் சொல்லி ஆறுதல் பெற விழைந்தான்.

அவன் என்னை வந்து சந்திக்காமல் இருந்திருந்தால் அந்த நாவலின் முடிவு இன்றிருப்பதுபோல் அல்லாமல் வேறொன்றாக இருந்திருக்கும். இன்றுள்ள முடிவுக்குக் காரணமாக அமைந்தவன் அவன்தான்.

அந்த நாவலின் முதல்பிரதியை எழுதி முடித்த பின்னர் கலாநிதி நா. சுப்பிரமணிஐயர், ஆசிரியர் கே. தங்கவடிவேல், பேராசிரியர் கா.சிவத்தம்பி ஆகிய மூவரின் பார்வைக்குக் கொடுத்தேன். பின்னர் மீள எழுதும் நோக்கத்துடன் அந்தப் பிரதியை நான் வைத்திருந்தேன்.

தாவடியில் தங்கி இருந்த சமயம் 'முரசொலி' தினசரியில் வெளியிடுவதற்கு நாவல் ஒன்று எழுதித் தருமாறு அதன் ஆசிரியர் என்னிடம் கேட்டுக்கொண்டார். எனது கைவசம் இருந்த "பொற்சிறையில் வாடும் புனிதர்கள்" நாவலைத் தினசரியில் வெளியிடுவதற்குத் தகுந்த வண்ணம் திரும்ப எழுதிக் கொடுப்பதற்குத் தீர்மானித்தேன். ஆனால் நாவல் பிரதி அப்பொழுது என்னிடத்தில் இல்லை. அது எனது

வீட்டில்! நான் தாவடியில்! வீட்டிலுள்ள பிரதிக்கும் என்ன நடந்தோ! எனக்குத் தெரியாது. வடமராட்சியில் முதியவர்கள் சிலரும், வளர்ப்பு மிருகங்களும் தவிர, ஏனையவர்கள் அனைவரும் அங்கிருந்து வெளியேறிவிட்டார்கள். அங்கு தினமும் பல சம்பவங்கள் நடை பெற்றுக் கொண்டிருப்பதாகப் பயங்கரச் செய்திகள் காதுக்கு வந்து கொண்டிருந்தன.

நான் வீட்டிற்கு ஒரு தடவைபோய் அந்த நாவலின் பிரதியை எடுத்துக் கொண்டு திரும்பி வருவதற்குத் தீர்மானித்தேன். எனது குடும்பத்தவர்களுக்கு அது விருப்பமில்லை. அவர்கள் எல்லோரையும் சமாதானப்படுத்தி விட்டு ஒரு நாள் காலை சயிக்கிள் வண்டியில் அங்கிருந்து புறப்பட்டேன். வல்லைவெளி தாண்டி வடமராட்சிக்குள் நுழைந்தபோதுதான் அங்கு நிலவிய பயங்கரச் சூழ்நிலை நெஞ்சில் உறைத்தது. ஆடுகள், மாடுகள், நாய்கள் தவிர மனிதத் தலைகளைக் காண்பது அரிதாக இருந்தது. முதியவர்கள் இரண்டொருவரை மாத்திரம் காண முடிந்தது. பிரதான பாதைகளைத் தவிர்த்துக் குச்சொழுங்கைகளில் புகுந்து ஒருவாறு வீடு வந்து சேர்ந்தேன். வீடு மனிதர்கள் வாழும் இடமாக அப்பொழுது தோன்ற வில்லை. காடாகக் கிடந்தது. மரங்களில் இருந்து இலைகள் கொட்டி, முற்றமெங்கும் குப்பை கூளம் நிறைந்து கிடந்தது. வீட்டுக்குள்ளே கால் எடுத்து வைக்க இயலாத படி அழுக்கும் தூசியும் படிந்திருந்து தடித்துக் கிடந்தது. ஆனால் வீட்டுக் கதவுகள் திறக்கப்படாது பூட்டிய வண்ணமே கிடந்தன.

எனக்கோ நீண்ட தூரம் சயிக்கிள் ஓடி வந்த களைப்பு. குடிப்பதற்குத் தண்ணீர்தானும் வீட்டில் இல்லை. கிணற்றில்தான் தண்ணீர் அள்ளிக் குடிக்க வேண்டும். கிணற்று நீரும் என்ன நிலையில் இருக்கின்றதோ! என்ற நினைப்பு மனதில்.

நான் வீட்டுக் கதவைத் திறந்த சத்தம் கேட்டு அயல் வீட்டில் தங்கி இருந்த வயதில் மூத்த சிவகுரு உடனே அங்கு வந்தார். அவர் தனது மனைவி மக்களை வடமராட்சிக்கு வெளியே பாதுகாப்பாய் அனுப்பி வைத்துவிட்டு தான் மட்டும் வீட்டில் தங்கி இருந்தார். நான் அவரிடம் தண்ணீர் கேட்டு வாங்கிக் குடித்துத் தாகம் தீர்த்தேன். "உடனே போகப் போறியளா?" என அவர் வினவியபோது, "வெயில் தணிந்த பிறகுதான் போக இருக்கிறேன்," எனச் சொல்லி அனுப்பி விட்டு வீட்டு விறாந்தையில் ஒரு துண்டை விரித்து சரிந்து படுத்துவிட்டேன். எனக்கோ சயிக்கிள் ஓட்டி வந்த களைப்புடன் பசிக்களையும் சேர்ந்து கொண்டது. நான் சூழ்நிலை மறந்து என்னை மறந்து உறங்கிப் போனேன்.

ஒருசமயம் என்னை யாரோ அருட்டி எழுப்புவது போல உணர்ந்து கண்விழித்தேன். அயல் வீட்டு முதியவர்- எனது உறவுக்காரர் சிவகுரு

ஒருகையில் தண்ணீர் நிறைந்த செம்பும், மறுகையில் கோப்பையில் சோறுமாக நின்று கொண்டிருந்தார். வெள்ளைச் சோறும் முருங்கைக் காய்க்கறியும். அமுதம் என்று சொல்வார்களே! அதனை யாரும் உண்டதுமில்லை. அப்படி ஒன்றிருப்பதான நம்பிக்கையும் எனக்கில்லை. நான் உண்ட அமுதம் அன்று நான் உண்ட அந்த உணவுதான். நான் பங்கு பற்றிய எந்தப் பெரிய விருந்தும் அதற்கு ஈடாகாது. சுவை என்பது நாவில் இல்லை. பசி, தேவை, உணர்வு என்பனதான் சுவையைத் தீர்மானிக்கின்றன.

அந்த நாவலை அத்தியாயம் அத்தியாயமாக நான் எழுதிக் கொடுத்துக் கொண்டிருக்க, நாவல் 'முரசொலி' யில் பிரசுரமாகிக் கொண்டிருந்தது. நாற்பத்தைந்து தினங்கள் தொடர்ச்சியாக அது வெளிவந்து நிறைவுபெற்றது. ஆனால் அந்த நாவலின் ஒரு அத்தியாயத்தை முரசொலி ஆசிரியர் தந்திரமாக மெல்ல நீக்கிவிட்டார். அந்த அத்தியாயம் தவறிப்போய்விட்டதாக மனமறிய எனக்குப் பொய் கூறினார். வீட்டுடன் அடங்கிக் கிடக்கும் பிராமணக் குடும்பத்துப் பெண்கள் பாலியல்ரீதியாக எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள் என்பதனைச் சித்திரிக்கும் அத்தியாயம் அது. 'முரசொலி' ஆசிரியர் தமிழ்ச் சமூகம் பற்றிக் கொண்டிருந்த பொய்ம்மையான சமுக மேன் நிலை உணர்வினை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. எனது ஆட்சே பனையை அப்பொழுது நான் அவருக்குத் தெரிவித்தேன்.

அந்த நாவல் நூலாக வெளிவந்த சமயம் நண்பர் ரத்தினஸாபதி அய்யர் மட்டக்களப்பிலுள்ள தபாற்கற்தோர் ஒன்றில் கடமை ஆற்றிக் கொண்டிருக்கிறார் என அறிந்தேன். அவருக்கு அந்த நாவல் பிரதி ஒன்றை தவறாது அனுப்பி வைத்தேன்.

ஆனால் அவரிடம் இருந்து எந்தவொரு தகவலும் எனக்கு வந்து சேரவில்லை. அந்த நாவல் அவர் மனதில் எதிர்வினையான பாதிப்பை உண்டாக்கி விட்டதோ! என எண்ணி, நான் கவலைப்பட்டுக் கொண்டேன்.



ஒரு காலத்தில் எனது இலக்கிய நண்பர்கள் முன்கூட்டியே அறிந்து விடுவார்கள் நான் கொழும்பு வரவிருக்கும் செய்தி. அவர்கள் எல்லோருக்கும் சோவியத் தூதரகத்தின் தகவல் பகுதியில் பணியாற்றிக் கொண்டிருந்த எழுத்தாளர் ராஜ ஸ்ரீகாந்தன் அந்தச் செய்தியைத் தெரிவித்து வைக்கத் தவறமாட்டார். அவர் வதிரியைச் சேர்ந்தவர். அது எனது அயற் கிராமம். ஊரில் வாழ்ந்து கொண்டிருந்த காலத்திலேயே, என்னோடு நெருக்கமான உறவு பூண்டவர். எனக்குத் தம்பி போன்றவர். கொழும்பில் இருந்து ஊருக்கு வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தவறாது என்னை வந்து சந்திக்கும் ஒருவர். இலக்கியத்தினாலும் கொள்கையினாலும் என்னோடு இணைந்து நின்றவர். அவர் கொடுக்கும் தகவலைப் பெற்றுக்கொண்ட நண்பர்கள், நான் கொழும்பில் தங்கி இருக்கும் இடத்துக்கே என்னைத் தேடிக்கொண்டு வந்து விடுவார்கள்.

எனது இனிய நண்பர் லெ. முருகபூபதி, அவர்களுள் மிக முக்கியமானவர். யாழ்ப்பாணம் வரும் சந்தர்ப்பங்களில் எல்லாம் அவர் எனது இல்லம் வந்து எனது குழந்தைகளைக் கண்டு போகத் தவறாத நட்புரிமை கொண்ட பண்பாளர். கொழும்பு செல்லும் சந்தர்ப் பங்களில் நான் நீர்கொழும்பிலுள்ள அவர் இல்லத்துக்குச் செல்வதும் எனது திட்டங்களில் ஒன்றாக இருக்கும். அப்பொழுது நீர்கொழும்பில் வாழ்ந்துகொண்டிருந்த இளங்கீரனைக் கண்டு பேசும் வாய்ப்பு எனக்குக் கிட்டும்.

முருகபூபதி 'வீரகேசரி'யில் பணிபுரிந்த காலம். அவரைத் தேடிக் கொண்டு 'வீரகேசரி' காரியாலயம் நான் செல்வதுண்டு. அந்தச்

சந்தர்ப்பங்களில் 'வீரகேசரி' வாரவெளியீட்டுக்குப் பொறுப்பாக இருந்த பொன். ராஜகோபாலை நேரிற் சந்தித்துப் பேசுவேன். எனது இலக்கிய வரலாற்றுப் பயணத்தில் வீரகேசரிக்கும் பொன். ராஜகோபாலுக்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடமுண்டு. எனது சிறுகதைகளை அவர் தொடர்ந்து விரும்பி வரவேற்று வெளியிட்டு வைத்துக் கொண்டிருந்தார். எனது வளர்ச்சியில் அக்கறை; எனது படைப்புகளில் நாட்டம் அவருக்கு இருந்து வந்தது என்பதனை நன்றியுடன் நான் குறிப்பிட்டாக வேண்டும்.

வீரகேசரியில் இருந்து முருகபூபதி விலகி அவுஸ்திரேலியா சென்ற பிறகும் நான் நீர்கொழும்பு சென்று அவர் குழந்தைகளைப் பார்த்து வருவதுபோல், வீரகேசரிக்குப் போய் பொன். ராஜகோபாலைச் சந்தித்துப் பேசிவருவேன்.

வடமராட்சி இராணுவ நடவடிக்கை நடந்து முடிந்த பிற்பாடு அந்த ஆண்டு (1987) டிசம்பர் மாதம் நான் கொழும்பு செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்தத் தாக்குதலின் போது எனது உடன்பிறந்தவர்களின் பிள்ளைகள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு, காலிக்குக் கொண்டுசெல்லப் பெற்று, பின்னர் விடுவிக்கப்பட்டார்கள். அவர்கள் உளரீதியான பாதிப்புக்கு ஆளாகி, கல்வியிலும் வெறுப்புற்று, இந்த நாட்டில் வாழும் விருப்பத்தையும் தொலைத்திருந்தார்கள். கனடாவில் வாழும் எனது தம்பி செய்து கொண்ட ஏற்பாணை (Sponsor) மூலம் இருவரையும் அந்த நாட்டுக்கு அனுப்பிவைக்கும் ஏற்பாடுகளைச் செய்வதற்காக அவர்களுடன் கொழும்பு வந்தேன். பலநாட்கள் தங்கி இருந்தேன்.

முன்னர் போல ஒருதினம் வீரகேசரி சென்று பொன். ராஜகோபாலைச் சந்தித்தேன். அந்தச் சமயம் நான் வீரகேசரிக்குச் சிறுகதை ஒன்றினை அனுப்பி வைத்து இரண்டு மூன்று மாதங்கள் கழிந்து போய்விட்டது. பிரசுரத்துக்காகக் காத்து எனது சிறுகதைகள் அவ்வளவு காலம் இதற்கு முன்னர் இருந்ததில்லை. நான் ராஜகோபாலிடம் பேச்சோடு பேச்சாக, "கதை ஒன்று அனுப்பி வைத்தேன்" எனக் கூறினேன். அவர் சிரித்துக் கொண்டு எழுந்து தனக்கு அருகில் இருந்த அலுமாரியைத் திறந்து, அதனுள் இருந்து இரண்டு ஃபயில்களைத் தூக்கி எனக்குமுன் மேசைமீது வைத்தார். ஒரு ஃபயில் உண்டு பருத்த தனவந்தன் வயிறு போல ஊதிப் பருத்திருந்தது. மற்றைய ஃபயில் பல நாட்கள் பட்டினி கிடந்தவன் வயிறாக மெலிந்து ஒட்டிப் போய்க் கிடந்தது. ஊதிப்பருத்த ஃபயில்மீது கையினால் தட்டிக் கொண்டு, "இவ்வளவும் சிறுகதைகள்" எனக் கூறினார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. சுமார் ஐம்பது சிறுகதைகளாவது அதில் இருக்கும். அடுத்த ஃபயிலை எனக்கு முன் நகர்த்தி, "திறந்து பாருங்கோ" என்றார். அதற்குள்ளே எஸ்.அகஸ்தியர், பெனடிற்பாலன், செ.யோகநாதன்,

நீர்வை பொன்னையன் ஆகியோரின் சிறுகதைகளும் எனது அந்தக் கதையும் கிடந்தது.

அப்பொழுது அவர் சொன்னார், "தெணியான், உங்களுடைய கையிலே இருக்கிற ஃபயிலுள்ள கதைகளைத் தொடர்ச்சியாக நான் பிரசுரித்துக் கொண்டிருந்தால், நிச்சயமாக என்னை வீட்டுக்கு அனுப்பி வைத்து விடுவார்கள். மற்ற ஃபயிலில் இருந்து ஐந்தாறு கதைகள் வெளிவந்த பிறகு, இடையில் இந்தக் கதை ஒன்றை மெல்லத் தள்ளி விடுவேன். உங்களுடைய கதை வரும்".

அவ்வளவுகாலமும் எனக்குப் புரியாத ஒரு விடயம் அப்பொழுது தான் மெல்லப் புரிந்து கொண்டது.

'தினகரன்' பத்திரிகை மூலம் எனக்குக் கிடைக்கப் பெற்ற சுவாராசியமான இன்னனோர் அனுபவம்.

'தினகரன்' நிருபர் ஒருவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்கி, பேராதனையில் அப்பொழுது இருந்த எனது தம்பி, "கழுகுகள் வட்டமிடுகின்றன" குறுநாவலை என்னிடம் பெற்று அந்த நிருபரிடம் (28.06.1978) கொடுத்தான். ஆனால் நீண்டகாலமாக அது வெளிவரவில்லை. அந்த நிருபரைச் சந்தித்து அவன் விசாரித்த பொழுது, "இடதுசாரிகளின் எழுத்துக்களைப் பிரசுரிக்க வேண்டாம் என்பது மேலிடத்து உத்தரவு" என அந்த நிருபர் தெரிவித்தார். பிரதியை மீளப் பெற்றுக் கொள்ளும் முயற்சியும் பயனளிக்காது போனது.

காலப் போக்கில் அந்தச் சம்பவம் எனக்கு மறந்து போயிற்று. ஆனால் அந்தக் குறுநாவலைப் பின்னர் முழு நாவலாக எழுதி முடித்தேன். தமிழ்நாடு நர்மதா வெளியீடாக 1981-ல் "கழுகுகள்" என்ற பெயரில் அது நூலாக வெளிவந்தது. நூல் வெளிவந்து சில ஆண்டுகளின் பின்னர் - ஆட்சிமாறிய பிற்பாடு - தினகரன் தினப்பதிப்பில் தொடர்ச்சியாக அந்தக் குறுநாவல் வெளிவரத் தொடங்கியது. ஆரம்பத்தில் அந்தத் தகவல் எனக்குத் தெரியாது. குறுநாவல் முடிவடைந்த பின்னர், தினகரன் பிரதம ஆசிரியர் இ. சிவகுருநாதன், "தெணியான், உங்களுடைய பிரதி ஒன்று இருப்பதாகக் கொண்டு வந்து தந்தார்கள்; அதனைப் பிரசுரித்திருக்கிறேன்" என தகவல் தந்தார்.

இப்படித் தடைகள் சில தாண்டித்தான் எனது இலக்கியப் பயணத்தில் நான் பயணிக்க வேண்டி நேர்ந்திருக்கிறது.

நான் கொழும்பு செல்லும் வேளைகளில் கொட்டாஞ்சேனையில் தம்பியின் இல்லத்தில் தங்கி இருக்கும் சூழ்நிலை அவன் திருமணத்தின் பின்னர் உருவானது. பிரேம்ஜியும் கொட்டாஞ்சேனையில்தான் அப்பொழுது தங்கி இருந்தார். பணிமுடிந்து வீடு செல்லும் சமயங்களில் மாலை வேளைகளில் அவர் என்னைச் சந்திப்பார்.

நீண்டநேரம் இருவரும் உரையாடிக் கொண்டிருப்போம். பெரும்பாலும் இலக்கியம் பற்றியதாகவே எங்கள் உரையாடல் அமைந் திருக்கும். அறிவியல் நோக்கில் எதனையும் அணுகும் பிரேம்ஜியின் கருத்துக்கள் மிகுந்த பயனுள்ளவையாக இருக்கும். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளைச் செயலாளராக நான் இருந்த காலத்தில், பிரேம்ஜி எழுதும் கடிதங்களும் அத்தகையவைதான்! கடிதங்கள் நீண்டவையாக, திட்டமிட்டு எழுதப்பட்டவையாக எப்பொழுதும் இருந்து வரும். நேரிற் சந்திக்கும் சந்தர்ப்பங்களில் அவர் உறவு கொண்டு பழகும் நடத்தைப் பாங்கு மனதுக்கு உவப்பாக இருக்கும்.

பிரேம்ஜியுடன் பணிபுரிந்த மு. கனகராஜன் கொழும்பில் இடையிடை என்னைச் சந்தித்துப் பேசுவார். சுவைப்பட, நீண்ட கடிதங்கள் அக்காலத்தில் எனக்கு எழுதுவார்.

ஈழத்து முற்போக்கு இலக்கியத்தின் முன்னோடி கே. கணேஷை 17.12.1987 கொள்ளுப்பிட்டியில் சந்தித்தேன். தலத் ஓயாவில் இருந்து அங்கு வந்து தங்கி இருந்தார். ராஜ ஸ்ரீகாந்தன் என்னை அவரிடம் அழைத்துச் சென்றார். அவருடனான எனது முதற் சந்திப்பு அது. ஆனால் முன் அறிமுகம் ஆகாத இருவரது முதற் சந்திப்பாக அது அமையவில்லை. மல்லிகை வாயிலாக முன்னரே என்னை அவர் நன்றாக அறிந்து வைத்திருந்தார். அதனால் நீண்ட காலப்பழக்கம் உள்ள இருவரது சந்திப்பாக அது அமைந்திருந்தது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பயனுள்ள, பல இலக்கியத் தகவல்களை அவர் அப்பொழுது எடுத்துச் சொன்னார். நேரம் கடந்து போவது மறந்து, மனந்திறந்து நீண்ட நேரம் என்னுடன் உரையாடினார்.

அந்தச் சந்திப்பு மறக்கமுடியாத ஒன்றாக எனக்கு அமைந்தது. அதன் பின்னர் எங்கள் இருவருக்கும் இடையே கடிதத் தொடர்புகள் இருந்து வந்தன. நாட்டு நிலைமைகள் காரணமாக எங்கள் கடிதத் தொடர்பு பின்னர் இடையில் தடைப்பட்டுப் போனது.

கொட்டாஞ்சேனையில் நான் தங்கி இருந்த சமயம் சிங்கள மொழியில் வெளிவரும் "விவரண" சஞ்சிகை உதவி ஆசிரியர், ராஜ ஸ்ரீகாந்தனுடன் என்னைத் தேடி வந்து செவ்வி ஒன்றினை அப்பொழுது என்னிடம் எடுத்துக் கொண்டார். பின்னர் 09.05.1988 'விவரண' இதழ் எனது புகைப்படம், அறிமுகம் என்பவற்றுடன் அந்தச் செவ்வியைத் தாங்கி வெளிவந்தது.

கையெழுத்துப் பிரதியாக டானியல் என்னிடம் தந்துபோன "தண்ணீர்" நாவல் நூலாக்கம் பெற்று, யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் 14.08.1988 -ல் பேராசிரியர் நா. சுப்பிரமணிய ஐயர் தலைமையில் அதன் வெளியீட்டு விழா நடைபெற்றது. விழாவில்

பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோரும் இன்னும் சிலரும் பேசினர். நானும் அந்த விழாவில் பேசினேன்.

சாதியக் கொடுமைகளுக்கு எதிராக இலக்கியம் படைப்பதை இலக்காகக் கொண்ட டானியலின், சாதியம் பற்றிய இன்னொரு நாவல் வெளியீட்டு விழா. அந்த வெளியீட்டு விழாவில் தெரிவிக்கப்பெற்ற கருத்துகளின் தொனிப்பொருள் சாதியத்துக்கு எதிரானதாகக் குறிப்பிடும் பொழுது ஆறுமுக நாவலர் பற்றிச் சொல்லாமல் விட்டு விட முடியாது. எனது பேச்சில் அன்று வன்மையாக நாவலரைக் கண்டித்துப் பேசினேன். அப்பொழுது சபையில் இருந்த நாவலர் பக்தர் ஒருவர், எனது பேச்சைக் கேட்டு வெகுண்டு, குறுக்கிட்டு என்னிடம் கேள்வி கேட்கப் போவதாகச் சொல்லி அவதிப்பட்டுக் கொண்டு இருந்திருக்கின்றார். அவர் அருகில் அமர்ந்திருந்த பேராசிரியர் சோ. கிருஷ்ணராசா, "சாதிக்கொடுமையினால் பாதிக்கப்பட்டவனின் மனநிலையை - மனக் கொதிப்பை முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும். மேடையில் நிற்கும் தெணியானிடம் வீணாக வாயைக் கொடுத்து அவமானப்பட வேண்டாம்" என அவரை எச்சரித்ததும் அவர் தன்னை அடக்கி வைத்துக் கொண்டு மௌனமாக அமர்ந்திருந்தார் என்பதை நான் அறிந்துகொண்டேன். அந்தத் தகவலின் மூலம் தொட வேண்டிய இடத்தை எனது பேச்சு தொட்டு விட்டதென எண்ணி நான் உள்ளூர மகிழ்ந்தேன்.

அந்த விழாவில் நான் ஆற்றிய உரை வெவ்வேறு கோணங்களில் பலர் நெஞ்சங்களைத் தொட்டிருக்கின்றது என்பதனைப் பின்னர் அறிந்துகொள்ள முடிந்தது.

கடற்படையினர் கடல்மீதிருந்து கரையை நோக்கி பீரங்கித் தாக்குதல் நடத்திய வேளை கடற்கரை ஓரமாக வாழ்ந்த கரையோரச் சமூகத்தைச் சேர்ந்த மக்கள், தங்கள் பாதுகாப்புத் தேடி கிராமத்துக் குள்ளே இடம்பெயர்ந்து ஓடி வந்தார்கள். அந்த மக்களுக்கு உயர் சாதியினர் எனப்படுகின்றவர்கள் சிரட்டையில் தேநீர் வழங்கிய வெட்கக்கேடான சம்பவம் ஒன்று நடைபெற்றது. அந்த அவமதிப்பினால் மனம் நொந்து போன ஒருவர் எனது தந்தையாருடன் நெருக்கமான உறவு வைத்திருந்தவர். தனது மனைவியுடன் அங்கிருந்து திரும்பி வந்து ஒருபகலும் இரவும் எங்கள் குடும்பத்துடன் தங்கி இருந்து பின்னர் திரும்பிப் போனார். இந்தச் சம்பவம் 'தண்ணீர்' வெளியீட்டு விழா நடைபெறுவதற்குச் சிறிது காலம் முன்னதாக இடம் பெற்றது. அந்தச் சம்பவத்தை மிகுந்த மனக் கொதிப்புடன் அந்த விழாவில் நான் எடுத்துச் சொன்னேன்.

நூல் வெளியீடு முடிந்து அந்த மேடையில் இருந்து நான் கீழே இறங்கிவந்தபோது, சபையில் இருந்த குறிப்பிட்டுச் சொல்லத் தகுந்த

ஒருவர் என்னைத் தேடி வந்து "ஐயா, உங்களுடைய பேச்சைக் கேட்டு சிலரின் தலை கவிழ்ந்து விட்டது" என்று கூறிச் சொன்னார்.

நான் எடுத்துக் கூறிய மனிதநாகரிகமற்ற, அநாகரிகமான அந்தச் செயலைக்கேட்டு அவர்கள் தலை குனிந்திருந்தால் நான் நிச்சயம் மனம் மகிழ்ந்திருப்பேன். ஆனால் எனக்குத் தகவல் தந்தவர் அந்தப் பொருள்பட எனக்கு அதனைச் சொல்லவில்லை என்பதை நான் உணர்ந்து கொண்டேன். எனது பேச்சு யாருக்காவது மனச் சங்கடத்தை ஊட்டுகின்றது என்றால், அதற்கு நான் காரணமாக இருக்க முடியாது. சங்கடப்படுகின்றவர்கள் சமூகத்தை, எங்களை உள்நோக்கி ஒருதடவை பார்த்துக் கொள்ள வேண்டும். மேடை நாகரிகம் என்பது பொய்மையும் போலித்தனங்களுமாகப் பேசுவதல்ல.

'மழைவிட்டும் தூவானம் விடாத ஒரு நிலையை' எனது அன்றைய பேச்சு உருவாக்கி விட்டிருந்தது.

கே. டானியலின் "குறுநாவல்கள்" என்னும் தொகுதி ஒன்று 1989-ல் வெளிவந்தது. அந்த நூலில் இடம் பெற்றுள்ள பதிப்புரையின் சில பகுதிகளை மீள இங்கு தருகின்றேன்.

"டானியலின் தண்ணீர் நாவல் சித்திரிக்கும் கரவெட்டிப் பிரதேச அபிமானிகள், வடமராட்சி வாழ்நர் பேசிய கருத்துக்கள் டானியலின் மதிப்பீட்டை அளவிடும் அதேவேளையில் அவர் எழுதாது விட்டாலும் நாமும் அவரைப் போல எழுதுவோம் என்ற தொனியில் அமைந்திருந்தன. எனவே அந்த அபிமானிகள் டானியலைப் போல எழுதும் ஆற்றல் பெறும் வரையில், சிதறிக் கிடக்கும் டானியலின் குறுநாவல்களைத் தொகுத்து வெளியிட்டால் அது எல்லோருக்கும் பயன் தரும் என்று எண்ணினோம்.

டானியலின் தண்ணீர் நாவலை டானியல் எழுத முடியாமல் போனால் அதைத் தொடர்ந்து எழுதும் ஆற்றல் பெற்றவர் என டானியலால் மதிப்புரை வழங்கப்பட்ட திரு. தெணியான் அவர்களிடம் 'கண்ணம்மா' பற்றிக் கூறியிருப்பார் என்று எண்ணுகிறோம். டானியலின் வாரிசு ஒன்றினை இனி எழுதப்படவிருக்கும் 'கண்ணம்மா' நாவல் இனங்காட்டும் என நம்புகின்றோம்.

டானியலின் எழுத்து அவர் வாரிசு ஒன்றால் நிறைவேறலாம். அதன் பின்னர்தான் டானியலுடன் ஒப்பிடக் கூடிய ஆற்றலுடைய எழுத்தாளரையும் தமிழர் இனங்கண்டு கொள்ளவும் முடியும்!"

அக்காலத்தில் இவற்றைப் படித்தபோது எனக்குச் சினம் மூண்டது என்பது உண்மைதான். இன்று மேலும் இது பற்றி நான் குறிப்பிடாமல் விட்டு விடலாம். ஆனால் எழுத்துருவில் இந்த விவகாரம் பதிவு செய்யப் பெற்றிருக்கிறது. அவ்வாறு பதிவு செய்யப்பட்டதனால் பதினெட்டு

ஆண்டுகள் கடந்த பின்னரும் இதுபற்றி நான் குறிப்பிட வேண்டியது தவிர்க்க இயலாததாக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு எழுதியவர்கள் பற்றி நான் குறிப்பிடப் போவதில்லை. வாசகர்கள் அவர்களை விளங்கிக் கொள்ளட்டும்.

சிதறிக் கிடந்த டானியலின் குறுநாவல்களைத் தொகுத்து வெளியீடு செய்தவர்களின் நோக்கம் அவற்றை இருநூல்களாக்குவது மாத்திரமல்லாது, டானியல் அபிமானிகள் அவற்றைப் படித்து டானியலைப் போல எழுதும் ஆற்றலைப் பெற்றுக்கொள்வதற்கு உதவுவதாகவுமல்லவா இருந்திருக்கின்றது! எத்தகைய பெருந்தன்மை! எத்தகைய சட்டாம்பிள்ளைத்தனம்!

டானியல் போல எழுதுவதென்றால் என்ன?

டானியல் சாதிக்கொடுமையினால் இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக இலக்கியம் படைத்தார். அந்தக் கொடுமைகள் தீரும்வரை தொடர்ந்து நானும் சாதிக்கு எதிராக எழுதுவேன் என 'தண்ணீர்' நாவல் வெளியீட்டு விழாவில் நான் சொன்னேன். இன்று வரை நான் எழுதியும் வருகின்றேன். அவ்வளவுதான்!

டானியலின் பேரபிமானிகள் ஈழத்து நாவலாசிரியர்கள் மத்தியில் ஒருபோட்டிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்தப் போட்டியில் ஜெயிக்க முடியுமா உங்களால்? ஒரு சவாலும் விடப்பட்டிருக்கிறது. டானியல் எழுதுவதற்குத் திட்டமிட்டிருந்த "கண்ணம்மா" என்னும் நாவலை எழுதி முடித்தலாகிய வில்லை வளைத்து நாவலாசிரியர் என்னும் மாலையைச் சூடிக்கொள்ளலாம். அந்த வில்லை வளைக்க இயலாதவர்கள் நாவலாசிரியராக இருக்க, டானியலின் வாரிசாக இருக்க, தகுதியற்றவர்கள் என்பது அவர்களின் முடிந்த முடிவு.

ஓர் எழுத்தாளனின் கொள்கையை, கருத்துநிலையை இன்னொரு எழுத்தாளன் கொண்டவனாக இருக்கலாம். அல்லது எழுத்தாளர் இருவர் இவற்றில் ஒன்றுபட்டவர்களாக இருக்கலாம். ஆனால் ஓர் எழுத்தாளனின் இலக்கியப் படைப்பைப் போல இன்னொரு எழுத்தாளன் இலக்கியம் படைப்பது எப்படி என்பது எனக்குத் தெரியவில்லை. இந்த உண்மையை ஒரு படைப்பிலக்கியவாதியினால் தான் உணர்ந்துகொள்ள இயலும். டானியலின் பேரபிமானிகள் எதற்காக இத்தனை காழ்ப்புடன் இவ்வாறெல்லாம் சொல்லித் தலையில் அடித்துக்கொண்டார்கள் என்பது எனக்குப் புரியாத புதிராகவே இருந்து வருகின்றது.

நான் எழுதுவதற்கு ஆரம்பித்து இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவைக் கவனத்தில் கொண்டு 1989 மார்ச் மாத 'மல்லிகை' அட்டையில் எனது படத்தைத் தாங்கி வெளிவந்தது. அறிமுகக் கட்டுரையைப் பேராசிரியர் கா. சிவத்தம்பி எழுதினார். வீரகேசரி

இலக்கியக் களம் "எழுத்துப் பணிக்கொரு விழா" என வெள்ளி விழாக்காலம் பற்றிய செய்தியை வெளியிட்டு வைத்தது.

எனது வெள்ளி விழாவைக் கொண்டாடும் மனவிருப்பம் எனக்கு இருக்கவில்லை. ஆனால் என்னை அறியாமலே சில நிகழ்வுகள் அந்தக் காலத்துக்குப் பொருத்தமானவையாக நடந்தேறின.

நான் கொழும்பு சென்ற சமயம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் "கலைப் பூங்கா" நிகழ்வுக்காக 16.12.1989-ல் செவ்வி ஒன்றினை ஒலிப்பதிவு செய்து பின்னர் இரண்டு தடவைகள் ஒலிபரப்பியது. செவ்வியைப் பெற்று இரண்டு தினங்களின் பிறகு எனது இலக்கிய உரைகள் இரண்டினைப் பதிவு செய்து பின்னர் பல தடவைகள் ஒலிபரப்பியது.

நண்பர் ஆப்டீன் கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமை ஆற்றிக் கொண்டிருந்தார். அந்தக் கல்லூரி உயர்தர மாணவர் மத்தியில் தனது தலைமையில் ஒருதினம் பேசவைத்தார். பிறிதொரு தினம் மாலை வேளை நான் தங்கி இருந்த கொட்டாஞ்சேனை இல்லத்துக்கு ஆப்டீன் வந்து, என்.எஸ்.எம். இராமையாவைச் சந்திப்பதற்காக என்னை அழைத்துச் சென்றார். மலையகத்தின் மூத்த எழுத்தாளர் இராமையாவை அன்று (17.12.1989) சந்தித்து உரையாடினேன். ஒரு மூத்த படைப்பாளியின் சந்திப்பு எனக்கு மன மகிழ்ச்சியைக் கொடுத்தது. அதே சமயம் கஷ்டமான சூழ்நிலையில் அவர் வாழ்ந்து கொண்டிருப்பதை நேரில் அவதானிக்க முடிந்ததினால் மனதுக்கு உறுத்தலாக, வேதனையாக அமைந்திருந்தது.

'முரசொலி' தினசரியில் தொடராக வெளிவந்த எனது "பொற் சிறையில் வாடும் புனிதர்கள்" நாவல் முரசொலி வெளியீடாக வெளிவந்தது. அதன் வெளியீட்டு விழா 03.12.1989-ல் தேவரையாளி இந்துக் கல்லூரியில் டொக்ரர் எம்.கே. முருகானந்தன் தலைமையில் நடைபெற்றது.

எனது ஆசிரியர் சைவப்புலவர் சி. வல்லிபுரம் அக்காலத்தில் மறைந்தார். அன்னாரின் ஆக்கங்களைப் "புலவர் தேறல்" என்னும் நூலாகத் தொகுத்தளித்தேன்.

எனது வாழ்வில் நான் மறக்க முடியாத துயரமான சம்பவம் என்று 14.06.1991 நடைபெற்றதனைத் தவறாமல் இங்கு நான் சொல்லியாக வேண்டும்.

பருத்தித்துறை டொக்ரர் எம்.கே. முருகானந்தன் இல்லத்தில் அன்றைய தினம் மாலைவேளையில் 'அறிவோர் கூடல்' நிகழ்வொன்று நடைபெற்றது. அந்த நிகழ்வில் 'கதையின் கதை'

என்னும் தலைப்பில் நான் உரையாற்றினேன். எனது உரையைத் தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் நண்பர் நெல்லை க. பேரன் சம்பிரதாயமாக நன்றியுரை ஆற்றினார். கூடலில் சந்தித்த பலரும் அங்கிருந்து புறப்பட்டுச் சென்ற பிறகும் பேரன், நான், இன்னும் ஒருசிலர் சற்று நேரம் தங்கி இருந்து பேசிவிட்டு, பிற்பாடு பிரிந்து சென்றோம்.

நண்பர் பேரனிடம் நாங்கள் பெற்றுக்கொண்ட அந்தப் பிரிவு நிரந்தரமானது என்பது யாருக்குத்தான் அப்பொழுது தெரியும்?

அந்த இரவு இடம்பெற்ற ஷெல் குண்டு வீச்சுக்கு நண்பர் பேரன் குடும்பத்துடன் பலியாகி மறைந்து போனார்.

அறிவோர் கூடல் இருபதாவது நிகழ்வு. அதுவும் டொக்ரர் முருகானந்தன் இல்லத்தில்தான் நிகழ்ந்தது. தனிப்பட்ட முறையில் எனக்கு மிகமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக அது அமைந்தது. எனது குடும்பத்தில் முதல் முறையாக வீசை (மீசை) வைத்துக்கொண்டவன் நானேதான். அப்படியொரு இறுக்கம். எனது தந்தையாரின் தாராளப் போக்கு அந்தக் கட்டுப்பாடுகள் தளர்ந்துபோகக் காரணமாக இருந்தது.

ஒரு சமயம் சின்னமுத்து நோய் எனக்கு உண்டானது. உடல் வெப்பம் தணிய வேண்டும் என்பதற்காக, இனித்த பனங்கள்ளில் வெங்காயத்தை வெட்டிப்போட்டு காலைவேளையில் குடிக்கத் தந்தார்கள். நோய் முற்றாகச் சுகப்பட்டு தலைக்குத் தண்ணீர் வார்ப்பதற்கு முன்னரே, நான் அந்தக் கள்ளைக் குடிக்க மறுத்தேன். எனது மறுப்புக்கான காரணத்தைக் கேட்டார்கள். "காலை வேளையில் உரிய நேரம் வரும் போது கள்ளுக்குடிக்கும் ஆவல் மனதில் எழுகின்றது. அது பழக்கத்துக்கு வந்துவிடும். எனக்கு வேண்டாம்" எனத் தெரிவித்தேன்.

இப்படி வளர்ந்த நான் சிகரெற் புகைக்கப் பழகிக்கொண்டுவிட்டேன். சந்தர்ப்பம் சூழ்நிலை ஒரு மனிதனை எவ்வாறு மாற்றி அமைக்கும் என்பது நான் சிகரெற்றுக்கு அடிமையானது நல்ல உதாரணம். மலையக வாழ்க்கை எனக்கு நல்ல வாய்ப்பாக இருந்தது. எழுத்துப் பணியில் ஈடுபடும் சமயங்களில் எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து சிகரெற் புகைத்துக் கொண்டே இருப்பேன்.

அந்த அறிவோர் கூடல் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை (23.02.1992) எனக்கு நெஞ்சில் இலேசாக வலிப்பது போலத் தோன்றியது. டொக்ரர் முருகானந்தன் எனக்கருகில் அமர்ந்திருந்தார். அவருக்கு மெல்லச் சொன்னேன். அவர் நோயாளரைப் பார்வையிடும் அறைக்கு என்னை அழைத்துச் சென்று பார்வையிட்டார். பின்னர் ஒரு டொக்ரர் என்ற நிலையில் மாத்திரம் இருந்து சொல்லாமல், ஒரு நண்பர்

என்ற உரிமையுடன், "இப்போ பயப்படும்படியாக ஒன்றுமில்லை. ஆனால் சிகரெற் புகைப்பது நல்லதல்ல. அதை விடுங்கோ!" என மெல்லக் கூறினார்.

நான் சிலகணம் மௌனமாக இருந்தேன். அது சிந்திப்பதற்கு எடுத்துக் கொண்ட நேரம். பின்னர் அவரைப் பார்த்து, "சரி, இனி நான் சிகரெற்றைத் தொடமாட்டேன், டொக்ரர்" என உறுதியுடன் கூறினேன். இதனைச் சொல்லும்போது எனது சேட் பையில் மூன்று சிகரெற்றுக்கள் இருந்து கொண்டிருந்தன. இரவு எட்டு மணிசுமாருக்கு வீடு வந்து சேர்ந்தேன். எனது சின்னமகள் ஜானகியை அழைத்து, அந்தச் சிகரெற்றுக்களை அவள் கையில் கொடுத்து, "இனி நான் சிகரெற் புகைக்க மாட்டேன்" என வீட்டில் எல்லோருக்கும் பிரகடனப்படுத்திக் கொண்டேன். முப்பதாண்டு காலப் பழக்கத்துக்கு அன்றே முற்றுப் புள்ளி வைத்துக் கொண்டேன்.

அறிவோர்க் கூடலில் 12.07.1992 டானியலின் "காணல்" நாவல் பற்றி நான் உரையாற்றினேன். எனது உரையின் பின்னர் வழக்கம் போல் நன்றியுரை ஆற்றுவதற்கு யாருமே முன்வரவில்லை. இறுதியில் நண்பர் து. குலசிங்கம் அந்தப் பணியைச் செய்து முடித்தார்.

அன்று நன்றியுரை ஆற்றுவதற்கு ஒருவரும் முன்வராததற்கு ஒரு காரணம் இருந்தது. அந்தக் காரணந்தான் என்ன?

இதற்கு முன் நான் பேசிய கூட்டத்தின் இறுதியில் நன்றியுரை கூறிய நெல்லை பேரன் அன்றிரவு ஷெல் விழுந்து குடும்பத்துடன் இறந்து போனாரல்லவா? தங்களுக்கும் அப்படி நடந்து விடுமோ என்னும் மூடத்தனமான மரணபயம் காரணமாகவே யாரும் நன்றியுரை ஆற்ற முன்வரவில்லை என்பதனைப் பின்னர் நான் அறிந்து கொண்டேன்.

அறிவோர் கூடல் என்றால் அறிவுள்ளவர்கள் கூட்டம் என வெளியில் சிலர் கருதினார்கள் என்பதனை நான் அறிவேன்.

அந்தச் சம்பவத்தின் பின்னர் அந்தக் கருத்தினை நான் சந்தேகிக்காமல் இருக்க முடியவில்லை.



இளம் வயதில் பாடசாலை ஆசிரியராகி நீண்டகாலம் மாணவர்களுக்குக் கல்வி கற்பித்து வந்த எனது ஆசிரியப் பணியுடன், மேலும் இன்னொரு கடமையினை ஏற்றுச் செயற்படும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. தொலைக்கல்வி மூலம் ஆசிரியர்களாகப் பயிற்சி பெறும் பாடசாலை ஆசிரியர்களுக்குப் போதனாவாசிரியராக 25.07.1993-ல் நியமனம் பெற்றேன். கரவெட்டி, விக்னேஸ்வராக் கல்லூரியில் இயங்கி வந்த தொலைக்கல்விப் பயிற்சி நிலையத்தில் சனி, ஞாயிறுகளிலும், விடுமுறை நாட்களிலும் வகுப்புக்கள் நடைபெற்றன. அந்த நாட்களில் ஓய்வென்பது எனக்கு இல்லாமற் போயிற்று. எதிர்காலத்தில் மாணவ சமுதாயத்தினைக் கட்டி எழுப்பி வளர்த்தெடுக்கப் போகும் இளம் ஆசிரியர்களுக்குக் கற்பிப்பதும், வழிகாட்டுவதும் எனக்கு மிகுந்த மனமகிழ்ச்சியைக் கொடுத்தது.

மாணவர்கள் ஆரம்ப வகுப்புக்களிலேயே செம்மையான மொழி அறிவினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனும் மனக் கருத்து எப்பொழுதும் எனக்குண்டு. அந்த மாணவர்களுக்குக் கற்பிக்கப் போகும் ஆசிரியர்கள், அதற்குத் தகுந்த தகுதியுடையவர்களாக இருக்க வேண்டும் என்னும் எண்ணத்தினை மன அந்தரங்கத்தில் கொண்டு நான் செயற்பட்டு வந்தேன். அந்த எண்ணம் எனது உள்ளத்தில் உருவாவதற்கு, நீண்டகாலம் பாடசாலை ஆசிரியர்களுடன் நான் ஊடாடி வந்ததே காரணமாக அமைந்தது!

இந்தக் காலகட்டத்தில் "இன்னுமா....?" என்னும் எனது சிறுகதையினைப் பிரசுரிக்காது 'மல்லிகை' நிராகரித்தது. பின்னர்

அந்தச் சிறுகதையினைக் கனடாவில் இருந்து வெளிவந்த "நான்காவது பரிமாணம்" சஞ்சிகை 1993ஜூலை இதழில் வெளியிட்டு வைத்தது. "இன்னுமா...?" என்னும் அந்தச் சிறுகதை பற்றி "ஈழத்துச் சிறுகதை வரலாறு" என்ற நூலில் கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்) பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "நீங்கள் கவலைப் படாதையுங்கோ, அண்ணே. எங்கடை ஆக்கள் ஒருத்தமில்லை. அது.... எல்லாம் சமரவாகுப் பள்ளரும் இலந்தைக் காட்டு நளவரும்தானாம்' என்று தெணியானின் 'இன்னுமா....?' சிறுகதை முடிகின்றது. மானிட நேயத்தைச் சந்தேகிக்கின்ற சிறுகதையாக எனக்குப் படுகின்றது. மானிடநேயத்தைச் சந்தேகிக்கின்ற சிறுகதையாகச் செங்கை ஆழியான் நோக்குவதில் தவறில்லை. அவர் தனது நிலை நின்று பார்க்கின்றார். ஆனால் அவ்வாறு கூறப்பட்டதை நான் எனது செவியினாலேயே கேட்டிருக்கின்றேன். அவ்வாறு கூறியவன் சாதிகளின் பெயரைக் குறிப்பிடாமலே சொல்லிப் போனான். வாசகர்களின் தெளிவுக்காக, கிராமங்களின் பெயரால் அவன் மறைத்துக் கூறியதனைச் சாதிப் பெயர் களைச் சொல்லி விளங்க வைத்துள்ளேன். அவ்வளவுதான். சாதியத்தில் உறைந்து போனவர்களிடத்தில் மனித நேயத்தை எதிர்பார்ப்பது, எவ்வளவு அபத்தம்? எனது சிறுகதையைச் செங்கை ஆழியான் நோக்கியது போல, எனது படைப்புகளை நோக்குகின்றவர்கள். அவர்கள் சாதீயச் சமூகம் பற்றித் துல்லியமாக அறிந்துகொள்ள வேண்டியவை பல இருக்கின்றன.

"இன்னுமா....?" சிறுகதையைப் பிரசுரித்த "நான்காவது பரிணாமம்" சஞ்சிகையைக் கனடாவில் இருந்து எனது தம்பி நவம் வெளியிட்டு வந்தான். பிரான்ஸில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த "உயிர் நிழல்" என்னும் சஞ்சிகை, வடஅல்வை க. முருகேசு ஆசிரியர் அவர்களின் பவள விழா மலரில் சாதீயம் பற்றி நான் எழுதி இருக்கும் விரிவான கட்டுரையை 2001 மே - ஆகஸ்ட் இதழில் மறுபிரசுரம் செய்தது.

எனது அன்புக்கும் நட்புக்கும் உரியவர் டொக்ரர் எம். கே. முருகானந்தன். இலக்கியந்தான் எங்களைப் பிணைத்தது. அறிவோர் கூடல் அந்தப் பிணைப்பினை மேலும் இறுக்கியது. அவர் பல நூல்களை வெளியீடு செய்திருக்கின்றார். வடமராட்சியில் நடைபெற்ற அவரது நூல் வெளியீட்டு விழாக்களில் வரவேற்புரை, அறிமுகவுரை, மதிப்பீட்டுரை என எதனையாவது ஒன்றினைச் செய்யும் சந்தர்ப்பத்தினை எனக்கு வழங்கி வந்திருக்கிறார். அன்னாரின் "வைத்திய கலசம்" நூல் வெளியீடு 25.04.1994 -ல் பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியில் இடம் பெற்ற சமயம், அந்த விழாவுக்கு என்னைத் தலைமை தாங்கச் செய்தார். அந்த வெளியீட்டு விழாவினைச் சிறப்பாக நான் நடத்தி வைத்ததாகப் பல நண்பர்கள் நேரில் என்னைப் பாராட்டினார்கள்.

ஆனால், அந்த விழாவை நடத்துவதில் மாபெரும் தவறு ஒன்றினை டொக்ரர் செய்துவிட்டார். யாழ்ப்பாணத்துச் சாதீய சமூகத்தை முற்றாக விளங்கிக் கொண்டிருந்தால் தனது நூல் வெளியீட்டு விழாவுக்கு என்னைத் தலைமை தாங்கும்படி செய்திருக்கமாட்டாரல்லவா? தலைமைப் பொறுப்பினை என்னிடத்தில் விட்டது மாத்திரமன்றி, ஆங்கில இலக்கியங்களில் ஆழ்ந்த புலமையுள்ள ஆ. கந்தையா ஆசிரியரையுமல்லவா, அந்த விழாவில் பேச வைத்துவிட்டார்? '**நீறுபூத்த சாதீய**' மனங்களினால் இந்தக் கொடுமைகளைச் சகித்துக்கொள்ளத்தான் முடியுமோ? அப்பகுதியிலுள்ள பிரபல கல்லூரி ஒன்றின் அதிபர், "தலைமை தாங்க உங்களுக்கு வேறு ஆள் கிடைக்க வில்லையா?" என டொக்டரிடம் நேரில் கேட்டு, குறைபட்டுக் கொண்டார் என்பதனை பின்னர் நான் அறிந்து கொண்டேன். அதன் தாக்க வெளிப்பாடு வேறொரு நூல் வெளியீட்டு விழாவில் வெளிப்பட்டதனைப் பின்னர் பார்க்கலாம்.

பருத்தித்துறையில் இயங்கி வந்த அறிவோர் கூடலில் நிகழ்ந்த இன்னொரு சம்பவம்பற்றி இங்கு சொல்லியாக வேண்டும். அறிவோர் கூடல்களில் உரைஞரின் பேச்சினைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறுவது வழக்கம். ஒருதினம் நடைபெற்ற அந்தக் கலந்துரையாடலின் போது சாதீயம் பற்றிய பேச்சு மெல்ல மேலெழுந்தது. அப்பொழுது தான் சாதி வேறுபாடு பார்த்து நடப்பதில்லை என்பதனை நிரூபிக்கும் நோக்கத்துடன் ஒருவர் என்ன சொன்னார் தெரியுமா? "தெணியானுக்கு எங்கள் வீட்டில் நான் தேநீர் கொடுத்தேன்" என்றார் அந்தப் பிராமணர். அவர் சொற்கேட்டு அந்தச் சபை ஒருகணம் மௌனித்து ஸ்தம்பித்தது. அந்த மௌனம் அவருடைய அப்பாவித்தனத்தை உணர்த்துவது போல, அங்கு உறைந்து கிடந்தது.

நான் அமைதியாகச் சிரித்துக் கொண்டேன். என்னோடு பழகிய, நெருக்கமான பிராமண நண்பர்கள் பலரை ஒருதடவை நினைத்துக் கொண்டேன்.

தனது வீடுதேடி வரும் ஒருவரை, வரவேற்று உபசரிக்க வேண்டியது நாகரிகம் அடைந்த ஒவ்வொரு மனிதனும் செய்ய வேண்டிய ஒரு காரியம் முன்னொரு காலத்தில் வீடுகளுக்கு வருகின்றவர்களை வெற்றிலை, பாக்கு முதலியன வழங்கி உபசரிக்கும் ஒரு வழக்கம் இருந்து வந்தது. இன்று அந்த வழக்கம் முற்றாக மாற்றமுற்று, குறைந்தது ஒரு தேநீர் வழங்கி உபசரிக்கும் நடைமுறை பின்பற்றப்பட்டு வருகின்றது.

அந்தப் பிரமாணரின் பாசி படிந்த இல்லத்தில் அவர் மனைவி தந்த தேநீரைப் பருகாது வேண்டாமென நான் நிராகரித்திருக்கலாம்.

அப்படிச் செய்வது அவரை நான் அவமதித்ததாக இருக்கும். அத்தகைய அநாகரிகமான பண்பாடு என்னிடத்தில் இல்லை என்பதனை, சாதியினால் தான் பெரியவனாகிவிட்டதாக எண்ணிக் கொண்டிருக்கும் அவருக்கு விளங்கவா போகின்றது?

திகில் நிறைந்த கிளாலிப் பாதை ஊடாக நான் கொழும்பு சென்றேன். எனது தம்பி கனடாவில் இருந்து மனைவி, மகனுடன் கொழும்பு வந்திருந்தான். எனது **"மரக்கொக்கு"** நாவலைக் கணினிகளில் பதிவுசெய்து கையோடு கொண்டு வந்திருந்தான். அந்த நாவல் தமிழ்நாட்டு நூல் வெளியீட்டாளர் ஒருவரிடம் நீண்டகாலம் உறங்கிக் கிடந்தது. தமிழ்நாட்டில், ஆடிக் கலவரத்தின் பின்னர் சிலகாலம் தங்கி இருக்க நேர்ந்தவேளை எனது தம்பியின் மனைவி ஷியாமளா அதனை மீட்டெடுத்து எனக்கு அனுப்பி வைத்தார். நான் அதனைத் திரும்பவும் எழுதி, பின் கனடாவுக்கு அனுப்பி வைத்தேன். கணினியில் பதிவு செய்யப் பெற்றிருந்த அந்தப் பிரதியை எனது அன்புக்குரிய பூபாலசிங்கம் ஸ்ரீதரசிங்கிடம் கொடுத்து (01.12.1994) நூலாக்குவதற்கான ஏற்பாட்டினைத் தம்பி செய்தான். ஒருவார காலத்தில் நான்காவது பரிணாமம் வெளியீடாக **'மரக்கொக்கு'** நூருருப் பெற்றது. அதன் அட்டைப் படத்தினைத் தம்பியின் மகன் பன்னிரண்டு வயதுச் சிறுவன் நரேன் வரைந்திருந்தான்.

நூல் வெளிவந்த சமயம் நான் கொழும்பில் இல்லாதபோதும், அதன் வெளியீட்டு விழாவை (13.01.1995) டொமினிக் ஜீவா, ஸ்ரீதரசிங், ராஜஸ்ரீகாந்தன் ஆகியோர் முன்னின்று கொழும்பு விவேகானாந்தா சபை உள்மண்டபத்தில் நடத்திவைத்தனர். பின்னர் யாழ்ப்பாணம் வடமராட்சியில் தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் (14.02.1995) பேராசிரியர் நா.ஞானகுமாரன் தலைமையில் ஓர் அறிமுக விழா நடைபெற்றது. கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா, பேராசிரியர் சோ.கிருஷ்ணராசா, பேராசிரியர் சபா- ஜெயராசா ஆகியோர் அந்த விழாவில் கலந்து கொண்டார்கள்.

"மரக் கொக்கு" நாவல் அந்த ஆண்டுக்குரிய (1995) ஸ்ரீலங்கா சாஹித்திய மண்டலப் பரிசு, வடக்கு/ கிழக்கு மாகாண அமைச்சின் பரிசு, இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசு என்பவற்றைப் பெற்றுக் கொண்டது. பூபாலசிங்கம் புத்தக வெளியீடாக எனது **"காத்திருப்பு"** நாவல் (1999) வெளிவந்தது. அந்த ஆண்டுக்குரிய, வடக்கு/கிழக்கு மாகாண அமைச்சின் பரிசினை அந்த நாவல் பெற்றுக்கொண்டது. எனது மணிவிழா நினைவாகப் பூபாலசிங்கம் ஸ்ரீதரசிங் எனது **"கானலில் மான்"** நாவலை 2002-ல் வெளியிட்டு வைத்தார். அந்த நாவல் இலங்கை அரசின் சாஹித்திய மண்டலப் பரிசு, இலங்கை இலக்கியப் பேரவைப் பரிசு என்பவற்றைப் பெற்றுக் கொண்டது.

நான் எழுதுவதற்கு ஆரம்பித்து சில ஆண்டுகளின் பின்னர் போட்டிகளுக்குக் கதை எழுதுவதை முற்றாகக் கைவிட்டேன். 'சுபமங்களா' வில் அறிவிக்கப்பட்டிருந்த குறுநாவல் போட்டி பற்றிய விவரங்களை எனது சின்ன மகள் ஜானகி படித்துவிட்டு, அந்தப் போட்டிக்கு எழுதுமாறு கேட்டுக் கொண்டாள். ஒரு போட்டியில் பங்கு கொள்வது எனக்கு முக்கியமல்ல, ஆனால் ஒரு குறுநாவல் எழுதி முடித்ததாக இருக்குமென அப்பொழுது நான் எண்ணினேன். நான் எடுத்திருந்த தீர்மானத்தைத் தளர்த்திவிட்டு, குறுநாவலை அத்தியாயம், அத்தியாயமாக நான் எழுதிக் கொடுத்துக் கொண்டிருக்க, சின்ன மகள் அதனைப் பிரதி பண்ணி முடித்தாள். அந்தக் குறுநாவல் 'சுபமங்களா' தேசிய கலை இலக்கியப் பேரவை இணைந்து நடத்திய அந்தப் போட்டியில் (1995) பாராட்டு பெற்ற படைப்புகளில் ஒன்றாகத் தெரிவு செய்யப்பெற்றது. 'தினகரன்' ஆசிரியராக ராஜ ஸ்ரீகாந்தன் பொறுப்பேற்ற பிறகு, ஞாயிறு தினகரனில் அந்தக் குறுநாவல் 26.04.1998 முதல் ஒவ்வொரு வாரமும் தொடர்ந்து வெளிவந்தது. பின்னர் அந்தக் குறுநாவலுடன் **"பரம்பரை அகதிகள்"** என்னும் குறுநாவலையும் சேர்த்து ஓவியர் ரமணியின் சிறப்பான அட்டைப்படத்துடன் மீரா வெளியீடு ஆ. இரத்தின வேலோன் ஒரு நூலாக 2003-ல் வெளியிட்டு வைத்தார்.

வலிகாமம் இடப் பெயர்வு இடம் பெற்றபோது யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் இயங்கி வந்த முதியோர் இல்லம், எங்கள் கல்லூரி (தேவரையாளி இந்துக் கல்லூரி) தொழில்நுட்பப் பிரிவு கட்டடத்துக்கு இடம்மாற்றப் பெற்றது. அந்த இல்லத்தில் அ. செ. முருகானந்தம் தங்கி இருப்பதாக ஒரு தகவல் எனக்குக் கிடைத்தது. உடனடியாக அவரைத் தேடிக் கொண்டு நான் அங்கு சென்றேன். அந்த முதியோர் இல்லத்துக்குப் பொறுப்பாக இருந்த ஒருவரிடம் அ. செ. மு. பற்றி விசாரித்தேன். அவர் என்னை அழைத்துச் சென்று (15.11.1995) "ஐயா, உங்களைப் பார்க்க ஒருவர் வந்திருக்கிறார்." என அ.செ.மு.விடம் சிரித்துக் கொண்டே கூறினார். அந்தச் சிரிப்பு என் மனதுக்கு திருப்தியாகத் தோன்றவில்லை. 'உங்களைப் பார்க்கவும் இன்றொருவர் வந்திருக்கின்றாரே!' என இளக்காரமாக எண்ணுவதன் வெளிப்பாடாகவே அந்தச் சிரிப்பை நான் உணர்ந்தேன்.

அ.செ.மு. ஆஸ்துமா நோயினால் மிக இளைத்துப் போய் இருந்தார். அந்த நோய் அவரைப் பெரிதும் வருத்திக் கொண்டிருந்தது. ஓர் எழுத்தாளனை இந்த நிலையில் நான் சந்திக்காமல் இருந்திருக்கலாம் என ஒருகணம் நினைத்துக் கொண்டேன். நான் அவருக்கு என்னை அறிமுகப்படுத்திக் கொண்ட பின்னர்தான் அவர் இனங்கண்டு கொண்டார். எதிர்பாராமல் உறவினர் ஒருவரைச் சந்தித்தது போன்ற மகிழ்ச்சியுடன் முகம் மலர்ந்து உரையாடினார். தொடர்ந்து பேசுவதற்கு

நோய் அவரை விட்டு வைக்கவில்லை. பேசுவதற்கு இயலாது மூச்சுத் திணறிக் கொண்டிருந்தார். அவர் துன்பப்படுவது கண்டு எனக்கு மனம் சகிக்கவில்லை. அவரிடம் இருந்து விரைவில் விடைபெற்றுச் செல்ல விரும்பினேன். "நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?" எனப் புறப்படும்போது கேட்டேன். "வேறு ஒன்றும் வேண்டாம். ஆஸ்துமாவுக்குரிய மருந்துகளை வாங்கித் தாருங்கோ." என்றார்.

அன்றே அவருக்குத் தேவையான மருந்துகளை வாங்கி வந்து கொடுத்தேன். அவர் தங்கி இருந்த முதியோர் இல்லம், எங்கள் கல்லூரியில் இருந்து பின்னர் திருகோணமலைக்கு இடம்மாறிச் செல்லும் வரை தொடர்ந்து நான் அதனைச் செய்து வந்தேன். அந்தச் சிறிய உதவியையாவது செய்யமுடிந்தது என்பதுதான் எனக்கு மனதில் இருக்கும் ஒரு திருப்தி. அதற்குமேல் என்னால் என்னதான் செய்ய முடியும்?

தன்னலம் கருதாத எனது இலக்கிய உறவு ஒன்றினை இங்கு குறிப்பிடுவது அவசியமெனக் கருதுகின்றேன். **"கடலில் கலந்த கண்ணீர்"** சிறுகதைத் தொகுதிக்கு அணிந்துரை ஒன்றினை நான் எழுதினேன். அந்தக் காலம் முதல் அந்த நூலின் ஆசிரியர் எஸ். வீ. தம்பையாவுடன் நெருக்கமான ஓர் உறவு இருந்து வந்தது. ஆனால் அடிக்கடி நேரில் சந்தித்துப் பேசிக்கொள்ளும் சந்தர்ப்பம் இருவருக்கும் இல்லாத போதும் நெஞ்சத்தால் நெருங்கி இருந்தோம். 1984-ல் வெளிவந்த 'சொத்து' சிறுகதையின் பின்னர், எனது இன்னொரு சிறுகதைத் தொகுதி வெளிவர வேண்டுமென அவர் விரும்பினார். அவர் தனது விருப்பத்தினை ஜீவாவிடம் தெரிவித்து, ரூபா ஐயாயிரத்தினைக் கொடுத்து **"மாத்து வேட்டி"** (1996) சிறுகதைத் தொகுதி 'மல்லிகைப் பந்தல்' வெளியீடாக வெளிவரச் செய்தார் என்பது நினைவுகூரப் படவேண்டிய ஒன்று.

சமூக விவகாரம் ஒன்றினை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்தில் அதிகரித்த பிற்பாடு, ஒடுக்கப்பட்ட சமூக விவகாரங்களில் ஈடுபடும் சூழ்நிலை இல்லாது போயிற்று. ஆயினும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சாதி காரணமாக இழைக்கப்படும் கொடுமைகளைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியவில்லை.

ஒடுக்கப்பட்ட சமூகத்து ஏழைப்பெண் ஒருத்தியை உயர்ந்த சாதி வாலிபன் ஒருவன் காதலித்தான். அவளைத் தன்னோடு அழைத்துச் சென்று ஒருவார காலம் சேர்ந்து வாழ்ந்தான். பின்னர் அவளைக் கைவிட்டு விட்டான். இந்தச் செய்தியைச் சமூகக் காரியங்களில் முனைப்புடன் செயற்படும் ஒருவர் வந்து என்னிடம் தெரிவித்தார். மறுநாள் சமூக அக்கறையுள்ளவர்களெனக் காட்டிக்கொள்ளும்

ஒடுக்கப்பட்ட சமூகத்துச் சிலரை ஒன்றுகூட்டி அதுபற்றி ஆலோசித்தோம். அப்பொழுது அதிகாரத்தில் இருந்தவர்களிடம் அடுத்தநாள் காலையில் எல்லோருமாகச் சென்று அவர்கள் கவனத்துக்குக் கொண்டு வந்து இழைக்கப்பெற்ற கொடுமைக்குத் தீர்வு காண்போமென ஏக மனதாகத் தீர்மானித்துக் கொண்டோம்.

மறுதினம் காலை முதல் நீண்ட நேரமாக நானும் எனது கவனத்துக்குக் கொண்டு வந்தவரும் குறித்த சனசமூக நிலையத்தில் காத்திருந்தோம். முதல் நாள் தீர்மானம் எடுத்துக் கொண்டு போனவர்களுள் ஒருவர் தானும் அங்கு வந்து சேரவில்லை. அவர்கள் அவ்வளவுதான் என்பதனை விளங்கிக்கொண்டு உடன் நின்றவரை அழைத்துக் கொண்டு சென்று விவகாரத்தை எடுத்துச் சொல்லி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டேன். எனது கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்தவர்கள், மறுநாளே அந்த வாலிபனைத் தேடிப்பிடித்து வந்து, அந்தப் பெண்ணுக்குத் திருமணஞ் செய்து வைத்தார்கள்.

நான் இறந்து போன கதையை இங்கு தவறாமல் சொல்லியாக வேண்டும். இரத்த அழுத்தம் காரணமாக மூக்கில் இருந்து இரத்தம் வடிய ஆரம்பித்ததும் 06.08.1996 அன்று பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டேன். அன்று இரவு பெரும் சிரமத்துடன் பல இராணுவ முகாம்களைத் தாண்டி யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டேன். ஒருதினம் கழித்து பருத்தித்துறை வைத்தியசாலையில் நான் அனுமதிக்கப்பட்டிருந்த சமயம், அங்கு நோயாளியாகத் தங்கியிருந்த ஓர் ஆசிரியர் (08.08.1996) காலமானார். ஆள்மாறாட்டம் காரணமாக நான் இறந்து போய்விட்டதான தகவல் எங்கும் பரவியது. எனது கல்லூரியில் அஞ்சலி செலுத்துவதற்கான மலர்வளையங்களை மாணவர்கள் கட்டினார்கள். அஞ்சலிப் பிரசுரங்களை எழுதத் தொடங்கினார்கள். பத்திரிகை நிருபர்களுக்குச் செய்தி கொடுத்தார்கள். எனது வீடு தேடிப் பலர் சென்றார்கள். நடுப்பகலின் பின்னர்தான் உண்மை நிலை எல்லோருக்கும் தெரியவந்தது. இரண்டு வார காலத்துக்கு மேல் வைத்தியசாலையில் தங்கியிருந்து, பின்னர் வீடு வந்து சேர்ந்தேன். இரத்த அழுத்தத்துக்குத் தினமும் மருந்துண்ணும் நிலைக்கு ஆளானேன்.

. இந்தச் சமயம் எனது **'மரக் கொக்கு'** நாவல் சாஹித்திய பரிசினைப் பெற்றுக் கொண்டது. அந்தப் பரிசினைக் காரணமாகச் சொல்லி, நோயினால் கடுமையாய்ப் பாதிக்கப்பெற்ற என்னை உற்சாகப்படுத்தும் நோக்கத்துடன் எனது நண்பர்கள் பல பாராட்டு விழாக்களை நடத்தினார்கள். டொக்ரர் முருகானந்தன் இல்லத்தில்

அறிவோர் கூடல் சார்பில் (15.09.1996) பாராட்டு விழாவொன்று நடைபெற்றது. எனது நண்பர்கள் பலர் சேர்ந்து எனது கல்லூரி மண்டபத்தில் (01.12.1996) ஒரு விருந்தினைத் தந்து கௌரவித்தனர். பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வராசா சமூகந் தந்து நண்பர்கள் சார்பில் பரிசிலை வழங்கினார். தொலைக்கல்வி நிலையத்தில் அதன் தலைவராக இருந்த கே. தர்மசிறிராசா தலைமையில் 11.01.1997-ல் ஒரு பாராட்டு விழா இடம் பெற்றது. அல்வாய் வடக்கு மக்கள் 02.02.1997-ல் ஸ்ரீலங்கா வித்தியாலயத்தில் பாராட்டு விழா ஒன்றினைச் சிறப்பாக நடத்திவைத்தார்கள். எங்கள் கல்லூரிப் பரிசளிப்பு விழா 14.07.1997 நடைபெற்ற சமயம் அதிபர் ம. குட்டித்தம்பி, பிரதம விருந்தினர் பேராசிரியர் ஆறுமுகம் அவர்களைக் கொண்டு பொன்னாடை போர்த்தி பரிசில் வழங்கிக் கௌரவித்தார்.

இந்த விழாக்கள், விருந்துகள், பாராட்டுகள், கௌரவிப்புகள் நடத்திய நண்பர்கள் பழைய நிலைக்கு மீண்டும் என்னைக் கொண்டுவர வேண்டுமென்னும் ஆதங்கத்துடன் இருந்ததை நான் அறிவேன். நான் இறந்து போனதான செய்தி பரவியது முதல், அதன் பின்னர் நடந்தவை யாவற்றையும் இன்று நான் எண்ணிப் பார்க்கின்ற போது, இந்தச் சமூகத்தின் மீது மேலும் அதீத அக்கறையும் நன்றியும் பொறுப்பும் உள்ளவனாகின்றேன்.

பாரதிநேசன் (வீ. சின்னத்தம்பி) என்னிடத்தில் ஒரு செவ்வியை எடுத்து '**தினக்குரல்**' பத்திரிகைக்குக் கொடுத்திருந்தார். அந்தச் செவ்வி 11.01.1998 வாரப்பதிப்பில் வெளிவந்தது. அந்தச் செவ்வியின் இறுதியில் டானியல் பற்றி ஒரு நூல் எழுதும் எண்ணம் எனக்கு மனதில் உண்டென்பதனைத் தெரிவித்தேன்.

அடுத்த வாரம் பலபக்கங்கள் கொண்ட ஒரு நீண்ட கடிதம் பதிவுத் தபாலில் கொழும்பில் இருந்து எனக்கு வந்து சேர்ந்தது. அதனை அனுப்பி வைத்தவர் கடிதத்தின் மூலப் பிரதியைத் தன்வசம் வைத்துக் கொண்டு, போட்டோ பிரதியை எனக்கு அனுப்பி வைத்திருந்தார். அந்தக் கடிதம் டானியலின் மனைவி ஒருவரைத் தவிர டானியலின் குடும்பத்திலுள்ள அத்தனை பேரையும் பற்றித் தூஷித்து, கேவலப்படுத்தி எழுதப் பெற்ற ஒரு வசைப் பட்டயம். நான் ஒரு தடவை மாத்திரம் அந்தக் கடிதத்தைப் படித்தேன். திரும்பப் படிப்பதற்குக் கூச்சமாக இருந்தது. நான் இவ்வாறான ஒரு கடிதத்தை முன்னர் ஒருபோதும் படித்ததில்லை. அல்லது வாயினால் யாராவது இப்படிச் சொல்லக் கேட்டதில்லை. இத்தனைக்கும் அதனை எழுதியனுப்பியவர் ஓர் ஆசிரியர்! தான் மாத்திரம் வெகு பரிசுத்தமான சத்தியவான் என்று பீத்திக் கொள்ளுகின்ற ஒருவர். அழுக்காறு பிடித்த படுநஞ்சன் அவர் என்பது எல்லோருக்கும் நன்கு தெரியும்.

அவர் இப்படி ஒரு வசைக் கடிதம் எழுதி எனக்கு அனுப்பி வைத்ததன் நோக்கம் என்ன தெரியுமா? டானியல் பற்றி நான் ஒரு நூல் எழுதுவதைத் தடுப்பதுதான்! அவர் எனது பதிலை எதிர்பார்க்கின்றார் என்பதனை அவர் எழுதிய கடிதத்தின் மூலம் நான் உணர்ந்து கொண்டேன். அவருக்குப் பதில் ஒன்று எழுதுவது பற்றிச் சில தினங்கள் நான் சிந்தித்தேன். இறுதியில் அவரைப் போன்றவர்களை அலட்சியம் பண்ணுவது தவிர, அவருக்கு நான் கொடுக்கத் தகுந்த முறையான பதில் வேறொன்று இருக்க முடியாதென அமைதியாக இருந்து விட்டேன்.

நான் டானியல் பற்றி இதுவரை ஒருநூல் எழுதவில்லை. எழுதாதற்கு வேறு சில காரணங்கள் உண்டு. அவர் விரும்பியது போல எழுதாமலே இருந்து விடுவேன் என்று சொல்வதற்கில்லை. டானியலைத் தூற்றுவதையே தான் எடுத்த புதுப்பிறவியின் நோக்கமாகக் கொண்ட அவர், டானியலின் நண்பர்களுக்கும் சேறடிக்கத் தவறவில்லை. டானியல் தனது நண்பர்களுக்குப் பணம் கொடுத்துத்தான் நெருக்கமான நட்புறவைத் தக்க வைத்துக் கொண்டாரென வாய் கூசாமல் பிரசாரம் செய்யும் பிரகிருதி அவர். டானியலிடம் அவர் எதிர்பார்த்த பணம் அவருக்குக் கிடைக்காமல் போன ஏமாற்றத்தின் வெளிப்பாடுதான் இது என்பது எல்லோரும் நன்கு அறிந்த ஒன்றுதான்.

இன்னொரு கல்விமான் பற்றி இங்கு குறிப்பிட்டாக வேண்டும். படைப்பாளி ஒருவர் தனது நூல் வெளியீட்டு விழாவில் நான் கலந்து கொண்டு அந்த நூல் பற்றிய மதிப்பீட்டுரை ஒன்றினை ஆற்ற வேண்டுமென என்னிடம் கேட்டுக் கொண்டார். அவர் எனது விழாக்களில் தவறாமல் கலந்துகொள்ளும் நண்பர். அதனால் அவரது வெளியீட்டு விழாவில் பங்கு பற்றுவதற்கு மகிழ்ச்சியுடன் உடன் பட்டேன். ஆனால் விழாவுக்கு முதல் நாள்வரை மதிப்பீடு செய்வற்குரிய நூலின் பிரதி ஒன்றினை அவர் எனக்கு அனுப்பி வைக்கவில்லை; என்னைச் சந்திக்கவுமில்லை. விழாவுக்கு முதல் நாள் அழைப்பிதழ் ஒன்று எனது கைக்கு வந்து சேர்ந்தது.

அந்த அழைப்பிதழில் எனது பெயர் இடம் பெற்றிருக்கவில்லை. அப்பொழுதுதான் என்ன நடந்தது? என்பதனை ஆராய நான் முற்பட்டபோது, திடுக்கிட வைக்கும் தகவல் ஒன்று எனக்குக் கிடைத்தது. அந்த விழாவுக்குத் தலைமைதாங்கிய கல்விமான் நூலாசிரியருக்கு ஒரு நிபந்தனை விதித்திருந்தார். அந்த விழாவில் நான் பேசுவதாக இருந்தால், மேடையில் வந்து தங்களுடன் சமனாக அமர்ந்திருக்கக் கூடாது. சபையில் உட்கார்ந்திருக்க வேண்டும். பேசுவதற்கு அழைக்கப்படும்போது மேடைக்கு வந்து பேசி

முடித்துவிட்டு, கீழே இறங்கிப் போய்விட வேண்டும். நூலாசிரியரினால் இந்த நிபந்தனைகளை எனக்கெடுத்துச் சொல்ல முடியுமா?

இது நடந்தது ஐம்பது, நூறு வருடங்களுக்கு முன்னரல்ல! ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர்தான். சில ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற நான் முன்பு குறிப்பிட்ட நூல் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை தாங்கியதன் எதிர்வினைதான் இது.

ஒருவருட காலத்தின் பின்னர் அந்தப் பகுதியில் இன்னொரு நூல் வெளியீடு. அந்த நூலின் முதற்பிரதியை இருதடவைகள் படித்துச் செப்பனிட்டுக் கொடுத்தவன் நான். அதனால் நூலாசிரியருக்கு என்னைத் தவிர்த்துவிட இயலாது. வெளியீட்டு விழாவில் உரையாற்றுமாறு கேட்டு என்னிடம் வந்தார். அந்த விழாவுக்கு முன்னர் நான் குறிப்பிட்ட கல்விமான்தான் தலைமை தாங்குவார் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அதனை வெளியில் காட்டிக் கொள்ளாது உடனே சம்மதித்தேன்.

பின்னர் சற்றுநேரம் நூலாசிரியரிடம் பேசிக் கொண்டிருந்து விட்டு, 'வெளியீட்டு விழாவுக்கு யார் தலைவர்?' என்று கேட்டேன். நூலாசிரியர் அந்தக் கல்விமானின் பெயரைச் சொன்னார். அப்பொழுது நான் சிரித்துக் கொண்டு "அப்படி என்றால் பேசமுடியாது" என மறுத்தேன். முன்னர் நடந்த சம்பவத்தை அறிந்திருந்த நூலாசிரியர், அவரிடம் முன்னதாகவே சம்மதத்தைப் பெற்றுக் கொண்டு வந்திருக்கும் தகவலைச் சொன்னார்.

எனக்கு உள்ளூரச் சினம் பொங்கிக் கொண்டு வந்தது. இதனை வெளியில் காட்டிக்கொள்ளாது, "நான் பேசுகின்ற இலக்கியக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கும் தகுதி அவருக்கில்லை. இதைப்போய் அவருக்கு நான் சொன்னதாகப் போய்ச் சொல்லுங்கோ!" என உறுதியாக மறுத்துச் சொல்லி அனுப்பி வைத்தேன். நிச்சயமாக இந்தத் தகவல் அந்தக் கல்விமானுக்குப் போய்ச் சேர்ந்திருக்கும்.

கல்விமான்கள் சிலர் பல்துறை ஆற்றல் உள்ளவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், குறிப்பிட்ட அந்தக் கல்விமான் அத்தகைய ஆற்றலுள்ள ஒருவரல்லர். தமிழ், கலை, இலக்கியங்களுக்கும் தனக்கும் சம்பந்தமே இல்லை என்பதனை அவர் மேடையில் வாயைத் திறந்ததும் சபையோருக்கு உணர்த்திவிடுவார். ஆனால் அந்தப் பகுதியில் நடைபெறும் விழாக்களுக்குத் தலைமைதாங்கும் குத்தகைக்காரனாக அவர் இருந்துவிடுகின்றார்.



பல்கலைக்கழகம் சார்ந்த முக்கியமான காரியமொன்று நான் செய்து முடிக்க வேண்டிய அவசியம் ஒருசமயம் எனக்கு ஏற்பட்டது. எனது தேவைபற்றி பேராசிரியர் கா.சிவத்தம்பிக்குத் தொலைபேசியில் தெரிவித்தேன். அவர் கொழும்பில் செய்ய வேண்டியவற்றை உடனடியாகச் செய்து முடித்துவிட்டு, மிகுந்த காரியங்கள் யாழ். பல்கலைக்கழகத்துக்கு ஊடாகவே செய்தாக வேண்டுமென அறிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் இருக்கும் எனக்கு நெருக்கமான நண்பர்களுள் ஒருவரான பேராசிரியர் நா.ஞானகுமாரனைச் சந்தித்து அவருடன் ஆலோசித்தேன். அவர் பேராசிரியர் அ. சண்முதாஸ் அனுசரணையுடன் துணைவேந்தரைச் சந்திக்குமாறு தெரிவித்தார். நான் பேராசிரியர் சண்முகதாஸைச் சந்தித்து விஷயத்தை எடுத்துச் சொன்னேன். பேராசிரியர் உடனே என்னை அழைத்துக் கொண்டு துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளையிடம்சென்றார். துணைவேந்தர் என்னை அறிந்து வைத்திருந்தார். ஆனால் நெருக்கமான பழக்கம் அவரோடு எனக்கு இருந்து வரவில்லை.

துணைவேந்தர் விவரத்தைக் கேட்டறிந்து கொண்டு, தனது கவனத்தில் கொண்டு, கொழும்புடன் தொடர்பு கொண்டு, நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லி அனுப்பினார்.

அதன்பின்னர் பேராசிரியர் சண்முகதாஸ் அக்கறையுடன் துணைவேந்தருடன் இடையிடையேதொடர்புகொண்டு, அப்பொழுது யாழ். பல்கலைக்கழகத்தில் பௌதீக விஞ்ஞானக் கற்கை நெறியைத்

தொடர்ந்து கொண்டிருந்த எனது மூத்தமகன் ஆதவன் மூலம் எனக்குத் தகவல்களை அறியத்தந்தார்.

நான் எடுத்துக் கொண்ட முயற்சி இரண்டு மூன்று தினங்களுக்குள் நிறைவேற வேண்டிய நெருக்கடியான ஒரு சூழ்நிலை உருவானது. நான் அப்பொழுது யாழ். பல்கலைக்கழகம் சென்று, உயர்பட்டப்படிப்புகள் துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் சண்முகதாஸை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசுவதற்காகப் போனேன். நான் போன சமயம் அவர் அங்கு இல்லை. அடுத்த நடவடிக்கை என்ன? என்பது தெளிவில்லாத நிலையில் சிந்தித்துக் குழம்பிய வண்ணம் வீதியில் இறங்கி பல்கலைக்கழகம் நோக்கி நடந்தேன்.

அந்தச் சமயம் துணைவேந்தரின் உத்தியோகபூர்வமான கார் திடீரென அந்த வீதியில் எனக்கெதிரே வந்து கொண்டிருந்தது. அந்தக் கார் எனக்கருகில் வந்ததும் தரித்து நின்றது. காருக்குள் இருந்த வண்ணம் துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை தன்னருகே வருமாறு என்னை அழைத்தார்.

தான் அவசரமாகப் போய்க் கொண்டிருப்பதனை முதலில் எடுத்துச் சொன்னார். பின்னர் நான் அங்கு சென்றிருப்பதன் நோக்கத்தை விளங்கிக் கொண்டு, எனது காரியங்கள் இரண்டொரு தினங்களில் நிறைவேறும்; யோசிக்க வேண்டாமெனக் கூறிவிட்டு கார்ப் பிரயாணத்தைத் தொடர்ந்தார்.

துணைவேந்தர் தமது உத்தியோக வாகனத்தை வீதியில் நிறுத்தி எனக்குத் தகவல் சொல்லிச் செல்வது கண்டு அன்று நான் பிரமித்துப் போனேன். பாலசுந்தரம்பிள்ளையை மிக உயர்ந்த இடத்தில் எனது உள்ளத்தில் நான் வைத்துக் கொண்டேன்.

எனது நான்கு பிள்ளைகளும் வளர்ந்து தங்களை இன்று நிலைப்படுத்திக் கொண்டுவிட்டார்கள். மூத்தமகள் உமா பயிற்றப் பட்ட ஆசிரியர். ஆங்கில ஆசிரியர் க. ஞானசீலனை 05.02.1999-ல் திருமணஞ் செய்து வைத்தேன். கார்த்திகேயன், ஆரணி, ஆதர்சன் மூன்று பேரக்குழந்தைகள் இருக்கின்றார்கள்.

அல்வாயூர் கவிஞர். மு. செல்லையாவின் கவிதைத் தொகுதி வெளிவந்து ஐம்பது ஆண்டுகள் கடந்து விட்டன. அதன் பின்னர் அவரது ஆக்கங்கள் ஒன்றேனும் நூலாக வெளிவரவில்லை. அந்தக் குறைபாட்டினை மனதில்கொண்டு எனது மாணவன் க.கமலேஸ்வரனின் தந்தையார் காலமான சமயம் தந்தையார் நினைவாக கவிஞர் மு.செ இன் "புதிய வண்டு விடுதூது" கவிதையின் மறு பிரசுரம் செய்யுமாறு ஆலோசனை கூறினேன். அப்பொழுது எனது அணிந்துரையுடன் சிறிய ஒரு நூலாக அது வெளியிடப் பெற்றது. அதனைத் தொடர்ந்து

இன்னும் இருவருக்கும் கவிஞர் மு.செ.இன் பாடல்கள் அடங்கிய சிறிய தொகுதிகள் இரண்டினைத் தொகுத்துக் கொடுத்தேன்.

அந்தத் தொகுதிகளினால் அருட்டுணர்வு பெற்ற ஒருவர் கவிஞர் மு. செ. இன் 'வளர்பிறை' கவிதைத் தொகுதியினை இரண்டாவது பதிப்பாக, தனது குடும்பத்தில் காலமான ஒருவரின் நினைவாக மீள் பிரசுரம் செய்தார். இறந்தவரின் அந்தியேட்டியன்று அது வெளியிடப்பட்டது. வெளியீடு செய்தவர்களின் அழைப்பினை ஏற்று நான் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினேன். ஒரு தொகுதி பற்றிப் பேசும் வாய்ப்பினை மற்றையவர்களிடம் விட்டுவிட்டு, கவிஞரோடு எனக்கிருந்து வந்த உறவு, அதன் வழிவந்த அனுபவங்கள் பற்றிப் பேசினேன். கவிஞர் சொன்னவற்றைக் கேட்டு "என்னைக் கவர்ந்த என் கவிதை" என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்றினை நான் ஆசிரியக் கலாசாலையில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் எழுதிக் கொடுத்தேன் என்னும் தகவலையும் உறவின் நெருக்கம் வெளிப்படும் வண்ணம் எடுத்துச் சொன்னேன்.

அந்த நிகழ்ச்சியை அன்று ஒளிப்பதிவு செய்தார்கள். ஒளிப்பதிவு செய்யப்பெற்ற அந்த நிகழ்ச்சியைப் பின்னர் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. என்ன ஆச்சரியம்! எனது சொற்பொழிவு நிகழ்வு முழுமையாக இடம்பெற்றிருந்த போதும், கவிஞருக்குக் கட்டுரை எழுதிக் கொடுத்தேன் என்ற பகுதி மாத்திரம் நீக்கப்பட்டிருந்தது.

சம்பவம் நடந்து முடிந்து நாற்பது ஆண்டுகள் கழிந்து விட்டன. கவிஞருக்குச் சற்றும் விகற்பமாகத் தோன்றாத அந்தக் காரியம் கவிஞரின் புகழ் நிழலில் பூரிக்கின்றவர்களுக்கு ஆசங்கையாக இருப்பது அதிசயமல்லத்தான்!

எனது மூத்தமகன் ஆதவன் பிரதேச செயலகத்தில் பணிபுரிகின்றான். அவனுக்கும் து. துஷ்யந்திக்கும் 25.03.2000 -ல் திருமணம் நிறைவேறியது. ஆதித்தியா, கம்ஸத்வனி இரு பெண் குழந்தைகள் எனது பேரக் குழந்தைகள்.

முதுபெரும் எழுத்தாளர் கே. கணேஷ் அவர்களுடன் எனக்கு இருந்து வந்த கடிதத் தொடர்பு நாட்டு நிலமை காரணமாக இடையில் தடைப்பட்டுப் போனது. எனது மணிவிழாச் செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்தபோது அவர் அவற்றைப் படித்துவிட்டு ஒரு வாழ்த்துக் கடிதம் 24.09.2002 -ல் எனக்கு அனுப்பிவைத்தார். என்னைப் பாராட்டி, வாழ்த்திய முக்கியமான மூத்த இலக்கியவாதிகளுள் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒருவர் அவர் என்பதனை நான் நன்றியுடன் இன்று நினைவுகூரவேண்டியவனாக இருக்கின்றேன்.

யாழ்ப்பாணத்தில் இன்னொரு கல்விப் பாரம்பரியம் எனக் குறிப்பிட்டுச் சொல்லப்படும் தேவரையாளிக் கல்விப் பாரம்பரியத்தில் வளர்ந்து வந்தவன் நான். சைவப் பெரியார் கா.சூரனின் சமயப் பிரசங்கம் சிறுவயதில் கேட்டு வளர்ந்தவன். ஆனால் அந்தப் பாரம்பரியத்தினால் தோற்றுவிக்கப் பெற்ற "சைவம்" ஆக நான் உருவாகவில்லை. எனது அரசியல், சமூக, இலக்கிய நோக்குகள் அந்தப் பாரம்பரியத்துக்கு உரித்துடையவையாக இருக்கவில்லை.

எனது இலக்கிய அனுபவங்களை இன்று நினைவுகூரும் போது டானியல், ஜீவா, பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோரைக் கடந்தகாலத்தில் வாரந்தோறும் சந்தித்து உரையாடி மகிழ்ந்த இனிய நினைவுகள் நெஞ்சில் பதிந்து கிடக்கின்றன. டானியல் இன்று மறைந்துவிட்டார். ஜீவா, சிவத்தம்பி இருவரும் கொழும்பைத் தமது வாழ்விடமாக்கிக் கொண்டதும் அவர்களை முன்னர் போல் சந்தித்துப் பேசிக் கொள்ளும் வாய்ப்புகள் இல்லாது போயிற்று.

மல்லிகைப் பந்தல் ஆதரவில் வெள்ளவத்தை குமாரசுவாமி விநோதன் மண்டபத்தில் எனது மணிவிழா நடைபெற்ற அன்று, விழா ஆரம்பிப்பதற்கு முன்னர் பேராசிரியர் சிவத்தம்பியைப் பார்ப்பதற்கு நண்பர் மேமன் கவியுடன் சென்றேன். பேராசிரியர் அந்தச் சமயம் நோய்வாய்ப்பட்டு மகள் இல்லத்தில் தங்கி இருந்தார். நீண்ட காலத்தின் பின்னர் என்னைக் கண்டுகொண்ட பேராசிரியரின் மகள் கோதையின் அன்பும் ஆனந்தமும் ஆதரிப்பும் கண்டு முதலில் நான் மனம் நெகிழ்ந்தேன். பின்னர் படுக்கையில் இருந்த பேராசிரியரைப் போய்க் கண்டேன். விழாவுக்கு நேரில் வருகை தந்து என்னை வாழ்த்த இயலவில்லையேயென மனம் வருந்திய பேராசிரியர், சிறு குழந்தையை அணைப்பது போல இரு கரங்களினாலும் என்னை அணைத்து வாழ்த்துக் கூறி அனுப்பிவைத்தார்.

டொக்டர் எம். கே. முருகானந்தன் தலைமையில் 22.08.2002-ல் நடைபெற்ற அந்த விழாவினை முன்னின்று நடத்திய ஜீவா எனக்கருகே அமர்ந்திருந்தமை எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. அன்றைய விழாவில் கலாநிதி எம். கருணாநிதி, திக்குவல்லைக் கமால், செல்வி. சற்சொரூபவதிநாதன், எனது மாணவி பவானி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். கவிஞர் மேமன்கவி கவிவாழ்த்துப் பாடினார். மணிவிழா நினைவாகப் பூபாலசிங்கம் ஸ்ரீதரசிங் விரும்பியதன் பேறாக பூபாலசிங்கம் புத்தக நிலைய வெளியீடாக எனது 'கானலின் மான்' நாவல் வெளியிட்டு வைக்கப் பெற்றது.

எனது கிராம மக்கள் தொடர்ந்து இருதினங்கள் எடுத்த மணிவிழாக்களில் ஆரம்பத்தில் குறிப்பிட்டவர்களோடு கல்விப் பணிப்பாளர் வே. தி. செல்வரத்தினம், பேராசிரியர்களான எஸ்.

சிவலிங்கராசா, நா. ஞானகுமாரனும், சி. வன்னியகுலசிங்கம், கலாநிதி த. கலாமணி, து. குலசிங்கம், ஆசிரியர்களான ஆ. கந்தையா, த. சிதம்பரப்பிள்ளை ஆகியோரும் வேறு சிலரும் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். இரண்டாவது நாள் நிகழ்வில் பொற்கிழி வழங்கிக் கௌரவித்தார்கள்.

எனது மணிவிழாவினைக் கருத்தில் கொண்டு ரூபவாஹினி எனது செவ்வி ஒன்றினை எடுத்து 28.09.2002-ல் ஒளிபரப்பு செய்தது. வீரகேசரி ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த எழுத்தாள நண்பர் கே. விஜயன் கண்ட செவ்வியினை வீரகேசரியில் வெளியிட்டு வைத்தார். "மூன்றாவது மனிதன்" பெப்ரவரி - மார்ச் 2003 இதழில் எழுத்தாளர் ச. இராகவன் என்னிடத்தில் பெற்ற நீண்ட நேர்காணல் வெளிவந்தது. "நமது ஈழநாடு" விருந்தினர் பக்கத்தில் எனது புகைப்படத்துடன் பள்ளி செல்லும் மாணவர்கள் கல்வி சம்பந்தமான எனது கருத்துக்களை வெளியிட்டு வைத்தது.

எனது நூல்கள் வெளிவந்த சமயங்களில் அந்த நூல்களுக்கான மதிப்பீடுகள், விமர்சனங்களை பேராசிரியர்களான கா. சிவத்தம்பி, துரை.மனோகரன், செ. யோகராசா, விமர்சகர் கே. எஸ். சிவகுமாரன், ஆசிரியர்களான ஆ. கந்தையா, மு. அநாதரட்சகன், வ. இராசையா, டொக்டர் எம். கே. முருகானந்தன், குப்பிழான் ஐ. சண்முகநாதன் ஆகியோர் செய்து வந்திருக்கின்றார்கள்.

'கழுகுகள்' நாவல் வெளிவந்த சமயம் (1981) எங்கள் கல்லூரி உப அதிபராக இருந்த ஸி. திரவியம் அவர்கள் விலையுயர்ந்த பாக்கர் (Parker) பேனா ஒன்றினை எனக்களித்து ஆசி கூறினார்கள்.

கட்டைவேலி/ ப.நோ.கூ சங்கம் 23.08.2003 நடத்திய கூட்டுறவாளர் விழாவில் பொன்னாடை போர்த்தி, "மக்கள் படைப்பாளி" என்னும் விருதும் கேடயமும் வழங்கி என்னைக் கௌரவித்தார்கள்.

"கானலின் மான்" நாவலுக்கு இலங்கை அரசின் சாஹித்திய விருதினைப் (2002) பெற்றுக் கொண்டேன். இதற்கு முன்னர் பெற்றுக் கொண்ட சாஹித்திய விருது, இரு தடவைகள் கிடைக்கப் பெற்ற வடக்கு/ கிழக்கு மாகாண அரசினர் விருதுகள், ஏனைய சில விருதுகள் என்பவற்றுள் ஒன்றினைத்தானும் நான் நேரிற் சென்று பெற்றுக் கொண்டதில்லை. இந்தத் தடவை நான் நேரிற் சென்று சாஹித்திய விருதினைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென எனது குடும்பத்தவர், நண்பர்கள் வலியுறுத்தினார்கள்.

விருதுவழங்கும்விழாவுக்கு அப்பொழுது யாழ். பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த எனது சின்ன மகன் துஷ்யந்தன், நண்பர் செ. சதானந்தன் இருவரும் உடன் வந்தார்கள். பண்டாரநாயக்க சர்வதேச

நினைவு மண்டபத்தில் 18.09.2003 ஆண்டு பிற்பகல் ஆரம்பமான விழாவில் அமைச்சரிடம் இருந்து "கானலின் மான்" நாவலுக்குரிய விருதினை நான் பெற்றுக்கொண்டேன்.

அந்த விழாவில் தனது கவிதைத் தொகுதிக்கான விருதினைப் பெற்றுக் கொள்வதற்காக வருகை தந்திருந்த நண்பர் மருதூர்க்கனியை மேடையில் அமர்ந்த சமயம் சந்தித்தேன். நீண்ட காலத்தின் பின்னர் ஒரு நண்பனைச் சந்திக்கும் மகிழ்ச்சி மனதில் நிறைந்திருந்தது. சற்று நேரம் அவருடன் உரையாடினேன். மனதில் இருந்த மகிழ்ச்சி 'சட்'டென்று மறைந்து போயிற்று. இலக்கிய நண்பர் ஒருவருடன் பேசிக் கொண்டிருப்பதான எண்ணம் எனக்கு இல்லாது போனது. அவரது வார்த்தைகள் அவரது இதயத்தில் இருந்து வரவில்லை என்பதனை உணர்ந்து கொண்டேன். அவர் பழைய இலக்கியவாதி; இப்பொழுது அரசியல்வாதி என்பதனை விளங்கிக் கொண்டேன். இப்படியொரு அரசியல் எமக்குத் தேவைதானா? என எண்ணி மனம் நொந்து கொண்டேன்.

இலங்கைக் கலைக்கழகம், தமிழ் இலக்கியக் குழு, யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி அரங்கில் நடத்திய, இலக்கியக் கருத்தரங்கில் 15.11.2002-ல் நாவல் இலக்கியம் பற்றி உரையாற்றுவதற்கு மருதூர்க் கொத்தன் வருகை தந்திருந்தார். அந்த அரங்கில் நானும் பங்கு கொண்டு உரையாற்றினேன். பல ஆண்டுகளின் பின்னர் இருவரும் அன்று சந்தித்தோம். மனம் திறந்து நீண்ட நேரம் உரையாடினோம். தனது உடல் சுகவீனம் பற்றி எடுத்துச் சொன்னார். வடமராட்சியில் இருக்கும் எனது இல்லத்துக்கு வந்துபோகுமாறு நான் அழைத்தேன். தனது இயலாமையை மனவருத்தத்துடன் அப்பொழுது எடுத்துச் சொன்னார். தான் யாழ்ப்பாணம் வருவதற்கு அப்பொழுது உடன்பட்டதன் நோக்கம் என்னையும் வேறு சில நண்பர்களையும் சந்தித்துப் போக வேண்டுமென விரும்பியதுதான் என்று தனது மனஆதங்கத்தை வெளியிட்டார். அந்தச் சந்திப்பு மிகுந்த மன ஆறுதலையும் மகிழ்ச்சியையும் அளித்தது. அதற்குக் காரணம் கொத்தன் இன்னும் அரசியல்வாதியாகிவிடவில்லை. அவர் இலக்கியவாதியாகவே இருக்கின்றார் என்பதனை என்னால் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிந்தது.

இந்தக் காலகட்டத்தில் எனது சின்னமகள் ஜானகிக்கும் மாமன்மகன் ந. அகிலனுக்கும் 13.12.2003 -ல் திருமணம் நிறைவேறியது. சின்ன மகள் ஜானகி பட்டதாரி ஆசிரியை. மருமகன் அகிலன் யாழ். பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் எழுதுவினைஞர். சகாப்தன், கானவஷினி இருபேரக் குழந்தைகள் இருக்கின்றார்கள்.



27.12.2003 மாலைநேரம் நான் வீட்டில் இருந்து வெளியே சென்றிருந்த சமயம் எனது சின்ன மகன் அவசரமாக என்னைத் தேடிவந்து, கொழும்பில் இருந்து ஒருவர் என்னைக் கண்டு போக வந்திருப்பதாகச் சொன்னான். நான் உடனே விரைவாக வீட்டுக்குத் திரும்பி வந்தேன். அவர் என்னைக் கண்டதும் எழுந்து ஓடிவந்து கட்டி அணைத்துக் கொண்டார். ஓயாது பேசிக்கொண்டிருக்கும் அவர் வாயிலிருந்து ஒருவார்த்தை தானும் அந்தக் கணம் வெளிவரவில்லை. எனக்கும் அது இயலவில்லை. 'பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?' என வினவுவது காதல்கொண்ட உள்ளங்களுக்கு மாத்திரம் பொருந்திவருவதல்ல; நட்பு கொண்ட உள்ளங்களுக்கும் பொருத்தமான கூற்றுத்தான். யார் அந்த நண்பர்? இருபது ஆண்டுகள் கழிந்த பின்னர் என்னைத் தேடிக் கொண்டு எனது வீட்டுக்கு வந்திருந்தார் எனது இனிய நண்பர் பா. ரத்நசபாபதி அய்யர்.

'பொற்சிறையில் வாடும் புனிதர்கள்' நாவலை நான் எழுதுவதற்கு பெருமளவு தகவல் தந்தவர் அவர். நாவல் வெளிவந்த சமயம் மட்டக்களப்புத் தபால் நிலையம் ஒன்றில் அவர் பணியாற்றிக் கொண்டிருப்பதாகத் தகவல் அறிந்து, பிரதி ஒன்றினை அனுப்பி வைத்தேன். பிரதி கிடைத்ததாகக் கூட எனக்கொரு தகவலும் வந்து சேரவில்லை. அந்த நாவல் அவருக்கு அதிருப்தியைக் கொடுத்து விட்டதோ! என எண்ணி நான் மனதில் கவலை கொண்டிருந்தேன்.

இருபது ஆண்டுகளின் பின்னரும் அதே பேச்சு; அதே சுறுசுறுப்பு; அதே அவசரம்; அதே தர்க்க வாதம்.... எல்லாம் எனது பழைய நண்பனைக் கண்டு மகிழ்ந்தேன். அவரது மருமகன் டொக்டர்

உமாசங்கர் உடன் வந்திருந்தார். நாங்கள் இருவரும் உரையாடிக் கொண்டிருந்த போது, கையோடு கொண்டு வந்த கமெராவினால் பல கோணங்களில் படம் எடுத்தார். இரவு நேரம் நீண்டு செல்வது மறந்து, நீண்ட நேரம் இருந்து உரையாடிவிட்டு மருமகனுடன் நண்பர் புறப்பட்டுச் சென்றார். இனி அடுத்த சந்திப்பு நிகழ, இன்னும் இருபது வருஷங்கள் நான் காத்திருக்க வேண்டுமோ, என்னவோ!

அடுத்த ஆண்டின் முற்பகுதியில் அதிர்ச்சி தரும் கொடும் துயரச் சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. எனது பேரன்புக்குரிய ராஜ ஸ்ரீகாந்தன் மாரடைப்பினால் 20. 04. 2004-ல் கொழும்பில் காலமானார். அந்தச் செய்தி என்னைப் பெரிதும் கலங்கவைத்தது. அவர் எனது சொந்தச் சகோதரன் போல வாழ்ந்த இனிய தம்பி.

வடமராட்சி தெற்கு/மேற்கு பிரதேசச் செயலகத்தின் கீழ் இயங்கும், பிரதேசக் கலாசாரப் பேரவையின் உபதலைவராக இருந்து, இரண்டாண்டு காலம் செயற்பட்டேன். பிரதேசக் கலைஞர்கள் பலரை ஒரே சமயத்தில் கௌரவிப்பதற்குக் காலாக இருந்தேன். கலை இலக்கிய விழா ஒன்றில், பிரதேசக் கலாசாரப் பேரவை என்னையும் கௌரவித்தது. யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் அ. மோகனதாஸ் அவர்கள் 31.10.2004-ல் நடைபெற்ற அந்த விழாவில் பொன்னாடை போர்த்தி, விருது வழங்கி என்னைப் பெருமைப்படுத்தினார்.

தேவரையாளி இந்துக் கல்லூரியின் தாபகர் சைவப் பெரியார் கா. சூரன் சிலையைக் கல்லூரி வளாகத்துள் நிறுவுவதில் முன்னின்று உழைத்தவர் செ. கணேசன். ஆரம்பத்தில் சுமுகமாகச் செயற்பட்ட அந்த முயற்சி, பின்னர் பிரச்சினைக்குள்ளான போது, கணேசனுக்குத் துணை நின்று 14.06.2004 -ல் அந்தச் சிலையை நிறுவினோம்.

சத்தியம் ஒன்றைத் தவிர, மேலான தருமம் ஒன்றில்லையென உறுதியாக நம்புகின்றவன் நான். அந்த நம்பிக்கையே சூரன் சிலை நிறுவுவதற்கு நான் அனுசரணையாக இருந்து செயற்படக் காரணமாயிற்று.

எனது நண்பர்கள் சி. க. இராசேந்திரன், க. லோகநாதன் இருவரும் ஒருதினம் அன்றைய பத்திரிகையைப் படித்து விட்டு, எனது வீடு தேடி வந்து என்னை வாழ்த்தினார்கள். அப்பொழுதுதான் எனக்குக் 'கலாபூஷணம்' விருது கிடைத்துள்ள தகவலை நான் அறிந்து கொண்டேன். எனது பேரக்குழந்தை ஆரணியுடன் நான் கொழும்பு செல்லத் தயாராகிக் கொண்டிருந்த சமயம் அது. எனது மகள், மருமகனும் உடன் வந்தார்கள்.

கொழும்பு ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, ஜோன் டீ சில்வா அரங்கில் 22.01.2005-ல் 'கலாபூஷணம்' விருதினைப் பெற்றுக்

கொண்டேன். எனது குடும்பத்தவர்களும் அன்புக்குரிய வதிரி. சி. ரவீத்திரனும் அந்த வைபவத்திற்கு என்னுடன் வந்து கலந்து கொண்டார்கள்.

என்னைக் கௌரவித்து விருது வழங்கினார்கள். அதனைக் கௌரவித்து நான் அந்த விருதினைப் பெற்றுக் கொண்டேன். அதற்கு மேல் அதனைச் சுமந்து நிற்கும் பலம் - மனநிலை எனக்கில்லை. ஆனால், எனக்கு நெருக்கமான இளைய நண்பர்கள் என்னை விட்டு விடுவதாக இல்லை. பத்திரிகைகளில் பாராட்டுச் செய்தி வெளியிடுவோம் என்றார்கள்; பாராட்டு விழா நடத்துவோம் என்றார்கள். நான் எல்லாவற்றையும் தட்டிக் கழித்துவிட்டேன். இறுதியில் மதியபோசன விருந்தென்று வந்தார்கள். அதனையும் என்னால் நிராகரித்து விட முடியவில்லை. ஆனால், ஒரு நிபந்தனை. என்னை யாரும் பாராட்டிப் பேச வேண்டாம் என்று கேட்டுக் கொண்டேன். உடன்பட்டார்கள். நண்பர்கள் ஐம்பது பேர் வரை ஒன்று கூடி, தே. இ. கல்லூரி தொழில்நுட்ப மண்டபத்தில் 29.01.2005 'கலாபூஷணம் தெணியானுடன் மகிழ்ச்சிகரமான மதிய போசனம்' அளித்தார்கள். அந்தச் சமயம் கனடாவில் இருந்து வந்திருந்த எனது தம்பியின் மனைவி ஷியாமளா நவரத்தினம் அந்த விருந்தில் கலந்து கொண்டார்.

'நான் விட்டாலும், அது என்னை விடுகுதில்லை' என்பது போல சில நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. பருத்தித்துறை அறிவோர் கூடல் போல கலாநிதி த. கலாமணி தனது இல்லத்தில் 'அவை' (Forum) ஒன்றை உருவாக்கி மாதந்தோறும் நிகழ்ச்சிகளை நடத்தி வந்தார். கலாபூஷணம் விருது பெற்ற நாடகக் கலைஞர் நீர்வேலி வே. சிதம்பரநாதனையும் என்னையும் 30.01.2005 'அவை'யில் கௌரவித்தார்கள். அன்று எனது இலக்கியனுபவங்கள் பற்றி நான் உரையாற்றினேன்.

சமரபாகு சல்லியவத்தை அருள்மிகு முத்துமாரியம்மன் மீது கவிஞர் பொலிகை. ச. திருப்பதி யாத்த திரவுஞ்சல் பாடலை வெளியிட்டு வைக்குமாறு செயலாளர் சி. இன்பரூபன் வந்து என்னை அழைத்தார். அந்த ஆலயத்துக்கு 19.04.2005 இரவு வேளையில் நான் சென்று அந்த நூலினை வெளியிட்டு வைத்தேன். அதன் பின்னர் நான் எதிர்பார்க்காத வகையில் 'இவ்வாண்டு கலாபூஷணம் விருது பெற்ற தெணியான் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவார்' என திடீரென ஒலிபெருக்கியில் அறிவித்து, ஆலயப் பிரதம குருக்களைக் கொண்டு அந்தக் கௌரவிப்பைச் செய்வித்தார்கள்.

கலாபூஷணம் விருதைக் கௌரவித்து "ஞானம்" ஆசிரியர் தி. ஞானசேரன் ஜூன் 2005 இதழில் அட்டைப் பட அதிதியாக எனது படத்தினை இடம்பெறச் செய்து, நண்பர் திக்குவல்லைக் கமால் எழுதிய அறிமுகக் கட்டுரையை வெளியிட்டு வைத்தார்.

மல்லிகை ஜூலை 2005 இதழ் பார்த்த பின்னர்தான் ஆ.கந்தையாவின் 'கலாபூஷணம் விருது/ பன்முகப்பட்ட படைப்பாற்றலுக்கான விருது' என்னும் கட்டுரையைப் பிரசுரித்து ஜீவா பெருமைப்படுத்தி இருப்பதனைக் கண்டுகொண்டேன்.

நண்பர் முருகபூபதியின் 'ராஜ ஸ்ரீகாந்தன் நினைவுகள்' நூலின் அறிமுக விழாவினை தே. இ. கல்லூரியில் 20.03.2005 -ல் நடத்தி, நூல் விற்பனை மூலம் கிடைத்த பணத்தினை, நூலாசிரியர் விருப்பம் போல ஸ்ரீகாந்தன் குடும்பத்துக்கு அளித்தேன்.

தினகரன் பிரதம ஆசிரியர் நண்பர் சிவா சுப்பிரமணியம் கேட்டுக் கொண்டதற்கிணங்க 'தவறிப் போனவன் கதை' தொடர் நாவலை எழுதிக் கொடுத்தேன். அந்த நாவல் 24.04.2005 -ல் நிறைவுபெற்றது.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவி தி. கேதீஸ்வரி கலைமாணி சிறப்புத் தேர்வு ஆய்வுக்கட்டுரையாக, 'அறுபதுகளின் பின் ஈழத்துத் தமிழ் நாவல்களில் சாதிப்பிரச்சினைகள் - தெணியானின் நாவல்கள் ஒரு சிறப்பாய்வு' என்னும் கட்டுரையைச் சமர்ப்பித்தார். ஆனால், குடி இருப்பதற்குச் சொந்த நிலமில்லாது அவலப்படும் மக்களின் வாழ்வுப் போராட்டம் பற்றிய "பரம்பரை அகதிகள்" அவரது ஆய்வில் கவனத்தில் கொள்ளப்படாது தவிர்க்கப் பெற்றதற்கான நியாயத்தினை என்னால் விளங்கிக் கொள்ள இயலவில்லை.

யாழ். பல்கலைக்கழகத்தில் கற்ற மூவர் இதற்கு முன்னர் எனது படைப்புகள் பற்றிய ஆய்வினை மேற்கொண்டிருக்கிறார்கள். என். மீனலோஜினி, கலைமாணி சிறப்புப் பட்டத்துக்காக எனது சிறுகதைகளை ஆய்வுசெய்து கட்டுரை சமர்ப்பித்தார். யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட நூலகர் விமலா வேல்தாசன் தனது முதுகலைமாணித் தேர்வுக்காக நந்தி, சட்டநாதன், கோகிலா மகேந்திரன் ஆகியோரதும், எனதும் சிறுகதைகளை ஆய்வுசெய்து கட்டுரை சமர்ப்பித்தார். எனது தங்கையின் மகள் தேவகி ராமேஷ்வரன் தனது கலைமாணிச் சிறப்புத் தேர்வுக்குரிய ஆய்வாக எனது நாவல்கள் பற்றிய ஆய்வினைச் செய்து கட்டுரை சமர்ப்பித்துள்ளார்.

எனது சின்னமகன் துஷ்யந்தன் பட்டதாரி ஆசிரியராக இன்று பணியாற்றிக் கொண்டிருக்கிறான். ஈழத்து இலக்கிய உலகில் எழுத்தாளர்களாக சகோதரர்கள் சிலர் இருக்கின்றார்கள். அந்தவகையில் எனக்குத் தம்பி நவரத்தினம் (க. நவம்) இருக்கின்றான். கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் மாணவர்களுக்கான சிறுகதைப் போட்டியில் பங்கு பற்றி சாஹித்தியப் பரிசினைப் பெற்றுக் கொண்டவன். ஆக்கவுரிமைகள், வியாபாரக் குறிகள் பதிவகம் 1983-ல்

அவனது 'உள்ளும் புறமும்' சிறந்த சிறுகதைத் தொகுப்பினைத் தேர்ந்தெடுத்து பரிசில் வழங்கியது. 'உள்ளும் புறமும்', 'உண்மையின் மௌன ஊர்வலங்கள்' இரண்டும் அவனது நூல்கள். பேராதனைப் பல்கலைக்கழக (M.Sc.) பட்டதாரியான அவன், இப்பொழுது கனடாவில் வாழ்ந்து வருகிறான். 'நான்காவது பரிமாணம்' சஞ்சிகை தடைபட்ட பின்னர், நான்காவது பரிமாணம் வெளியீடாகச் சில நூல்களை வெளியிட்டு வருகின்றான்.

அல்வாய் மகேந்திரராஜா மயூரன் நினைவாக எனது 'பனையின் நிழல்' குறுநாவல் (13.06.2006) நூலாக வெளியிடப் பெற்றது. பின்னர் அதன் இரண்டாவது பதிப்பாக மீள் பதிப்பினை 24.07.2006-ல் நான் செய்து பூபாலசிங்கம் புத்தக நிலையத்தாரிடம் ஒப்படைத்தேன்.

அமைச்சர் ஒருவர் ஐந்து லட்சம் ரூபாவை யாழ் இலக்கிய வட்டத்துக்கு ஒதுக்கி இலக்கிய நூல்கள் சிலவற்றை வெளியிடுவதற்கு வழி சமைத்துக் கொடுத்தார். அதனை முன்னுதாரணமாகக் கொண்டு யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை நான் அணுகிய போது, பொது நிறுவனம் ஒன்றுக்குத் தான் ஒதுக்கும் ஒரு இலட்சம் ரூபா நிதியினைக் கொண்டு எனது நூல் ஒன்றினை வெளியீடு செய்யுமாறு தெரிவித்தார். வடமராட்சியிலுள்ள கலாசார மன்றம் ஒன்றுக்கு அந்த நிதியினை ஒதுக்குமாறு நான் கேட்டுக் கொண்டேன். அந்த மன்றத்தின் தலைவரைச் சந்தித்துத் தகவல் சொல்லி வைத்தேன்.

நிதி ஒதுக்கப்பட்டிருக்கும் தகவல் கிடைத்ததும் அந்த மன்றத் தலைவர் என்னை அழைத்துச் செய்தியைச் சொன்னார். ஒருவார காலத்தின் பின்னர் 'மன்ற உறுப்பினர்களை அழைத்து ஒரு கூட்டம் கூட்டினார்.' நிதி கிடைத்திருக்கும் செய்தியைச் சொல்லி, அதற்குக் காரணம் நான் என்ற தகவலையும் மெல்லத் தெரிவித்தார். அந்த நிதி பிரதேசச் செயலருக்கூடாகவே வழங்கப்படும் என்னும் நடைமுறையைக் கூறி, நூலக அபிவிருத்திக்காகவே அதனைப் பயன்படுத்த முடியுமெனச் செயலாளர் அறிவித்துள்ளார் என்று கூறினார். நூல் நிலையத்துக்கு நூல்களைக் கொள்வனவு செய்யவும் தளபாடங்கள் வாங்கவும் அந்த நிதி பயன்படுத்தப்படுமெனவும் சொன்னார்.

நிதி கிடைத்திருக்கின்றது என்ற தகவலை எனக்குச் சொன்னவர், இப்படியொரு நிலைமை உருவாகி இருக்கின்றது என்னும் தகவலை எனக்கோ, பாராளுமன்ற உறுப்பினருக்கோ முன்கூட்டிச் சொல்வதைத் தவிர்த்துக் கொண்டார். அவரைச்சுற்றி நின்று தமது சேவையை எக்காலத்திலும் குறைவின்றிச் செய்துகொண்டிருப்பவர்களும் எனக்கு அதுபற்றித் தெரிவிக்கவில்லை.

அந்தக் கூட்டத்தில் நான் பேசுவதையும் தந்திரமாகத் தவிர்த்துக் கொண்டார். அந்த மன்றம் சிலரது நூல்களைத்தானே முன்னர்

வெளியிட்டிருக்கின்றது. எனது நூல் வெளியீட்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதியைத் தனக்குரியதாக்கும் அந்த மன்றம், அதற்கு மாற்றீடாக எனது நூல் ஒன்றினை வெளியிடுவது பற்றிச் சிந்திக்கவும் தயாராக இல்லை. இதெல்லாம் பெரிய தந்திரோபாயமாகக் கருதிக் கொள்ளுகின்றது போலும்! நிதியை ஒதுக்கிய பாராளுமன்ற உறுப்பினரிடம் அந்த நிதியைத் தடுத்து நிறுத்த வேண்டாமென விநயமான வேண்டுகோள் வேறு. ஒரு பாடசாலைப் பழைய மாணவர் சங்கத்துக்கு ஒதுக்கிய நிதியின் மூலம் ஆசிரியர் ஒருவரின் நூல் ஒன்று, இவ்வாண்டு வெளிவர இருக்கின்றது என்பது கட்டாயம் அவர்கள் அறிந்துகொள்ள வேண்டிய ஒன்று.

இன்றும் சமூகத்தின் பிரச்சினைகள் அடிப்படையில் ஒன்றாகவே இருக்கின்றன. அதன் வெளிப்பாட்டு வடிவம் காலத்துக்குத் தகுந்த வண்ணம் நவீனப்படுகின்றது. சில சமயங்களில் முற்போக்கானதாகப் போலி வேஷம் போடுகின்றது. அதிகாரம், அங்கீகாரம் என்பன உயர்கதிரைகளுக்கூடாக இன்றும் பாதுகாக்கப்படுகின்றன. அடிமைத்தனம் நாகரிகமான அண்டிப் பிழைப்பு செய்வோருக்கூடாக பேணப்படுகின்றது. இவை யாவும் எனது அனுபவத்தில் நான் கண்டு விளங்கிக் கொண்டேன். இன்று யாவற்றுக்கும் மேலாக எனது பேரக்குழந்தைகளுடன் சேர்ந்து வாழும் வாழ்வு ஆனந்தமயமான இன்னொரு தளத்துக்கு என்னை இட்டுச் செல்கின்றது.

ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக, அவர்களின் பிரச்சினைகளைத் தொடர்ச்சியாக இன்றுவரை எழுதிக் கொண்டிருக்கும் இலங்கை எழுத்தாளன் நான். இந்த ஒடுக்கப்பட்ட மக்கள் பெறுமதி அற்ற, மதிப்பற்ற பூச்சியங்களாகவே சாதிய சமூகத்தினால் நோக்கப்பட்டு, வந்திருக்கின்றார்கள். அவர்களுள் ஒருவனாகிய எனது வாழ்வின் சுவடுகளையும் இலக்கிய அனுபவங்களையும் எடுத்துச் சொல்லி அவர்கள் பூச்சியங்களல்ல என்பதனை உணர்த்தி இருக்கின்றேன்.



ஒரு சராசரி மனிதனின் வாழ்க்கை சரித்திர மாவதற்குக் காரணம் அவன் கடந்து வந்த பாதையினை திரும்பி பார்த்தல் என்பது.

அதுவும் ஓர் ஒடுக்கப்படும் வகுப்பை சார்ந்தவ ரென்றால் அவருக்கு கிட்டும் அடிகள், வலிகள் கொஞ்ச நஞ்சமல்ல என்பதை தோலுரித்துக் காட்டுகிறது.

போராடும் இதயங்கள் பிறக்க பிறக்க அதிகார வர்க்கங்களும், அடிமைப் போக்குகளும் கொஞ்சம் கொஞ்சமாய் மறையும் என்பது தெளிவு.

மானுடம் என்பதறிந்து பழகுவோர் நெஞ்சம் பூப் பிடிக்கும், வற்றத்தாழ்வோடு அணுகுவோர் நெஞ்சமோ நீப்பிடிக்கும் என்பது நாளைய செய்தி.

ISBN 978-81-2342-462-0

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-B, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 098
போன்: 044-26251968, 26359906, 26258410

pbd
9344081104
BOOJIAM BOOJIYAMALL
RS.600.00
26/02/2014